S. A. T.

SECRET REVEALER
OF
Commerce & Industry.

An Indispensable guide to all Students of Industry, Manufactures, Traders & etc.

BY

K. P. Seshadri Aiyengar,
Teacher, Orr's Assisted Industrial School,
Editor of "Kalpatharu" & "Ranjitha Bodhini"
Madras.

PUBLISHED BY
The Maharaja Book Depot,
Sowcarpet Post, Madras.
1926

 (Price Re 1-8-0.

கைத்தொழில்
வணிக இரகசிய விளக்கம்

ஆர்ஸ் உதவி கைத்தொழில் பள்ளிக்கூடத்து போத காசிரியரும்,
கல்ப தரு, இரஞ்சித போதினி இவைகளின் பத்திராசிரியரும்
பற்பல தமிழ்ப் புத்தகங்களின் நூலாசிரியருமான

ஸ்ரீமான் கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார் அவர்கள்

இயற்றியது

பிரசுரித்தவர்கள்.

மஹாராஜா புக்டிபோ.
சௌகார்பேட்டை, சென்னை.

சென்னை:
மாணிக்கவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
1926

இதன் விலை 1-8-0. *Price Rs. 1-8-0.*

[illegible]

[illegible] வெளுத்துக் கொண்டு

[illegible] வழிவிட்டு [illegible]

ஸ்ரீ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

முன்னுரை.

ஒவ்வொரு நூலிற்கும் முன்னுரை அவசியம் இருக்கவேண்டும் என்ற நியதியை மேற்கொண்டு "கைத்தொழில் வணிக இரகசிய விளக்கம்" என்னும் இந்நூலிற்கும் முன்னுரை எழுதுகின்றோம்.

முன்னுரை எழுதுவதற்கு முன்னர் இந்நூலின் அவசியத்தைப் பற்றியும் இதை வெளியிடுவதற்குண்டான பிரமேயத்தையும் சுருக்கமாகக் கூற விரும்புகின்றோம். தொழில் முறைகளையும், செய்முறைகளையும் போதிக்கும் பலபிரசுரங்கள் இதற்குமுன் வெளிவந்திருக்கின்றன. அப்பிரசுரங்கள் ஒரு விஷயத்தையும் சரிவரப்போதிக்காமல் சில எண்ணிக்கையுள்ள ஏடுகளையே உருவமாகக்கொண்டு, இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் ஐந்து ரூபாய்கள் வரையில் விலையுள்ளவைகளாய் பொது ஜனங்களைப் பின்னால் மயக்கமுற்று அவைகளை வெறுக்கும்படியாக வெளிவந்து உலவிவருகின்றன. அவ்விதமான மோசக்கருத்துடைய புத்தகங்களை வாங்கிய அன்பர்கள், பின்னால் தொழில் முறைப் புத்தகங்கள் எவ்வளவு சிறப்பாயும் உத்தமமாயும் பற்பல முறைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் போதிப்பதாக விருந்தாலும். அவைகளை வாங்கி வாசித்துப்பயனடையமுன்வரத் தயங்குகின்றார்கள். அவர்கள் அப்படித்தயங்குவதற்குமுக்கிய காரணமென்ன வென்றால் அவர்கள் இது விஷயத்தில் கசந்துபோனதுதான். எனவே, அக்குறையை முழுவதிலும் போக்கவே, பல அரிய விஷயங்களையும், பலசரக்குகள் செய்யும் அனுபோக முறைகளையும் விரிவாக இப்புத்தகத்தில் வெளியிட்டிருக்கின்றோம். அவைகளில் கூறப்பட்டுள்ளபடி சரக்குகள்செய்யப் படுமாகில் எல்லாவற்றையும் செய்து ஜெயம்பெறலாம்.

பல அருமையான வியாசங்களும் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு விஷயமும் பொன்னேபோல் போற்றப்படும் தன்மையையுடையது. இவ்வியாசங்களில் பல எம்மால் நடத்தப்பட்டு வருகின்ற கல்பதரு என்ற மாதப்பத்திரிகையில் வெளிவந்தவைகள். இன்னும் இதில் கண்டுள்ள 'நமது மாகாணத்தில் கைத்தொழில் வணிகப்பெருக்குக்குண்டான விசேஷ சௌகரியங்கள்' என்ற தலை

யங்கம் பெற்றுள்ள வியாசம் பத்து சவரன்கொண்ட தங்கப் பதக்க
பரிசாகப்பெற்றுள்ளது என்பதனுல் இது எவ்வளவு மேம்படும் மாட்
மையும் பெற்றது என்பது சொல்லாமலே விளங்குகின்றதல்லவா ?

அழகும் மணமும் பெற்றுள்ள ரோஜாமலரில அருவருக்கத்தக்
முட்கள் இருக்கின்றன. அதுபோலவே, அருமையும் பெருமையு
பெற்ற இப்புத்தகமான ரோஜாமலரில் அச்சுப்பிழைகள் என்னும் முட
கள் சில உள. முட்கள் இருக்கின்ற காரணத்தாலே ரோஜா மலரை
விரும்பாதவர் எவரேனு முண்டோ ? அதுபோலவே அச்சுப்பிழை
கள் சில இருந்தாலும் இப்புத்தகத்தை விரும்பாதவர்கள் ஒருவரு
இருக்கமாட்டார். யாவரும் இதைக் கையிலெடுத்துக் கண்ணில் ஒ
திப்போற்றுவார்கள். அச்சுப்பிழைகள் எம்மையும் அறியாம
நுழைந்துவிட்டமைக்கு யாம் வருந்துகின்றோம் அடுத்த பதிப்பி
அவைகளை விலக்கிச் சுத்தப்பதிப்பாக்க உறுதி கூறுகின்றோம்

முத்தியாலுபேட்டை,
சென்னை 4-9-26.

சீ. பு. சேஷாத்திரி ஐயங்கார்,
கல்பதரு பத்திராதிபர்.

பொருளடக்கம்.

முற்றிற்று.

கைத்தொழில் வணிக

இரகசிய விளக்கம்.

ஓம்.

பாரததேசத்தின் பெருமை.

பல்லவி.

பாரத தேச மென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொள்ளுவார் துயர்ப்பகை வெல்லுவார்

சரணங்கள்.

1 வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக்கடல் முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில் செய்குவோம்—எங்கள்
பாரத தேச மென்று தோள் கொட்டுவோம்.

2 சிங்களத் தீவினுக் கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

3 வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறுபல பொருளுங் குடைந் தெடுப்பாம்
எட்டுத் திசைகளிலும் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்.

4 முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே.

5 கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்

சிங்க மராட்டியர் தங்க விதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

6 காசி நகர்ப்புலவர் பேசு முறைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.

7 பட்டினி லாடையும் பஞ்சி லுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்.

8 ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்.

9 குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பரப்பு முணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்.

10 மந்திரங் கற்போம் வினைத் தந்திரங் கற்போம்
வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத் தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரங் கற்போம்.

11\. காவியஞ் செய்வோம் நல்ல நாடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழி லனைத்தும் உவந்து செய்வோம்.

சி. சுப்ரமண்ய பாரதி

பாரத நாடு

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருட் கோயில்களை காட்சியளி நாடு
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு
பழமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே!

உண்மைஅரிச் சந்திரனை உவந்தளித்த நாடு
உயர்ஜனகன் ராமபிரான் உலவியபொன் னாடு
கண்ணன்விளை யாடலெல்லாங் கண்டுகளி நாடு
கண்ணனொடு பஞ்சவர்கள் காத்ததனி நாடு
தன்மைநிறை புத்தரவர் தருமம்வளர் நாடு
தகைமையுறு வள்ளுவர்தந் தமிழ்பிறந்த நாடு
பண்ணமருங் கரிகாலன் பரித்தபுகழ் நாடு
பகைவர்களுந் தொழுதேத்தும் பாரதநன் னாடே.

வான்மீகி வியாசமுனி வளர்ந்திருந்த நாடு
வாகடதன் வந்திரியும் வசிட்டமுனி நாடு
"நான்"மறந்த சுகர்முதலோர் ஞானமொளிர் நாடு
நாயன்மார் ஆழ்வார்கள் நண்ணியதண் ணாடு
மேன்மையுறு பட்டினத்தார் மேவுமணி நாடு
வேதாந்த ராமகிருஷ்ணர் விளங்கியசெந் நாடு
பாண்மைபெறு கம்பர்முதல் பாவலர்கள் நாடு
பத்தரொடு ஞானிகள்வாழ் பாரதநன் னாடே.

சந்திரவதி சாவித்திரி ஜானகியின் நாடு
தமயந்தி திரௌபதியுஞ் சார்ந்திருந்த நாடு
இந்திரர்சொல் கண்ணகியின் எழில்நிறைகொள் நாடு
எங்களவ்வை யின்மொழியே எங்குமொளிர் நாடு
அந்தமிகு காரைக்கால் அம்மைசிவ நாடு
ஆண்டாளும் மங்கையர்தம் அரசிவந்த நாடு
பந்தமிலா விக்டோரியா பரிந்தாண்ட நாடு
பாவையர்தம் வடிவான பாரதநன் னாடே.

ஞானமொடு கல்விநலம் நல்குதிரு நாடு
நாதாந்த மோனநிலை நாட்டமிகு நாடு
தானமதை உடலாகத் தாங்குகின்ற நாடு
தான்வருந்திப் பிறர்க்குதவுந் தயைபிறந்த நாடு
வானவருந் தொழுதேத்தும் வளம்பெருகு நாடு
வாழ்விழந்தே இதுகாலை வாடுகின்ற நாடு
ஊனமிலா உரிமைபெற ஊக்கமிகு நாடு
உத்தமரை அளிக்கின்ற ஒருபரத நாடே.

திரு வி. கல்யாணசுந்தர முதலியார்

ஸ்ரீ

கைத்தொழில் வணிக

இரகசிய விளக்கம்.

தென்னிந்தியாவின் பண்டைக் கைதொழிலின் மேன்மை.

சமீபகாலமாக நம்முடைய தேசத்தார் மனதில் தோன்றிவரும் "தேசிய உணர்ச்சி"யானது முக்கியமாகக் கைத்தொழில்களாலும் வியாபாரத்தாலும் இந்தியாவின் பொருளாதார நிலையை விருத்தி செய்தலைப் பற்றியதாக உள்ளது. இந்த உணர்ச்சி, தேசாபிமானமும் ஊக்கமுமுடைய அறிவாளர் சிந்தையில் பலவாண்டுகளாக உதித்து வந்திருந்தாலும், ஜனசமூகம் முழுதும் அதில் தம் விருப்பத்தைக் காட்டத் தொடங்கியது கொஞ்சகாலமாகத்தான் என்பது நாம் அறியாததன்று. இத்தகைய உயர்ந்த உணர்ச்சியும் அதன்வழியாக முயற்சியும் புதியனவாக உண்டாயிருப்பதற்கு முக்கிய காரணம் நமது நாட்டார் உலகியல்களை முன்னிலும் அதிகமாகத் தெரிந்து வருவதுதான். தேசத்தின் கைத்தொழில் வியாபாரங்கள் நெடுங்காலமாக நம்மவர் கையைவிட்டு விலகிவருவதால் இந்தியாவின் செல்வநிலை பெரிதும் சீர்கெட்டுவரும் செய்தி நம்மவர்க்கு எட்டி பெரிதும் அதிசயத்தையும் அச்சத்தையும் கொடுத்து வருகிறது. இது நற்காலத்தின் அறிகுறி என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக்காலத்துச் சீர்கேடான நிலைமையை மாற்றுவதற்கு தேசியமுயற்சி தக்க கருவியாதலால் அது பெரிதும் வேண்டப்படுவதேயாம். ஆனால் முன்னாளில் நம்மவர்க்குப் பொருளாதார நிலைமையைப்பற்றிய கவலையேனும், அதன் மூலம் இத்தகைய முயற்சிகளேனும் அவசியமாக நேரிட்டன வல்ல. அந்நிய வியாபாரிகளால் இந்திய கைத்தொழில் வியாபாரங்கட்கு எவ்வித இழுக்கும், குறைவும் அப்போது நேர்ந்ததில்லை நாட்டில் விளைந்த இயற்கைப் பொருள்களில் வேண்டிய அளவு இங்கேயே செயற்கைப் பொருளாக மாறி உபயோகிக்கப்பட்டன அவை இங்குமட்டுமல்ல. அந்நிய வியாபாரிகளால் தேசாந்தரங்

கட்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டும் பெருலாபம் தந்தன. இவ்விஷயங்களெல்லாம் இன்றைக்கு 1800 வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்துசென்ற அந்நியநாட்டு யாத்ரிகர்களில் பிளினி டாலமி பேரிப்ளஸ், ஸ்ட்ராபோ முதலிய யவனாசிரியர்கள் எழுதியுள்ள சரித்திரக் குறிப்புகளால் வெளியாகின்றன. இவர்களில் பிளினி என்பவர் தம் குறிப்பில் நம் தேசம் "ஆண்டுதோறும் ரோம ராஜ்யத்திற்கு 976,979 பௌன் கவர்தற்குரிய பண்டங்களை ஏற்றுமதி செய்துவர அப்பண்டங்கள் அந்நிய நாடுகளில் நூறு மடங்கு அதிகவிலைக்கு விற்கப்பட்டன" என்று கூறியிருக்கின்றார். இவ்வாறு முற்காலத்தே பிறர்க்கு மிகவும் அருமையும் அதிசயமும் தரத்தக்க பண்டங்களை யளித்து இயற்கை வளமெல்லாம் நிரம்பிப் பொன் கொழிக்கும் பூமியாக விளங்கியது நம் பாரத வர்ஷம். "பொன் கொழிக்கும் பூமி" என்று நாம் சொல்வது புனைந்துரையன்று. "இந்தியர் உங்களைவிட மகா பராக்கிரமசாலிகள்; நீங்கள் பொன் கொழிக்கும் அந்நாட்டாரொழிய ஏனையரினும் பாக்கியசாலிகள். உங்களுடைய துணிவும் இதுவே" என்று கி.பி. 1,7-ல் இருந்த கிரிஸாஸ்டம் என்னும் யவனாசிரியரே தம் நாட்டாரை நோக்கிக்கூறுவதன்மூலம் நம்மவரை வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர். இவ்வாறு இருக்கும்போது பஞ்சமென்பதும் பட்டினி என்பதும் அக்காலத்து இருந்தன என்று சொல்ல இடமுண்டோ? இல்லை. இன்றைக்கு 2300 ஆண்டுகளுக்குமுன் விளங்கிய சந்திரகுப்த சக்கரவர்த்தியிடம் ராஜதூதராய் விஜயஞ் செய்திருந்த மெகாஸ்தனீஸ் என்னும் யவனர் தாம் நேரிற் கண்டுகளித்த இந்திய வளத்தையும் ஏனைப் பெருமையையுங் குறித்து—"இவற்றால் இந்தியாவுக்குப் பஞ்சமென்பது வந்ததே யில்லையென்றும் உணவு முதலியவற்றிற்கு வேண்டிய பண்டங்களில் யாதொரு குறைபாடும் இருந்ததில்லை என்றும் சொல்லப்படுகின்றன" என்று இண்டிகா என்ற புத்தகத்தில் எழுதிப்போந்தனர் என்றால் இக்கால நிலைக்கும் முற்கால நிலைக்கும் எத்தனை பெரிய வித்தியாசம் உள்ளது? இப்படியே அந்நியர் எழுத்துக்களைக் கொண்டு, நம் நாட்டு பூர்வநிலையை ஆராய்வதில் அரிய

செய்திகள் தெரியக்கூடுமோயினும் அவ்வாராய்ச்சி மிக நீளும். ஆதலால் தமிழ்நாடு சம்பந்தப்பட்டமட்டில் முற்காலத்தில் நிகழ்ந்த கைத்தொழில் வியாபாரப் பெருமைகளை மட்டும் மூன்னூல்களைக் கொண்டு இங்கு ஆராய்வோம்.

ஆரியமக்களால் "புண்ணியபூமி" என்று கருதப்படும் இந்தியாவுக்கு பரதகண்டம், பாரதவர்ஷம், ஆரியாவர்த்தம் முதலிய பெயர்கள் முன்னாள் முதல்வழங்குவது போலவே அதற்குக் "கர்மபூமி" என்னும் பெயர் வழக்கமும் உண்டு. "கர்மபூமி" என்ற தொடர்க்கு வெவ்வேறு பொருள்கள் இப்போது கூறப்படுகின்றன. கேவலம் வைதிக கர்மங்கள் பரதகண்டத்திலன்றி வேறு நாடுகளிற் செய்யப்படின் பயனளியாவாதலால் அப்பெயர் பெற்றதென்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார், சுவர்க்க நரகங்கள், இன்பதுன்பங்கள், அனுபவித்தற்குரிய இடங்களாதலால் அவை போகபூமிகள் எனவும் அவ்வின்பதுன்ப அனுபவங்கட்குக் காரணமான நல்வினை தீவினைகள் செய்யப்படுமிடம் இப்பரதகண்டமன்றி வேறில்லையாதலால் இது கர்மபூமி எனவும் பெயர் பெற்றன என்று கூறுவர். இப்பொருள்கள் பிற்காலத்தவரால் ஒருவாறு இசைத்துக் கூறப்பட்டனவேனும், அத்தொடரை வழங்கிய முன்னோர்களது விரிந்த எண்ணத்தை உள்ளபடி இவை உணர்த்துவனவாகா. அத்தொடரிலுள்ள "கர்மம்" என்பதை வைதிக கர்மமொன்றற்கே கொண்டு பொருளைக்குறுக்கியும் நற்கருமத்துடன் தீக்கருமம் செய்தற்குரிய இடம் என ஒன்றைக் கூட்டியும் கூறாமல், உயர்ந்த "தொழிலையே செய்தற்குரிய பூமி" எனப் பொருள் காணுதலே முன்னோர் கருத்தோடு ஒத்ததாகும். அஃதாவது-அவ்வவ் வருணத்தார் ஜீவனோபாயத்துக்குரிய நற்கருமங்களை முறைப்படி செய்துவந்த பூமி இப்பரதகண்டமாதலின் அது "கர்மபூமி" எனப்பட்டதென்பதாம். பழைய செந்தமிழ்மக்கள் இக்கருத்தேபடப்பொருள் கூறியிருக்கின்றனர் என்பது கடைச்சங்க காலத்ததாகிய திவாகரத்தில் கூறப்பட்ட சூத்திரத்தால் விளக்கமாகும்.

"உழவு தொழிலே வரைவு வாணிபம்
வித்தை சிற்ப மென்றித்திறத் தறுதொழில்
கற்கும் நடையது கருமபூமி"

கரும பூமியாகிய இந்தியாவின் தொழில்கள் ஆறு. அவை முறையே உழவு, கைத்தொழில், எழுதல், சித்திரங்கள் வரைதல், வர்த்தகம், வித்தை, சிற்பம் (கல்லும் உலோகமும், செங்கல்லும் மர

மும்) என்பனவை. இதனால் முன்னோர் கருத்து மலையிலக்கன்றோ? முன்பு அவ்வவ் வருணத்தார் தத்தம் செய்தொழிலைக் குறைவறப் புரிந்து விளங்கிய பாரத நாட்டில் பிற்காலத்து வருணங்களும் கருமங்களும் தலை தடுமாறினமையால் கர்மபூமி என்னும் தொடர்பொருளும் தடுமாறியதுபோலும். திவாகரர் கூறிய பொருளே கர்மபூமி என்பதில் பழம் பொருள் என்பதற்கு மற்றொரு சிறந்த மேற்கோளும் கூறலாம். ஜைன மத கிரந்தமும் மணிப்பிரவாள நடையினதுமாகிய ஸ்ரீ புராணத்தில் ஆதிதீர்த்தகரது காலில் நிகழ்ந்த விசேடங் கூறிச் செல்லுமிடத்தே "பரத க்ஷேத்திரம் ஷட்கர்மங்களாலே பிரவர்த்தித்தலின் போகபூமி என்னும் பெயர் தவிர்த்து, கர்மபூமி என்னும் பெயர் பெற்றது" எனவும், "பகவான் ஜனங்கட்கு ஜீவனோபாயமாக உழவு, தொழில், வரைவு, வாணிபம், வித்தை, சிற்பம் என்னும் ஷட்கர்மங்களையும் உபதேசித்தருளி," எனவும்

"மண்ணுஞ் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சர்க்கரையுமெழுகு மென்றிவை
பத்தே சிற்பத் தொழிர்க் குறுப்பாவன"—திவாகரம்

வரும் வாக்கியங்களால், பரதகண்டத்துக்குக் 'கர்மபூமி' என்னும் பெயர் வந்தவாறும் ஷட்கர்மங்கள் இன்னவை யென்பதும் நன்கு விளங்குமாறு கண்டு கொள்ளத்தக்கது.

இனி, இக்கர்மபூமிக்குரிய அறுவகைத் தொழில்களிலே உழவும், வாணிபமுமே தலை சிறந்தனவென்பதும் அறிஞர்க்கெல்லாம் ஒத்தது. ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரண்டு தொழில்களும் ஒன்று செழித்திருத்தல் இன்றியமையாததாகும். இவ்விரண்டில் ஒன்று செழிக்க, ஒன்று செழித்தில்லையேல், அந்நாடு பரிபூர்த்தி பெற்ற வளமுடையதென்று சொல்லத் தக்கதன்று. நம் தமிழகமே முற்காலத்தே இவ்விரண்டு தொழில்களும் குறைவறப்பெற்றிருந்த தென்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள்ளன. உதாரணமாக மதுரைக் காஞ்சியில்

"வியன் மேவன் விழுச் செல்வத்து
இருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழுகிய நானிலவரொடு" எனவரும் அடிகளாலும்.

அவற்றிற்கு ஆசிரியர், நச்சினார்க்கினியர் "உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிபம் என்னும் இரண்டு கூற்றாலே—

அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே—புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்குநிலத்து வாழ்வாருடனே'' என்று கூறிய உரையாலும் தமிழ் நாட்டின் பழநிலை வெளியாவதோடு விவசாயம்வியாபாரம் என்னும் இரண்டும் தேசவிர்த்திக்கு இன்றியமையாதவை என்னும் இக்காலத்தறிஞர் கருத்து, முன்னோருக்குச் சிறியதும் புதியதுமன்று என்பது விளங்கத்தக்கது. இவற்றுள், உழவின் பெருமை வேண்டியவளவு தமிழ்நூல்களிற் காணலாம். ஆகவே இது சமயம் எடுத்துக்கொண்ட பழைய கைத்தொழில் வியாபாரப் பெருமைகளை மட்டும் இங்கு கூறுவோம்.

நம் நாட்டவர் உழவுத்தொழிலில் எவ்வளவு மேம்பாடும் சிறப்பும் பெற்றிருந்தனரோ அவ்வளவு மேன்மையும் உயர்வும் நெய்தற்றொழிலிற் பெற்றிருந்தார்கள். நம் நாட்டில் நெய்யப்பட்ட துணிகள் மிகப் பழங்காலத்தேயே அந்நியரால் ஆச்சரியத்துடன் புகழப்பட்டுள்ளன. ஏறக்குறைய இன்றைக்கு 2400 வருஷங்களுக்கு முன் பிறந்தவரும் 'சரித்திர ஆசிரியர்க்கெல்லாந் தகப்பன்' என்று புகழப்படுபவரான ஹைறரோட்ஸ் என்னும் யவனர் நமது பஞ்சைப்பற்றிப் பேசும்போது 'அங்கு (இந்தியாவில்) மரங்களில் வளரும் கம்பளி' என்றும் அஃது ஆட்டுரோமங்களினால் உண்டாகும் கம்பளிகளினும் விசேடமானது'' என்றும் கூறுகின்றார். இத்துணி நெய்தற்றொழில் இலக்கியங்களில் "காருக வினை'' என்று கூறப்படும். இதனை

"பருத்திநூல் பட்டுநூல் அமைத்தாடை யாக்கலும்
சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்''

என்னுந் திவாகரத்தாலும் "காருக ரிருக்கை'' "காருக மடந்தை'' எனவரும் முன்னூற்றொடர்களாலும் உணர்க. தத்தம் கிரகங்களில் இருந்துகொண்டே செய்து வந்த தொழிலாதலால் அப்பெயர் பெற்றது. முற்காலத்தே கிரகங்களிலிருந்து கொண்டே அருமையான ஆடைவகைகள் நெய்தற்கு வேண்டிய நுண்ணிய நூலிழைகள் முழுதும் வீட்டுப் பெண்பாலரால் நூற்கப்பட்டன என்பதற்குப் பற்பல மேற்கோள்கள் தமிழில் காணலாம். உதாரணமாக "பருத்திப் பெண்டின் பனுவலன்ன'' எனவரும் புறநானூற்றடிக்கு "பருத்தி நூற்கும் பெண்டாட்டியது சுகிர்ந்த பஞ்சுபோன்ற'' என்று கூறப்பட்ட உரையும்,

"பஞ்சிதன் சொல்லாப்பனுவலிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத

கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாறு."

என்னும் நன்னூற் பாயிரச் செய்யுளும், முற்கூறிய விஷயத்துக்குத் தக்க சான்றுகளாம். இவற்றுள் பின்னதாகிய வெண்பாவிலே பஞ்சு நூலையும் உருவகப்படுத்திய பவணந்தியார், புலவனைச் சேயிழையாகக்கூறிப் போந்த மாட்சியான நூனூற்றல் மகளிர்தொழில் என்பது வெளிப்படையாம். "நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன்மகடூஉத்தனது செயற்கை நலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்றல் என்பது" எனவரும் இறையனார் களவியலுரை வாக்கியமும் இங்கே கவனிக்கத்தக்கது. இழை நூற்றல் ஸ்திரீகள் கையாண்ட தொழில் என்பது இருக்குவேதத்திலும் அறியப்பட்டது. இவ்வழக்கம் இன்றும் நம் நாட்டில் பலவிடங்களில் நடைபெறுவதேயாம். பழையகாலத்தில் தேர்ந்தபண்டிதரால் செய்யப்படும் நூல் நூற்றல்; நெய்தல் முதலிய தொழில்களை அரசாங்கத்தார் தனி அதிகாரிகளைக்கொண்டு நாட்டில் மேல் பார்க்கும்படிச் செய்து விருத்திசெய்து வந்தனரென்பதும், அவ்வதிகாரியும் நெய்தல் வேலை செய்யும் மகளிரும் கவனிக்கவேண்டிய விதிகள் ஏற்படுத்தியிருந்தனரென்பது சாணக்கிய அர்த்த சாஸ்திரம், இரண்டாம் பாகம் 23-வது "ஸூத்ராத்யக்ஷா" என்ற அதிகாரத்தில் விரித்துக் கூறப்பட்டிருத்தலால் விளங்கத்தக்கது. இனிச் சிலப்பதிகாரத்தே;

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

என்னும் அடிகளின் உரையிலே, 'மயிரினும்' என்பதற்கு "எலிமயிரானும்" என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இவ்வெலிமயிராடை குளிரையும் தாங்கக்கூடியதென்பதும் பிறவிஷயங்களும் சீவகசிந்தாமணியில் வரும்.—

"கோதைமாதரார்
பங்கயப்பகைப் பருவம் வந்தென
எங்குமில்லன எலிமயிர்த்தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வைமேயினார்" (முத்தியிலம்பகம்-82)

"செந் நெருப் புணுஞ் செவ்வெலிம்மயிர்
அந் நெருப் பள வாய்பொற் கம்பலம்

மன் னுருப்பன மகிழ்ந்து தாங்கினர்
என்ன ரொப்பு மில் லவர்களென்பவே'' (ஷை- 87)

"பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்ப்பன கண்கொளாதென
எலி மயிர்ப் போர்வை'' (இலக்கணை-94)

என்னும் பாடல்களாலும் அறியலாம். இவ்வெலிமயிரால் அமைந்த ஆடை எவ்வளவு அருமையாதல் வேண்டும்!

இதுபோலத் தமிழ் நாட்டிலே அப்போது வழங்கி வந்த பட்டாடைகளிற் "பலவகைப்பட்ட தொகுதி'' சிலப்பதிகாரத்தால் தெரிய வருகின்றன. அவற்றின் பெயர்கள் கேட்பதற்கு இன்பம் பயப்பனவாம். அவை வருமாறு:—

கோசிகம், பீதம், பச்சிலை, அர்த்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்ச்சாழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காததூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி (சிலப்பதிகாரம் 336 பக்)

இவற்றால் எண்ணிறந்த ஆடைவகைகள் முன்பு வழங்கின என்பது தெளிவாம். இவை குழிப்பாடி, கலிங்கம் முதலிய ஊர்களிலே நெய்யப்பட்டு வந்தன. இத்தகைய ஆடைகளிலே சிறந்தவைகள் சில சங்க இலக்கியங்களில் பின்வருமாறு புகழப்பட்டுள்ளன.

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை நல்கி' (பொருநராற் 82-83)

என்பதன் பொருள் கண்ணிற்பார்வை இஃது இழை போன வழி சென்று குறித்துப் பார்க்கவராத நுண்மை உடையவாய், பூத்தொழில் முற்றுப் பெற்றமையால் பாம்பினது தோலையொத்த துகிலைக் கொடுத்து,

"காம்பு சொலித்தன்ன அறுவை''

உரை:—மூங்கிலாடையை உரித்தாலொத்த மாசில்லாத உடை

"பாம்பு பயந்தன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியன் இழை யணிவாரா
ஒண்பூங் கலிங்கம்.'' (புறம் - 383.)

உரை:—பாம்புச்சட்டை போன்றலால் அது பயந்ததுபோன்ற வடிவுடையனவும் மூங்கிற் கழையில் உண்டாம் ஆடைபோல இழைப்பு கண்ணுக்குத் தோன்றாதெனவும் ஒள்ளிய பூத்தொழில் உடையனவுமான ஆடை என்க.

இவைபோன்ற புகழ்ச்சிகள் பழைய நூல்களில் அதிகமாம். இத்தகைய ஆடையாபரணம் முதலியவை செய்யுந் தொழிலைப்படித்தறிதற்குரிய கருவிகளும் முன்பு இல்லாமற் போகவில்லை. யாப்பருங்கல விருத்தியில ஓரிடத்தே 'இவற்றை மந்திரவாத மருத்துவநூலும் சாமுத்திரிகமும் நிலத்த நூலும், ஆயுதநூலும் பத்து விச்சையும் ஆடைநூலும், அணிகல நூலும், அருங்கலநூலும் முதலியவற்றால் உணர்க'' எனவரும் வாக்கியத்தால் முற்காலத்தில பல தொழில்களையும் அறிதற்குரிய கருவிநூல்கள் வழங்கி வந்தன என்பது தெளிவாகும். அதன்றியும்,

“ ஏரண முருவம் யோகம் இசைகணக்கு இரதம் சாலம்
தாரண மறமே சந்தம் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்டதந்தோ வழிவழிப் பெயரு மாள.”

என்னும் பாடலும், புறநானூறு 166-ம் செய்யுளில் மூவேழ்துறையும் என்ற விசேடவுரையிலே 'இருபத்தொரு கூறுபட்ட அர்த்த நூல் (Political economy) எனக் கூறப்பட்டிருப்பதும் “உல்லியர் கூவநூலுணர்வோர்'' எனனும் திவாகரச்சூத்திரமும் பிறவும் முற்காலத்தே தொழில் நிலை பொருளாதார நிலைகளை அறிதற்கு வேண்டிய நூல்கள் தமிழ்மொழியில் மலிந்திருந்தன என்பதை நன்கு விளக்கக் கூடியன.

இவ்வருமை நூல்கள் யாவும் இப்பொழுது எங்கிருக்கின்றன. இங்ஙனம் முற்காலத்தில் பேர்போன நாடாய் விளங்கி, பிறநாடுகளின் மானத்தைக் காத்துவந்த நம்பாரத கண்டம் நம் காலத்தில் ஏறக்குறைய அப்பெயர் போனதேயாகி, தன் மானத்தைக் காத்தற்குப் பிறர் கையை அபேக்ஷிப்பதாக மாறிவிட்டது. இது நம்மவர்க்குப் பெரிதும் துக்கமும் வெட்கமும் தரத்தக்கதன்றோ? முன்னாளில் இவ்வருமையான துணிகளுடன் மிளகு, தந்தம், முதலிய இயற்கைப்பொருள்களையும் வாங்கிச் செல்லும்பொருட்டு, காவிரிபூம்பட்டினம், முசிறி, தொண்டி முதலிய கடற்கரைப் பட்டினங்களில்

யவன வியாபாரிகள் தங்கள் கப்பல்களுடன் மிகுதியாக இறங்கி வந்தனர். அகநானூற்றில்,

" யவனர் தந்த வினைமாண் நன் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி" எனக் கூறப்பட்டிருக்கிறது. அதன் பொருள் என்னெனின் யவனர்களால் அதாவது கிரீஸ் தேசத்தவர்களால் கொண்டுவரப்பட்டதும் செய்தொழிலால் மாட்சிமை பெற்றதுமான நல்ல கப்பல்கள் தாம் புறப்படும்போது பொன்நாணயங்களோடு வந்து, செல்லும்போது மிளகு மூட்டைகளுடன் பெயர்கின்ற வளப்பம்பொருந்திய மூசிரி என்னும் பட்டணம் என்பது. இந்த யவனர்கள் தம் நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதி செய்த பொருள்கள் முக்கியமாக சாராயம், பித்தளை, கண்ணாடி என்பனவாம். இவற்றுள் சாராயம் தமிழ்ப்பேரரசராலும் சிற்றரசராலும் விரும்பி உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. இச்செய்தி புறநானூறு-56-ம் செய்யுளாகிய,

" யவனர்—நன் கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற" என நக்கீரர் பாண்டியன் நன்மாறனை நோக்கி வாழ்த்துதலால் தெளியப்படும். இவ்வாறு தமிழ்நாட்டில் மலிந்திருந்த யவனர் என்பவர் கிரீஸ் அரபியா முதலிய தேசங்களிலிருந்து வந்தவர்களே. இவருள் கிரேக்க யவனர் இங்கு வந்து வியாபாரஞ் செய்தவராயினும், சங்கநாளிலும் அதன் பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத் தங்கினவர் சோனகர் என்னும் யவனராவர். தமிழர் கூறும் பதினெண் தேயங்களுள் ஒன்றான சோனகம் என்பது, பரதகண்டத்துக்கு மேல்பாலுள்ள நாடுகளிலொன்று என்று சொல்லப்படுதலால் அஃது அரபியா என்னும் தேயமாகக் கருதப்படுகிறது. தென்னாட்டு காயற்பட்டணம் கீழைக்கரை முதலிய கடற்கரைப்பக்கங்களிலே இக்காலத்தும் இச் சோனகர் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கட்கு வழங்கும் 'லப்பை' என்னும் பெயர் இவர்களது பூர்வ பாஷையாகிய அரபிச்சொல் என்பர். இவரெல்லாம் பிற்காலத்தே தங்கள் பூர்வதேசத்தாரைப்போல மகமதிய மார்க்கத்தைத் தழுவிக்கொண்டனர். இச்சோனகர் ஏனை தமிழகத்தாருக்கருடன் சம்பந்தமுடையவர்கள் அல்லர். இவர்கள் மூற்

காலத்தே காவிரிப்பூம் பட்டணத்து வசித்துவந்த வியாபாரக்கூட்டத்தைச் சேர்ந்தவரென்றும் பிற்காலத்திற்றான் அங்கிருந்து பாண்டி நாடு அடைந்தனர் என்றும் தங்கள் ஆதிவரலாறு கூறுகின்றார்கள். இச்சோனகரது பூர்வபாஷை அரபியேயாயினும் பன்னூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் தங்கிவிட்டவர்களாதலானும், தமிழ்ப்பெண்களை மணம் புரிந்தும் தமிழர் வழக்கங்களிலேயே பழகியும் வந்தமையாலும் இவர்கள் தமிழ்மொழியே பேசுவாராயினர். தமிழ்மக்கள் இச்சோனகரை யவனர் என்னும் பெயரால் அழைத்து வந்தனர் என்பது "சோனகர் யவனர்" என்னும் திவாகரத்தாலும் பத்துப்பாட்டில் யவனரென்னுஞ் சொல் வருமிடங்களிலெல்லாம் நச்சினார்க்கினியர் 'சோனகர்' என்றே உரைகூறிப் போந்தலாலும் விளங்கத்தக்கது. அடியார்க்கு நல்லார் சோனகரெல்லாம் மகமதியராயிருத்தல் கருதி யவனர் - துருக்கர் என்றார். (சிலப்பக் 333)

இச்சோனகர்க்குள் 'மரக்காயர்' என்னும் பட்டப்பெயர் வழங்குகிறது. இவர் ஆதிமுதலே மரக்கலம் இயக்குந்தொழிலைக் கையாண்டமையால் இப்பெயர் வழங்கியதென்பர். இச்சொல்; அரபிபாஷையில் கப்பலின் பெயராக வழங்கும் 'மார்கல்' என்பதினின்று வந்ததெனக் கூறுதலும் உண்டு. இம் "மார்கல்" என்பது தமிழ் மரக்கலம் என்பதும் சொல்லினும் பொருளினும் ஒன்றியுள்ளமை கவனிக்கத்தக்கது. இது நிற்க இனி சிலப்பதிகாரத்து வரும்.

" ஓங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்"

என்பதனுரையிலே அகிலில்—அருமணவன், தக்கோலி, கிடாரவன் காரகில் என்று சொல்லப்பட்ட பலவகைத் தொகுதியும், ஆரத்தில்-மலையாரம், தீமுரண்பச்சை, கிழான்பச்சை, பச்சை வெட்டை, அரிசந்தனம் வேர், சுக்கொடி யென்னும் தொகுதியும்—வாசத்தில் அம்பரேச்சம், கத்தூரி, சவ்வாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, திரியாசம், தைலம் என்னும் தொகுதியும்; கற்பூரத்தில்—மலைச்சரக்கு, கலை, அடைவுசரக்கு, மார்பு இளமார்பு, ஆரூர்க்கால்,

கையொட்டுக்கால், மார்ப்பற்று, வாராசான், குமடெறியான், உருக்குருக்கு, வாரேசு, சூடன், சீனச்சூடன் என்னும் தொகுதியும் கூறப்பட்டுள்ளன. இவை உண்ணாடுகளினின்றும் வெளிநாடுகளினின்றும் தமிழகத்தில் அக்காலத்தே இறக்குமதியான பொருள் வகைகளாதல் காண்க.

இனி பரதகண்டத்தேயுள்ள மற்ற நாட்டுத் தொழிலாளரில் திறமைவாய்ந்த பலர் தமிழ் மக்களால் அபிமானிக்கப்பெற்று, தமிழ்த் தொழிலாளிகளுடன் கூடித் தங்கள் தொழிற் றிறமைகளைக் காட்டியும் வந்தார்கள். இது,

“ மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்,
அவந்திக் கொல்லருட் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை”

என்னும் மணிமேகலை யடிகளால் தெளியப்படும். இவரது தொழில்களையன்றி, கூர்ச்சரச் சிற்பவேலையும், கோசலநாட்டு ஓவிய வேலையும் வற்சநாட்டுக் கம்மவேலையும் பிறவும் தமிழராற் பாராட்டப்பட்டன. இவ்வாறு பூர்வீகர் பலவகைப்பட்ட கைத்தொழில்களிலும் பயிற்சி பெற்றிருந்ததோடு, கரும்பாலைகளில் விசேஷக் கவலை செலுத்தியும், மிளகு வியாபாரத்தைப் பெருக்கியும், பல்வகைக் கள்ளுச் சமைத்தும், வெள் உப்பு உண்டாக்கியும், வியாபாரஞ்செய்து பேருதியமடைந்தும் வந்தார்களென்பது முன்னூல்களால் தெளிவாகிறது. முற்காலத்தே தொழில்செய் மாக்கள் வியாபாரிகள் முதலியோரது ஆரவாரமும் சிலப்பதிகாரத்தே இந்திரவிழவூரெடுத்த காதையிலும் கடலாடு காதையிலும் கூறப்பட்ட அடியில்வரும் அடிகளைப்படித்து மகிழ்தல் இன்றியமையாதது.

“ கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரும் நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்

கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்
ஆரமும் அகிலுந் தூசுந் துகிரும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்வலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பன்னிண விலைஞரொடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்பு செய்குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்
மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி நடுவட் போக்கி
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி
வண்ணமுஞ் சாந்தும் மலருஞ் சுண்ணமும்
பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத் தாழுறு விளக்கமும்

கூவியற் காரவிற் குடக்கால் விளக்கமும்
கொடைநவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்
சழிபெரும் பண்டம் காவலர் விளக்கமும்
என்று வரம்பறியா வியைந்தொருங் கீண்டி
மலைப்பஃ றாரமும் கடற்பஃ றாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை"

எனவே பண்டைத் தமிழரது ஆட்சியில் கைத்தொழில் வல்லுநர் காருகரும், வணிகரும், வலைஞரும், தச்சரும், பொற்கொல்லரும், தோலின் துன்னரும், கிதவல்லவரும், ஓவிய நிபுணரும் யாவரும் நிரம்பி புகழ்பெற்றிருந்தனர். அதுவுமன்றி அக்காலத்தே துறை முகபட்டினங்கள், பற்பல வசதிகள்பெற்று விளங்குவதாயின. அந்நியநாட்டு நாவாய்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற துறைகளையும், பண்டங்களை இறக்குமதிசெய்து அவைகளை சேமித்து வைக்கச்செய்த ஏற்பாடுகளும், இரவில் மாலுமிகளுக்குக் கரையைத் தெரிவிக்க உதவ கலங்கரை விளக்கம் கம்பீரமாய் பிரகாசிக்கும் பான்மையும் செப்பத் தரமன்று.

பண்டைத் தமிழர் எவ்வளவுக் கெவ்வளவு கைத்தொழிலில் சிறந்து புகழ் எய்தியிருந்தனரோ அவ்வளவுக் கவ்வளவு வணிகத்தி லும் தலைசிறந்திருந்தார்கள். கைத்தொழிலும் வணிகமும் ஈருட லும் ஒருயிரும்போலாம். ஒன்றில்லையேல் மற்றொன்றும் இல்லா தொழியும். வணிகத்தில் தமிழர்கள் எவ்வாறு அபிவிருத்தி அடைந் திருந்தார்கள் என்பதை இங்கு ஆராய்வோம்.

வணிகர்க்கு முக்கியமாக வேண்டப்படும் குணங்கள் இவை யென்று கடைச்சங்க நூலாகிய திவாகரத்திலே பின்வருமாறு கூறப் படுகின்றன.

" தனிமை யாதல் முனிவில னாதல்
இடனறிந் தொழுகல், பொழுதொடு புணர்தல்
உறுவது தெரிதல் இறுவ தஞ்சாமை
ஈட்டல் பகுத்தல் என்றிவை யெட்டும்
வாட்ட மில்லா வணிகர தியற்குணம் "

வியாபார முறைக்கு இக்காலத்தவராற் சொல்லப்படும் குணங்களில் முக்கியமானவை இவ்வெட்டுமே யன்றோ? இவற்றுள் 'தனிமையாதல்' என்னும் குணம் வியாபாரத்துக்கு உரியது என்று முன்பு கூறப்பட்டது. கொள்ளைக்குப் போனாலும் கூட்டுப்பங் குதவாது என்பது நம்மவர் பழமொழி. கூட்டுவர்த்தக முறையில் இக்காலத்துப்போல் எண்ணிறந்த சௌகரியங்கள் முன் ஏற்படாமையால் அது நீக்கப்பட்டது போலும். ஆயினும் அக்கூட்டு வியாபாரமும் முன் நிகழ்ந்ததே யென்பதும் அக்கால வியல்புக்கு அது பெரும்பாலும் ஒவ்வாதாயிற் றென்பதும் 'தனிமையாதல்' என ஒன்றை எடுத்துக் கூறுதலானே உய்த்தறியப்படும். மனு முதலிய நீதி நூல்களில் சொல்லப்படும் பதினெட்டு வியவகார பதங்களில் 'கூடிமேம்படல்' அஃதாவது கூடி இலாபம் சம்பாதித்தலும் ஒன்றாக விருத்தலால் அவ்வணிக முறைமை தழுவப்பட்டிருத்தல் காண்க. இனி தனிமையாதலென்பது கூட்டுவியாபாரத்தை விலக்காது வாணிபத் தொழிலில் சுயேச்சையுடையவனாதல் என்பதைக் குறிக்கும் எனினும் அமையும். வணிகத்தொழிலை மேற்கொண்டோர் சாந்தமே குடிகொண்டிருக்கவேண்டும். சற்றும் கோபங்கொள்ளக் கூடாது. சமய சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்போல் நடக்கும் இயல்பினராயுமிருத்தல் அவசியம் தாம் செய்யும் வியாபாரத்தில் நிலைமையை நிமிஷத்துக்கு நிமிஷம் தெரிந்தவராயும் இனி நடக்கப் போவது இதுவென்றும் முன்கூட்டியே தெரிந்துகொள்ளும் ஆற்றலுடையவராயும் இருக்கவேண்டும். பொருள் நியாயவழியில் சம்பாதிக்கவேண்டும். அப்படிச் சம்பாதித்ததைப் பகுக்கவேண்டும். பின் வியாபாரத்திற்கு என்று முன்னமேயே எடுத்து மூலதனத்துடன் சேர்க்கவேண்டும். ஆகிய இவை யெல்லாம் வணிகர்க்கு இன்றியமையாத இயற்கையிலேயே ஏற்படவேண்டிய குணங்களாம். இத்தகைய இயற்கை குணங்களையுடைய வணிகரைத் தமிழரசர்கள் பெரிதும் அபிமானித்துவந்தனர். வாணிபத்தால் செல்வமும் புகழும் சிறக்கப்படைத்த வணிகர்க்கு அரசன் 'எட்டி' என்னும் அரும்பட்டமும் அதற்கடையாளமான பொற்பூவொன்றும் அளித்து அவரை ஊக்கப்படுத்தல் பண்டை வழக்கமாக இருந்தது. மணிமேகலையில்,

"வணிக மரபின் வருபொரு ளீட்டி
நீணிதிச் செல்வனாய் நீள்நில வேந்தனால்

எட்டிப் பூப்பெற்று இருமுப்ப தின்யாண்டு
ஒட்டிய செல்வத்து உயர்ந்தோ னாயினன்''

என ஒரு வணிகன் இவ்வாறு புகழப்பட்டிருத்தல் சிறந்த உதாரணமாக இருக்கின்றது.

இவ்வணிகர் தாம் படைத்த செல்வச் சிறப்புக் கேற்ப, இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூவகையினராவர். இவர்களைப்பற்றிய வரலாறு அடியில்வரும் ஜீவசம்போதனைப் பாட்டால் விளங்கும்.

"இப்பர் கவிப்பர் பெருங்குடி வணிகரென்
றெப்புடைய மூவ ருரைக்குங்கால்—றப்பில்
மிதியடியே யானமிசை நோக்கினர்கள் காணு
நிதியுடைய ராவர் நிலத்து''

இப்பராவர்—எவனொன்னின் ராசியை நடுவே குவித்து யானைமேலேறிக் குடையிடை நின்றால் ஒருவரை யொருவர் காணவொண்ணாத பொன்னிராசியை யுடையார். கவிப்பராவர்—அப்படியே விருஷபத்தின் மேலேறிக் குடையிடை நின்றால் ஒருவரைக் காணவொண்ணாத பொன்னிராசியை யுடையார். பெருங்குடி வணிகராவர்—மிதியடி மேலேறி குடையிடை நின்றால் ஒருவரொருவரைக் காண ஒண்ணாத பொன்னிராசியை யுடையவர் என்னும் மூன்று அந்தஸ்தினராய்ப் பிரிக்கப்பட்டு புகழப்பட்டிருந்தார்கள்.

புராதன இந்தியாவில் கப்பல் வியாபாரம்.

புராதன இந்தியர் இவ்வுலக சம்பந்தமான விஷயங்களில் தங்கள் புத்தியைச் செலுத்தாமல் பரலோக சாதனமான ஆத்மஞானத் துறைகளிலேயே தங்கள் கவனத்தை யெல்லாம் செலுத்தி வந்தனர் என்பது சில சரித்திரக்காரர்களின் தப்புக்கொள்கையாம். ஆனால் தற்போது ஆராய்ச்சி செய்ததன் பயனாக நமது முன்னோர்கள் மத சம்பந்தத் துறைகளில் எவ்வளவுக் கெவ்வளவு மேம்பட்டு விளங்கியிருந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு இவ்வுலகசாதனங்களுக்கேற்ற கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், ராஜாங்கம், இயற்கைநூல், சித்திரம், சில்பம் முதலான பலசாஸ்திரங்களிலும் அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே பிரசித்தியடைந்திருந்

தனர் என்பது அங்கைநெல்லிக்கனியென விளங்குகின்றது. தென்னிந்தியாவில் வெகுகாலத்துக்கு முன்னமேயே கப்பல் வியாபாரம் செழித்து ஓங்கியிருந்தது என்பதைச் சற்று ஆராய்வோம்.

கிறிஸ்து பிறப்பதற்குமுன் ஆயிர வருஷங்களுக்கு முன்பே தென் இந்தியா வாசிகளான திராவிடர் என்னும் தமிழ் மக்கள் பாபிலோனியா முதலான பல அந்நியதேசங்களுடன் கப்பல் வியாபாரம் செய்துவந்தார்கள் என்பதற்குச் சில ஆதாரங்கள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. அக்காலத்தில் தென் இந்தியர்கள் 'மஸ்லின்' என்று சொல்லப்பட்ட மெல்லிய வஸ்திரத்தை மேல்நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்துவந்தார்கள் என்றும் தெரிகிறது. மிகப் புராதனமான பௌத்த கிரந்தங்களில் பிரதானமான பவேரு ஜாதகத்தில் இந்திய வியாபாரிகள் கப்பல் மூலமாய் மயில் முதலிய அழகிய பட்சிகளை எடுத்துப் போனார்கள் என்றும் கூறப்பட்டிருப்பதால் பாபிலோனியாவுடன் பூர்வீக தென்னிந்திய திராவிட வர்த்தகர்கள் சுமார் ஐயாயிரம் வருஷகாலம் கப்பல் வியாபாரஞ் செய்துவந்தனர் என்று சரித்திரக்காரர்கள் உத்தேசித்திருக்கிறார்கள்.

பாபிலோனியா நகரத்தில் உலகத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திலிருந்தும் நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் கூடியிருந்ததாகப் பல தேசத்து யாத்திரிகர்கள் தங்கள் குறிப்பில் குறித்திருக்கின்றார்கள். இவ்வியாபாரிக்கூட்டத்தில் இந்தியரும் இருந்திருத்தல் வேண்டும். ஏனெனில் அக்காலத்து பாபிலோனியாவின் வியாபாரப் பொருள்கள் எல்லாவற்றிலும் இந்தியாவின் ஏற்றுமதிகளே பிரசித்தி பெற்றிருந்தன.

சுமார் கிறிஸ்து பிறப்பதற்குமுன் ஆறாவது நூற்றாண்டில் அதாவது இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்குமுன் பாபிலோனியாவின் பெருமை குலையத் தலைப்பட்டது. அதனாலே இந்திய பாபிலோனியா வியாபாரமும் ஒருவாறு குன்ற ஆரம்பித்தது. ஆனாலும் திராவிடரின் மேனாட்டு வர்த்தகம் அம்மட்டோடு நின்றுவிடவில்லை. திராவிட வியாபாரிகள் பாரசிகத்துடனும், எகிப்துடனும் கிரீஸ் தேசத்துடனும், அரேபியாவுடனும், ரோமாபுரியுடனும் வியாபாரஞ் செய்யத் தொடங்கினர். கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டு முதல் பல நூற்றாண்டுகள் வரையில் ரோமராச்சியம் முழுமையும் இந்திய வியாபாரம் பிரபலமாகப் பரவியிருந்தது. அதன் பயனாகத்

தென்னிந்தியா முழுமையும் ரோமாபுரியின் தங்க நாணயங்கள் ஏராளமாக வந்து இறங்கியிருந்தன. அக்காலத்திலிருந்த பூகோள சாஸ்திர நிபுணர்களான டாலமி, பெரிப்லஸ் ஸ்பிலினி என்பவர்கள் இந்தியாவின் வியாபாரத்தைக் குறித்துத் தங்களுடைய கிரந்தங்களில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

சங்க நூற்களிலும் தென்னிந்திய வியாபாரத்தைக் குறித்து ஆங்காங்கு குறிப்புகள் காணப்படுகின்றன. மேனாட்டுக்கு ஏற்றுமதியான இந்தியப் பொருள்களில் பெரும்பான்மை மிளகு, தந்தம், முத்து, மஸ்லின், வாசனைத் திரவியங்கள் முதலியனவாம். இவைகள் ஏராளமாக முசிரி, தொண்டி, புகாரா முதலான துறைமுகப் பட்டணங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தனவென்றும் அதன் மூலமாகத் தென்னிந்தியர்கள் கோடிக்கணக்காகத் திரவியஞ் சம்பாதித்தார்கள் என்றும் பட்டினப்பாலை என்ற நூல் விவரமாகக் கூறுகின்றது.

தமிழின் பெருமையை என்றென்றும் நிலைநிறுத்தக்கூடிய 'பஞ்ச காவியங்கள்' என்ற சிறப்புப் பெயரெய்திய சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் பழைய நூற்கள் பலவற்றுள்ளும் கப்பல் வியாபாரத்தைக் குறித்து பல குறிப்புகள் பொலிந்து கிடக்கின்றன.

'தமிழ்மூதாட்டி' எனப் பட்டப்பெயர்பெற்ற ஔவையாரும் கப்பல் வியாபாரம் அவர் காலத்தில் அதிக முன்னேற்றமடைந்திருந்ததென்பதை ஆதாரமாகக்கொண்டு 'திரைகட லோடியுந் திரவியந்தேடு' என்று கூறியிருப்பதாலும் உறுதிப்படுகின்றது.

தமிழ்நாட்டு மூவேந்தர்களும் கப்பற்படை வைத்திருந்தார்கள் என்னும் விஷயம் தமிழ்நூற்களினாலும், சாசனங்களினாலும் வெளியாகின்றது. பொதுவாக சோழமன்னர்காலத்தில் அதிலும் ராஜேந்திரசோழன் ஆண்டகாலத்தில் அம்மன்னவன் கப்பற்படையின் வல்லமையினால் வங்காள குடாக்கடலைத்தாண்டி பர்மாதேசத்தைக் கைப்பற்றினான் என்று சரித்திரங் கூறுகின்றது. மேலும் மணிமேகலையென்றும் காவியத்திலிருந்து, தென்னிந்தியர்கள் சுமத்திரா, ஜாவா முதலிய கிழக்குத்தீவுகளுக்குச் சென்றதாகக் கப்பற்பிரயாணக்குறிப்புகள் கிடைக்கின்றன.

காஞ்சி நகரத்தைத் தலைநகரமாகக்கொண்டு ஆண்டுவந்த பல்லவ அரசர்களும் சமுத்திரமார்க்கமாக வியாபாரஞ் செய்திருக்க வேண்டும். அக்காலத்தில், சென்னைக்குத் தெற்கே சுமார் 35 மைல் தூரத்திலுள்ள மஹாபலி புரம் என்பது பிரபலமான துறைமுகமாயிருக்கவேண்டும் என்றும் ஊகிக்கப்படுகிறது.

இராஜேந்திரசோழன் காலத்தில் சீனதேசத்துடன்கூட இந்தியர்கள் கப்பற்போக்குவரவு செய்துவந்ததாகவும் சரித்திரத்தால் காணக்கிடைக்கின்றது. மேற்குறிப்பிடப்பட்டவற்றால் இந்தியர் சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பாகவே கப்பல்மூலமாய் எகிப்து, பாரசீகம், ரோமாபுரி, அரேபியா தேசங்களுடனும் வியாபாரஞ்செய்து கைத்தொழிலில் சிறப்பையும், செல்வவிருத்தியையும் தம் நாட்டுக்கு என்றும் அழியாத கீர்த்தியையும் உண்டாக்கியிருந்தார்கள் என்பது துணிபு. எந்த நாட்டில் கைத்தொழில் மிக்க ஊக்கமாகக் கையாளப்படுகின்றதோ அந்த நாடு வேலைத்திறமையினாலும் வியாபாரத்தினாலும் செல்வத்தினாலும் நாகரிகத்தினாலும் உலகத்திலுள்ள பல தேசத்தவர்களின் நன்மதிப்பையும் புகழையும் செல்வாக்கையும் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கப்பற் போக்குவரவு சாதனம்

இந்தியாவின் இயற்கை அமைப்பே அதன் பெருமைக்குக் காரணம். உலகத்திலுள்ள பிறநாடுகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளாத நிலையில், உலகத்திலே நிகழும் மாறுதல்கள் அதன் மாசற்ற வாழ்க்கையைப் பங்கப்படுத்தாத தன்மையில் இந்தியா அமைந்திருந்தது, இருக்கிறது. இந்தியாவின் சரித்திரத்தை அறியாத ஒருவன் அதன் பூகோள சாஸ்திரத்தைமட்டும் எடுத்துப்படிப்பானேயாகில், இந்தியா தன் நாகரிகத்தைப் பிறருக்குக் கட்டுப்படாமல், தானும் பிறரைக் கட்டுப்படுத்தாமல் வளர்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று ஊகிப்பான். ஆனால் இந்தியாவின் சரித்திரம் வேறுவிதமாகவே இருக்கிறது. இந்தியாவின் நாகரிகத்துக்கு உலகத்திலுள்ள பற்பல தேசங்கள் கட்டுப்பட்டன என்பதை எந்தச் சரித்திரக்காரனும் மறுக்கத் துணிவுகொள்ளான்.

முற்காலத்தில் பற்பலநாடுகளுடன் இந்தியாபோக்குவரவுசெய்து வந்ததற்கு முக்கிய சாதனமாக இருந்தது கப்பல்களே. கப்பற்கட்டுந் தொழில் இந்தியாவில் மிக நன்றாகப்பண்பட்டிருந்தது குறைந்த அளவாகப்பார்த்தபோதிலும் சுமார் இருபத்தாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலமுதற்கொண்டே இந்தியா வியாபார உலகத்தின் இருதய ஸ்தானமாக இருந்தது என்று கூறவேண்டும். பண்டைக்காலத்தில் பொனீஷியர், அஸ்ஸிரியர், கிரேக்கர், யூதர், எகிப்தியர் முதலியவர்களுடன் இந்தியா வியாபாரம் நிகழ்த்தியது. அக்காலத்தில் வாழ்ந்து வந்த இந்தியர், சுறுசுறுப்புள்ளவர்களாயும், உழைப்பாளிகளாகவும் இருந்தார்கள் எனவே, அவர்கள் தங்கள் தினசரிவாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய பொருள்களை அயல்நாடுகளிலிருந்து எதிர்பார்க்கவில்லை. இதனால் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் அதிகமாயும் இறக்குமதி வியாபாரம் குறைந்ததாகவு மிருந்ததென்றே கூறலாம். தகரம், ஈயம், கண்ணாடிச் சாமான்கள் ஆயுதங்களுக்கு வேண்டிய எஃகு முதலிய சிலவே ஐரோப்பாவிலிருந்தும், மேற்கு ஆசியாவிலிருந்தும் இந்தியாவிற்கு இறக்குமதியாயின. ஆனால் இந்தியர்கள் பெரும்பாலும் ஆன்மசக்திபெற்று உலகவாழ்க்கையை நடத்தி வந்தார்களாதலின் மேற்கூறப்பட்ட ஆயுதச்சாமான்கள் மிகக்குறைவாகவே இறக்குமதியாயிருக்கவேண்டும் சாம்பிராணி அரேபியாவிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகிக்கொண்டுவந்தது. இந்தியாவிலிருந்து மேனாடுகளுக்கு ஏற்றுமதியான சாமான்களோ எண்ணிறந்தன. ஆட்டு உரோமம், கோமேதகம், பச்சை, வைடூரியம்முதலிய உயர்ந்த இரத்தினங்கள், குங்கிலியசம்பந்தமான பசை, மெல்லிய ரோமத்தாலாய தோல்கள், பெருங்காயம், கஸ்தூரிமுதலிய பல மேனாடுகளுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டு வந்தன. உயர்ந்த கம்பளத்தாலும், ரோமத்தாலும் நெய்யப்பட்டு பல வேலைப்பாடுகள் நிறைந்த உடைகளும் வேண்டிய எஃகு முதலிய சிலவே ஐரோப்பாவிலிருந்தும் மேற்கு ஆசியாவிலிருந்தும் இந்தியாவுக்கு இறக்குமதியாயின. ஆனால் இந்தியர்கள் பெரும்பாலும் ஆன்மசக்திபெற்று உலகவாழ்க்கையை நடத்திவந்தார்களாதலின் மேற்கூறப்பட்ட ஆயுதசாமான்கள் மிகக் குறைவாகவே இறக்குமதியாயிருக்கவேண்டும். சாம்பிராணி அரேபியாவிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகிக்கொண்டு வந்தது. இந்தியாவிலிருந்து மேனாடுகளுக்கு ஏற்றுமதியான சாமான்களோ எண்ணிறந்தன. ஆட்டு உரோமம், கோமேதகம், பச்சை வைடூரியம் முதலிய உயர்ந்த இரத்

தினங்கள் குங்கிலிய சம்பந்தமான பசை, மெல்லிய உரோமத்தாலாய தோல்கள், பெருங்காயம், கஸ்தூரி முதலிய பல மேனுடுகளுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தன. உயர்ந்த கம்பளங்களும் உரோமத்தால் செய்யப்பட்ட பல வேலைப்பாடுகள் நிறைந்த உடைகளும் இந்தியாவினின்று மேனுடுகளால் எதிர்க்கப்பட்டன. பாபிலோனிலும், ரோமாபுரியிலுமிருந்த உயர்ந்த குடும்பத்தினர் இந்தியாவிலிருந்து வந்த கம்பளங்களை வாங்கி உபயோகப்படுத்துவதில் அதிக ஆசைகொண்டிருந்தனர். இவைகள் அந்நகரங்களில் அதிக விலைகொடுத்தே வாங்கப்பட்டன. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட சாமான்களில் முக்கியமானது பட்டே யாகும். அயல்நாட்டார் சம எடை பட்டை சம எடை பொன்கொடுத்து வாங்கிக்கொண்டனர் என்று சொல்லப்படுகிறது. பட்டுக்கு அடுத்தபடியாக இந்தியாவிலிருந்து அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டவை பஞ்சு துணிகளேயாகும். மிகவும் கீழ்த்தரமான துணிகள் முதல் உயர்ந்த மஸ்லின் துணிகள் வரையிலும் மற்றும் பலவிதமான எண்ணெய்கள், பித்தளை சாமான்கள், உப்பு, மருந்துகள்; சாயச் சாமான்கள் வாசனைத்திரவியங்கள், மிளகு, முதலிய யாவும் இந்தியாவிலிருந்தே ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாயின. இதனல் பல நூற்றுண்டுகளாக மேனுடுகளுக்கு வேண்டிய சாமான்களை இந்தியா உதவி வந்தது என்பது நன்கு புலனுகும். அதற்குப் பிரதிபலனுக பிறநாடுகளிலிருந்து ஏராளமாகப் பணம் வந்து குவிந்தது என்பது கூருமலே விளங்கும். ரோம் தேசத்தவர்கள் மட்டும் வருஷத்துக்கு ஆயிரக்கணக்கான பவுன் பெறுமான சாமான்களை இந்தியாவினின்றும் இறக்குமதி செய்து கொண்டனர் என்று கூறி இங்ஙனம் ஆண்டுதோறும் ரோமாபுரியிலிருந்து செல்கின்றதே யென்று கி. பி. முதல் நூற்றுண்டிலேயே பிளினி என்ற ஆசிரியன் விசனப்பட்டு எழுதியிருக்கிருன். இங்ஙனம் இந்தியாவின் வியாபாரம் மிகச் செழித்திருந்தமையால் அதன் பணச் செல்வாக்கும் அதிகமாயிருந்தது. இந்தியாவின் செல்வநிலை எத்தன்மைத்து என்பது பின்வரும் செய்தியால் நன்கு விளக்கமுறும். பாரசீக அரசனுக்குக் காணிக்கையாக நூற்றெண்பத்தைந்து அந்தர் வெயிட் எடையுள்ள பொன்னை இந்திய அரசன் ஒருவன் செலுத்தினுன் என்றுல் இந்தியாவின் செல்வ நிலைதெற்றென விளங்கும்.

இந்தியாவில் கப்பல் போக்குவரவு முதன்முதலில் எப்பொழுது தொடங்கியது என்பதைப்பற்றிய ஆராய்ச்சி அதிகமாக விரியும்.

ருக்வேத காலத்திலேயே இந்தியாவின் அந்நியநாட்டு வியாபாரம் மிகவும் உயர்ந்த நிலைமையிலிருந்ததென்று கூறவேண்டும். ருக்வேதத்தின் காலத்தைப்பற்றிய வாதம் ஈண்டு வேண்டியதில்லை. ஆனால் ருக்வேதகாலம் என்பது மிகவும் பழைமையான காலமென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். எனவே, கி. மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்தியா அந்நிய நாடுகளுடன் போக்குவரவு செய்துக் கொண்டிருந்தது என்று சில சரித்திரக்காரர் கூறுகின்றனர். டாக்டர் சேய்ஸ் என்னும் அறிஞர் கி. மு. மூவாயிர ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்தியாவுக்கும் பாபிலோனுக்கும் வியாபாரப் போக்குவரவு நடைபெற்றுக்கொண்டிருந்த தென்று குறிப்பிடுகிறார். ஐக்கிய பாபிலோனியாவின் முதல் அரசனான உர்பாகஸ் என்பவன் உர் என்னும் பிரதேசத்தில் ஆண்டுகொண்டிருந்தபோதே இந்தியாவுக்கும் பாபிலோனியாவுக்கும் வியாபாரம் நடைபெற்றிருக்கவேண்டுமென்றும் உர் என்னும் பிரதேசத்தில் அகப்பட்ட தேக்குமரங்கள் மலையாளத்திலிருந்து ஏற்றுமதியாயிருக்க வேண்டுமென்றும் ஹ்யூவிட் என்னும் சரித்திரக்காரர் நிச்சயித்திருக்கின்றனர். மற்றும் பாபிலோனியாவில் அகப்பட்ட ஒரு புராதன சாஸனத்தில் மஸ்லின் துணிக்கு 'சிந்து' என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் சிந்துநதி பிரதேசத்திற்கும் பாபிலோனுக்கும் வியாபாரப் போக்குவரவு இருந்ததென்பது வெள்ளிடைமலையென்று டாக்டர் சேய்ஸ் குறிப்பிடுகிறார். அவருடைய அபிப்பிராயத்தை வேறு சில சரித்திரக்காரர் மறுத்து அவ்வளவு புராதன கால முதற்கொண்டு இந்தியாவுக்கு அந்நிய வியாபாரம் இருந்ததென்பதற்கு எவ்வித சாஸன ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறியிருக்கின்றனர். இவருடைய கூற்றே சரியானதென்று வைத்துக்கொண்டாலும் கி. மு. ஏழாம் நூற்றாண்டுமுதல் இந்தியாவுக்கு அந்நிய நாட்டு வியாபாரம் இருந்ததென்பது புலனாகும். எனவே இற்றைக்குக் குறைந்தது சுமார் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவின் அந்நிய நாட்டு வியாபாரம் நன்னிலையிலிருந்ததென்று கூறலாம். இதே காலத்திலும் இதற்கு முன்னரும் கிரீஸ், ரோம், அஸ்ஸிரியா, எகிப்து முதலிய முன்னர்க் கூறப்பட்ட தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் போக்குவரவு இருந்தது. அந்நிய நாட்டு வியாபாரத்தினால் இந்தியாவுக்கும் பிற நாடுகளுக்கும் அந்நியோந்நிய பாவம் அதிகமாக ஏற்பட்டிருந்தது. சாலோமன் என்னும் அரசன் கீழ்நாட்டிலிருந்து வரும் வியாபாரிகளின் சௌகரியத்திற்காகத் தரைமார்க்கத்திலும் கப்பல் மார்க்கத்திலும் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தான். தரைமார்க்

கத்தில் வியாபாரிகள் தங்கிப் போவதற்காக அங்கங்கே விடுதிகள் அமைத்தும் வழியில் அவர்களுக்கு கள்வர் பயமில்லாமலிருக்கத் தகுந்த பந்தோபஸ்தையும் செய்தான். கடல் மார்க்கத்தில் கப்பல்கள் அபாயமில்லாமல் தங்க துறைமுகங்களையும் ஏற்படுத்தினான். இவ்விஷயம் எல்லாம் கிரேக்க சரித்திரத்தில் காணப்படுகின்றது. இந்தியாவைப்பற்றி அறிந்தவர்களில் முதன்மையானவன் ஹெரொடாடஸ் என்பவன் கி. மு. 450-வது வருஷத்தில் பிரந்தவன். பாரசீக அரசர்களுடைய சேனையில் இந்திய வீரர்கள் இருந்ததாகக் கூறுகிறான். மற்றும் அவன் விலையுயர்ந்த இரத்தினங்களும், நாய்களும் இந்தியாவிலிருந்து பாபிலோனியாவுக்குச் சென்றன என்றும் இந்தியாவில் ஏராளமாகப் பொன்கிடைக்கிறதென்றும் குறிப்பிடுகின்றார்.

இதுகாறும் இந்தியாவுக்கும் பிறநாடுகளுக்கும் வியாபாரப் போக்குவரவு இருந்தது என்பதைப்பற்றிச் சுருக்கிக் குறிப்பிட்டோம். இனி இப்போக்கு வரவுக்குச் சாதனமாயிருந்த கப்பல்களைக் குறித்தும் அவைகளின் அமைப்பைப்பற்றியும் சிறிது கூறுவோம். இந்தியாவில் கப்பல்கட்டுந் தொழிலைக்கொண்டே ஜீவனஞ்செய்து வந்தோர் எண்ணிறந்தவர். அந்தத்தொழில் இப்பொழுது இந்தியாவில் எந்நிலையிலிருக்கிறது என்பதைப்பற்றிக் கூற வேண்டுதில்லை. அரசர்கள் பிரயாண காலத்தில் கப்பல்களை யுபயோகித்தார்கள் என்பதற்கு ருக்வேதத்தில் அனேக ஆதாரங்கள் காணப்படுகின்றன. கப்பல்கட்டுந் தொழிலைப்பற்றிய தனிநூல்கள் பல இருந்தன. முற்காலத்தில் இந்தியாவில் வழங்கப்பட்ட விருக்ஷ ஆயுர்வேதம் என்னும் தாவரநூலில் மரங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதலாவதாகிய பிராமணஜாதி மரமானது லேசாயும், மிருதுவாயும் எந்த மரத்தோடு இணைக்கக்கூடியதாயுமிருந்தது. இரண்டாவதாகிய க்ஷத்திரியஜாதி மரமானது லேசாயும் மிருதுவாயும் ஆனால் வேறெந்த மரத்தோடும் இணைக்கக்கூடாததாகவும் மிருந்தது. மூன்றாவதாகிய வைசியஜாதி மரமானது மிருதுவாயும் ஆனால் பளுவாயுமிருந்தது. நான்காவதாகிய சூத்திரஜாதி மரமானது மிருதுத்தன்மை யில்லாததாயும் பளுவாயும் இருந்தது. இவைகளில் க்ஷத்திரியஜாதியைச்சேர்ந்த மரங்களால் செய்யப்பட்ட கப்பலே வியாபாரத்திற்கு ஏற்றதென்றும் இக்கப்பல்களே நீண்ட தூரத்திற்குச் செல்லத் தகுதியானவை யென்றும் இக்கப்பல்களைக்

கொண்டு வியாபாரம் செய்தால் அதிகச்செல்வம் உண்டாகும் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. மேலே கூறப்பட்ட மரங்களில் ஒரு ஜாதிமரத்தை மற்றொரு ஜாதிமரத்தோடு இணைத்துக் கப்பல் செய்தால் அது நீண்டநாள் நிலைத்திராதென்றும் சிறிது ஆபத்து நேரிடினும் திடீரென்று முழுகிப்போகும் என்றும் சொல்லப்படுகின்றன. கப்பல் கட்டும் விஷயத்தில் மற்றோர் எச்சரிக்கை செய்யப்படுகிறது ஆழமான சமுத்திரங்களில் செல்லும் கப்பல்களின் அடிப்பாகத்தில் மரங்களை ஒன்றோடொன்று சேர்க்கும் விஷயத்திலாவது வேறெவ் விஷயத்திலாவது இரும்பை உபயோகிக்கக் கூடாதென்றும் சமுத்திரங்களில் மின்சார சத்தியுடைய பாறைகள் பல இருக்கின்றதாதலின் அவைகளால் இழுக்கப்பட்டு முழுகிப்போகாமலிருக்க மேலே இந்த எச்சரிக்கை செய்யப்படுகின்றதென்றும் கப்பல்சாஸ்திர விற்பனன் ஒருவன் கூறியிருக்கிறான். இதனால் பண்டை இந்தியர்களுடைய அறிவின் பெருமை புலனாகும்.

கப்பல்கள் இரண்டுவிதங்கள் என்றும் யுக்திகல்பதரு என்ற மொழி நூல்கூறுகின்றது. அவைமுறையே சாமானியம் விசேஷம் என்பவை. ஆறுகளிலும் சிறிய நீரோடைகளிலும் சாமான்யக் கப்பல்கள் யென்றும் சமுத்திரங்களில் செல்லக்கூடியவைகளுக்கு விசேஷக் கப்பல்கள் என்றும் பெயரிடப்பட்டிருந்தன. சாமான்யக் கப்பள்களில் பத்துவிதம் இருந்தன. அவைகளின் நீளம், அகலம், உயரம், பெயர் முதலியன கீழ்வரும் விதம்.

1. சாமான்யக் கப்பல்கள்.

பெயர்	முழநீளம்	முழ அகலம்	முழ உயரம்
1 உத்தமம்	16	4	4
2 மத்திமம்	24	12	8
3 பீமம்	40	29	20
4 சபலம்	48	24	24
5 பதலம்	64	32	32
6 பயம்	72	36	36
7 தீர்க்கம்	88	44	44
8 பதரபுதம்	96	48	48
9 கர்ப்பம்	112	56	56
10 மந்தரம்	120	60	60

இந்த பத்துவித கப்பல்களில் பீமம், பயம், கர்ப்பம் என்ற மூன்று கப்பல்களில் பிரயாணஞ் செய்தால் துரதிர்ஷ்டமே சம்பவிக்குமென்றுசொல்லப்பட்டிருக்கிறது.

சமுத்திரங்களில் செல்லக்கூடிய விசேஷக்கப்பல்களில் தீர்க்க கப்பல்கள் என்றும் உன்னதக்கப்பல்கள் என்றும் இரண்டு பிரிவுகள் உண்டு. அதாவது அகலத்தையும் உயரத்தையும்விட நீளத்தில் மிகுந்த தீர்க்கமென்றும் நீளத்தையும் அகலத்தையும்விட உயரத்தில் மிகுந்தவை உன்னதம்' என்றும் அழைக்கப்பட்டன. தீர்க்க கப்பல்களில் பத்து வகையும் உன்னத கப்பல்களில் ஐந்துவகையும் உண்டு. அவை வருமாறு.

2 விசேஷக்கப்பல்கள்.

1 தீர்க்கக் கப்பல்கள்.

	பெயர்	முழநீளம்	முழ அகலம்	முழ உயரம்
1	தீர்க்கம்	32	4	31 15
2	தரணீ	48	6	44 15
3	லோலம்	64	8	62 15
4	கத்வரம்	80	10	8
5	காமினீ	86	12	92 15
6	தரீ	112	14	111 15
7	ஜங்காலம்	128	16	124 15
8	ப்ளாப்பினி	144	13	142 15
9	தாரணீ	160	20	16
10	பேகினீ	176	22	17 315

இவைகளில் லோலம், காமினீ ப்லாபினீ என்ற மூன்று கப்பல்களும் துரதிர்ஷ்டத்தைக் கொடுப்பனவாகும்.

2 உன்னதக்கப்பல்கள்.

	பெயர்	முழ நீளம்	முழ அகலம்	முழ உயரம்
1	ஊர்த்வம்	32	16	16
2	இநூர்த்வம்	48	24	24
3	சுவர்னமுகி	64	32	32
4	கர்ப்பிணி	80	40	40
5	மந்தரம்	96	48	48

இவைகளில் அநூர்த்வம், கர்ப்பிணி, மந்தரம் ஆகிய, மூன்று கப்பல்களில் பிரயாணஞ்செய்தால் துர்திர்ஷ்டம் உண்டாகும் ஊர்த்வத்தில் பிரயாணம் செய்யும் அரசர்களுக்கு அதிக லாபம் உண்டாகும்.

இன்னும் மேற்காணப்பட்ட யுக்தி 'கல்பதரு' என்னும் நூலில் கப்பல்களை எங்ஙனம் அலங்கரிக்கலாமென்பதைப் பற்றியும் எங்ஙனம் பிரயாணம் செய்வோருக்குச் சௌகரியமுண்டாகும் வண்ணம் கப்பல்களை அமைக்கலாமென்பதைப் பற்றியும் விளங்க உரைக்கப் பட்டிருக்கிறது, கப்பல்களை அலங்கரிப்பதற்குப் பொன், வெள்ளி, செம்பு ஆகிய மூன்றும் தனித்தனியாகவும் சேர்த்தும் உபயோக்கி கப்படலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது: கப்பல்களுக்கு பூசப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. நான்கு பாய்மரங்களோடுகூடிய கப்பல்கள் வெண்மையாகவும் மூன்று பாய் மரங்களோடு கூடிய கப்பல்கள் சிவப்பாகவும் இரண்டு பாய்மரங்களோடு கூடிய கப்பல்கள் மஞ்சள் நிறமாகவும் ஒரு பாய்மரத்தோடு கூடிய கப்பல்கள் ஊதா நிறமாகவும் காணப்படவேண்டும். கப்பல்களின் முன்பாகமானது பலவித உருவங்களைக் கொண்டிருந்தது சிங்கம். யானை, புலி, சர்ப்பம். வாத்து, கிளி, மனிதன் இவைகளின் தலைகளைப்போன்ற உருவங்கள் கப்பலின் முன்பாகமாக அமைக்கப்பட்டிருந்தன. இதனால் அக் காலத்தில் சித்திரத்தொழில் எவ்வளவு அழகாகப் பண்பட்டிருந்தது என்பது நன்கு விளங்கும்.

பிரயாணிகளுக்குச் சௌகரியமாயுள்ள அறைகளைக் கொண்டும் கப்பல்கள் மூன்றுவிதமாக வகுக்கப்பட்டிருந்தன. கப்பலின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைவரை அறையாகவே (காபின்) அமைக்கப் பட்டிருந்தவைகளுக்கு ,சர்ப்பமந்திர கப்பல்கள்' என்றும் பெயர், அக் கப்பல்கள் அரசனுடைய பொக்கிஷமும், குதிரைகளும், பெண்டீரும் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டன. நடுப்பாகத்தில் மட்டும் அறையைக் கொண்டவைகளுக்கு 'மத்திய மந்திரக் கப்பல்கள்'என்று பெயர். அரசர்கள் பொழுது போக்குக்காக எங்கேனும் பிரயாணம் செய்தால் இக்கப்பல்களையே உபயோகித்தார்கள். மேலும் இக்கப்பல்கள் மழைகாலத்தில் பிரயாணம் செய்வதற்குச் சௌகரியமாயிருந்தன. முற்பாகத்தில்மட்டும் அறைகளைக் கொண்டவைகளுக்கு 'அக்ர மந்திர கப்பல்கள்' என்று பெயர், இவைகோடைகாலத்துப் பிரயாணத்திற்குப் பெ

ரிதும் உபயோகப்படுத்தப்பட்டன: கடல் யுத்தத்திற்கு இக்கப்பல்களே உபயோகிக்கப்பட்டன என்று சொல்லப்படுகிறது. இக்கப்பலிலேயே பாண்டவர்கள் விதுரனுடைய ஆலோசனையைக் கேட்டு துரியோதனு தியர்களால் கட்டப்பட்டிருந்த பொய்வீட்டினின்று தப்பித்துச்செல்ல கூறப்பட்டார்கள் என்று அறிஞரிர் சிலர் அபிப்பிராயப்படுகின் றனர்.

முற்காலத்திருந்த கப்பல்கள் எழுநூறுபேர் எண்ணூறுபேரையும் சுமந்து செல்லக்கூடியனவாக கட்டப்பட்டிருந்தன. விஜயன் என்பவன் சிங்களத்தீவுக்கு வங்காளத்தினின்றும் வந்தபோது அவன் கப்பலின் எழுநூறு பேர் கூடவந்தனர் என்றும் சொல்லப்பட்டது. சிம்ஹளன் என்னும் அரசகுமாரன் ஜம்புத் தீபத்தினினறும் இலங்கைகுச் சென்ற போது அவனுடைய கப்பலில் ஐந்நூறு வியாபாரிகள் சென்றூர்கள் என்று சொல்லப்படுகிறது. இங்ஙனம் பல உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். இதுகாறும் கூறியவைகளிலிருந்து பண்டைக்காலத்தில் கப்பல்பிரயாணம் சர்வ சாதாரணமாக விருந்தது என்பதும் கப்பல்கள் மிக்க நுண்ணிய அறிவுடன் அமைக்கப்பட்டு உபயோகப் படுத்தப்பட் டன என்பதும் நன்கு விளங்கும்.

மௌரியர்களுடைய ஆட்சியில், கப்பல் போக்குவரவினுல் அர சாங்கத்தாருக்கு நல்லவரும்படி கிடைத்துவந்தது. கப்பற்படை நிற் வாகத்திற்கென்றே தனி உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். கப்பல் போக்குவரவைக் கவனித்துச் சுங்கம் வாங்கவும் சுங்கம் தவிர்க்கவும் இன்னும் கப்பலில் போக்குவரவு சம்பந்தமான வேலைகளைச் செய்ய வும் தனியான ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தான். இப்பொழு துள்ள துறைமுக அதிகாரியின் நிலையில் மேலே கூறப்பட்ட பழைய அதிகாரியிருந்தான் என்று கூறலாம். காற்றினுலாவது மழையினுலா வது சேதப்பட்டுவந்த கப்பல்களை இந்தக் கப்பல் அதிகாரி கருணையு டன் கவனித்து அவைகளுக்கு வேண்டுவன செய்துவந்தான், கப்பல் களினின்று இறக்குமதிசெய்யப்பட்ட சாமான்களில் எவையேனும் பழுதாகப் போய்விட்டாலும் காணுமற் போய்விட்டாலும் அதற்கு அரசாங்கத்தாரே அச்சாமான்களுக்குப் பொறுப்பாளியானவனுக்கு நஷ்ட ஈடுகொடுத்து வந்தனர். கப்பல்கள் பிரயாணமாவதற்கு முன் னர் அவைகளைச் சரியாகப் பழுதுபார்த்தும் பிரயாணகாலத்தில் கப் பல்களில் உள்ளவர்களுக்கு எவ்விதமான இடையூறும் நேரிடாமல்

செய்து வருவதற்குத்தக்க உத்தியோகஸ்தர்களும், இலாகாக்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தனவென்பது உள்ளங்கை நெல்லியென தெளிவாகின்றதல்லவா ?

இந்திய மன்னர்கள் காலத்தில். கப்பற்படையும் பிரயாணமும்.

பூர்வீக உலகத்தில், இந்தியா கடல் வியாபாரத்தில் முதன்மை பெற்ற தேசங்களிலொன்றாய்த் திகழ்ந்தது. ஒரு ஆசிரியர் கூறுகிற பிரகாரம், இந்தியா சுமார் 30 நூற்றாண்டுகளாக உலகத்தின் மத்திய வியாபார ஸ்தலமாயிருந்தது. அப்போது போனீஷியர்கள், யூதர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள், ரோமாபுரிக்காரர் ஆகிய பல்வேறுதேசத்தார் இந்தியாவுடன் வியாபாரம் நடத்தினார்கள். பக்கோ [பெகு] கம்போதியா, ஜாவா, ஸுமத்ரா, போர்னியோ, ஜப்பான் வரையிலுள்ள தூர கிழக்குப்பிரதேசங்கள் முதலிய விடங்களில் இந்தியாவுக்குள்ளடங்கிய குடியேற்ற நாடுகளிருந்தன. தென் சீனதேசம், மலேயா தீப கற்பம், அரேபியா என்ற பிரதேசங்களும் இந்திய வியாபாரிகள் குடியேறும் ஸ்தலங்களாக விளங்கின.

இந்தியாவிலும் அன்னிய நாடுகளிலும் நமக்குக் கிடைத்திருக்கும் சாக்ஷியங்களால் இந்தியாவின் புராதன கடற்போக்குவரத்துசாமான்யமான தல்லவென்று தெரியவருகிறது. ஆசிரியர் பூலர் என்பவருடைய அபிப்பிராயப்படி "ஆதிகாலத்தில் இந்திய சமுத்திரத்தில் கப்பல் போக்கு வரத்து இருந்திருக்கிறதென்பதற்கும் அதற்குக் கொஞ்சம் பிந்தி ஹிந்து வியாபாரிகள் பாரசீகவளைகுடாவுக்கும், நதிகட்கும் வாணிப சம்பந்தமாய்ப் பிரயாணஞ் செய்திருக்கிறார்களென்பதற்கும் இந்தியாவின் பழமையான சரித்திரங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன." டாக்டர் ஸையீ என்பவருடைய கூற்றின்படி இந்தியாவிற்கும் பாபிலோனுக்கும் கிறிஸ்து பிறந்த 3000 வருடங்கட்கு முன் வியாபாரம் நடந்து வந்திருக்கிறது. இந்தியாவின் ஆதி கடல் வியாபாரத்தைப் பற்றி மேற்கண்ட விஷயங்கட்கு கிறிஸ்தவவேதமாகிய விவிலிய [பைபில்] நூலிலும் அத்தாக்ஷிகள் உள்ளன. இதன் சம்பந்த

மாய் பாதிரியார் டி. சபளல்சஸ் கூறியது குறிப்பிடத்தக்கது. அவர் கூறுவதாவது:—ஹிராம், ஸாலமன் ஆகிய அரசர்களின் காலத்தில் நடைபெற்ற பெரிய வியாபாரத்திற்கு தக்ஷிணப் பிரதேசத்திலுள்ள [டெக்கான் இந்தியாவின் தென்பாகம்] துறைமுகங்களே உற்பத்தி ஸ்தானங்களாயிருந்திருக்கின்றன என்பதற்குச் சந்தேகமேயில்லை. பைபிலில் [விவிலிய நூலில்] கூறப்பட்டுள்ள மிடியனித் வியாபாரிகளும், குரு யாகூப்பின் புதல்வர்களும் எகிப்துக்குக் கொண்டுபோன வாசனைத்திரவியங்கள் தென் இந்தியா [டெக்கானிலுள்ள] தோட்டங்களிலேயே பயிர் செய்யப்பட்டவை."

வேதப்புராண இதிகாசங்களில் காணப்படும் குறிப்புகள்

மனிதவர்க்கத்தின் ஆதி சரித்திரங்களிலொன்றாகிய சருக்கு வேதத்திலும், இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம், புராணங்கள்முதலியவற்றிலும், மற்றுமநேக மதக்கிரந்தங்களிலும், வியாபாரத்திற்காகச் செய்யப்பட்ட பிரயாணங்களைப்பற்றியும் புராதன அரசர்கள் சஞ்சாரஞ் செய்துள்ளதைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்நூற்களில் காணப்படும் குறிப்புகளுக்கு இந்தியாவின் சிற்பவேலை, சித்திரத்தொழில் முதலியவைகளும் அத்தாக்ஷிகளாயிருக்கின்றன, பண்டைய இந்திய சித்திரவேலைப்பாடுகளில் கப்பல்கள் படகுகள் முதலியவைகளின் உருவங்கள் எண்ணிலாதவை எழுதப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு முன் இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட சஞ்சி சிற்பவேலைகள்தான் எல்லாவற்றிலும் புராதனமானவை. சமீபத்திலுள்ளவற்றினுள், மதுரை [மீனாக்ஷியம்மன் ஆலயத்தில் சுவர்ண புஷ்கரணி குளத்தைச்சுற்றி சுவர்களில் வரையப்பட்டுள்ள சித்திரங்களில் கடலின் நேர்த்தியான உருவமொன்றும், அதன் மீது கப்பல் ஊர்ந்து செல்வதாகவும் மனோரம்மியமாய்க் காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவம் போரோபுதூர் என்றவிடத்திலுள்ள சிற்பவேலைப்பாடுகளிற் காணப்படுவது போலவே பெரிதாகவிருக்கின்றது.

இந்திய சரித்திரத்தில் மௌரியரின் காலத்தில் கப்பல் கட்டுந் தொழில் முன்னேற்றத்துடன் நடைபெற்று வந்திருக்கிறதற்குச் சரியான ஆதாரங்களிருக்கின்றன. அப்போதுதான் முதல் முதலாக கப்

பற்படையை மேற்பார்ப்பதற்குத் தொகுதியாக ஒரு குறிப்பிட்ட தொகையினர் ஏற்படுத்தப்பட்டனர். இஃது கி. மு. 321-ம் வருஷத்திற்கும் இடையில் ஆண்ட சந்திரகுப்த மௌரிய சக்கரவர்த்தியால் நிர்மாணிக்கப் பெற்றது. கப்பல்களை மேற்பார்க்கும் சபையொன்று ஆக்கப்பட்டதுடன் கண்டிப்பான சட்ட திட்டங்களும்செய்யப்பட்டன. மரக்கல உத்தியோகஸ்தர்களாகப் பொதுஜன வேலைக்காரர் சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டார்கள். சரித்திராசிரியர் வின்செண்டு ஏ. ஸ்மித் கூறுவதாவது:—இத்தகைய பெரிய ஏற்பாடுகளெல்லாம் இருந்திருப்பதைக்கொண்டு கி. மு. 2-ம் நூற்றாண்டில் மௌரிய சாம்ராஜ்யம் அன்னிய அரசாங்கங்களுடன் எப்போதும் போக்குவரத்து வைத்திருந்திருக்கிறதென்றும் ஏராளமான அன்னிய நாட்டார் இந்தியத்தலைநகரை வந்து பார்த்துப் போனார்களென்றும் அறியக்கிடக்கிறது." சந்திரகுப்தர் ஏற்படுத்திய கப்பற்படையை அசோகர் எவ்வளவு தூரம் விர்த்தி செய்தாரென்பது நமக்குச் சரியாகத் தெரியாவிடினும் அசோகர் இலங்கையுடனும் மற்ற அநேக தூரதேசங்களுடனும் சம்பந்தம் வைத்திருந்ததைக்கொண்டு, அவரும், கப்பற்படையையும் கரைப்படையும் வைத்திருந்தாரென யூகிக்கலாம்.

ஆந்திரகுஷான் காலத்தில் அன்னிய தேசங்களுடன் பெருத்த வாணிபம் நடந்திருக்கிறது. இக்காலத்திற்றான் முதலாவதாக இந்தியாவின் கடல் வாணிபத்தைப்பற்றித் தெளிவான சாட்சியங்கள் காணப்படுகின்றன. ஸ்மித் 2 ம் 3-ம் நூற்றாண்டுகளின் ஆந்திர நாணயங்களைப்பற்றிப் பேசுங்காலையில், சில நாணயங்களில் கப்பலின் உருவம் எழுதப்பட்டிருக்கின்றதென்றும், இதனால் ஆந்திர அரசராகிய யஞ்ஞ ஸ்ரீ என்பவருடைய ஆதிக்கம் தரையில் மாத்திரமில்லாது கடலிலும் பரவியிருந்திருக்கிறதென அறியலாமென்றும் கூறுகிறார் [யஞ்ஞ ஸ்ரீ என்ற அரசர் கிறிஸ்து பிறந்து 135 வருடங்களுக்குப் பின்பு 31 வருடகாலம் ஆண்டார்-]

ஜாவாவிற் குடியேறியது.

ஹிந்துக்களின் காலத்தில் கடற் சம்பந்தமாகிய முயற்சி மேலும் நடத்திக்கொண்டு போகப்பட்டதாக அறிகிறோம். இவ்விஷயத்தில் முக்கிய சம்பவமாயிருப்பது கிறிஸ்து பிறந்த 75 வருடங்களுக்குப் பின்பு ஹிந்து கப்பலோட்டுங்கூட்டத்தார் கலிங்க தேசத்திலிருந்து ஜாவா தீவுக்குச்சென்று அங்குகுடியேறியதாகும். இந்தியாவின் வட

பாகத்திலும் வடமேற்குப்பாகத்திலும் உள்ள பௌத்தர்கள் பெகு, [பக்கோ] விலும், கம்போதியாவிலும், கடைசியாக ஜாவா தீவிலும் குடியேறினதாக ஒரு சரித்திராசிரியர் கூறுகிறார். தூரக் கிழக்கிலுள்ள சீனாவுக்கும் ஜப்பானுக்கும் அநேகப் பிரயாணங்கள் செய்யப்பட்டன; இந்திய அரசர்கள் தூதர்கள் மூலமாய் சீன தேசத்திற்குப் பலவிதமான இந்தியப்பொருள்கள் கொடுத்தனுப்பினார்கள். இதற்கடுத்தது இந்திய சரித்திரத்தில் அக்பர் சக்ரவர்த்தியுடைய காலம் கடல் விஷயத்தில் மிகுந்த சிறப்புற்றிருந்திருக்கிறது. அக்பர் சக்ரவர்த்தியின் ஆளுகையில் இந்திய கப்பற்படை உச்சஸ்தானம் பெற்றிருந்தது. இதனால் இதற்குமுந்திய ஆதிமகம்மதிய ஆளுகையில் கப்பற்படையைப்பற்றிக் கவலையெடுக்கவில்லையென்று நினைக்கப்படாது அப்போதும் அது நன்றாக கவனிக்கப்பட்டு சிறப்பெய்தி வந்தது. 12-ம் நூற்றாண்டில் டிபால் என்றவிடம் சிந்து தேசத்திலிருந்தும் பிறவிடங்களிலிருந்தும் வருங்கப்பல்கள் தங்கும் துறையாயிருந்தது. 13-ம் நூற்றாண்டில் கியாசுத்தீன் பல்பான் கடல்யாத்திரை செய்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். 14-ம் நூற்றாண்டில் இந்திய சமுத்திரத்தில் அனேக பிரயாணங்கள் செய்யப்பட்டதாகவும். 16-ம் நூற்றாண்டு முழுவதும் மலையாள கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டையில் கப்பல் கட்டும் தொழில் மும்முரமாய் நடந்து வந்ததாகவும் அறிகிறோம்.

அக்பருடைய கப்பலதிகாரிகள் சபை.

கப்பல் இலாகா முழுவதையும் அக்பர் சக்ரவர்த்தி சாஸ்திரீய முறைகளில் நடத்தி வந்தார். அவருக்கு 1900 வருடங்கட்கு முந்தி சந்திரகுப்தமௌரியர் காலத்திலிருந்ததுபோன்றே, கப்பல்இலாகாவுக்கென விசேஷ சட்டதிட்டங்களெல்லாஞ் செய்யப்பட்டன. பொதுவாகக்கூறுமிடத்து கப்பலதிகாரிகள் சபைக்கு நான்குமுக்கியகடமைகளிருந்தன; முதலாவது கப்பல்களும் படகுகளும் தயார் செய்து கொடுத்தல்; இரண்டாவது திறமையுள்ள ஆட்களைக் கப்பலோட்டுவதற்குச் சேகரித்தல்; மூன்றாவது ஆறுகளைப் பாதுகாத்துக் கொள்ளுதல்; நான்காவது ஆட்களிடம் வேலைவாங்குதல் முதலியனவாகும். அக்பர் பாதுஷாவிடம் மொத்தத்தில் 3000 மரக்கலங்களிருந்தன டாக்கா நகரம் அவைகளில் மத்தியஸ்தானமாயிருந்தது. அக்பருக்குப் பின் தோன்றியவர்களும் ஓரளவு கப்பல் விஷயத்தில் சிரத்தையெடுத்திருக்கிறார்கள்; ஔரங்கசீப் பொதுஜன வரியிலிருந்து பெரும்

பாகமான பணமெடுத்து கப்பல்கள் விஷயமாகச் செலவிட்டதாக அறிகிறோம். இதுவுமன்றி மெக்காவுக்கு யாத்திரை செய்பவர்களை யேற்றிக்கொண்டு போவதற்காக சூரத்தில் கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்தன வென்றும் அறிகிறோம்.

பிரிட்டிஷ்ஷாரின் பிரவேசம்.

ஔரங்கசீப்பின் மரணத்தின் பின் மொகலாய அரசாங்கம் வீழ்ச்சியுற்றது; ஆனால் கப்பல் பலம் எப்போதும் போலவே உயர்வாயிருந்தது. ஏனெனில் கிழக்கு இந்தியா வியாபாரக்கூட்டுறவுக்காரரிடமிருந்து ஆதி இந்திய கப்பற்போக்கு வரத்து நல்ல உதவி பெற்றது. இந்தியாவை பிரிட்டிஷார் சொந்தமாக்க ஆரம்பகாலத்தில் கப்பல் தொழில் பலமாயிருந்தது. 1613-ம் வருடத்தில் சூரத்தில் கப்பற்படையொன்று தயாரிக்கப்பட்டது. இந்தியாவின் கடல்களிற் புகுந்து கொள்ளையடித்துவந்த கப்பற் கொள்ளைக்காரரையும், போர்த்துகேயரையும் எதிர்க்கும் பொருட்டே இந்தகப்பற்படை யேற்படுத்தப்பட்டது. பம்பாய் கப்பற்றொகுதியின் சரித்திரமும், அதற்கு பிரக்கியாதிபெற்ற கப்பல் கட்டுவோராகிய லாஜீ, நஸாஞ்கி, மஞ்சக்ஜீ போமன்ஜீ முதலிய பார்ஸி கனவான்கள் செய்துவந்த வேலையும், இந்தியர்கள் கப்பல் கட்டுந்தொழிலில் எவ்வளவு நிபுணர்களாயிருந்திருக்கிறார்களென்பதை காட்டுகிறது. கர்னல் எ. வாக்கர் என்பவர் 1811-ம் வருடத்தில் ஓர் புத்தகம் எழுதியபோது பம்பாய் நகரை இந்தியாவிலுள்ள தமது [அதாவது ஆங்கிலேயரின்] மகத்தான கப்பற் கோட்டை ' என்றழைக்கிறார். கிழக்கு இந்தியா கம்பனியாரால் கட்டப்பட்ட இந்திய கப்பற் படையானது முதல் இரண்டு பர்மா யுத்தங்களுக்கும் முதலாவது சீன யுத்தத்திற்கும் மிகவும் உதவியாயிருந்திருக்கிறது.

1840-ம் வருடத்திலிருந்து இந்திய கப்பல் தொழில்க்ஷீணமடைய ஆரம்பித்தது. ஏனெனில், அவ்வருஷத்திலிருந்து இந்தியதுறைமுகங்களில் பெரிய கப்பல்கள் கட்டுவது நின்றுபோய்விட்டது. 1863-ம் வருடத்தில் இந்திய கப்பல் தொழில் அறவே யொழிந்து விட்டன. இந்தியா பிரிட்டிஷாரின் முழு ஆதிக்கத்தில் வந்துவிடவும், இரா அங்கத்தார் இந்திய கப்பல் தொழிலை அறவே யொழித்து விடுவது யுக்தமெனக்கருதி அவ்வாறே செய்து விட்டனர். ஆனால் இது சமயம் அத்தொழில் மீளவும் இந்தியாவில் தோன்றும் நற்காலம் உதயமாகி வருகின்றது.

பூர்வீக இந்தியாவில் பொன்தோண்டும் எறும்புகள்.

இந்தியாவில் பொன்-தோண்டும் எறும்புகளென்று சில ஜந்துக்களைப் பற்றி பாரஸீகர்கள் எழுதியிருந்ததை ஆதாரமாகக்கொண்டு, பூர்வீக கிரேக்க நூலாசிரியரான ஹெராடொடஸ் என்பவரும் தாம் எழுதிய நூல்களில் அவைகளைப்பற்றிக்கூறியிருக்கிறார். அவருக்குப் பின் வந்த கிரேக்க ரோமன் நூலாசிரியர்களான ஸ்ட்ராபோ, அர்ரியான், டியோகிரை ஸோஷ்டம் முதலியவரும். ஹெராடொடஸ்ஸை யனுசரித்து அவரவர்களுடைய நூல்களில் பொன்-தோண்டும் எறும்புகளைப்பற்றி கூறியிருக்கிறார்கள். பொன்-தோண்டும் எறும்புகளைப் பற்றி ஹெராடொடஸ் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

'பக்தியிகா தேசத்தைச்சேர்ந்த காஸ்பதிரஸ் நகரத்து எல்லையில் ஒருவித இந்திய ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் மற்ற ஜாதியாரை விட யுத்தத்தில் அதிகப்பிரியமுள்ளவர்கள் அந்த ஜாதியார் தங்கத்தைச் கொண்டுவரும்படி அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் வசிக்கும் அந்தப்பாகத்தில் தான் பாலைவனம் இருக்கிறது. அப்பாலைவனத்தின் மணலுக்குள் நாய்களைவிட சிறியவைகளும் நரிகளைவிடப் பெரியவைகளுமான பெரிய எறும்புகள் வசிக்கின்றன- அவ்வித எறும்புகளில் பல பாரஸீக அரசனிடம் இருக்கின்றன. அவைகள் அனைத்தும், வேடர்களால் பிடிக்கப்பட்டவைகள். இந்த எறும்புகள் மணலுக்குள் ஆழத்தில் குழிகள் பறித்து அச்குழிகளில் வசிக்கின்றன. இந்த எறுமபுகள் உருவத்தில் கிரேக்கதேசத்து எறும்புகளை ஒத்திருக்கின்றன. அவைகள் குழிகளைப்பறிக்கும்பொழுது. மணல் எறும்பு புற்றுகள்போல தரைமட்டத்தின்மேல் குவிக்கின்றன. அந்த மணற் குவியல்களில் தங்கம் கலந்திருக்கிறது. இந்தியர்களை அவ்விதத் தங்கமணலைக்கொண்டு வருவதற்காக அம்மணற்காட்டின் வழியாகப் பிரயாணம் போகும்போது மூன்று ஒட்டகங்களைக் கொண்டுபோவார்கள். தங்கம் கிடைக்கும் ஸ்தலத்திற்குச் சென்று தங்கம் கலந்திருக்கும் மணலைச் சாக்குகளில் நிரப்பி அவைகளை ஒட்டகங்களின் மேல் ஏற்றிக்கொண்டு வேகமாய்த்திரும்பி விடுகிறார்கள். தங்கங் கலந்த மணலை அவர்கள் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்பதை மோப்பத்தால் அறியும் அவ்வெறும்புகள் அவர்களைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்து போகும். அவர்களைத் தொடர்ந்து போவதற்காக, எறும்புகள் தங்களுடைய கூட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கும்

சமயத்தில் இந்தியர்கள் வேகமாய் ஓடிப்போவார்கள்- அப்படிக்கில்லா விட்டால் தங்கத்தை கொண்டு வருவதற்காகச் செல்லும் எவரேனும் அவ்வெறும்புகளினிடமிருந்து தப்பித்து கொண்டு வந்து சேர்க்கிறார் கள்' என்று பாரஸீகர்கள் சொல்கிறார்கள்.

இந்தியாவில் பொன்-தோண்டும் எறும்புகளைப்பற்றி பரம்பரை யாய் வழங்கி வரும் கதைகளை மத்தியகாலங்களில் எழுதப்பட்டிருக் கும் நூல்களிலும் 16-வது நூற்றாண்டு வரையிலும் எழுதப்பட்டிருக் கும் அருக்கிய ஆசிரியர்களின் நூல்களிலும் காணலாம் 13-வது நூற்றாண்டில் கடைசிபாகத்தில் ஹொரா டொட ஸ்ஸால் எழுதப்பட்டி ருக்கும் நூல்களைப் பிரஞ்சுஅகாடெமி மெம்பர்களில் ஒருவரான வாச் செர் என்பவர் மொழிபெயர்த்து பிரசுரித்திருக்கிறார், கிரேக்க நூலா சிரியரால் எழுதபட்டப்ட கதைகளைத் திரஸ்காரஞ்செய்யக்கூடா தென் பதை அந்நூலில் அந்த வாச்செர் வற்புறுத்தியிருக்கிறார். பொன்- தோண்டும் எறும்புகள் என்பவை கறையான் பூச்சிகளே யன்றி வேறல்ல வென்று 1788-வது வருஷத்தில் மேஜர் ரென்னல் ஸ்திரப் படுத்திச் சொல்லியிருக்கிறார். பொன்-தோண்டும் எறும்புகள் எறும் புகளல்ல வென்றும், அவைகள் கழுதைப்புலிகள், நரிகள் அல்லது குள்ளநரிகளைப்போன்ற பிராணிகளாகுமென்றும் 16-வது நூற்றாண் டின் ஆரம்பத்திலிருந்தபழைய காலத்துச்சின்னங்களை ஆராய்ச்சி செய் கிறவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இந்தியாவின் பூர்வீக சமஸ் கிருத நூல்களில் இவ்வெறும்புகளைப்பற்றி கூறப்பட்டிருக்கின்றன வென்று வில்ஸன் கூறியிருக்கிறார்.

உதாரணமாக மகாபாரதத்தில் யுதிஷ்டிர மஹாராஜாவுக்கு இந்தி யாவின் வடகோடிப் பிரதேசங்களிலுள்ள ஜாதியாரால் அனுப்பப் பட்ட பல்வித காணிக்கைகளில் பைபீலிகாத் தங்கமடங்கிய மூட்டை கள் இருந்தன வென்று சொல்லப்பட்டிருக்கிறது. (பீ பீலிகா) எறும்ப களால் சேகரிக்கப்பட்டவைகளாததால் அவைகளுக்கு பைபீலிகாத் தங்கம் எனறு பெயர் வழங்கிவந்தது.

ஒரு நூற்றாண்டுக்கு முந்தி மால்டிப்ரன் என்ற ஒரு பிரஞ்சு, மேதாவி, எறும்புகள் என்றபெயருடன் வழங்கி வந்தவைகள் உண் மையில் எறும்புகளல்ல ஆனல் அவைகள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒரு ஜாதியாராவார்கள் என்று சொல்லுகிறார்.

கிரேக்கு நூலாசிரியர் சொல்லுகிறபடி பக்தியிகா தேசத்தைச் சேர்ந்த கஸ்பதிரஸ் என்ற நகரந்தண்டை தான் அவர்களுடைய இருப்

பிடம். சஸ்பதிரஸ் என்பது சஷ்யபுரம் அல்லது இப்பொழுதுவழங்கி வரும் காஷ்மீரதேசத்தைக் குறிக்கிறது. பக்தியகா யென்பது பாக்டம் என்பதைக் குறிக்கிறது. போஷ்டன் என்ற பெயர் எப்படி மேற்கு ஆப்கானிஸ்தானத்தைக் குறிக்கிறதோ அப்படியே பாக்டம் என்னும் பெயரும் ஆப்கானி ஸ்தானத்தின் தெற்கு பிரதேசத்தைக் குறிக்கும் ஆப்கன் பெயராக இருக்கிறது. போஷ்டன் என்ற இந்த வார்த்தை யினால் தான் பட்டாணிகள் பேசும் பாஷைக்கு புஷ்டு என்ற பெயர் உண்டாயிருக்கிறது. பூர்வகாலம் முதற்கொண்டு, காஷ்மீர தேசத்து ராஜாக்கள் திபேத்து தேசத்திற்குள் புகுவதற்காகப் பலமுறை பிர யத்தனம் செய்து வந்தார்கள். பொன் தோண்டும் எறும்புகள் வசிக் கும் தேசம் இந்தியாவின் வடகோடியில் இருக்கும் தேசம் என்று ஹொரொடொடஸ் சொல்லியிருக்கிறார். அதனால் அத்தேசத்தை திபத்து தேசம் என்று சொல்லுவதில் என்ன தடை இருக்கின் றது. பை பீலிகா தங்கத்தைச்கொண்டுவந்தவர்கள் சாஸாஸ் என் னும் ஜாதியாராவார்கள் என்று மகாபாரதத்தில் கூறப்பட்டிருக் கிறது. சாஸாஸ் என்ற ஜாதியார், காஷ்மீர தேசத்துக்கடுத்தாப் போலிருக்கும் பிரதேசத்தில் வசித்து வந்தார்களென்பது ராஜதரங் கிணி அல்லது காஷ்மீர் தேசத்து சரித்திரம் நூலைவாசிக்கத் தெரிய வரும் அதேதேசத்திலிருந்து யுதிஷ்டரருக்கு அனுப்பப்பட்ட வேறு காணிக்கைகளில்' ஹிமயமலைப் புஷ்பங்களிலிருந்து இறக்கப்பட்ட மதுரமான தேனும் திபேத்து பிராந்தியத்தில் சஞ்சரிக்கும் யாக் என் னும் சடை எருமைவாலின் நுனியிலிருக்கும் மயிரினால் செய்யப்படும் சந்திரனைப்போல வெண்மையும் பிரகாசமுமான சாமரங்களும் அடங்கியிருந்தனவென்று சொல்லப்படுகிறது. திபேத்து நாட்டைச் சோதிப்பதற்கு 1865-ம் வருஷத்தில் பிரிட்டிஷ கவர்ன்மெண்டார சில பண்டிதர்களை அனுப்பினார்கள். அவர்களில் ஒருவர் காயலாவால் முன்செசல்முடியாமல் நாரிகோர்ஸம் என்ற மாகாணத்திலுள்ள ஒரு தங்கம் கிடைக்குமிடத்தில் தாமிறக்கும்படி நேரிட்டது. அது திபேத் திய சுரங்கக்காரர்கள் வசிக்கும் முக்கிய ஸ்தலம் அவர் அங்கேதங்கி திபேத்திய தங்கச் சுரங்கங்களில் நடந்தேறும் வேலையின்விசேஷத்தை அறிந்து கொள்வதற்கு அவகாசம் பெற்றார்.

1868-ம் வருஷத்தில் மற்றொரு பண்டிதர் திபேத்திலுள்ள தங் கம் கிடைக்கும் மற்ற ஸ்தலங்களைப் பார்க்கச்சென்றார். திபேத்தைச்

சேர்ந்த ஒரு மாகாணத்திற்கு இன்னும் தங்கம் விளையும் தேசமென்றே பெயர் வழங்கிவருகிறது. ஒருபாலைவனத்தின் மத்தியில் பொன்-தோண்டும் எறும்புகள் இருக்கின்றன வென்று ஹெரொடொடஸ் சொல்லியிருக்கிறார். திபேத்தில் தங்கம் கிடைக்கும் பிரதேசம் விசாலமான இடமென்று சொல்லப்படுகிறது. திபேத்து நாட்டுச் சுரங்கத்தில் வேலை செய்கிறவர்கள் அடியிற்கண்ட காரணங்களினால் பிராணிகள் என்று வழங்கப்படுகிறார்கள். குளிர்காலங்களில் சுரங்கங்களில் வேலைசெய்வோர்கள் குளிரைத்தாங்குவதற்காக மிருகங்களின் மிருதுவானமயிர்களால் செய்யப்பட்ட உடுப்புகளை அணிந்து கொள்ளுகிறார்கள். அப்படிக்கில்லாவிட்டால், அக்குளிரைச்சகித்துக்கொண்டு வேலை செய்வதற்கு எவராலும் முடியாது. குளிருக்கு அடக்கமாயிருக்கும் பொருட்டு, தலையிலிருந்து கால்வரையிலும் மான்தோலைத் தரித்துக் கொள்ளும் லாப்லாண்டர்களை டார்ஞேயஸ் ஜாதியார் அவர்களைச் சில மிருகங்களென்றே பாவித்து வரும்பொழுது, குளிருக்காக மிருகங்களின் மிருதுவான தோலைத்தரித்துக்கொள்ளும் திபேத்துச் சுரங்கங்களில் வேலைசெய்கிறவர்களையும் அம்மாதிரி பாவிப்பதில் என்னஆச்சரியம்? பனிக்காற்று அடிப்பதனால் அங்கிருப்பவர்கள்பூமிக்குள் ஏழு அல்லது எட்டு அடி ஆழத்திற்குக் குழிகள் பறித்து அவைகளில் வசித்து வருகிறார்கள். அவர்களைப் பொன்-தோண்டும் எறும்புகள் என்று ஹெரொடொடஸ் கூறுவது மிகப் பொருத்தமாகும். சந்திரகுப்தன் அரசு செலுத்தும் காலத்தில் பாடலிபுரத்தில் வசித்த மெகாஸ்தனீஸ் என்ற கிரேக்கதூதன், இந்த பொன்-தோண்டும் எறும்புகளைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார். குளிர்காலத்தில் தான் அந்த எறும்புகள், குழிகளிலிருந்து மணலை எறும்புப்புற்றுகள் போலக்குழியின் முகத்துவாரத்தில் குவிக்கின்றன. அந்த எறும்புகள் குளிர்காலத்தில் தங்கம் கலந்தமணலைக் குழிகளிலிருந்து புற்றுகளுக்குமேல் 'குவிக்கின்றன! இந்தியர்கள் அவைகளைக் கோடைகாலத்தில் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று பிளினி என்பவர் மேற்கண்ட விஷயத்தை ஸ்திரப்படுத்தினார். தற்காலத்து யாத்திரிகர்கள் பின்வருமாறு சொல்லுகிறார்கள். குளிர் மிகுதியாலும் அதைக்கவனியாமல் திபேத்து சுரங்கங்களில் வேலைசெய்கிறவர்கள் குளிர்காலத்திலேயே வேலைசெய்யப் பிரியப்படுகிறார்கள். கோடைகாலத்தில் அவர்களுடைய கூடாரம் 300ஆக இருக்கும். குளிர்காலத்தில் 600ஆக உயரும். பொன்-தோண்டும் எறும்புகள் வேட்டையாடி ஜீவிக்கின்றன வென்றும்மெகாஸ்தனீஸ்

எழுதுகிறார். திபேத்துச் சுரங்கங்களில் வேலை செய்கிறவர்கள் சடை எருமை முதலிய காட்டு மிருகங்களை வேட்டையாடி அதனால் ஜீவிக்கிறார்கள். தங்கம் கலந்த மணல் குவியல்களை பக்கத்தில் வசிக்கிறவர்கள் வந்து திருடிக்கொண்டு போகாமலிருப்பதற்காக நாய்கள் கழுதைகளைப்போல அவ்வளவு பெரியவைகள் இருந்தனவென்றும் காட்டு மிருகங்களை வேட்டையாடுவதில் அவைகள் நிரம்பசாமர்த்திய முள்ளவைகளென்றும் M. போலோ என்பவர் எழுதுகிறார். இந்த நாய்களின் வேகத்தையும், மூர்க்கத்தையும் கண்டுதான் பொன்-தோண்டும் எறும்புகள் என்று சொல்லப்படும் மிருகங்கள் தங்கத்தைத் திருடிக்கொண்டு போகிறவர்களைப் பிடிப்பதற்காக வேகமாகத் தொடர்ந்து போகுமென்று ஹெரொடொடஸ் குறிப்பிட்டிருக்கிறார் போல் காண்கிறது.

இந்தவேட்டைநாய்களில் சில நாய்கள் பாரசீக அரசரின் அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கலாம். மகா அலெக்சாண்டரின் தோழரும் கூடவந்தவருமான நியார்கஸ் என்பவர் இந்தியாவை விட்டுப் போனபோது அவன் பின்வருமாறு எழுதியிருக்கிறார். நான் இந்தியாவில்இருக்கையில் பொன்-தோண்டும்எறும்பைப்பார்த்ததில்லையாயினும் அந்த எறும்புகளில் ஒன்றின் தோலைப்பார்த்ததுண்டு அது ஒரு சிவிங்கியின் தோலைப்போலிருந்தது. திபேத்துச் சுரங்கங்களில் வேலைசெய்கிறவர்களின் தோல் சிவிங்கியின் தோலை எப்படி ஒத்திருக்கும் என்ற சந்தேகத்திற்குப் பரிகாரம் அடியில் வருமாறு. மேல்அஸ்ஸாமில் உயர்ந்த உத்தியோகத்தை வகித்துவந்த கர்நெல் ஹால்ராயிட் என்பவர் ஒரு காலத்தில் அவருடைய விருந்தாளியாக இருந்த ஒரு ஐரோப்பியருக்கு அப்பொழுதுதான் ஹிமயமலையைக் கடந்து வந்த திபேத் தேசத்தவர்களில் சிலரைக்கொடுத்தார். அவர்கள் சடை எருமையின் தோல்களை அணிந்திருந்தார்கள். கொம்புகள் கூட அத்தோலுடன் இருந்தன. அக்கொம்புகள் அவர்களின் தலைக்குமேல் நீட்டிக்கொண்டிருந்தன. அதைத்தான் சிவிங்கியை யொத்த தோல் என்று நியார்கஸ் சொல்லியிருக்கக்கூடும்.

யுதிஷ்டிரமகாராஜாவுக்கு மயிரடர்ந்த கொம்பையுடைய கங்கர்கள் காணிக்கைகளைச் செலுத்தியிருக்கிறார்கள் என்று மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கங்கர்கள் என்ற ஜாதியார் கிழக்கு திபேத்தில் வசிப்பவர்கள். அவர்கள் சடை எருமைகளின் கொம்புகளுடன் சேர்ந்த தோல்களை உடையாகத்தரித்துக்கொள்ளுகிறவர்கள். கிரேக்கு

தேசத்து சரித்திர நூலாசிரியர்களால் சொல்லப்பட்ட பொன்-தோண்டும் எறும்புகள் என்பவை எறும்புகளுமல்ல, பிராணிகளுமல்ல, திபேத்துச் சுரங்கங்களில் வேலைசெய்யும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். ஆனால் அவர்கள் குளிர் தேசத்தில் வசித்து வந்ததனால் அவர்களுடைய நடையுடை பாவனைகள் முழுவதுமாறியிருந்தன. அதனால் அவர்கள் மனிதவர்க்கத்தில் சேர்க்கப்படாமல் பொன்-தோண்டும் எறும்புகளென்றும் மிருகங்கள் என்றும் பாவிக்கும்படியாய் இருந்தார்கள்.

மொகலாய இந்தியாவின் கைத்தொழிலின் சிறப்பு.

முன் அத்தியாயங்களில் புராதன இந்தியாவின் கப்பல் வியாபாரத்தைப்பற்றியும் கைத்தொழிலின் சிறப்பைப்பற்றியும் வெகுவாக எடுத்துரைத்திருக்கின்றோம். ஆயினும் இந்தியாவை முழுவதிலும் வெற்றிபெற்று தனிக்குடையின் கீழ்கொண்டு வந்து அரசாண்ட மொகலாய மன்னர்களின் ஆட்சியில் கைத்தொழிலென்ன நிலைமையிலிருந்தது என்பதைச் சற்று ஆராய்வோம்.

இந்தியர்களுக்குக் கப்பல் கட்டும் சாஸ்திரமும் கப்பல் ஓட்டும் திறமையும் இன்று நேற்று வந்ததல்ல என்னும் விஷயம் தெளிவாகக் கூறியுள்ளோம். உலகத்தின் கண்ணுள்ள நாகரிகம் பெற்ற தேசங்கள் என்றெண்ணப்படுகின்ற பலதேசங்கள் வெளித்தோன்றாமலிருந்ததற்குப் பல்லாயிர வருஷங்களுக்கு முன்னமேயே இந்துக்கள் சமுத்திரயாத்திரை செய்தும் வியாபாரம் மேற்கொண்டுமிருந்தார்கள் என்பதை நிலைநாட்டப் போதுமான ஆதாரங்களும் சாட்சியங்களும் கிடைக்கின்றன. மொகலாய மன்னர்கள் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் மிகச் சிறந்து விளங்கியிருந்தார்கள், அம்மன்னர்களில் திலகம் போன்றும் நடுநாயகம்போன்றும் விளங்கியிருந்த அக்பர் அரசாட்சி செய்தகாலத்தில் கைத்தொழிலும் வியாபாரமும் தலை சிறந்து விளங்கியிருந்தன. அக்காலத்து கைத்தொழிலும் வெளிநாட்டு வியாபாரமும் அப்போதிருந்த அரசர்களாலும் பிரபுக்களாலும் அன்னியநாட்டு வியாபாரிகளாலும் செழித் தோங்கியிருந்தன. போர்த்துகேசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்கள் மற்றுமுள்ள பாரசீகர்கள், ஜான்ஜிபார் தேசத்தவர்கள் முதலியவர்களும் இந்தியாவின் கப்பல் வியாபாரத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

மாராஷ்டிர வீரரும், இந்தியாவுக்கே வீரசிங்கமாகவும், இந்து மதத்திற்கே குலதிலகமாயும் விளங்கியிருந்த சிவாஜி என்பவருக்குப் பல கப்பல்கள் சொந்தமாக இருந்தன. அவரது புகழும் குணவிசேஷமும் சற்றும் தெரிந்திராத சில சரித்திரக்காரர்கள் அவரை இகழ்ந்து மலை எலி என்றும் 'கொள்ளைக்காரன்' என்றும் இழிவுபடுத்தியிருக்கின்றார்கள். அவ்விதம் செய்திருப்பது அன்னவருடைய சரித்திர ஞானம் இன்மையைத் தெற்றென விளக்கும். அதற்கு மாறாக சிவாஜி மகாராஜரை ராஜதந்திரி என்றும் பக்த சிரேஷ்டன் என்றும் பெரிய யுத்த வீரன் என்றும் தேசபக்தரென்றும் பல புகழ் மொழிகளாற் கூறினும் அவருக்குப் பொருந்தும். அத்துணைய சிறந்த ஒழுக்கமும் திறமையுமுள்ள சிவாஜி தமக்கென பெரிய கப்பற்படையை வைத்துக்கொண்டிருந்ததாகத் தெரிய வருகின்றது.

சக்கரவர்த்திகளும் பிரபுக்களும் தங்களுக்கு வேண்டியனவும் உயர்ந்தனவுமான பொருள்களையே விருத்தி செய்து கொண்டுவந்தார்கள் என்று எண்ணுவது தவறு. மொகலாய ஆட்சிகாலத்தில் போக்குவரவு சாதனங்கள் குறைவாக விருந்தபடியால் குறைந்த விலையுள்ள அதிகனமான பொருள்களை வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கு மாற்றுவது பெரிதும் கஷ்டமாகவிருந்தது. ஆமதாபாத், சூரத் மசூலி பட்டணம்ஹூக்லி நதிக்கருகாமையிலுள்ள சதகோன், டாக்காவுக்குச் சமீபமாயுள்ள ஸ்ரீபுரம் முதலிய அவ்விடங்களில் ஏற்றுமதி வியாபாரம் அதிகமாக நடைபெற்று வந்தது.

'கார்க்கானு' என்று வழங்கப்பட்ட அரண்மனையிலுள்ள அரசாங்கத்தொழில் சாலையில் உண்டாகும் பொருள்களை சக்கரவத்திமாத்திரம் உபயோகிப்பதில்லை. அப்பொருள்களில் பெரும்பான்மை பிரபுக்களுக்கும் மற்றுமுள்ள பிரதானிகளுக்கும் சன்மானமாக அளிக்கப்படுவதும் உண்டு. அப்பொருள்களின் வேலைப்பாட்டையும் திறமையையும் கண்டு பிரபுக்களும் சிற்றரசர்களும் அத்தொழிலாளிகளைத் தங்களிடம் அமர்த்திக்கொண்டு அவர்களுக்குவேண்டிய உதவிகளை அளித்து வருவாராயினர். அதனால் தொழிலாளிகளின் தொழில் வன்மையும் திறமையும் நாடெங்கும் பரவிப் பிரஜைகளின் நல்ல ஆதரவையும் புகழ்ச்சியையும் அவர்கள் பெறவும் நேர்ந்தது.

பிரபுக்கள் அல்லது சிற்றரசர்கள் தங்களது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உண்டாகும்இயற்கைப் பொருள்களையும் செயற்

கைப்பொருள்களையும் சக்கரவர்த்திக்கும் மந்திரிமார்களுக்கும் சிலசமயங்களில் காணிக்கையாகச்செலுத்துவது என்பது தொன்று தொட்டு வந்த ஒரு பெருவழக்கம். அரசர்களைக் காணும் போதும் குழந்தைகளைக் காணப்போகும் போதும், வெறுங்கையுடன் செல்வது கூடாது என்று ஓர் ஆன்றோர் சொல்வழக்கத்திலிருந்தும் வருகின்றது. அதற்கிணங்கப்பிரபுக்கள் தங்கள் சக்ரவர்த்தியைக் காண்பதற்காகச் செல்லும் போது சன்மானஞ் செய்வதற்குத்தகுதியான பொருள்களைச் செய்வதற்காகத் திறமையுள்ள தொழிலாளிகளைத் தங்களிடத்தில் உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் செய்ததொழிலைமேற்பார்வையிடத்தம்மிடத்தில் பல உத்தியோகஸ்தர்களையும் பெற்றிருந்தனர். இம்முறையினால் அந்தந்தப் பிரபுக்களின் இராஜ்யத்தில் கைத்தொழில் பெருகிவந்தது.

அந்நியநாட்டு வியாபாரிகள் அப் பிரதேசங்களில் கிடைக்கக் கூடிய கைத்தொழிற் பொருள்களை முன்பணம் கொடுத்தோ அல்லது தரகர்களின் மூலமாகவோ வாங்கி வெளிதேசங்களுக்கு அனுப்பி வந்தார்கள்.

ஐரோப்பிய கம்பெனியர் பல குமாஸ்தாக்களை நியமித்து அவர்கள் மூலமாக ஒவ்வொரு தொழிலாளியின் குடிசைக்குச் சென்று முன்பணம் கொடுத்து தங்களுக்கு வேண்டும் பொருள்களைச் செய்து கொண்டு வந்தனர். இங்ஙனம் முன்பணங்கொடுத்து கம்பெனியின் உத்தியோகஸ்தர்களைத் தொழிலாளரின் குடிசைக்கு அடிக்கடி அனுப்பி தாங்களளித்த முன்பணம் சரிவரத்தங்களது வேலைக்கு உபயோகிக்கப் பட்டு வருகிறதா என்பதையும் குறித்தகாலத்தில் அந்தப் பொருள் செய்தாகி விடுமாவென்பதையும் கவனித்து வந்தார்கள்.

காசிம்பஜார் என்ற இடத்தில் மாத்திரம் டச்சுக்காரர்கள் பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் எண்ணூறு பட்டு நேசவுக்காரர்களை அமர்த்திக்கொண்டிருந்தனர்.

அந்நிய நாட்டு வியாபாரம் மிகவும் மும்முரமாகவே நடந்து வந்தது. உள் நாட்டில் குழப்பமாவது பெருத்தபஞ்சமாவது ஏற்பட்டால் தான் அந்த வியாபாரம் தடைப்படும். அதுவரையில் தட்டின்றித்தாராளமாக நடை பெறும். மூலாய அரசாங்கத்தில் பற்பல விளைபொருள்கள் அபரிமிதமாகக் கிடைத்தன. அவைகள் அபினி, நீலி

மிளகு, இஞ்சி, நெய், சர்க்கரை, மெழுகு, வெடியுப்பு இன்னும் சில உலோகப்பொருள்களும், இந்தியாவில் கிடைக்துவந்தன. அபினி என்ற லாகிரிவஸ்து ஏராளமாக பெரு ஜாவா மலேயா தீப கற்பங்கள், சைனு, பாரசீகம், அரேபியா முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. உலகத்தின் கண்ணுள்ள பிரஜைகளுக்கு ஆடையாக வேண்டிய பஞ்சு இந்தியாவிலிருந்தே தான் போகவேண்டும். நமது இந்தியாவின் பஞ்சு எத்தனை தேசத்தவர்களின் மானத்தையும் தேகத்தையும் காப்பாற்றிவந்த தென்பதை எழுத்தால் எழுதவும் முடியாது வார்த்தைகளால் சொல்லவும் முடியாது. முரட்டுப்பஞ்சுத் துணிகள் ஐரோப்பாவுக்கும், ஜப்பானுக்கும், பலவிதமான சாயம் ஏற்றப்பட்ட துணிகள் அபிசீனியா, பிலிப்பைன் தீவுகள் சுமத்திரா கீழ்த்திசை பிரதேசங்கள் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. காசியிலும் ஆமதாபாக்திலும் நெய்யப்பட்ட பலவிதமான சரிகை வஸ்திரங்கள் உலகத்தின் எல்லாபாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

இவைகள் எல்லாவற்றையும் விட மிகவும் மதிக்கப்பட்டது மஸ்லின் துணியேயாகும். சாதாரணமானதும், சாயம்ஏற்றப்பட்டதும் சரிகை கரைகள் போடப்பட்டதுமான மஸ்லின் துணிகள் இந்தியாவினின்று உலகத்தின் பற்பல தேசங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. 'கீழ்த்தேசத்துப்பட்டு' என்று அந்நியர்கள் புகழ்வதுஇத்தகைய துணிகளையே. இப்பட்டுத் துணிகளைப்பற்றியே ஐரோப்பிய பிரயாணிகள் விநோதமான குறிப்புகளை எழுதியிருக்கிறார்கள் ஒரிஸாவில் 'டஸ்ஸர்' என்று சொல்லப்பட்ட ஒரு வகைத்துணி நெய்யப்பட்டு வந்தது. ஒருசெடியின் நாரை நூலிழையாகக் கொண்டுநெய்யப்பட்டது. இதைப்புல் துணியென்று அழைத்து வந்தனர்.

முதலில் முகம்மதிய மன்னர்களின் ஆதினத்திலிருந்து சிறிது காலம்இந்து மன்னராம் கிருஷ்ண தேவராயரிடம் சென்றிருந்த கோல்கொண்டாராச்சியம் தொன்று தொட்டு இன்றுவரையிலும் வைரக்கற்களுக்காகப் பெயர் பெற்றிருக்கிறது. இஃது உலகமேயறியும். விஜய நகர ராச்சியம் க்ஷீணதிசையடைந்தபோது முகம்மதியர்கள் அரண்மனைகளைச் சூறையாடிப்பாழ் செய்து பெட்டிபெட்டியாக வைரக்கற்களை அபகரித்துச்சென்றனர். அச்சமயம் ' தூண்டாமணி என்றுசொல்லப்பட்ட ஆயிரம் காரட்டுக்கு மேல் எடையுள்ள பெரிய வைரக்கல்ஒன்று

சுல்தானால் எடுக்கப்பட்டு அக்காலத்தில் பாதுஷாவாகவிருந்த ஔரங்கசீப்சக்கரவர்த்திக்குக் காணிக்கையாகஅனுப்ப ப்பட்டது.

மொகலாய ராச்சியம் சிதைவானபோது நாதர்ஷா என்னும் ஆப்கானியன் டில்லியின்மீது படையெடுத்தபோது அந்த வைரக்கல்லை அபகரித்தான். இவ்வண்ணம் அவ்விலையற்ற வைரக்கல் கைமாறி கைமாறிச்சென்று கடைசியில் நமதுவேந்தராம் ஐந்தாம் ஜார்ஜ்அவர்களது மகுடத்தில் பதிக்கப்பெற்று விளங்குகின்றது. அம்மதிப்பிலா வைரத்திற்கு கோஹினூர் என்றபெயர் அளிக்கப்பட்டிருக்கிறது. அத்தகையமணிகள் எண்ணிறந்தவை நிறைந்த சுரங்கங்களையுடைய இந்தியாவின் பெருமையையும் செல்வமிகுதியையும் என்னென்றுரைப்பது? ஆன்றோர்கள் தமக்கெனவாழாது பிறர் நன்மையைக் கோரியே வாழ்வார், அது போல இந்தியா நாடு தனக்கெனவாழாமல் பிறருக்கென வாழ்ந்தும் வந்தது, வாழ்ந்துகொண்டும் வருகிறது, இனியும் வாழ்ந்தும் வரும். ஆதிமுதல் இதுவரையில் எத்தனை ஜாதியார்கள் எத்தனை சமயங்களில் இந்தியாவின் செழுமையையும் செல்வ நிலையையுங்கண்டு தங்கள் நிலைதவறி படையெடுத்து வந்து அவர்களெண்ணியதைப் பெற்றுச்சென்றிருக்கின்றனர். அப்படிச்சுச்சென்றிருந்தும் ஒருவாறு திருப்தி பெற்றதாகச் சரித்திரத்தில் காண்கிலேம். முகம்மது கஜனி என்பவர் திருப்தி பெற்றவரல்ல என்பதை யாவரும் உணர்வார்கள். மேலே கூறப்பட்ட நாதர்ஷாவும் அவ்விதமேதான். மகா அலக்ஜாண்டர் புருஷோத்தமருடன் வெற்றி பெற்றும் திருப்தியடையாது உள்நாட்டில் பிரவேசிக்க எண்ணினர் அவ்வெண்ணம் படைவீரர்களால் தடைப்பட்டது. அதிருப்தியுடன் அலெக்ஜாண்டர் திரும்பவேண்டியதாயிற்று. இவ்வண்ணமே நாம் ஒவ்வொரு உதாரணத்துடன் சொல்லிக்கொண்டே போகலாம். மொகலாய அரசாங்கத்தில் எல்லாவிதமான கைத்தொழிலும் சிறப்பாக நடந்து வந்தது. காகிதங்கள், லாகூர், ஔரங்காபாத், ராஜ்கிரி முதலிய இடங்களில் செய்யப்பட்டு வந்தன. மெல்லிய காகிதங்கள் காஷ்மீரத்தில்ஏராளமாகச் செய்யப்பட்டு வந்தன. கண்ணாடிச்சாமான்கள் வாசனைத்திரவியங்கள் எல்லாம், கிடைத்து வந்தன வெளிதேசங்களின் சாமான்களினுதவியில்லாமலே பதினேழாம் நூற்றாண்டில் நன்றாக செழித்திருந்த இந்தியா, இருபதாம் நூற்றாண்டில் ஒவ்வொரு சாமானுக்கும் அயல்தேயத்தினுதவியை எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. என்னே! காலக்கொடுமை.

———

நமது மாகாணத்தில் கைத்தொழில் வணிகப்பெருக்குக்குள்ள விசேஷ சௌகரியங்கள்.

ஒருநாடு கைத்தொழிலில் அபிவிருத்தியும் சிறப்பும் உயர்வும் அடையவேண்டுமானால்அதற்கு முக்கிய சாதனமாயிருப்பவைமூன்று. முதலாவது கைத்தொழிற் செய்யப்படுவதற்கு ஆதிகாரணமும் உற்பத்திப்பொருளுமான விளைபொருள்கள். இரண்டாவது தொழின் முறைதேர்ச்சியும், அறிவின் முதிர்ச்சியும், முறையைப் பிறர்க்குபதேசிக்கும் வன்மையும், சொற் சாதுர்யமுமாம். மூன்றாவது எப்பணியையும் திருப்பணியாக்கவல்ல மூலதனம். சுவர் என்று ஒன்றைமுன்னமேயே தேர்ந்தெடுத்துக் கொண்டல்லவோ சித்திரம் வரையவேண்டும். சுவர் இல்லையேல் சித்திரம் வரைவது எங்ஙனம்? சுவர் என்பது சித்திரம் தீட்டுவதற்கு எத்துணை இன்றிமையாய்ப் பொருளோ அத்துணை இன்றிமையாப் பொருள் மூலதனம் என்பது கைத்தொழிலுக்கு. கைத்தொழில் என்னும சீரிய விருக்ஷம் செழித்துக் களைத்து அரும்பிக் காய்த்துப் பழுக்க முக்கிய காரண பூதங்களாக அரசாங்க உதவியும் இயந்திரங்களின்துணையும்இருக்கின்றன. தற்காலப்போக்கு வரவு சாதனங்களும், விளப்பரங்களும், கைத்தொழிற் பண்டங்களையும் மற்றவைகளையும் வியாபார முறைமையில் விற்பனை செய்ய மிகவும் பயன்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிட்டபடி கைத்தொழில் விருட்சத்திற்கு அப்போதைக்கப்போது அது செழித்து அதிகப் பலனடைவதற்கு 'பாங்குகள்' என்னும் நாணயச் சாலைகள் சாஸ்திரீயமான எருக்கள் போலாம். அப்பாங்குகள் கைத்தொழில் வணிகப் பெருக்கத்திற்கும், செழிப்பிற்கும் பற்பல முறைகளில் அனவரதமும் பயனளித்து வருகின்றன. மேலேகுறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொன்றைக் குறித்தும் சில சில மொழிகள் கூறுவாம். நம்மாகாணத்து விளைபொருள்களைப்பற்றியும் பொதுவாகக்கைத்தொழிலில் சில திருத்தங்களைக் குறித்தும் முதலில் ஆராய்வோம்;—

விளை பொருள்கள்

சென்னை மாகாணம் செல்வத்தால் நிரம்பப் பெற்றது. குபேரனது அளகைக்கு நிகரானது. தனதான்ய சம்பத்தில் ஈடும் எடுப்புமில்லாதது, நவநிதிக் குவியல்கள் ஒருங்கே மலைபோல் குவிக்கப்பட்ட ஒரு தனிப்பிரதேசம். தங்கச்சுரங்கங்களும், வைரக்கனிகளும், பவளத் தீவுகளும், முத்துச்சொழிக்கும் நதிகளும் மற்றும்பல உலோகங்களும் பொலிந்து கிடக்கும். பூலோக சுவர்க்க மென்றல்லவோ நமது மாகாணத்தைச் சொல்லவேண்டும்? சென்னையின் விளை பொருள்களில் எது அன்னிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படாமலிருக்கின்றது; ஒன்றுமேயில்லை. நம்மவர்கள் தேகத்துக்குக் கெடுதியையும் பித்தத்தையும் அளிக்கும் என்று விரும்பாது வெறுக்கும் வேர்கடலைக்காயை மேனாட்டு வியாபாரிகள் பொன்னேபோல் போற்றி, போட்டியும் போட்டு பொன்னைச்சொரிந்து ஏற்றுமதி செய்து கொண்டுபோய் மீளவும் நமக்கே அவைகளினின்றும் வாசனை வீசும் சோப்புகளையும், வாஸனைத் தைலங்களையும் இனிக்கும் மிட்டாய் தினுசுகளையும் அதிக விலைக்கு நம் தலையில் சுமத்த நம்மவர்கள் ஆனந்தமாக வாங்கி அகமகிழ்கின்றார்கள். இவ்விருவர்களில் யார் சமர்த்தர் என்பதை நாம் எடுத்துரைப்பதனாவசியம். மேனாட்டு அறிவு மிகுந்த வணிகர்கள் நம்மிடமிருந்து விளைபொருள்களை ஒன்றுக்குப் பத்தாகவிலைகொடுத்து தமது தேசங்கட்கு ஏற்றுமதி செய்து சொண்டு போய் அங்கிருந்து அவைகளைச் செய்பொருளாகச் செய்து மீளவும் நமக்கே ஒன்றுக்கு ஆயிரமாக லாபம் வைத்து விற்பனை செய்கின்றார்கள். நமது மாகாணத்தில் உற்பத்தியாகும் பஞ்சு தினுசுகள் எண்ணெய் வித்துக்கள் கால்நடைத்தோல்கள் இவைகள் யாவும் கோடிக்கணக்கான ரூபாய் மதிக்கக்கூடியவைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நமது அரணியங்கள் எல்லாம் இன்னும் அழிக்சப்பட்டுப்போகவில்லை. மனிதர்களின் அடிச்சுவட்டையே கண்டறியாத அந்தகாரமே குடிகொண்டிருக்கும் அருங்கானகங்கள் எண்ணிறந்தவை இன்னும் இருக்கின்றன. வீடுகள் கட்டப்படுவதற்கும், இன்னும் மற்ற சாமான்கள் செய்யப்படுவதற்கும் தகுந்த மரங்கள் அவ்வடவிகளில் அகப்படுவதுந்தவிர கைத்தொழிலுக்கு முக்கியமான பல வேறுவித மரவகைகளு இருக்கின்றன. இன்னும் உலோக வகைகளில் மாத்திரம் என்ன குறைவு நம்மாகாணத்

திற்கு? அப்ரகமும், மாங்கனீசும் பிறந்த இடம் நமது சென்னை மாகாணமல்லவா?

பருத்திக் கைத்தொழில்.

அமெரிக்காக் கண்டத்திற்கு அடுத்தபடியாக இந்தியாதான் விசேஷமாகப் பருத்தியை உலகத்தவர்க்கு அளிக்கின்றது. உலகத்து மாந்தர்களின் மானத்தைக் காப்பாற்றும் ஆடையை நம் இந்தியா தான் உதவிவருகின்றது. நமது பருத்தி குணத்திலும், நயத்திலும் பேர்பெற்றிருக்கின்றது. ஆனால் ஜப்பான் தேசம் நமது சிறந்த பருத்தியைக்கொண்டு நமக்கு திருப்பவும் நன்றாக செய்யப்படாத நூல் வகைகளாக நம் மாகாணத்திற்கு அனுப்புகின்றது. அதனால் கோடிக் கணக்காகப் பெருத்த லாபத்தை யடைந்து விட்டது. சிலவருஷ காலங்களுக்குள். (அந்தோ! பரிதாபம்! இது சமயம் கடவுளின் கோபத்தாலோ, மற்று எவ்வகையினாலோ, ஜப்பான் தேசத்தில் பெரும்பாகம் சேதமடைந்துவிட்டது. தலையெடுக்க முடியாதபடி அழுந்தப் பெற்றுப் போய்விட்டது சமீப எரிமலை கொதிப்பினாலும் பூகம்பத்தினாலும். மிகப்பரிதாபம்),

நமது கைவசத்திலோ சிற்சில நெசவுத் தொழிற்சாலைகள் தாம் இருக்கின்றன. 1913-19 ஆம் வருஷங்களில் இந்தியா முழுவதற்கும் 264 தொழிற் சாலைகளே இருந்தன- அவைகளில் சென்னை மாகாணத்தில் மட்டும் 17 தொழிற் சாலைகளே இருந்தன; சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகக் கதர் துணி அன்னிய நாட்டுப் பொருள் பகிஷ்காரம் முதலியவை மிகவும் மும்முரமாக இருந்து வருவதனால் நெசவுத் தொழிற்சாலைகளும், கைராட்டினங்களும் முன்பிருந்ததைவிட இரண்டு மூன்று மடங்கு விரைவிலேயே அதிகரித்துவிட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் கைராட்டினங்களும், கைத்தறிகளும் பல ஏற்பட்டு நெசவுத்தொழில் சுக்கிலபட்சத்துச் சந்திரனைப்போல தினே தினே முன்னேற்றமடைந்து வருகின்றது. இது நமது மாகாணத்தின் கைத்தொழில் வெற்றிக்கு ஓர் அறிகுறியாகும். நமது கைராட்டினங்கள்மிகச் சிறியதாகையாலும், எல்லோரும்அந்தக் கருவினாலேயே நூற்நூற்பதென்பது கூடாக்காரியமானபடியாலும் அவைகளைவிட பெரிய யந்திரங்களைப் படைத்து அதிகமாகச் சரக்கு உற்பத்தி செய்தால் தான் நெசவுத்தொழில் நம்மவர்க்குள் லாபகரத்தையும் விருத்தியையும் அளித்ததாகும். அப்படிக் கில்லாவிட்டால்

அத்தொழிலின் விருத்திக்காக எடுத்துக்கொண்ட முயற்சியும் பணமும் வீணேயாகும். நமது மாகாணத்தில் நூல் நூற்பதற்கும், நெசவுக்காகவும் வேண்டி எண்ணிறந்த தொழிற்சாலைகள் தோன்ற வேண்டும். (இது சமயம் பல மாகாணத்தில் பல விடங்களில் தோன்றியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. மலையாளத்தில் ஒன்றும் திருச்சியில் ஒன்றும், மதுரையில் ஒன்றும் சமீபகாலத்திற்குள் தோன்றியுள்ளன.) பருத்தித் தொழிற் சாலைகள் சமீபகாலத்திற்குள் நூற்றுக்கு ஐம்பதுமுதல் நூறுவரையிலும் பங்கு பிரிவுப்பணம் கொடுத்திருக்கின்றன. இவ்விசேஷ விஷயம் ஒன்றே நம்மவர்க்கு இத்தொழிலின் பெருமையும் லாபமும் உள்ளங்கை நெல்லிக்கனியென தெளிவாக்குகின்றதல்லவா ? சமாசாரப் பத்திரிகைகளில், இங்கிலாண்டு, ஜர்மனி முதலிய அன்னிய நாடுகளிலுள்ள நெசவுத் தொழிற் சாலைகள் மூடப்பட்டுப் போய்விட்டனவென்றும், அவைகளிலுள்ள யந்திரங்கள் சாமான்கள் யாவும் விற்பனைக்கு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. அப்பிரதேசங்களிலுள்ள இன்னும் சில பத்திரிகைகள் அவ்விதம் தொழிற்சாலைகள் திடீரென்று விழுந்து முறிந்து போனதற்கு முக்கிய காரணமாக கத்தர் இயக்கமும், மகாத்மா காந்தியின் அந்நிய நாட்டு பகிஷ்காரமுந்தான் என்று ஒருமிக்க முறையிடுகின்றன. அப்பிரதேசத்திலுள்ள பெருத்த சீமை ஜவுளி வியாபாரிகள் எல்லாம் தாங்கமுடியாத பெரும் நஷ்டமடைந்து விட்டிருக்கின்றார்கள். அவ்விதமிருப்பதால் நமது மாகாணத்தில் பருத்திக் கைத்தொழில்பெருத்த லாபகரத்தையும் தேச க்ஷேமத்தையும் பண்டைப் பெருமையையும் மீளவும் நாம் பெறுவதற்குத் தகுந்த சமயம் இப்பொழுதே வாய்த்திருக்கின்றது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்று நமது முதுமொழி முழங்குவதால் இச்சமயத்தைக் கைசோர விடக்கூடாது.

தோல் கைத்தொழில்.

இந்தியாவிலுள்ள தோலில் மூன்றில் இரண்டு பங்குக்குமேல் சென்னை மாகாணம் ஒன்றே அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. உலகத்திலுள்ள எல்லாப் பட்டணங்களை விட சென்னப் பட்டணம் தான் அதிகமாகத் தோலை அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றது. ஜர்மனி யுத்தத்திற்கு முன் தோல் வகையில் சென்னை மாகாணத்தில் அதிகமாக வியாபாரம் நடந்துவந்தது. ஆனால் சண்டைச்குப்பின் அது நின்றுவிட்டது யுத்தம் நடந்து கொண்டிருந்த

காலத்தில் சென்னையில் தோல் வியாபாரிகள் யாவரும் பெருத்த லாபத்தையடைந்து களிப்பெய்தி நல்ல நல்ல கட்டடங்களை விலைக்கு வாங்கி பல மாளிகைக்குச் சொந்தக்காரர்களாகி விட்டிருக்கின்றார்கள். யுத்தமும் நின்று விட்டது. தோல் வியாபாரமும் படுத்து விட்டது. ஆனால் இப்போதோ, கொஞ்சம் கொஞ்சமாக ஜர்மனி தலைதூக்கிக் காட்டிக் கொண்டு வருகிறது. தோல் வியாபாரம் துளிர்த்துத் தழைத்து வருகின்றது. ஆனால் நம் தோல் வியாபாரிகள் ஏதோ லாபம் கிடைத்து விடுகிறதென்ற எண்ணம் மட்டும் கொண்டு தங்களது சரக்குகளை ஏற்றுமதி செய்யாமலிருக்க வேண்டுகின்றோம். ஜர்மனிக்குச் சொந்தக் கப்பல் போக்கு வரவுச் சாதனங்கள் உண்டு. ஆனால் நமக்குச் சொந்தமாகக் கப்பற் சாதனமில்லை என்பது வாஸ்தவமேயானாலும் இது விஷயத்தில் இங்கிலாந்து இஷ்டப்பட்டால் சகாயம் நமக்குச் செய்யக்கூடும். புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள யந்திரங்களையும், கருவிகளையும் கைத்தொழிற்கவசியமான சரக்குகளையும் அன்னியநாடுகளிலிருந்து நமது மாகாணத்திற்கு இறக்குமதி செய்து கொண்டு நாமே தோலினால் பலவகையான கைத்தொழிற் பொருள்களைச் செய்துகொள்ளலாம். அம்மாதிரி செய்துகொள்வதனால் நமக்குத் தேவையான விதத்தில், நம்மவர்களைக் கொண்டே மிகுந்த குறைந்த விலையிலும், அதே சமயத்தில் வாங்குவோர்க்கும், விற்போருக்கும் லாபகரமாகவும் கிடைக்கக் கூடும். அதனுடன் நில்லாமல் நமது தேயத்திற்குப் பெருத்த கௌரவமும் கைத்தொழில் வெற்றியும் மனச்சந்துஷ்டியும் ஒருங்கே ஏற்படவுங் கூடும்.

தீக்குச்கள்.

மலையாளம், கொச்சி முதலிய மேற்குப் பிரதேசங்களிலுள்ள காடுகளில் தீக்குச்சுகள் செய்யத்தகுந்த மரத்தினுசுகள் ஏராளமாகவளருகின்றன. 1918-19 வருஷத்தில்மட்டும் சென்னை மாகாணம் 10, 81, 450 ரூபாய் பெறுமானமுள்ள தீக்குச்சுகள் இறக்குமதி செய்திருக்கின்றது. இப்பொழுதோ இன்னும் அதிகமாகவே நாம் இறக்குமதி செய்து வருகின்றோம்- நமது மாகாணத்திலேயே நாம் தீக்குச்சு கைத்தொழிலை மேற்கொண்டு லாபமடையலாம். இச்சமயம் அன்னிய நாட்டுப் பண்டங்களுக்குத் துறைமுகச் சுங்கம் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அதிதீர்வையினின்றும் நாம் விலக்கிக் கொள்ளலாம். இத்தீக்குச்சுக் கைத்தொழிலுக்கு நமது மாகாணம் எல்லா

விதத்திலும் பச்குவமடைந்ததாக விருக்கின்றது. ஆகவே அத்தொழிலில் இப்பொழுதே சிரத்தை கொண்டு பிரவேசிக்க எண்ணுபவர்களுக்கு நல்ல யோகம்தான் என்று சொல்வதில் சிறிதும் ஐயமேயில்லை.

காகிதக் கைத்தொழில்

இந்நூதன கைத்தொழிலுக்கும் நமது மாகாணம் ஏற்றதாக இருக்கின்றது. கோதாவரி தீரத்திலுள்ள காடுகளிலும், கழிமுகத்தெதிர் நிலங்களிலும் மூங்கில்; நெற் பயிர் முதலியவைகள் அபரிமிதமாகக் கிடக்கின்றன. அவைகள் காகிதம் செய்ய மிகுதியும் பயன்படுவன. கோதாவரி ஜில்லாவிலுள்ள ராஜமகேந்திரமும், திருவாங்கூரிலுள்ள புனலூரும் இக்காகிதத் தொழிலுக்கு மிகவும் நன்றாக அமைந்திருக்கின்றன. அவ்விடங்களெல்லாம் நதிக்கரைகளிலேயே இருக்கின்றன. அந்நதிகளும் மூங்கில் முதலிய காடுகளின் மூலமாகவே பாய்கின்றபடியால் அச்சரக்குகள் எல்லாம் வெகு இலகுவிலேயே தொழிற்சாலைக்குக் கொண்டுவரப்பட்டும் போகின்றன. அதனால் அதிகச் செலவு நேரிடாமல் லாபத்தைப் பின்னும் அதிகரிக்கும்படிச் செய்ய மார்க்கம் ஏற்படுகிறது.

பட்டுப் பூச்சியும், பட்டுக் கைத்தொழிலும்.

சீனதேசத்திற்குஅடுத்தபடியாக இந்தியாதான்பட்டுப்பூச்சிகளுக்கும் பட்டுக்கைத்தொழிலுக்கும் மிகப் பெயர்பெற்றது. பட்டுக் கைத்தொழில் என்பது மற்ற கைத்தொழில்களைக் காட்டிலும் மிக எளிது. அதற்கு முக்கியமாக வேண்டுவது இரண்டு. அவ்விரண்டு பொருள்கள் கிடைத்து விடுமாயின் பட்டுக் கைத்தொழில் மிகச்சிறப்பாக நடைபெறும். ஒன்று மல்பரி என்னும் பச்சிலை வளரத்தகுந்த மண் வளமுள்ள பிரதேசம். இரண்டாவது 95 டிகிரிக்குள் உஷ்ணமுள்ள பிரதேசம். இவைகளே அதிக முக்கியமானவை. இவ்விரண்டு பொருள்கள் எளிதில் கிடைக்கக்கூடிய பறபல இடங்கள் நமது மாகாணத்தில் மலிந்து கிடக்கின்றன. இவ்வித பல சௌகரியங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றமையால் நாம் இக்கைத்தொழிலை மேற்கொண்டு சுக மெய்தலாம். இத்தகைய வசதிகளும் சௌகரியங்களும் இயற்கையிலேயே உண்டாயிருந்தபோதிலும் இன்னும் நமக்கு வேண்டிய முக்கால் பாகத்துக்கு மேல் பட்டு தினுசுகள் அன்னிய நாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றதைக் கவனிக்கும்போது நம்மவர் கைத் தொ

ழில் முறையில் செலுத்தும் கவனத்தின் அளவும் பராமரிச்குந் தன்மை யின் மிகுதியும் தெற்றென விளங்குகின்றதல்லவா? நமச்குத் தேவை யான கொஞ்சம் பட்டு மைசூர், கொள்ளேகால் முதலிய பிரதேசங் களிலிருந்தும் கிடைத்து வருகின்றதும் நாம் செய்த பூஜாபலமேயாம்.

நானுவித கைத்தொழில்கள்.

இன்னும் எவ்வளவோ கைத்தொழில்கள் கணக்கற்றவையாய் இருக்கின்றன. கரும்பு, பனை, தென்னை முதலியவைகளினின்றும் முறையே சர்க்கரை, வெல்லம் முதலியவைகளைச் செய்வதும் கைத் தொழில்களைச் சேர்ந்தவையே. எண்ணெய் விதைகளும் அவைகளைச் சேர்ந்த சோப், மெழுகுவர்த்தி முதலிய பல கைத்தொழில்களும் புளி யினின்றும் ஒருவிதமான திராகவமும், எலுமிச்சம் பழத்தினின்றும் ஒருவித சிட்ரிக் ஆஸிட் எலுமிச்சை உப்பு முதலிய கைத்தொழில் களும்; உருளைக்கிழங்கு, காபி முதலியவைகளினின்றும் திராவகங்க ளும் (Spirits) உப்பு, சிமிட்டி, பொம்மைச்சாமான்கள், கயிறுவகை கள், உலோகங்களினலான சாமான்கள், கம்பளித்துணி தினுசுகள் முத லிய கைத்தொழில்கள் வெகு எளிதில் மேற்கொண்டு வெற்றிபெற பலசௌகரியங்கள் நமது மாகாணத்தில் ததும்பிக்கிடக் கின்றன.

தேர்ந்த பயிற்சியும் சாமர்த்தியமும்.

விளை பொருள்களும் மலைபோல திரவியக்குவியலும் மட்டும் இருந்து விட்டால் தேசத்தின் கைத்தொழில், விருத்தியும் செழிப்பும் அடைந்து விடாது. ஆனல் அவைகளைக்கொண்டு நல்ல தொழில் முறையில் தேர்ந்த ஞானங்கொண்ட தொழிலாளிகளின் துணையும் உதவியும் அத்தியாவசியமாக வேண்டும். அஃதில்லையேல் ஒன்றுமே பலனில்லை. முன்னவை யாவும் உடல்போலவும், அவ்வுடலுகுச் சிறப்பையும் அழகையும் கொடுக்கக் கூடிய உயிர் போல் கைத்தொழி லாளிகளின் உதவியாம். கைத்தொழிலின் வெற்றி பெரும்பாலும் அத்தொழில் செய்முறைகளில் தேர்ச்சியினளவையும், செய்யும் சாமர் த்தியங்களின் அளவையும் பிறருக்குப் போதிக்கும் சாதுர்யத்தின் நேர்மையையும் பொறுத்ததாக விருக்கின்றன. இவ்விஷயத்தில் நமது அரசாங்கத்தாரும், மந்திரிமார்களும், கைத்தொழிற் கல்வி அபிவிருத் தியைக் குறித்து சற்றுக்கவலையும் கவனமுமேற்கொண்டவராக விருக் கின்றார்கள். நமது புதிய கைத்தொழில் மந்திரியார் திவான் பகதூர்

டி. என். சிவஞானம்பிள்ளை அவர்கள் இம்முறையில் நமது மாகாணம் முன்னேற்ற மடையும்படி பல சௌகரியங்களைச் செய்து தேசத்திற்கு உபகாரம் செய்தருளுவார் என்று முழுமனதாக நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். அவருக்கு அம்முறையில் தீவிரமான ஆர்வமும் ஜெயமும் கிடைக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நமது அரசாங்கத்தார் பற்பல ஊர்களில் கைத்தொழிற் கல்வி கற்பிக்கும் பல பாடசாலைகள் ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். நமது தொழிலாளிகளும் அவர்களது புத்திரர்களும் இந்த நல்ல வேலையை கைக்கொள்வார்களானால் நமது முன்னோர்களின் கைத்தொழில் வன்மையைப்போல் தொழிலாளதிலகமென விளங்குவார்க ளென்பதில் சிறிதேனும் ஐயமில்லை. நமது மாகாண கைத்தொழிற் பெருக்கத்திற்கு அரசாங்கத்தினர் மேற்கொண்டிருக்கும் கவனமும் சிரத்தையும் நமது தொழிலாளர்கள் செய்த புண்ணிய வசமேயாம். இச்சமயத்தை நழுவவிட்டால் மறுசமயம் வாய்ப்பதரிது. ஆகவே சகோதர தொழிலாளர்களே! அவர்தம் அரும்புத்திரர்களே! நமது முன்னோர்களின் தொழில்வன்மை அன்னிய நாட்டாரால் இன்றும், இவ்வுலக முள்ளளவும் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது. அவர் தம் மரபிலுதித்த அருந்தவப்புதல்வர்கள் அதை மறந்து அஞ்ஞானத்தில் உழல்வது எத்தன்மைப்பேதைமைத்து? நீங்கள் உங்களது ஆற்றலை அறவே மறந்து நீண்டகாலம் உறக்கங்கொண்டு விட்டீர்கள்! அவ்வுறக்கத்தை உடனே விட்டு விழித்துக் கொள்ளுங்கள். அறிவுச்சுடர் கொளுததி ஆன்றோர் வழிபற்றுங்கள். ஆண்மையுற்று அரிதாய் விளங்குங்கள். தமிழரின் பண்டைப் பெருமையைத் தரணியோருக்குக் கண்கூடாகக் காட்டுங்கள்?

அரசாங்க உதவி.

தனவந்தர்கள் நமது மகாணத்தில் எத்துணையோ பேர்கள் இருந்தும் அவர்கள் தங்கள் திரவியத்தைக் கைத்தொழிற்கும் வணிகத்திற்கும் கொடுத்துதவ மனமில்லா திருக்கின்றனர் அவைகளில் பணம் போட்டால் திரும்பிவராதென்றே எண்ணிவிடுகின்றார்கள். அவர்களுக்குப் போதுமான மனோவலிவும் நம்பிக்கையும் அற்றவர்களாக விருக்கின்றார்கள். அரசாங்கத்தாரின் தொழிற்சாலைகளுக்கு உதவி புரிய அவர்கள் கனவிலும் கருதுவது கிடையாது.

1922-வருடம் நவம்பர்மாதம் மாஜிதொழிலபிவிருத்தி மந்திரியார் கொண்டு வந்த கைத்தொழிலுக்கு அரசாங்க உதவி என்ற மசோதா இப்பொழுது சட்டமாக ஆகிவிட்டிருக்கிறது. அந்தச் சட்டம் இது காறும் பட்டுவந்த பெருங்கஷ்டங்களை யெல்லாம் ஒருவாறு தணித்து வருகின்றது. அதனால் கைத்தொழிலுக்குப் பல வற்றாலும் நன்மையும் பலமும் உண்டாகிவருகின்றன.

யந்திரங்கள்

வீட்டுக் கைத்தொழில்கள் மிகவும் அவசியமானவை. அதிக பயனளிக்கத் தக்கவை. நம்மவர்க்குத் தேவைக்கு வேண்டியவாறு அதிகமாகச் செய்யவேண்டியிருப்பதால்கொஞ்சம் கொஞ்சமாக மனித சக்தியைக்கொண்டு செய்வது கைகூடாக் காரியம். ஆகவே ஏராளமாகச் செய்யப்படவேண்டுவதற்கு யந்திரங்களால்தான் முடியும். நம்மவர்கள் அதிர்ஷ்டவசத்தால் மறைந்து கிடக்கும் சில புதையலை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து அதை அனுபவிக்குங்காலமும் வெகு சமீபத்திலேயே தானிருக்கின்றது. பூமியை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்ததில் கிருஷ்ண ஜில்லாவில் பெத்தநேல் என்ற ஊருக்கருகே நிலக்கரி ஏராளமாகக் கிடைக்கிறதென்று கண்டறியப்பட்டிருக்கின்றது. மலையாளம், திருவாங்கூர் இப்பிரதேசங்களில் (Ignites) பூமியில் அங்கங்கே பதிக்கப்பட்டிருக்கின்றதை கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவைகளை விரைவில் தோண்டி எடுத்துச் சேகரித்து வைத்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மைசூர் மாகாணத்திலுள்ள சிவ சமுத்திரம் என்னும் பட்டணத்திற்கருகே காவேரி நீர் வீழ்ச்சி இருக்கின்றது. அவ்வீழ்ச்சியினின்றும் மின்சாரசக்தியினால் கைகூடாத தொன்றும் வேறுண்டோ ? வியாதிகள் கூட மின்சாரத்தினால் துரத்தப்பட்டுப் போகின்றதெனில் அதனது வைபவம் தான் என்ன ! இறந்தவனையும்கூட சில நிமிஷநேரம் வரையில் உயிர் பெற்றிருக்கும்படிச் செய்ய வல்லதெனின் மின்சாரத்தை இறைவனாகப் போற்றித் துதிக்காது வேறென் செய்வது ?

கொர்ரிதத்து நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தி சேர்க்கப் பிரயத்தனங்கள் நடந்து வருகின்றது. அது கடவுளின் கருணையால் பூர்த்தியாகும் பட்சத்தில் மைசூரில் பெரும்பாகத்திற்கும் சென்னை மாகாணத்தில் சிறிது பாகத்திற்கும் பெரிதும் உபயோகப்படும்.

"குண்டா மின்சார ஏற்பாடு என்பது கோயம்புத்தூரிலுள்ள பற்பல தொழிற்சாலைகளுக்கு மின்சார சக்தியை யளிப்பதுமல்லாமல்நீலகிரியிலுள்ள உதகமண்டலம், குன்னூர் முதலிய பட்டணங்களுக்கு விளக்கு எரிவதற்கு மிகவும் பயன்படும். பயகாரா நீர்வீழ்ச்சி மின்சார சக்தியை அளிக்கக்கூடுமானால் மேற்குக் கரை முழுவதிலும் அச்சக்தி வியாபித்து பல விதங்களிலும் பயன்படும்.கொள்ளு மலை மின்சாரவேற்பாடு மதுரைக்குக் கைத்தொழில்களை அளிக்கவல்லது இவ் விடங்களெல்லாம் யந்திரங்களைநிருமித்து அவைகளை ஓட்டவும் அதனால் கைத்தொழிலை வெற்றியுடன்செய்யவும் பல சௌகரியங்கள் ஏற்படக்கூடும். நமக்குநிலக்கரி வேண்டும் ,அது கிடைக்கவில்லை, இதுகிடைக்கவில்லை என்றுகுறைகூறிக்கொண்டிருப்பது சற்றும் அடுக்காது. நியாயமுமன்று, யந்திரங்களுக்குப் பஞ்சம் கிடையாது. நமக்குச் சரக்குகளும், விளைபொருள்களும் அபரிமிதமாக கிடக்கின்றன. நமக்கு இயற்கையிலேயே இறைவனால் அளிக்கப்பட்ட எவ்வளவோ சௌகரியங்கள் இருந்தபோதிலும் அவைகளைக் கண்டு அனுபவிக்க அறிவும் ஆற்றலும் நம்மவர்களுக் கில்லையேல் யாரை நோவது ?

போக்குவரவு சாதனங்கள்.

கைத்தொழிலும் வணிகமும் செவ்வனே நடைபெற்று செழிப்பும் உயர்வுமடைய வேண்டுமானால் விரைவும், சௌகரியமுமான போக்குவரவு சாதனங்கள் பல ஏற்பட வேண்டும். நமது மாகாணத்தில் அத்தகைய போக்கு வரவுச் சாதனங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்றன. ரெயில்வே கமிஷன் அதிகாரிகள் இரட்டை இருப்புப் பாதைகள் போடப்படுவதற்குப் பல காரண காரியங்களைக் காட்டி சிபார்சுசெய்து இருக்கின்றார்கள். இப்போது இருக்கும் மீடர் கேஜ் [எஸ். ஐ. ஆர்] லைன் பெரிய கேஜ்லைனாக மாற்றப்படவும் வேண்டும். அப்போதுதான் விரைவான சாதனங்கள் நமக்குக் கிடைக்கும். அதுவுமல்லாமல் நமது மாகாணத்தின் மூலை முடுக்களிலும் கூட இருப்புப் பாதைப் போடப்படவும் வேண்டும். இருப்புப்பாதை என்ஜினின் சத்தம் கேட்கப்படாத குக்கிராமம் கூட இருக்கக் கூடாது. கொச்சிக்கும் தூத்துக்குடிக்கும் ஒரு பிரத்தியேகமான லைன் ஒன்று வியாபாரப் போக்குவரவின் பொருட்டுப் போடப் படவும் வேண்டும். இருப்புப்பாதைகள் எவ்விடங்களுக்கு லாபகரமானதாகத் தோற்றப் படவில்லையோ அவ்விடங்களுக்கெல்லாம் நன்றாக கல்லினால் அழுத்

தப்பட்ட பெரிய பெரிய சாலைகளாவது போடப்படவேண்டும். விசாகப்பட்டணம் கொச்சி, தூத்துக்குடி இவ்விடங்களிலெல்லாம் துறைமுகங்கள் கட்டப்பட வேண்டும் என்ற ஒரு யோசனை அரசாங்கத்தார் மனதில் நிகழ்ந்து வருகின்றது, அந்த யோசனை உடனே செய்கையில் காட்ட ஆரம்பிக்கப்பட வேண்டும். நமது மாகாணத்திலும் சில கால்வாய்கள் போக்குவரவு சாதனங்களாக இருக்கின்றன. அவைகளையும் சீர்திருத்தி அதிகப்பலனை கொடுக்கும்படியாகச் செய்ய வேண்டும்.

விளம்பரம்

விளம்பரம் வியாபாரத்திற்குக் கண்போன்றது. கண்ணில்லாதவன் ஒன்றுக்கும் உதவாதவனைப்போல் விளம்பரமில்லா வியாபாரமும் பாழாகும். கைத்தொழில் விருத்தியாவதற்கு சரியான விற்பனை ஸ்தலங்களும் பிரதேசங்களும் மிக்க அவசியமானவை. அப்படிப்பட்ட வர்த்தக ஸ்தலங்கள் விளம்பரத்தின் மூலமாகத்தான் தெரிவிக்கப்படும். இந்திய விளைபொருள்கள் ஒன்றே உலகத்தில் விளம்பரம் செய்யப்படாதது. இவ்விஷயம் உலகத்தவர்கள் அறிந்ததே நாம் நமது பொருள்களை விளம்பரம் செய்து நல்ல விலைக்கு விற்காமல் மிகவும் குறைந்த விலைக்கே விற்று பெருத்த நஷ்டத்தை அடைந்து வருகின்றோம். இதை ஒருவரும் மறுக்க முடியாது. சமயமும் சந்தர்ப்பமும் நேருகின்ற காலங்களிலெல்லாம் நாம் நமது பொருள்களை, உலகத்திய பொருட்காட்சி சாலைகளுக்கும் வர்த்தகசாலைகளுக்கும் அனுப்பி நமது வேலைப்பாட்டைக் காட்டிக்கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நமது கைத்தொழிலும் வணிசமும் முன்னேற்றமடைந்து வரும்.

பாங்குகள்.

பாங்குகள் என்னும் நாணயச்சாலைகள் தாம் கைத்தொழிற் பெருக்கத்திற்கும் உயிர்போன்றது. தனம் இல்லையேல் வியாபாரம் ஏது? கைத்தொழில் ஏது ? ஒன்றுமேயில்லாது போகும் தட்டுத்தடை நேர்ந்தபோது உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கண் இடுக்கண் களைவதே நட்பு என்பது போல சமயத்தில் பணமுதவுவதில் பாங்குகள் உத்தம நண்பனைப் போன்றவை. மாகாண பாங்குகள் எல்லாம் இது சமயம் ஒன்றெனக்கலந்து கொண்டன. இதனால் வியாபாரத்திற்கு மிகவும் நன்மை யுண்டாகின்றது.

முடிவுரை

இக்காலத்தில் கைத்தொழில் வணிகப்பெருக்கத்திற்குச் செள கரியங்களும் சந்தர்ப்பங்களும் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன என் பது மேற்கூறிய வற்ருல் அங்கை நெல்லி யென விளங்குகின்றது. விளை பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன, கூலியும் இது காலை சொற்பமாக இருக்கின்றது. கைத்தொழிலில் நல்ல தேர்ச்சி பெறப் போதுமான கல்வி போதிக்கப்பட வேண்டும், வெளித் தேசங்க ளுக்கு நம்மவர்கள் சென்று தொழில் முறைகளை தெரிந்து நிபுணர்க ளாகி ஞானம் பெறவேண்டும். மின்சாரசக்தி, நீராவி சக்தி, மனித சக்தி என்ற சக்திகளெல்லாம் இது காலை அதிகமாக இருக்கின்றன. போக்கு வரவு சாதனங்களை அதிகபடுத்திக் கொள்ளலாம். துறை முகங்கள் இன்னும் அதிகமாகின்றன. பாங்குகள் பின்னும் அதிகரிக் கப்படுகின்றன. அரசாங்க உதவி வணிகத்திற்கும் கைத்தொழிலிற் கும் கொடுக்கப் படுகின்றது. கடைசியாக விளம்பரத்தில் நூதன முறைகளெல்லாம் இது சமயம் பல தோன்றியிருக்கின்றன. இப் பொழுதாவது சென்னை மாகாண வாசிகள் தங்கள் உறக்கத்தைவிட்டுக் கண்விழித்துச் செளகரியங்களையும் சந்தர்ப்பங்களையும் பாழ் செய்யா மல் பயன் பெறும்படிச்செய்துகொள்வார்களோ ?

ஆயுர்வேதத்தின் பழைமை.

முதன் முதலில் மாந்தர் யாவரும் காய்கனிகளைபே தின்று ஜீவித்து வந்தனர். ஆகவே அவர்கட்கு ஒவ்வொரு செடி, கொடி மரம் முதலியவற்றின் குண குணங்கள் நன்றாகத் தெரிந்திருக்க வேண் டியது அத்தியா வசியகமாயிருந்தது. இனனின்ன காய்கனிகள் உண் ணத்தகுந்தவை இன்னின்னவைகள் உட்கொள்ளத் தகாதவை என்று அறிந்து அதன்படியே நடந்து வந்தார்கள். தாவரவர்க்கத்தின் ஒவ் வோர் உறுப்பின் தன்மையையும், பயனையும் அதன் காரண காரியங் களையும் சரிவர அவர்கள் உணர்ந்து மிருந்தார்கள். அவ்விதம் அறிந்த தன் பின் அவற்றிற்குத் தகுந்தபடி பெயருமிட்டார்கள். உதாரண மாக 'தொட்டாற் சுணங்கி' என்பது சின்னஞ் சிறியசெடிக்குப்பெயர். அந்தச் செடியைத் தொட்டால் போதும் சுணங்கிப்போம்.

கிரீஸ் தேசத்தவர்கள் ஒரு புஷ்பத்திற்கு நார்ஸீஸஸ் என்று பெயரிட்டார்கள். அந்தப்பெயர் முதலில் ஓர் அரசிளங்குமாரனின் பெயர். தன்னுடைய நிழல் நீரிலிருப்பதைக்கண்டு அவ்வுருவத்தை யடையப் பெரிதும் வருந்தி மனம்நைந்து உயிர் விட்டான். ஓடைகளில் புஷ்பித்திருக்கும் புஷபத்திற்கு அவனது பெயரையே இட்டனர் பிரஜைகள் தாவரவர்க்கத்தித்கு இவ்வாறு பெயரிட்டு வந்திருக்கின்றனர். புராதன ஹிந்துக்கள் தாவர சாஸ்திரத்தில் மிகவும் தேர்ந்தவர்கள். ஒவ்வொன்றின் தாரதம்மியங்களையும், குண குணங்களையும், பலாபலன்களையும், இது சஞ்சீவிக்கொப்பானது. இது விஷத்தன்மையானது என்று எல்லாரும் வெகு நுட்பமாகவும் சாங்கோபாங்கமாகவும் தெரிந்திருந்தார்கள். மற்றைய சாஸ்திரங்கள் விருத்தியடைந்து வந்ததைப்போலவே தாவா சாஸ்திரமும் இந்தியாவில் வெகு தீவிரமாக விருத்தியுடைந்து வந்தது. தாவா சம்மந்தமான நூல்கள் வெளி வந்தன. அவற்றில் மிகவும் கியாதிபெற்றவை சாரகரது தாவா நூலும், சுஸ்ருதரின் நூலுந்தாம். அவர்கள் இயற்கை வஸ்துக்களைக் காண்பதில் மிகவும் ஊக்கமும் ஆர்வமும் கொண்டிருந்தார்கள்.

ஏனெனில் இயற்கைப் பொருளைக் காண்பதுவே அவைகளைச் சிருஷடித்த கடவுளைக்காண்பதற்கு ஒப்பாகும் என்றெண்ணி அவ்வாறே நடந்து வந்தார்கள். பாசி முதல் பெரிய விருக்ஷம் வரையிலுள்ள எல்லாதாவரப்பொருள்களையும் மிகவும் கருத்துடன் ஊன்றி ஆராய்ந்து பார்த்து வந்தார்கள். தாவர பூகோள சாஸ்திரத்தை முதன் முதலில் எழுதிய சமர்த்தர் ஸுஸ்ருதர் தான். அந்த நூலில் ஒவவொரு தாவரப் பொருள் எவ்விடத்தில் அகப்படும் என்ற விஷயங்கள் விபரமாகக் கூறியிருக்கின்றார்.

ஸுஸ்ருதர் மூலிகைகளையும் செடி கொடிகளையும் பின் வரும் விதம் பிரித்திருக்கின்றார்.

1. வேர்கள்.
2. வேரின் பட்டைகள்.
3. பெரிய மரங்களின்பட்டைகள்.
4. ஒருவிதமான வாஸனையுள்ள விருக்ஷங்கள்.
5; இலைகள்.
6. புஷ்பங்கள்.
7. பழங்கள்.
8. விதைகள்.
6. காரமுள்ள தாவர பொருள்
10. பால்தரும் மரங்கள்.
11. பிசின் தரும் மரங்கள்.

மேற்கூறப்பட்ட பாகுபாடுகள் எல்லாம் கல்பஸ்தானம் என்னும் கிரந்தத்தில் விரிவாகக் காணலாம் ஸுருதரின் தாவா சாஸ்திரம் கிரேக்கர்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தது என்பது சில பழய பிரதிகளிலிருந்தும் காணக்கிடைக்கின்றது. நமது சாஸ்திரங்களைப் படித்து ஞானம் பெற்றே தேர்ச்சியடைந்தார்கள். நிபுணர்களும் மேதாவிகளுமாகி விட்டனர்.

" மருந்தின் சரித்திரம்" என்ற நூலில் டாக்டர் வைஸ் என்னும் வைத்திய சிகாமணி ' ஹிந்துக்கள் முதன் முதலில் மருந்துகளைக் கண்டுபிடித்து கிரந்தங்கள் வெளியிட்டிருப்பதற்காக நாம் பெரிதும் கடமைபட்டிருக்கின்றோம்" என்றும் கூறியிருக்கின்றார். ஐரோப்பாவின் மருந்தின் தகப்பனார் என்ற பிரக்கியாதியான பெயர் பெற்ற ஹிப்போகிராடீஸ் என்பவர் ஹிந்து சாஸ்திரத்தைத்தான் முதலில் பயின்றவர்.

இருபத்திரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் மீது படை எடுத்து வந்த மஹா அலெக்ஜாந்தரது பாறையில் ஹிந்து வைத்திய சிகாமணிகளை வைத்திருந்தார். கிரேக்கவைத்தியர்கள் சிகிச்சை செய்யத்தவறினால் இந்து வைத்திய சிகாமணிகள் சிகிச்சை செய்து வந்தார்கள். கிரேக்க வைத்திய சிகாமணிகள் பாம்புகடிக்குத் தகுந்த மருந்து கொடுக்கத் தெரியாதவர்களென்றும், ஹிந்து வைத்திய சிகாமணிகள் அந்தத் துற்பாக்கியம் பெற்றவர்களையும் சிகிச்சை செய்ய வல்லமை பெற்றவர்கள் என்று ஏரியன் குறிப்பிட்டிருக்கிறார். பதினொன்றும் நூற்றாண்டுகட்கு முன்னர் கலீபாஹரௌன் அல்சஸ்சிட் என்பவர் நமது ஆஸ்தான வைத்தியர்களாக முன், காசேல் என்னும் இரண்டு இந்திய வைத்திய சிகாமணிகளை ஆதரித்து வந்ததாக அராபிய தேசத்து சரித்திரப் பிரதிகளில் காணப்படுகின்றது. ஆயுர்வேதத்தின் பழைமையும், அதனது வெற்றியும், பயனும் எத்தன்மை என்பது இவைகளால் தெற்றென விளங்குகின்றதல்லவா ? ஆயுர்வேத சாஸ்திரம் ஒருவனது ஆயுளை விருத்திசெய்து பலத்தைக்கொடுப்பதில் இணையற்றது ஈடும் எடுப்பும் இல்லாதது. அஃதொன்றே ஆயுராரோக்கியத்தை அளிக்கவல்லது. பிற மதத்தினர்களாலும், பிற தேயத்தவர்களாலும் கையாண்டு வந்ததே அதனது உயர்வுக்குப் போதுமான தன்று. அதன் சட்ட திட்டங்கள் மிகவும் கண்டிப்பானவை. அவைகளைச் சரிவரக் கையாண்டு வந்தால் உண்மையிலேயே வியாதிகளினின்றும் பிணிகளினின்றும் அவஸ்தைகளினின்றும் மனிதவர்க்

கத்தவரைக் காப்பாற்றலாம். பிணிவாயினின்றும் வாஸ்தவத்தில் தப்ப வைக்கலாம். ஆயுர்வேத சாஸ்திரத்தைக் கண்டுபிடித்த மேதாவிகள், விற்பன்னர்கள் அனைவரும் தற்கால நாகரிகத்தையும் புதிய புதிய உண்மைகள் கண்டு பிடிப்பதையும் முன்னமேயே தெரிந்து வெளியிட்டுமிருக்கின்றார்கள். இது சமயம் புதிதாக வெளியிடப்படும் விஷயங்கள் யாவும் அந்த சாஸ்திரத்தில் அப்பொழுதே கண்டு பிடிக்கப்பபட்டு இடம்பெற்றிருக்கின்றன. மேனாடுகள் முழுவதையும் ஒரு புரட்டு புரட்டி அவஸ்தைக்குள்ளாக்கி பல்லுயிரைக்கவர்ந்த 'கிருமி' தொத்துவியாதி நம்மவர்கட்குத் தெரியாததல்ல. ருத்ரம் என்றவேதத்தில் நமது ஆன்றோர், 'ஆகாயத்தின் கண் எத்தனையோ கோடிக் கணக்கான விஷக்கிருமிகள் சஞ்சரிக்கின்றன, அவைகளினின்றும் மனிதன் தன்னைக்காத்துக்கொள்வானாக' என்று கூறிய ஒருவாக்கியம் இருக்கின்றது. இக்கூற்றினால் தற்காலம் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் விஷயம்மேனாட்டினர் ஒன்றும்அறியாதஅறிவிலிகளாகஇருக்கின்றகாலத்திலேயே ஹிந்துக்கள் அறிவுச்சுடர் பொருந்தி யிருந்தார்கள் என்பதை அங்கைநெல்லியென விளக்கும். தொத்து வியாதிகளை பரவ வொட்டாமல் தடுக்கும் வழிகளும் முறைகளும் மேனாட்டினர் கொஞ்சகாலத்திற்குமுன்புதான் சிரமப்பட்டு கண்டுபிடித்திருக்கின்றனர். அபமுறைகளும வழிகளும் ஹிந்துக்களுக்குப் பல்லாயிர வருடங்களுக்கு முன்னமேர தெரிந்த உண்மை. பண்டைகாலத்தில் ரணவைத்திய சிகிச்சை வெகு தீவிரமாகவும் நல்ல பலன்களைக் கொடுக்கக்கூடிய விதமாகவும் நடை பெற்று வந்தது. வெகு சாமர்த்தியமாய் நோயாளியின் நோயறிந்து இன்சொல்லால் உபசரிதது ரணசிகிச்சை செய்து வந்திருக்கின்றார்கள். குடல், அடி வயறு முதலிய நுட்பமான பாகங்களையும் வெகு ஆச்சரிய கரமாகவும் அபாயமின்றியும் அறுத்து சிகிச்சை செய்திருக்கின்றனர். நமது முன்னோர்கள் வெகு சாதாரண முறைகளையே கைக்கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அடி வயற்றில் ஒரு குறித்த இடத்தைத் திறக்க வேண்டி யிருந்தபோது ஒரு சிவப்பு எறும்பை எடுத்து கடிக்கவைத்து அதனது உடம்பை மட்டும் கிள்ளி எறிந்து விடுவார்கள். அதனது தலைமட்டும் கடித்த விடத்தையே கவ்விக்கொண்டிருக்கும். இது போன்ற பல நுட்பமான ரணவைத்திய சிகிச்சைகள் எண்ணிறந்தன சாமார்த்தியத்துடன் நடந்திருக்கின்றன. ஐரோப்பிய வைத்திய நிபுணர்கள் இந்து ரணவைத்தியசிகிச்சையிலிருந்தேதான் கற்றுக்கொண்டார்கள் என்றுகூறினும் பொருந்தும் என்று பிரபொஸர் முஜம்தார் வெளியிட்டிருக்கிறார்.

நமது முன்னோர்கள் வெளியிட்ட ஆயுர் வேதம் மிகப்பழமை யானது, மிகவும் பயன் தரவல்லது என்று சென்ற காலத்தின் சிறப் பைக் குறித்துப் பெருமைப்படுகிறீ மார்தட்டிச் சொல்லிக் காலம் போக்குவது வீண். மேனாட்டு வைத்திய முறைகளைவிட ஆயுர்வேத முறைகள் சிறந்தவையா? என்ற கேள்வியை ஒவ்வொருவரும் கேட் டுக்கொள்ளவேண்டும். ஒரு வியாதிக்குப் பல சிகிச்சா முறைகள் இருப்பது ஒரு பெருங்குறை என்கிறார்கள். ஒரு மருந்து பல வியாதி களைக் கண்டிக்கும். ஆனால் அதை உபயோகிக்கும் அனுபானங்கள் ஒவ்வொரு வியாதிக்கு வித்தியாசப்படும். இந்த அனுபான ரீதிகளை அறியாது போவது யார் மீது குற்றம்? சாஸ்திரத்தின் மீதா அல்லது அதைத் தெரியாத வைத்தியர்களின் மீதா அக்குற்றம் சேரும்? மேனாட்டு வைத்திய முறைகளைக் கொஞ்சங்கூட கையாளமாட்டார் கள் வைதீகவைத்திய சிகாமணிகள். எனிமா. (Enema) ஸெதாஸ் கோப், தெர்மாமீடர் என்ற ஆயுதங்கள் எப்படி இருக்கும் என்பதை அறியவேமாட்டார்கள், வடிகட்டுவதற்கும், மருந்துகளைப் பொடியாக் குவதற்கும் ஆயுதங்களைத் தேடமாட்டார்கள்.

குருட்டுத்தனமாசப் பெரியோர்கள் ஏற்படுத்தி வைத்தவைக ளையே மட்டும் கையாண்டு வருவதை விட்டுவிடவேண்டும். கால தேசவர்த்தமானத்தையொட்டி மேனாட்டு வைத்திய சாஸ்திரத்திலி ருந்து கொள்ளவேண்டிய முறைகளைக் கொண்டு, ஆயுர்வேத முறையில் தள்ளவேண்டியதைத் தள்ளி உபயோகப் படுத்தி வர வேண்டும். கொஞ்ச காலமாக ரணவைத்திய சிகிச்சை முறையில் புதுபுது முறை கள் மேனாட்டிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. அவை களையும் நாம் தழுவி பயன்படுத்திவர வேண்டும். ஆயுர்வேத கலாசா லைகள் இன்னும் நாளுக்கு நாள் அவைகளின் எண்ணிக்கை விருத்தி யாகி வரவேண்டும். புதிய புதிய முறைகளையும் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். நோயாளிகளின் நோயின் தன்மை யறியாது வெகு அலக்ஷியமாய் வைத்தியஞ்செய்து சொஸ்தப் படுத்துவதற்குப் பதிலாக உயிரைவிடச் செய்துவரும் கொடிய மேனாட்டு வைத்திய முறைகளைக்கொள்ளும் வைத்தியர்களின் எண்ணிக்கை குறையவேண் டும். அவர்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக புது புது வித விதமான வியாதிகளும் உண்டாகின்றன. ஆயுர்வேத மருந்துகளை ஏராளமாக சாஸ்திர முறைப்படி தயார் செய்து பிரஜைகளுக்கு உதவிவர வைத்திய ரத்னம் டி. கோபாலா சார்லு போன்ற விற்பன்னர் கள் பலர் தோன்ற வேண்டும்.

நமது ஆயுர்வேத வைத்ய முறைகள் மிகவும் பழைமையானவை. அவைகள் நமக்குப் பல விதங்களில் பயன்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தேசாபிமானியின் கடமை என்னவெனில் அது தோன்றிய தேயத்தில் அது இறந்து ஒழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே. ஆயுர்வேதத்தை ஆதரித்து விருத்திக்குக் கொண்டு வர வேண்டியது ஒவ்வொரு இந்தியரின் கடமை.

புராதன இந்தியாவில் இரண வைத்தியம்.

தன்வந்தரி என்பவர் தேவர்களுக்கு வைத்தியம் செய்து வந்த கீர்த்திபெற்ற வைத்திய சிகாமணி. தேவலோகத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அடிக்கடி யுத்தம் நிகழ்ந்து வந்த காலங்களில் காயமடைந்த அமரர்களுக்கு ரணசிகிச்சை செய்து வந்தவர். அவ்வைத்திய நிபுணர் தமது சீடர்கள் தம்மைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த காலத்தில் ‘ அருமைச்சீடர்களே ! உங்களுக்கு எந்த விஷயத்தைக்குறித்துப் போதித்தால் உங்களுக்குப் பெரிதும் பயன் படும் என்று கேட்டார். அப்போது அம்மாணவர்கள் எல்லோரும் ஒரு மனதாக ‘ குருநாதா ! தாங்கள் எங்களுக்கு எல்லா விஷயத்தையும் ஒன்றையும் விடாமல் போதிக்க வேண்டும். நீங்கள் அவைகளைப் போதிப்பதற்கு அடிப்படையாக ‘ இரணவைத்தியம்’ என்பதை முதலில் தயவு செய்து கற்பிக்கவேண்டும் என்று வேண்டினார்கள். அவர் அவர்கள் வேண்டியவாறே அந்த அருமையான விஷயத்தை மனதிற் பதியும்படி நன்றாகப் போதித்தார் தன்வந்தரி என்ற பெயர் காரணப் பெயராகும் “ தனு ” என்ற பதத்திற்கு “ சல்ய சாஸ்திரம்” எனப் பொருள் ‘ அந்த்ரி’ என்னும் பதற்திற்கு ‘உள் நுழைதல்’ என்றருத்தம். ஆகவே தன்வந்தரி என்பதற்கு ‘சல்லிய சாஸ்திரத்தை முழுதும் கற்றுணர்ந்தவர்’ என்று பொருள்.

டாக்டர் அய்ன்ஸிலி என்னும் வைத்திய நிபுணர் பின்வருமாறு தற்காலத்திய ஆயுர்வேத நிலைமையைக் குறித்துக் கூறுகின்றார்:— ‘ புராதன ஹிந்துக்கள் இரணவைத்தியத்தில் மிகுந்த சாமர்த்தியமும், தேர்ச்சியும் பெற்றிருந்தபோதிலும் தற்காலம் ஆயுர் வேதத்தைக் கவனிப்பார் இல்லாதபோதிலும், அந்த சாஸ்திரத்தில் இரணவைத்தியத்தைக் குறித்த பல விதிகளும், சிகிச்சா முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன. ஆயுர்வேதத்தின் முதல் இரண்டு உட்பிரிவுகளாக

சல்யமும், சாலக்கியமும் இருக்கின்றன. அப்பிரிவுகள் முழுவதும் இரணவைத்தியத்தைக் குறித்தே கூறுகின்றன. அதைப்பற்றிய யுக்தி முறைகளும், விதிகளும் அருமையான சிகிச்சைகளும் விபரமாகக் கூறப்பட்டுள்ளன. அந்தப்பாகத்திற்கு சூத்திரஸ்தானம் என்ற அருமையான பெயர் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சூத்திர ஸ்தானத்தில் பொதுவாக மருந்தைப்பற்றி ஒரு விஷயமும் கூறப்படாமல் இரண்டு சிகிச்சையைப்பற்றியே கூறப்பட்டிருக்கின்றன. இரணவைத்தியத்திற்குச் சிறந்த முறைகள் அக்காலத்தில்அனுபவத்திலிருந்தவை எட்டு என்பதாகத் தெரியவருகின்றது. சேதனு அறுப்பது, லேகனு; வரிகள் இழுக்கப்படுவது; வியாதனு, துவாரம் செய்யப்படுவது; இயேஷியம் உள் நுழையச் செய்வது; அஹார்யா, உள்ளிருந்து கனபதார்த்தத்தை வெளிப்படுத்தல்: விச்ரவன, திரவபதார்த்தத்தை வெளிப்படுத்துவது; சேவனு, தையல் போடுவது: பேசனு, பிளவு செய்து பிரித்தல்; ஆகிய இன்னோரன்ன முறைகளைக் கையாண்டு வருவதற்கு ஏற்ற ஆயுதங்களும், கருவிகளும் எண்ணிறந்தவை. அவைகளுக்குப் பொதுவாக 'யந்திரங்கள்' என்றும் சஸ்திரங்கள் என்றும் பெயரிடப்பட்டுள்ளன. எந்தெந்த வேலைகளுக்கு அவைகள் பயன்படுகின்றனவோ அந்தந்த வேலைகளுக்குத் தகுந்தவாறு பெயரளிக்கப்பட்டிருக்கின்றன. [கொரடாக்கள்] சந்தன சஸ் என்றும், சூசி [ஊசி] என்றும் [பல் ஆயுதங்கள] தந்த சங்கு என்றும் சரர பத்ர [அறங்கள்] அர்த்ததாரா [கத்தி] என்றும், பற்பலவிதமாக உத்பட்டா அல்லது பாக்பட்டாவின்படி 12 விதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் மிகவும் சர்வசாதாரணமாகவிருந்த நக்ரா என்ற நாசி சம்பந்தமான வியாதிகளைச் சிகிச்சை செய்வதற்குக்கூட பற்பல விதமான ஆயுதங்கள் வழங்கப்பட்டுவந்ததாகவும் தெரிய வருகின்றது. தற்காலத்தில் எந்தெந்த விதங்களில் இரணவைத்திய சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றனவோ அம்முறைகளெல்லாம் புராதன இந்தியாவில் சர்வசாதாரணமாகச் செய்யப்பட்டு வந்தன. இவ்விஷயம் சாரங்கதர சம்ஹிதைபோன்ற பல ஆயுர்வேத கிரந்தங்களைக் காணதெற்றென விளங்கும்.

ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் இரணவைத்திய சிகிச்சைக்காக 'அறுக்கும்முறை' (Operation) யை வைத்தியர்கள் கைக் கொள்வ

தில்லை. 'பூட்டுகள் பிசகிவிடுவது', 'எலும்பு' முறிந்துபோவது, இவ் விஷயங்களில் தேகத்தை அறுக்காமலேயே ஆச்சரியப்படத்தக்க விதமாக சிகிச்சைகள் தமிழர்களும், தெலுங்கர்களும் செய்து ஜயம் பெற்றிருக்கிறார்கள்? இருந்தும் வந்தார்கள். காயங்கட்டுகிற ஆற்று வரணியன் என்பதாக தமிழ் வைத்திய மரபினர் மேற்கூறிய முறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள். ரேணிகுண்டா மார்க்கத்தில் புத்தூருக்கு அருகில் ஓர் ஊரில் இன்றைக்குக்கூட ஒரு வைத்திய நிபுணர் இருக்கிறார். எலும்பு முதலியவைகள் பிசகிப்போயும் உடைந்துபோயும் ஆறுமாதங்களாகிய பின்னும் ஆச்சரியகரமாக அந்த எலும்பு ஒன்று கூடும்படியாகவும், அதன் நிலைக்கு வரும்படியாகவும் செய்து வருகின்றார் அவர் கையாளும் முறை அறுக்கும் முறையல்ல, பச்சையிலையினாலும், மூலிகையினாலும் அவர் ஜெயம் பெற்று வருகிறார் எனத்தெரிகின்றது.) புச்மான் என்னும் வைத்திய நிபுணர் பின் வரும் விதம் கூறுகின்றார்:—

" இரணவைத்திய சிகிச்சையில் இந்திய வைத்திய முறைகளும் மருந்து வகைகளும் அதிக குணந்தரத் தக்கவை. நற்பலனை வெகு எளிதில் தரக்கூடியனவாகவு மிருக்கின்றன. ஆயுர்வேத வைத்தியர்கள் அடிவயற்றில் துர்நீர் வெளிபடுத்த சிறு துவாரஞ்செய்வதிலும் மூத்திரப்பையினின்றும் சிறு கற்களை வெளிப்படுத்துவதிலும், இன்னும் பற்பல கஷ்டமானவைகளிலும் தகுந்த ஆயுதங்களைக் கொண்டு சாமர்த்தியமாகவும் ஆச்சரியகரமாகவும் சுகமாகவும் செய்திருக்கின்றார்கள்.

தற்கால மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தில் தேகதத்துவ சாஸ்திரத்தைப்பற்றிக் கூறும் அனடொமி என்பது மிக்க இன்றியமையாதது, பெரிதும் பயன் தரத்தக்கது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது என்பதாக டாக்டர் கே. எல். பிஷக்ரத்தினர் என்பர் அபிப்பிராயப்படுகின்றார். அவர் 'சுஸ்ருத சம்ஹிதை' என்னும் வைத்திய கிரந்தத்தை இங்கிலீஷில் மொழிபெயர்த்திருப்பதற்கு முன்னுரையாகப் பின் வரும் விஷயங்களை எழுதியிருக்கின்றார். தேகத்தின் உறுப்புக்களை ஆயுதங்களைக்கொண்டு ஒவ்வொன்றாக அறுப்பது சரியான முறையா அவ்விதஞ்செய்தால் ஒவ்வொரு வுறுப்பும் சரியாக அது அது இருக்கவேண்டிய அளவில் இருக்குமா என்பதாக ஒரு கேள்வி. சுஸ்ருதர் தமது சீடர்களுக்கு தேக உறுப்பு சாஸ்திரத்தை உதாரண

பூர்வமாக கற்றுக்கொடுப்பதற்காக அவர் கையாண்ட முறை மிகவும் சிறந்தது. அம்முறை சரித்திர காலத்திற்குமுன் அனேக வருஷங்களுக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அம்முறை பின்வருமாறு:—ஒரு பிணத்தை தர்ப்பைப் புல்லால் மூடி ஓர் அருவின் கரையில் ஜலத்தினருகே வைக்கவேண்டும். மூன்று நாளானபிறகு அதை ஜாக்கிரதையாக மேல் தோல்களை ஒவ்வொன்றாக எடுத்துவிடவேண்டும். அதன் பிறகு சதைகளை ஒரு பிரஷினால் மெதுவாகத்துடைத்து எடுக்கவேண்டும். இவ்விதம்செய்ய மெல்லியதும் சிறியதுமான ரத்தக்குழாய்கள் தோன்றும். நீரில் ஊறியிருந்தால் அக்குழாய்கள் எல்லாம் சற்று வீங்கிப் பெருத்திருப்பதால் காணவும், தொட்டுப்பார்க்கவும் எளிதில் தெரியும்.

சுஸ்ருத சம்ஹிதையில் உதாரண பூர்வமாக வித்தியார்த்திகளுக்கு தேக உறுப்புகளை போதிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட மிருகத்தின் பிணமோ அல்லது மனிதப்பிணமோ அங்கத்திலும் உறுப்பிலும் ஒன்றுகூட குறையாதிருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. மனிதப்பிணமாக இருந்தால் நூறு வருடமோ அல்லது நீண்ட காலம் வாழ்ந்ததாகவுமிருக்கக்கூடாது. அல்லது விஷம் முதலியவைகளை உட்கொண்டு இறந்ததாகவு மிருக்கக்கூடாது. நீண்ட காலம் வியாதியினால் அவதிப்பட்டு மரித்ததாயு மிருக்கக்கூடாது. முதன் முதலில் அந்தப்பிணம் ஒரு கூண்டில் வைக்கப்பட்டு நதியின் ஜலத்தில் ஊறவைக்கப்படவேண்டும். அந்தக்கூண்டை முஞ்ஜா புல்லினாலும், தர்ப்பைப்புல்லினாலும் மூடிவைக்கவேண்டும். ஏழுநாளான பிறகு அந்தத் தேகம் முழுவதும் நசித்துப்போய் விடும். அப்போது வித்தியார்த்தி நசித்துப்போன தோலையெல்லாம் சொரண்டி எடுத்துவிடவேண்டும் அப்படி சொரண்டி எடுப்பதற்குத் தகுந்த ஆயுதங்கள் புல்வேர்களினாலான ஒரு கட்டு, மயிர்கட்டு, தர்ப்பைப்புல், மூங்கைபத்தை முதலியவைகளே. இவைகள் எடுக்கப்பட்ட பின்பு வித்யார்த்தி உள்ளேயும் வெளியேயுமுள்ள உறுப்புகளைத்தெளிவாகக் காண முடியும்.

புராதன காலங்களில் என்னென்ன விதங்களாகப் பிராணிகளையும் சவங்களையும் பரீக்ஷித்து ஆராய்ச்சிகள் நடந்துவந்த போதிலும், பிற்காலங்களில் ஹிந்துக்களில் அவ்விதமான ஆராய்ச்சிகள் செய்யப்படுவதினின்றும் தடுக்கப்பட்டு விட்டன. தற்காலத்தில் பிராமண வழக்க

பழக்கத்தின்படியும், ஆசாரத்தின்படிக்கும் அவைகள் நிஷித்தம் என்று தள்ளப்பட்டுப் போய்விட்டன.

தஞ்சாவூரை அரசாண்டுவந்த கியாதிபெற்ற ஸரபோஜி மஹாராஜா தேகதத்துவ சாஸ்திர ஆராய்ச்சி செய்வதில் மிகவும் அக்கரையும் ஆர்வமும் கொண்டவர். அதனாலேயே அவருக்கு சாதாரணமாகவிருந்துவந்த செல்வாக்கும் பெருமையும் அதிகமாயிற்று. மனிததேக உறுப்புக்களின் தத்துவத்தை நன்றாக அறிவதற்கும், அவைகளை நேரில் கண்டு தன்மைகளை உணருவதற்கும் அவருக்கு அவா அதிகமாக இருந்தது. எனினும், ஹிந்து மதத்தில் அதிகப்பற்றுடையவர். தமது மதாசாரத்திற்கு நிஷித்தமானது என்று தள்ளப்பட்ட காரியத்தில் தான் நுழையவேண்டியிருப்பதைக்குறித்து அவ்வெண்ணத்தை யொழித்தார். அதன் பின்பும் அவருக்கு வேறு எவ்விதங்களினாலும் தமது அவாவைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று எண்ணினார். இங்கிலாந்திலிருந்து தந்தத்தினாலேயே செய்யப்பட்ட வொருமனித தேக உறுப்பு (எலும்பு மனித சிலை) ஒன்றை ஏராளமாகப் பொருள் செலவழித்து வரவழைத்து அதன் மூலமாக ஆராய்ச்சி செய்து வந்தார். நான் இந்த எலும்பு மனித சிலையை தஞ்சாவூர் அரண்மனையில் கண்டேன், நான் அதைக் கவனமாகப் பரீக்ஷை செய்துபார்த்த போதும்கூட எனக்கு அது தந்தத்தினால் செய்யப்பட்டதென்பது எனக்கு விளங்கவில்லை. அவ்வளவு அதி ஆச்சரியமாகவும், சாமர்த்தியமாகவும் அது செய்யப்பட்டிருந்தது. என்று வித்தியார்தி கூறுகின்றார்.

இரணவைத்திய சிகிச்சையில் தேர்ச்சியும், பயிற்சியும் பெரிதும் பெறுவதற்கு தன்வந்தரி, சுஸ்ருதர் முதலிய வைத்திய சிரேஷ்டர்கள் தங்களுடைய வித்தியார்த்திகளைத் தமது ஆயுதங்களைச் சரிவர சாமர்த்தியத்துடன் உபயோகிக்கப் பழக்கி வந்தார்கள், தேகத்தில் நோயுற்ற அங்கங்கள்போன்ற இயற்கைப் பொருள்களையும் செயற்கைப்பொருள்களையும் கொண்டுவந்து ஆயுதப் பிரயோகங்கள் செய்து அப்பியாசப்படுத்தி வந்தார்கள். சுஸ்ருதசம்ஹிதையில் இரணவைத்திய சிகிச்சையில் அப்பியாசமே சிறந்ததென்றும் பிரசங்கங்களை கேட்டுவிட்டதனாலும் புத்தகங்களைப் படித்துவிட்டதனாலுமே இரணவைத்தியம் செய்துவிட முடியாது என்பதும் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

நோயுற்ற பாகங்களைச் சேதிப்பதிலும், மருந்துகள் போடுவதிலும் நன்றாக வைத்தியர்கள் பழக்கப்பட்டிருக்கவேண்டும். சில பழங்களைக் கொண்டுவந்து அதைக் குத்தவும், மூத்திரப்பையில் ஒரு சிறு துவாரம் செய்ய முதல்முதலில் தோற்பையில் நிறைய ஜலம் நிரப்பி அதன்வாயை இறுகக்கட்டி அதன்மேல் சிறுதுவாரம் செய்யக் கற்றுக் கொடுத்தல் முதலிய விஷயங்களை முதன் முதல் அவர்களே செய்து பார்த்து தேர்ச்சிபெற்ற பின்பே இரணவைத்திய சிகிச்சைகளை மனித தேகத்தில் செய்யலானார்கள். முற்காலத்தில் அனுபவமும், பழக்கமுமே வைத்தியர்களைச் சிறந்தவர்களாகச் செய்தன.

டாக்டர் கே. எல். பிருஷ்ரத்னர் என்பவர் சுஸ்ருத சம்ஹிதை முதல் புத்தக முகவுரையில் கூறியுள்ள சிலவற்றின் சாராம்சம் கீழ்க்குறிக்கப்பட்டிருக்கின்றது:—

நோயாளிக்கு இரணவைத்திய சிகிச்சைக்காக 'ஆப்ரேஷன்' செய்துகொள்வதற்கு முன்பு சொல்ப ஆகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அடிவயிறு, வாய் முதலிய இடங்களில் 'ஆப்ரேஷன் செய்யப்பட வேண்டுமானால் உபவாசம் போட்டுவைக்கப்படவேண்டும். சுஸ்ருதர் நோயாளியின் படுக்கையறை அடிக்கடி, வெள்ளைகடுகு, சாம்பிராணி, முதலியவைகளின் புகையால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் செய்து வந்தால் நோய்களை உண்டாகிய கிருமி மற்றவர்களைத் தொத்தாமல் ஒழிந்து விடும். இக்காலத்தில் தான் மேனாட்டாரால் கண்டு பிடிக்கப்பட்ட 'கிருமி' என்னும் விஷயம் அக்காலத்திலேயே—அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே—நம்மவர்களுக்குத் தெரிந்திருந்த சாதாரண விஷயம்.

புராதன காலத்திலிருந்த ஆயுர்வேத வைத்தியர்கள் பற்பல விதமான சஞ்சீவி மூலிகைகளைத் தெரிந்து அவைகளின் குண குணங்களை நன்றாக அறிந்திருந்தபடியினால் எத்தகைய இரணத்தையும், சேதிக்காமல் (ஆப்ரேஷன் செய்யாமலேயே) குணப்படுத்தி யிருக்கின்றார்கள். "ரணவைத்தியம் என்பது கசாப்புத்தொழில், வைத்திய சிகிச்சையல்லவென்று தந்திரம் கூறுகின்றது. எந்த சமயத்தில் இரணவைத்தியம் செய்யக் கத்தி எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால், இரணம்கொண்ட இடம் பொருந்துங்கொள்ளும் சக்தியை இழந்திருக்கும்போது தான் அம்முறையைக் கையாளவேண்டும்." சுஸ்ருதர் பிரபஞ்சத்தின் கண்ணுள்ள வைத்திய சிரேஷ்டர்கள் ஒருவரும் கண்டுபிடியாத இரண

வைத்திய முறைகளை முதன்முதலில் கண்டுபிடித்திருக்கின்றார். (சுஸ்ருதரின் சுத்திரஸ்தானம் அத்தியாயம் XVI) கண்ணில் பூ விழுவதை எடுப்பதில் முதன்முதலில் தேர்ச்சிபெற்றவர் சுஸ்ருதரே. புராதன கிரேக்கர்களுக்கும், எகிப்த் தேசத்தவர்களுக்கும்கூட அவ்விஷயம் தெரியாது.

போஜப் பிரபந்தம் என்னும் நூலில் போஜராஜனது சரித்திரமும் அவர்காலத்து சம்பவங்களும் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த நூலை எழுதியவர் பண்டித வல்லாலர். அதில் போஜராஜன் ஒரு காலத்தில் மண்டையில் பொறுக்கமுடியாத நோயினால் அவஸ்தைப்பட்டான். அக்காலத்திலிருந்த பிரபலமான வைத்தியர்களைக்கொண்டு பலவித மாகச் சிகிச்சைகள் செய்து பார்த்தான். எல்லாம் வீணாயிற்று. ராஜனது தேகஸ்திதி நாளுக்குநாள் பலவீனப்பட்டு வந்தது. எல்லாருக்கும் பிழைப்பது சந்தேகம் என்று தோன்றிவிட்டது. தாரா நகரத்திற்குத் திடீரென்று இரண்டு சகோதர வைத்திய நிபுணர்கள் தற்செயலாய் வந்தார்கள். அவர்களை உடனே அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். அந்த வைத்திய சிகாமணிகள் நோயாளியைப்பரிசீலனை செய்து பார்த்து அவசியமாக ஆப்ரேஷன் செய்துதான் ஆகவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டார்கள். உடனே அவர்கள் சம்மோஹினி என்ற மருந்தை நோயாளிக்குக் கொடுத்தார்கள். அந்த சம்மோஹினியின் குணம் என்னவென்றால் நோயாளியைப் பிரக்ஞையற்று பிணம்போல் இருக்கச் செய்யும். அப்படி நோயாளி இருக்கும்போது மண்டையோட்டை பெயர்த்தெடுத்து நோயுண்டாக்கிய இடத்தை சட்டென்று பார்த்து அறிந்து நொந்தபாகத்தை எடுத்து வெளியிலெறிந்துவிட்டு வெகு வேகமாக மண்டையோட்டை மூடி தைத்துவிட்டார்கள். அவ்விடம் காயமடைந்திருப்பதற்கு ரணமாற்றும் தைலத்தைத் தடவிவிட்டார்கள். அதன்பிறகு பிரக்ஞை மீண்டும் வருவதற்கு மற்றொரு சஞ்சீவினி மருந்தை உள்ளுக்குக் கொடுத்தார்கள். அதன்பின்பு நோயாளி மெதுவாக ஸ்மரணை பெற்று கண்விழிக்கலானான். காந்தால் தாகூர் சாஹிப் அவர்கள் எழுதிய ஆரியன் மெடிகல் சயன்ஸ் என்ற புத்தகத்தில் மேற்கூறிய சம்பவம் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அடிவயற்றில் பெரிய இரணவைத்திய சிகிச்சை பலசெய்யப்பட்டுமிருக்கின்றன. இப்படிப் பலவிதமாக இந்தியர்கள் பூர்வகாலத்திலேயே இரணவைத்தியத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்களென்றால் அவர்களின் வெற்றிக்கும் பிரதாபத்திற்கும் எல்லையேது? மேனாட்டு வைத்தியர்கள் தாங்கள்தான் இரணவைத்திய சிகிச்சையில் முன்வந்திருப்பா

தாகச் சொல்லிக்கொள்வது எவ்வளவு அறியாமையாகும் என்பதை நாம் எழுதவேண்டாம். தற்காலம்குளோரபே ரம் உபயோகிப்பது பூர்வகாலத்தில் தெரியாமலில்லை. சம்மோஹினி என்பது தற்காலத்திய குளோரோபாமை ஒக்கும். ஆனால்சஞ்சீவினி என்னும் திவ்விய ஔஷதத்திற்கு இணையாக ஒரு மருந்தை இன்னும் மேனாட்டு வைத்திய நிபுணர்கள் கண்டு பிடிக்கப் போகின்றார்கள். இதனால் புராதன இந்தியாவில் வைத்திய சிகிச்சை எவ்வளவு சிறப்பாகவும், வெற்றியுடனும், சாமர்த்தியமாகவும் நடந்து வந்ததென்பது உள்ளங்கை நெல்லிக்கனி என தெட்டென விளங்குகின்றதல்லவா?

ஓவியமும், இராஜா ரவிவர்மவும்

இராஜா ரவிவர்மாவின் கைத்திறத்தினால் தீட்டப்பட்ட ஓவியங்கள் என்றென்றும் உலகில் கொண்டாடப்படுவதற்கு ஏதேனும் தடையுண்டோ? அவரது ஓவியங்களெல்லாம் ஒருவித உண்மை உணர்ச்சியும், தெய்வீகத் தன்மையும், அழகின் மேன்மையும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பதே யாவரும் அவைகளை வியந்துரைக்கவும், மதிக்கவும் போதுமான காரணங்களாம். பூக்களினின்றும் தேனைப் பருகும் தேனீக்கள் அத்தீந் தேனைக்குடிக்கும் முன்னர் ரீங்காரம் செய்தும், பருகும்போது சத்தஞ் செய்யாது மெதுவாக அனுபவிப்பதைப் போல, இந்தியர்கள் இராஜா ரவிவர்மாவின் சித்திரத்தைக் காணும் போது விரிந்தகையுடன் அதை நல்வரவுடன் ஏற்று கண்ணுக்கு நல் விருந்தளிக்கின்றனர், அத்தகைய உலகம்போற்றும் ஓவிய சிகாமணியின் இனிய சரித்திரத்தை ஈண்டு விவரிப்போம்.

திருவாங்கூர் அரச பரம்பரையில் கி. பி. 1848 ஆம் ஆண்டில் இராஜா ரவிவர்மா ஜனனமானார். அவருக்கு இருபதாம் ஆண்டு நிறைகின்ற வரையில் சித்திரக் கலையின் ஞானம் சிறிதும் ஏற்படவில்லை. ஆனால் அக்காலத்திற்குப் பின்னர் சித்திர ஞானப் பயிற்சியினால் இந்தியாவிலும், மற்றும் உலகத்தில் எங்கும் அவரது பெயர் பரவிவிட்டது.

அவரது உள்ளத்தே பதிந்துகிடந்த சித்திர ஞான உணர்ச்சி, தியோடர் ஜான்ஸன் என்னும் ஓவியன் திருவாங்கூர் அரண்மனையில் சித்திரம் தீட்டும்போது அவர் பக்கத்தே அமர்ந்து ரவிவர்மா கவனித்து வரும்போது வெளித்தோன்ற ஆரம்பித்தது.

முதன் முதலில் அவர் சித்திரம் எழுதி வெளியிட்டது கி. பி. 1873-ம் வருடந்தான். அக்காலம் முதல் அவருக்கு வெற்றியும், நற்பெயரும், புகழ்மொழியும் தொடர்ந்துவரத் தலைப்பட்டன. இராமாயணம், மகா பாரதம் முதலியவைகளில் நிகழும் கதைகளைச் சித்திரத்தின் மூலமாகப் பதினன்கு படங்களில் வரைந்து பரோடா தேசத்து மன்னனுக்கு அளித்தார். அதன் பயனாக அவரது பெயரும், சித்திரத் திறமையும் வெகுதூரம் பரவிவிட்டது. அதன்பிறகு பம்பாயில் ஒரு அச்சியந்திரசாலை ஒன்றை ஸ்தாபித்து அச்சாலையில் தமது படங்களை அச்சிட்டு இந்தியாவில் மூலை முடுக்குகளிலும் கூட அவரது அழகிய படம் இருக்கச் செய்திருக்கின்றார்.

பரோடா தேசத்து பார்த்திபனது நேயத்தையும், மதிப்பையும் முதலில் பெற்றார். அதன்பிறகு ஒவ்வொரு இந்தியரது வீட்டிலும் தமது சித்திரப்படம் இருக்க மிகவும் குறைந்த விலையில் அச்சிட்டு உதவினார். அத்தகைய வள்ளலார் நீண்டகாலம் ஆரோக்கியத்துடனிருந்து விண்ணுலகெய்தினார். உயர்குடியில் க்ஷத்திரிய வமிசத்திற் பிறந்து, உயர் எண்ணத்துடனும், தெய்வபக்தியுடனும், மிகுந்த அழகுடனும் விளங்கும் பற்பல சித்திரங்களைத்தீட்டி அவைகளின் பயனாக இராஜ்யத்தை ஆளும் பாக்கியம் கிடைத்து அதன் மூலமாகப் பிரஜைகளுக்கு உண்டாக்கும் நன்மையை விட அதிகமான சாஸ்வதமாக என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய நன்மையைத் தம் சித்திரத்தினால் செய்துள்ளார்.

இந்தியாவின் சித்திர சாஸ்திரத்தின் ஞானத்தைக் கரை கண்டு உலகினர்குக் காட்டிய தூயர் இராஜா ரவிவர்மா. சித்திரத்தின் கண்ணைத்திறந்த கண்ணப்பர் அவரே யாவர். இந்தியாவில் சித்திரத்திற்குப் புது உயிர் அளித்த நவஜீவரும் அவரேயாவர். சித்திரங்களின் அழகையும், மேன்மையும் நாம் கண்டு களிக்கச் செய்த உத்தமர் அப்பெருந்தகையாளரேயாவார் என்பதில் ஒரு தடையுமுன்டோ.

அவரது ஓவியங்களில் நான்கு மாத்திரம் தெய்விகம் மிகுந்தவை. அப்படங்களைக் காணும் ஒவ்வொரு இந்தியனும் தெய்வ சன்னிதானத்தை யடைந்து, தரிசிப்பதைப் போல் உணரும் வண்ணம் தீட்டப்பட்டிருக்கின்றன. அதனால் தெய்வ சான்னித்யத்தை மிகவும் சமீபத்திலிருக்கும் படியும் செய்திருக்கின்றார். நீலமேக சியாமளனை ஸ்ரீமகாவிஷ்ணு தனது இருபக்கங்களிடம் பூதேவி ஸ்ரீதேவி இவ்விருவர்களைக்

கட்டிக் கொண்டும், காலிகளினிடையில் பச்சைப் பாம்பை சுருட்டிக் கொண்டிருக்கும் கருடன் மீதமர்ந்து ஆகாயத்தில் செல்லும் மாதிரியாகத் தீட்டப்பட்டிருக்கும் படமும், மயில் மீதமர்ந்திருக்கும் ஆறு முகங்களுடைய சுப்பிரமணியருடைய படமும், விரிந்ததாமரை மலரில் விரித்த தேகத்தையுடைய ஸ்ரீ மகா லக்ஷ்மியின் திருவுருவப் படமும், வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு, கைதனில் வீணையும் புத்தகமும் படிகமாலையுங் கொண்டு, எதிரில் மயில் நின்றிருக்கத் தீட்டப்பட்ட படமும் இவைகள் எல்லாம் புராணங்களில் சொல்லப்பட்ட மூர்த்திகளின் உருவத்தை நம் கண்ணுக்குத் தோற்றும்படியும், நமது மனதை அத்தேவதைகளின் பக்கம் இரும்பை இழுக்கும் காந்தத்தை போல இழுத்து செல்கின்றன. ஒவ்வொரு படமும் வாயினால் சொல்லக்கூடிய நிலைமையிலில்லை. சொற்களினால் அவைகளைப் புகழவும் முடியா.

தொழிற் கல்வி—அதன் ஆவசியகம்

முன்னாளில் தொழிற் கல்வியிலும், சித்திரக் கல்வியிலும், சாஸ்திரக் கல்வியிலும், இந்தியா புகழ் பெற்றிருந்த தென்பதை எவரும் மறுக்கமாட்டார் என்பது வெள்ளிடை மலையே.

பதினைந்தாம் நூற்றாண்டில் விஜயநகர வேந்தர்கள் இராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்த காலத்தில் பிரஜைகள் எல்லோரும் தொழிற் கல்வியில் சிறந்து நல்ல ஞானம் பெற்றிருந்தார்கள். அதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. அது யாதெனில் அக்காலத்து அரசச் சிரேஷ்டர்கள் தொழிலின் சிறப்பை வியந்து தொழிலாளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்கள். தொழிலாளிகளின் க்ஷேமத்தைத் தங்களது க்ஷேமமாக எண்ணி அதன்படி அவ்வேந்தர்கள் நடந்து வந்தார்கள்.

*" விஜயநகரத்தின் பெருமைகளைக் கண்ணால் நேரிடக் காண வேண்டுமென்று விருப்பப் படுவோர்கள் சென்னை பொருட் காட்சிச் சாலை (Museum) க்குச் சென்று காணலாம். அங்கு விஜயநகரத்திலிருந்து இரண்டொரு கல்நிலைகள் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மேலிருக்கும் சிற்பவேலையை ஒரு வருஷ காலம் முழுமையும் பார்த்தாலும் நமது கண்ணின் ஆத்திரம் குறை

யாது; மனமும் சோர்வடையாது. ஒரு விரல் நீளத்தில் புருஷ உருவம் செதுக்கப்பட்டு அதற்குத் தக்கபடி கைகால் முதலிய உருப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரே நிலையில் இராமாயண கதையில் வருகிற சகல சங்கதிகளும் சித்திர ரூபமாய்ச் செதுக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆஹா; இம்மாதிரி சிற்ப வேலையை எப்படி முடித்தார்கள்? இவ்வேலையை முடிக்க எவ்வளவு நாட்கள் பிடித்திருக்கும்? யாரால் இச்சிற்ப வேலை செய்தவர்களுக்குக் கூலிகொடுத்து நிர்வாகஞ் செய்யப்பட்டது? என்ற பல யோசனைகள் ஒவ்வொருவருக்கும் சகஜமாகத் தோன்றலாம்.

இவ்வித யோசனைகள் ஓர் ஆங்கில சிற்ப சாஸ்திரியின் மனதிலுதித்தன. அவன் இச்சித்திர வேலைகள் கூலிக்குச் செய்யப்பட்டதல்லவென்றும், எந்த அரசன் காலத்திலோ அல்லது இராஜாக்களின் காலங்களிலோ தங்கள் திறமையை அந்நாட்டுச் சிற்பிகள் காட்டச் செய்த சிற்பவேலையாக யிருக்கவேண்டுமே யல்லாது கூலிக்குச் செய்தவையாகத் தோன்றவில்லை யென்றும் சொல்லியிருக்கின்றார் மேலும் தற்காலத்திய கூலி நிர்ணயத்தை வைத்துக் கணக்கிட்டு பார்ப்போமானால் ஒவ்வொரு கற்றூணுக்கும் அதன் மீது செதுக்கப்பட்டிருக்கும் சிற்பவேலைக்குச் சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும் என்றும் அவ்வாங்கில சிற்ப சாஸ்திரி அபிப்பிராயப் படுகின்றார். பாழாய்க்கிடக்கும் காலத்திலேயே அதன் அழகையும் வேலைப்பாட்டையும் புகழ்கின்ற நாம் அது செவ்வையாக விருந்த காலத்தில் எப்படிப் புகழ்வோம் என்பதை நாம் ஊகித்து அறிந்துக் கொள்ளவேண்டியது.

வேலூர்க் கோட்டையினுள்ளிருக்கும் கல்யாண மண்டபத்தில் நாட்டப்பட்டிருக்கும் கற்றூண்களிலுள்ள சித்திரங்கள் கண்கொண்டு பார்க்கக்கூடிய அவ்வளவு அழகும், வேலைப்பாடும் பொருந்தியிருக்கின்றன. இதைப்போல் மதுரையிலுள்ள திருமலைராய்சன் மஹால் என்பதும் இந்தியர்கள் தொன்று தொட்டே சிற்பசாஸ்திர ஞானத்தையும், தொழிற் கல்வியையும் பெற்றிருந்தார்கள் என்னும் விஷயத்தை மேன்மேல் ஆதாரங்களுடன் நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். மொகலாய அரசாங்கத்திலும் தொழிற்கல்வி ஞானம் இந்தியர்களுக்கு அதிகமாக இருந்தது என்பதற்கு ஆதாரங்களும் சாட்சியங்களும், கிடைக்கின்றன. உலகப்புகழும் 'தாஜ்மஹால்' ஒன்றே,

இந்தியர்கள் பெற்ற தொழிலின் வல்லமையையும், அக்காலத்தில் தொழிலாளிகளை எவ்விதம் அரசர்கள் பராமரித்து வந்தார்களென்பதையும், தொழிலாளிகளின் ஊக்கத்தையும் இன்றையவரையில் எடுத்துக் காட்டக்கூடிய நிலைமையிலிருக்கின்றது.

ஆபரணங்கள் செய்யும் தொழிலில், சிற்பத்தொழிலில் இந்தியர்கள் எவ்வளவு பிரக்கியாதி பெற்றிருந்தார்களோ அவ்வளவு கீர்த்தியை இன்றைக்கும் நாளைக்கும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்று திடமாகச் சொல்லாம். ஷாஜஹான் என்னும் மொகலாய சக்கரவர்த்தி அமர்ந்திருந்த மயிலாசலம் ஒன்றே இந்தியர்களின் திறமையைவெளிப்படுத்தப் போதுமான சாட்சியாகும்.

நெசவுத் தொழிலில் இன்றைச்கும்கூட இந்தியர்கள் பெயர் பெற்றிருக்கின்றார்கள். புராதன காலத்தில் மேனாட்டு மன்னர்கள் நம் நாட்டு பட்டுத்துணிகளையும், துப்பட்டாச்களையும் அதிக விலை கொடுத்து வாங்கியதே சாட்சி பாரும் 'கீழ்தேசத்துப்பட்டு,கீழ் தேசத்துமுத்து,என்ற இவ்வகையான பதப்பிரயோகங்கள் மேலேநாட்டு அந்தப்புரங்களில் தினமும் வழங்கி வந்தபடியினால் அவர்கள் அவைகள் மீது எத்துணை ஆர்வங்கொண்டிருக்கின்றார்கள் என்பது நன்கு விளங்கும்

அத்தகைய தொழிற் கல்வியின் ஞானம் இப்பொழுது எங்கு ஒளிந்துவிட்டது? அப்படி அது மறைந்து விட்டதற்குக் காரணம் உண்டா? என்ற இம்மாதிரியான கேள்விகள் மனத்திடை எழும். அக்கல்வியின் ஞானம் அறவே நம்மவரிடத்தில் மறைந்து விடவில்லை; ஜன்மாந்தர வாசனையினால் ஒவ்வொருவனிடத்தில் தானாக உண்டாகி இன்றைக்கும் நற்பெயரெய்தி வருகின்றது.

நமது இளவரசர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, தரிசனஞ் செய்த செங்கற்பட்டிலிருக்கும் ஓர் ஆபரணஞ்செய்யும் ஆச்சாரி ஒருவர் அவரது அழகிய உருவத்தைக் கண்ணால் கண்டு மனதில் பதியவைத்துக்கொண்டு, ஒரே ஒரு அரிசியில் இளவரசரின் உருவத்தைத்தீட்டி அவ்வரிசிச்சிலையை மாட்சிமை பொருந்திய சக்ரவர்த்திக்கு அனுப்பித் தம் கைத்திறமையையும், தொழிற் கல்வியின் ஞானத்தையும், தமது ராஜபக்தியையும் வெளியிட்டார். அந்த ஆச்சரிய உருவச்சிலையைக்கண்டு வியந்து இந்தியர்களின் ஆபூர்வ சக்தியையும், சித்திரத்தின் ஆற்றலையும் புகழ்ந்திருக்கின்றதாகப் பத்திரிகைகளின் மூலமாகத் தெரியவருகின்றது.

இவ்விஷயம் ஒன்றே இன்னும் நம்மவர்கள் தொழிற் கல்வியில் உலகத்தவர்களைக் காட்டிலும் விஞ்சியிருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தும்.

இக்காலம் வரையில் துரைத்தனத்தார்கள் நம் நாட்டில் கல்வி (சாஸ்திரம்) யை பிரபலபடுத்தி வந்தார்கள். ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் தொழிற் கல்வி என்னும் விஷயமாகச் சற்று கவனமெடுத்து அதற்காக வேண்டிய திரவியம் உதவி செய்து வருகின்றார்கள் அம்முயற்சி வீண்போகாது நிறைவேறும்படி எல்லாம் வல்ல ஈசன் அனுக்கிரகம் செய்வாராக.

ஒவ்வொரு சாமான்களுக்கும் இந்தியா அயல் தேயத்தவர்களை எதிர்பார்க்கவேண்டிய நிலைமையில் இருந்து வருகின்றது. சமீபத்தில் நடந்து முடிந்த யுத்தத்தின் பயனாக தொழிற்கல்வி ஞானம் இந்தியாவில் துரிதமாக உதயமாகி விட்டது என்று ஒருவாறு கூறலாம். யுத்தத்தின் காரணமாக சாமான்களின் போக்குவரவு தடைப்பட்டது. அதனால் பொருள்கள் அதிக விலைக்கு உயர்ந்துவிட்டன. நம் நாட்டுத் தலைவர்களும், முதலாளிகளும், தொழிலாளிகளும் கண் விழித்துக் கொண்டனர். தொழிற் கல்வியின் தாகம் அதிகரித்து விட்டது; எங்கும் கைத்தொழில் என்ற கூக்குரல் கேட்கத் தலைப்பட்டது. நாட்டினரின் குறையைத் தீர்ப்பதும், கஷ்டங்களை நிவர்த்தி செய்வதும் துரைத்தனத்தாரது கடமை என்பதை நன்குணர்ந்து கைத் தொழில் இலாக்காத்தலைவர் நம் மாகாணத்தில் பல கைத்தொழிற் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி. அவைகளின் செலவிற்காகப் பல்லாயிரம் ரூபாய் உதவிவருகின்றது மிகவும் சிலாகிக்கத் தக்கதேயாம்.

(*)

கோஹினூர் விலையில்லா வைரம்

ஒவ்வொரு வருஷம் டிசம்பர்மாதம் பனிரண்டாம்தேதி நமதுஐந்தாம் ஜார்ஜ் மகிபர்மகுடாபிஷேகஞ் செய்து கொண்ட நன்னாள் வரு நன்னாளில் "கோஹினூர்" என்ற விலையும் நிகரும் இல்லாத ஒப்பற்ற வைரமுடியை அணிந்து சிரியாசனத்தில் வீற்றிருப்பார். அவ்வைரம் கோஹினூர் எத்தேசத்தது, எவ்விதம் அரசுபெருமானிடம் வந்து சேர்ந்தது என்ற வரலாற்றையும் சரித்திரத்தையும் நமது நேயர்கள் அறியவேண்டி வெளியிடத் துணிந்தனம் அவை பின் வருமாறு:—

பெர்னண்டோ நூநிஸ் என்னும் யாத்திரிகன் தன் யாத்திரைப் புத்தகத்தில் அநேக வைரச்சுரங்கங்கள் விஜய நகரத்தில் இருந்ததாகக் குறித்திருக்கின்றான். அச்சுரங்கங்களில் ஒளி மிகுந்த வைரக்கற்கள் இருபத்தைந்து காரெட் எடையுள்ளவைகளாக விருந்தன வென்றும் அந்த யாத்திரிகன் கூறியிருக்கின்றான். அத்தகைய வைரக்கற்கள் குவியல் குவியலாக விஜய நகர சக்ரவர்த்திகளின் அரண்மனைகளில் இருந்தன.

விஜய நகர இராஜ்யம் பாழடைந்த பின்னும் கி. பி. 1614 ல் சந்திரகிரியில் அரசாண்டு வந்த அரசனிடம் பெரிய பெட்டிகள் நிறைய நவநிதிகளில் சிறந்த வைரக்கற்களிருந்தன வென்று பரடாஸ் என்னும் மற்றொரு யாத்திரிகன் குறிப்பிட்டிருக்கிறான். அக்காலத்தில் இந்தியாவில் யாத்திரை செய்த பிரயாணிகள் ஒவ்வொருவனும் விஜய நகரத்தின் வைரங்களைப் புகழாது சென்றதேயில்லை,

கிருஷ்ணாநதியின் வடகரையில் தான் பெரிய பெரிய வைரச் சுரங்கங்களிருந்தன. பொதுவாக கர்நூல், அனந்தபூர் ஜில்லாக்களிலும், விசேஷமாக வஜ்ரகரூரிலும் வைரக்கற்கள் அதிகமாகக் கிடைத்தன. அவ்விடங்களிலுள்ள சுரங்கங்களுக்கு பொதுப்பட 'கோலகொண்டா வைரச்சுரங்கம்' என்று பெயர், வழங்கி வந்தது. இச்சுரங்கங்களில் கிடைத்த ஒவ்வொரு வைரக்கல்லும் கோழி முட்டையினளவாக விருந்ததென்று பிறிதொருயாத்திரிகன் விவரத்திருக்கின்றான். அப்படிப்பட்ட கோழிமுட்டை வைரம் ஒன்று கி. பி. 1565ம் வருஷத்தில் விஜய நகரம் முகம்மதியர்களால் சூரையாடப்பட்டபோது எடுத்துச் செல்லப்பட்டு அதில் ஷாவிற்குப் பரிசாக அளிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

அவ்வொளி மிகுந்த கோழிமுட்டை வைரம் கிருஷ்ண தேவராயர் தம் பட்டக்குதிரையின் தலையில் ஆபரணத்தினடுவில் பதிப்பிக்கப்பட்டிருந்ததாகவும் உரைக்கப்படுகிறது.

., கி. பி. சே. அவர்கள் எழுதியிருக்கும் கிருஷ்ண தேவராயர் என்ற விஜயநகர சக்ரவர்த்தியின் சரித்திர புத்தகப் பிரதியினின்றும் எடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1534-ம் வருஷத்தில், அதாவது விஜய நகர சக்ரவர்த்தியாக விளங்கி யிருந்த கிஷ்ணதேவர் இறந்த நான்குவருஷங்கள் ஏழிந்த

பின்னர், இந்தியாவில் பிரயாணஞ் செய்த கார்ஸியாடா ஓர்டா என்னும் யாத்திரிகன், விஜய நகரத்தில் சிறு கோழி முட்டைகளின் அளவான மூன்று வைரக்கற்களைத்தான் நேரிற் கண்டதாகவும், அவைகள் முறையே 150, 175, 312, காரெட் எடையுள்ளதாகவு மிருந்தனவென்று தன் யாத்திரைப் புத்தகத்தில் குறிப் பிட்டிருக்கின்ருன். அவ்வைரங்கள் யாவும் பீஜப்பூர் சுல்தானை அதில்ஷாவினல் 1565-ம் வருஷத்தில் அபகரித்து பட்டுபோய்விட்டன.

விஜய நகரத்தின் சக்ரவர்த்திகளில் மிகப் பராக்கிரமும் செல்வமும், விஸ்தாரமான இராஜ்யமும், வித்தையும் பெற்று விளங்கியவர்களில் பேரும் புகழும் படைத்தவர்கிருஷ்ணதேவர்என்பது எப்படியோ அதுபோல அந்நகரத்தில் ஒளியும் நீரோட்டமும், கனமும் பெற்று விளங்கிய வைரங்களில், மதிப்பற்ற ஜோதி மிகுந்த கோஹினூர் என்னும் வைரம், அரச வைரமாக விளங்கியிருந்தது. அதன் சரித்திரத்தை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள அவாவுறுவர். ஆகவே அதன் வரலாற்றை விவரிப்பாம்.

கிருஷ்ண நதிக்கருகில் கொல்லூர் என்ற யிடத்தில் இவ்வரச வைரம் அகப்பட்டது. கி. பி. 1656.ம் வருஷத்தில் மீர் ஜம்லா என்னும் முகம்மதிய சுரங்க சொந்தக்காரன் இவ்வைரக்கல்லைக் கண்டெடுத்தான். அவ்விலையில்லா வைரத்தை அக்காலத்தில் டில்லியில் சக்ரவர்த்தியாய் விளங்கியிருந்த ஷாஜஹானுக்குப் பரிசாக அளித்தான். அப்பொழுது அவ்வைரம் மிகப் பெரிதாகவும், 756 காரெட் எடையுள்ளதாகவுமிருந்தது. மீர் ஜம்லா என்பவன் அவ்வைரத்தை ஒரு வெனிஸ் வர்த்தகன் மூலமாக டில்லிக்கு அனுப்பினன்., அவ்வர்த்தகன் வழியில் அவ்வைரத்தைக் கொஞ்சம் வெட்டித் தான் எடுத்துக் கொண்டான். டில்லியிலுள்ள பாதுஷாவினிடம் அது சேரும்போது அவ்வைரம் எடையில் குறைவுபட்டு $268\frac{1}{2}$ காரெட் இருந்தது. கி. பி. 1665-ம் வருஷத்தில் யாத்திரை செய்து வந்த டாவர்னீயர் என்னும் பிரயாணி டில்லியில் அவ்வைரத்தைக்கண்டு வியந்தான் என்றும் சொல்லப்படுகிறது.

சில வருஷங்கள் கழிந்த பின்னர் டில்லியில் மீது நாடர்ஷா படையெடுத்து அவ்விடத்திலிருந்த குடிகளைப் படு கொலை செய்து, ஊரைக் கொள்ளையிட்டுத் தீக்கிரையாக்கிச் சென்ருன்.

அவன் கொள்ளையிட்ட பொருள்களில் இவ்விலையற்ற வைரமும் சேர்ந்திருந்தது. அதைப் பெர்ஷியாவுக்கு எடுத்துச் சென்று ஜோதியின் மலை யென்று அதற்குப் பெயரிட்டான். அந்தக் கொடூரமான நாடர்ஷா கி. பி. 1747-ல் செய்யப்பட்ட பின் அவனது பேரன் ஷாருக் என்பவன் அவ்வைரத்தைப் பெற்றான். அவன் காபூல் காவலான ஆமத்ஷா துரணி என்பவனுக்கு அதையளித்தான். அந்த ஆமத்ஷா அக்கோஹினூரை தனது மகனான தைமூருக்குத் தந்தான். அவன் தனது வமிசத்தைச் சேர்ந்த ஷாஜாமன் என்பவன் கி. பி. 1793-ம் வருஷத்தில் அந்த ஜோதியின் மலையை அடைந்தான். அவனது தம்பி அவனைக் குருடாக்கி சிறையில் வைத்தான்.' அக்குருடன் தன் கண்ணிழந்த பிறகு அவ்வைரக்கல்லை எவருக்கும் கொடாமல் தன்னிடமே சிறையில் வைத்திருந்தான்.

அவனது சகோதரனான சுல்தான் ஷுஜா அந்த அரசவைரத்தை கி. பி. 1795-ம் வருஷத்தில் கைவசப்படுத்திக்கொண்டான். அவன் கி. பி. 1809-ம் வருஷத்தில் காபூலுக்குக் காவலனானபோது, எல்பின்ஸ்டன் என்னும் கவர்னர் அவன் தரித்திருக்கக் கண்டு வியந்தான். கி. பி. 1812-ம் வருஷத்தில் முகம்மது அவனைச் சிம்மாசனத்தினின்றும் தள்ளி விட்டுத்தான் அரசனானான். துரத்தப்பட்ட சுல்தான் ஷுஜா லாகூருக்கு ஓடி வந்தான் அந்த பிரதேசத்திற்கு அரசனான இரஞ்சிட்சிங் அவனைக் கைது செய்தான். கி. பி. 1813-ம் வருஷத்தில் இரஞ்சிட்சிங்கிற்கும், ஷுஜாவிற்கும் ஒரு சமாதானம் நிகழ்ந்தது ஷுஜா தன்னிடமுள்ள கோஹினூர் வைரத்தை இரஞ்சிட் சிங்கிற்குச் கொடுக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்பட்டது.

அவ்விலையுயர்ந்த வைரத்தைத் தான் அணிதிருந்தான். தன் உயிரைப் போல் அதைப் பாதுகாத்து வந்தரன். கி. பி. 1839-ம் வருஷத்தில் இரஞ்சிட் சிங் இறந்து போகும்போது சிறுவனாயிருந்த தன் மகன் துலிப்சிங் வயது வந்தபோது தரித்துக்கொள்ளும்படி அவனது ஆபரணப்பெட்டியில் கோஹினூரை வைத்து மரித்து விட்டனன். துலிப்சிங் தக்க வயதடைந்து பஞ்சாப்பிற்கு அரசனானான் கி. பி. 1843-ல் ஆண்டில் ஸர் ஜான் லாரென்ஸ் பஞ்சாபை இங்கிலீஷ் இராச்யத்துடன் சேர்த்துக்கொண்டபோது இவ்விலையில்லா வைரத்தையும் எடுத்துக்கொண்டான் அக்காலத்தில் இங்கிலாந்திற்கு இராணியாக விளங்கியிருந்தவரும், கி. பி. 1858-ம் வருஷத்தில் இந்தியாவிற்குச்

சக்ரவர்த்தியாக விளங்கி இருந்தவருமான மாட்சிமை பொருந்திய விக்டோரியா மகாராணியாருக்கு அளித்துவிட்டான்.

இயற்கையிலேயே நீரோட்டத்திற் சிறந்திருந்த அக்கோஹினூர் வைரத்தை, மணிகளைத்தீட்டி சாணம் பிடிப்பதில் பெயர்பெற்றிருந்த பெல்ஜியம் தேசத்திலுள்ள ஆம்ஸ்டர் டாம் பட்டணத்து வைரந் தீட்டுபவர்களால் கி. பி. 1852-ம் வருஷத்தில் பட்டை தீர்க்கப்பட்டது.

அப்படித் தீட்டும்போது விழுந்த சிறு வைரங்களையும் எடுத்து வைத்து ஒரு மகுடஞ் செய்யப்பட்டது அக்கோஹினூர் பட்டை தீர்க்கப்பட்ட பின் 106 காரெட் எடையுள்ளதாக விருந்தது.

அந்த ஜோதி மிகுந்த கோஹினூர் இன்றும் நாளைக்கும் நமது சக்ரவர்த்தியாம் மாட்சிமை பெற்ற ஐந்தாம் ஜியார்ஜ் மன்னரின் மகுடத்தில் சூரியப்பிரகாசம் போல் விளங்கி வருகின்றது. சுமார் மூன்னூறு வருடங்களுக்கு முன் விஜய நகரத்தில் ஒரு சிறு கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட உயர்ந்த மணி, சக்கரேசுவராயும், சூரியன் அஸ்த மிக்காத இராச்சிய விஸ்தீரண முடையவராயும், பல தேசப்பார்த்தீபர்கள் அடிபணிபவராயுமுள்ள நமது மன்னராம் மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் அவர்களின் சிரசில் அமர்ந்திருக்கும் பாக்கியம் பெற்றிருக்கின்றது பிறந்த விடத்தில் அக்கோஹினூர் அவ்வளவு சிறப்பைப் பெறுவிட்டாலும், அந்நிய நாட்டில் யாவரும் புகழும்படி சிறப்புற்று விளங்கி வருகின்றது.

அக்கோஹினூர் வைரமுடியை தரித்து நல்லரசாட்சி புரியும் வேந்தரான ஜியார்ஜ் மன்பர் நெடுநாள் வாழ்வாராக.

கைத்தொழில் செய் முறைகள்.

நமது முன்னோர்களின் கைத்தொழில் வணிகம் இவைகளின் ஏற்றத்தையும் சிறப்பையும் உலகோர் வியந்து புகழ்ந்ததையும் சாங்கோபாங்கமாக நமது அன்பர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்: இனி காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ற தினசரி வாழ்க்கைக்கு மிக்க இன்றியமையாத பண்டங்களை சொந்த உபயோகத்திற்கு வேண்டியவைகளை எல்லாம் தாமே தமது கிருகங்களிலேயே செய்து கொள்ளும் முறைகளை விவரமாக இனி வெளியிடுவோம். வேலையில்லாத் தொல்லை மிக வேகமாகப்பரவி வருகின்ற இக்காலத்தில் பற்பல இளைஞர்கள் படித்தவர்களும், படியாத பேர்களும் ஜீவன மார்க்கம் தெரியாமல் திண்டாடுபவர்களுக்கு இப்புத்தகம் பெரிதும் பயன்படும் என்று துணிவாகக்கூறுவோம். இப்புத்தகத்தில் காணப்படும் புதிய முறைகளால் சரக்குகளைத் தயார் செய்து விற்பனை செய்யின் தங்களுக்கும் தங்களை யண்டினவர்களுக்கும் என்றென்றும் தரித்திரம் தலைகாட்டா தொழியும்.

மேனாடுகளில் புதியமுறைகளில் தயார் செய்யப்பட்ட சரக்குகள் இவ்விடத்தில் செய்யப்படின் மிகுந்த குறைந்த விலையில் நமக்கு அடக்கமாகும். அவ்விதம் குறைந்த விலையில் தயாராவதைச் சொற்ப லாபத்திற்குப் பொது ஜனங்களுக்கு விற்று உதவி வருவோமானால் எத்துணையோ பேருதவியாகும் என்பதை ஒவ்வொருவரும் மனத்தில் கொள்ளவேண்டும். நம்மவர்களிடம் ஒரு பெரிய குறை வெகுநாளாக இருந்து வருகின்றது. அது யென்ன வெனில் சரக்குகளை வெளித் தோற்றத்தில் பகட்டுடனும் அழகுடனும் இருக்கத்தவறுவதேயாம் அவர்களுக்கு பூசனிக்காய் போவது தெரியாது கடுகு போவது தெரியும் என்ற பழமொழி மிகவும் பொருத்த மானது, பெட்டிகளினுள்ளேயோ அல்லது டப்பியினுள்ளேயோ அடக்கம் செய்யப்பட்டிருக்கும் மருந்து அல்லது பொருள் சஞ்சீவியாகவும் தேவாமிர்தமாகவுமிருந்தாலும் அதை எண்ணி வாங்குவோர்கள் மிகவும் சொற்பம். அந்த டப்பி, புட்டி, பெட்டி இவைகளின் மேல்பகட்டாயுள்ள சித்திரம் இவைகளைக்கண்டு நாம் பேரவா கொண்டு வாங்கி அனுபவிப்போர்கள் கோடிக்கணக்கான பேர்கள் இருக்கின்றார்கள். இந்த ராசியத்தை யுணர்ந்த நிபுண வியாபாரிகள் தங்களது வியாபாரத்தில் சீரும் செல்வாக்கும் அடைகின்றார்கள். இஃது ஓர் உண்மை. ஆகவே நம்மவர்

கள் எந்தச் சரக்கைத் தயார் செய்த போதிலும் அவைகளை நன்றாக அடக்கம் செய்து அழகான பெட்டிகளிலோ டப்பியிலோ போட்டு அவைகளின் மீது நல்லவர்ணங்களில் அச்சடித்து வெளியில் விற்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இவ்வண்ணம் செய்ய கொஞ்சம் பணச்செலவு அதிகமாகும் ஆனபோதிலும் பின்னால் இதைப்போன்ற நூறுமடங்கதிகமாகப்பணத்தைப் பெறலாம். இந்த ரகசியத்தைக் கைத்தொழிலாளிகளும் வணிகர்களும் முதன் முதலில் மனத்திற் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே ஏதேனும் ஒரு சரக்கைக்குறித்து நன்றாக மனதில் யோசித்துப் பின் செய்து வைக்க வேண்டும். தான் செய்யப்புகும் சரக்குக்கு வேண்டியவைகள் யாவும் எளிதில் கிடைக்கக்கூடுமா என்றும் எப்பொழுதும் தட்டாமல் கிடைக்குமா என்றும், அந்தச்சரக்கு வருஷ முழுதும் கிராக்கி ஏற்படுமோ என்றும் பல விஷயங்களைக்குறித்து தீவரமாக யோசனை செய்யவேண்டும். நாய் வாயை வைப்பதுபோல ஓர் சரக்கைத்தயார் செய்து லாபம்பெற்று வரும்போது திடீரென்று வேறொன்று செய்வதால் தன் முதல் சரக்கு விற்பனை குறைந்து வியாபாரம் கெட்டுப்போம். ஆகவே இவ்விஷயத்தில் சற்று கவனமாக இருக்கவேண்டும்.

கீழ் குறிக்கப்படும் முறைகளில் பெரும்பான்மை எம்மால்செய்து பார்த்து வெற்றி பெற்றவைகள்: ஆகவே சற்றும் மனத்தளர்ச்சி யில்லாமல் உடனே செய்து பார்த்து சரக்குகளை வெளிப்பரப்பி செல்ல விருத்தி யடையலாம். இதில் சற்றும் சந்தேகமில்லை, இந்தச் சரக்குகள் தேவையுள்ளவர்கள். எமக்கு எழுதிக்கேட்டுக்கொள்ளின் சரக்குகளாகத்தயார் செய்து மொத்தமாகக்கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்கின்றோம்.

பொட்டாஷ் உப்பு.

பொட்டாஷ் என்னும் உப்பானது இது வரைக்கும் ஜர்மனியிலிருந்து வந்து கொண்டிருந்தது. சமீபத்தில் நடந்த பெரிய யுத்தத்தின் காரணமாக இது வருவதில் குறைவுபட்டது; விலை அதிகரித்து விட்டது. ஆஸ்திரேலியாவில் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஒருவர் சப்பாத்திக் கள்ளியிலிருந்து இதை எடுக்கக்கூடுமென்றும், இந்த சப்பாத்திக் கள்ளியைக் கொளுத்திச் சாம்பலாக்கி அதைக்காய்ச்சினால் இந்த உப்பு கிடைக்கிறதென்றும் கூறுகிறார். முதன் முதலில் சப்பாத்திக்கள்ளியைக் கொளுத்துவதற்கு அதை அடுப்புக்கு விறகாக உப

யோகிக்கலாம் பிறகு அந்த சாம்பலைக்கரைத்து உப்பாக்கலாம்.5ஏக்கர் நிலத்தில் நிறைந்து படர்ந்துள்ள சப்பாத்திக் கள்ளியிலிருந்து சுமார் ஒரு டன் எடையுள்ள பொட்டாஷ் உப்பு எடுக்கலாம் என்று கூறுகின்றார். ஆஸ்திரேலியாவில் இந்த பொடாஷ் உப்பிலிருந்து ஒரு போதை வஸ்து எடுக்கிறார்கள். பிறகு மீதியைக்காகிதம் செல்வதில் பயன் படுத்தி வருகிறார்கள். சப்பாத்திக்கள்ளி தங்கம்போல் பிரயோஜனப் பட்டு வருவதை இனியேனும் கவனிக்க வேண்டும்.

சூரியகாந்தி பூவும் அதன் உபயோகமும்.

சூரியகாந்திப் பூவைப் பொதுவாய் நம்மவர்கள் அழகிற்காக வைத்து வருகிறார்கள். சூரியகாந்திப்பூவை நாம் அதிகமாய் வளர்த்து வந்தால் அதைக்கொண்டு பல புதிய தொழில்களை ஏற்படுத்துவது சகஜமாக முடியும், இப்புஷ்பத்தை ஏராளமாக ருஷியாவின் தென்பாகத்தில் பயிர் செய்து அதை விதையினின்றும் எண்ணெய் எடுகிறார்கள். இவ்வெண்ணெயை பாதாங்கொட்டை எண்ணெயுடனும் சாப்பாட்டிற்கு உபயோகப்படுத்தியே வருகிறார்கள். புஷ்பத்தின் இதழ்களினின்றும் ஒரு வகை சாயம் எடுப்பது சாத்தியமாகிறது. எண்ணெய் எடுத்த பிறகு இருக்கும் பிண்ணாக்கை எருவிடவும், ஆடுமாடுகளுக்கும் கோழி முதலியவற்றிற்கும் உணவாகப் பயன் படுத்தலாம். இச்செடியின் தழையை மாடுகளுக்கிடுவதுடன் நல்ல எருவாகவும் உபயோகப்படுகிறது. மேலும் செடியின் தண்டுகள் காய்ந்ததும் விறகாக உபயோகப்படுவதுடன் அதன் சாம்பலிலிருந்து பொடாஷ் என்னும் உப்பை அடையலாம். மேற்சொல்லிய விஷயங்களைக் கவனிக்குமிடத்து இச்செடியில் உபயோகமற்ற பாகம் ஒன்றுமில்லை. இத்தொழிலை நடத்துவது லாபகரமாக விருக்குமென்பதில் சந்தேகமில்லை. இவ்விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய கவர்ன்மெண்டார் ஒரு விவசாயப்பண்ணையை பெங்களூரில் 1873-ம் வருஷத்தில் ஸ்தாபனம் செய்தார்கள் 1877-ம் வருஷத்தில் அதனை எடுத்து விட்டார்கள். ஆகையால் இத்தொழில் இந்தியாவில் லாபகரமாயில்லை என்றுநினைத்ததாகத் தெரிய வருகிறது இவ்விதமாகச் சொல்லியதன் பேரில் கவர்ன்மெண்டார் இந்தத் தொழிலை நிறுத்திவிட்டது அவசரப்பட்டு செய்ததாகத் தோன்றுகிறது. இந்த எண்ணெயைச் சாப்பாட்டில் உபயோகிப்பதைப் பார்க்கிலும் சோப்பு மெழுகு வர்த்தி முதலியன செய்வதற்கு உபயோகப்படுவது சாத்தியமாகும். ஆகவே நமது நாட்டார்

களில் சிலராவது இவ்விஷயத்தைப்பற்றிக் கவனித்து ஆராய்வார்கள் என்று நம்புகின்றோம்.

கரப்பு பூச்சிகளைத் தொலைக்க.

கரப்பு பூச்சிகள் அதிகமாயுள்ள இடங்களில் ஒரு பாகம் வெண்காரத்தைப் பொடி செய்து அதோடு மூன்று பாகம் சாக்லேட் மிட்டாயைப் பொடி செய்து சேர்த்து தூவினால் கரப்புகளின் உபத்திரவம் நீங்கும் வெண்காரத்தைத் தனியாகவும் பொடிசெய்து தூவலாம் வெல்லத்தையாவது சர்க்கரையையாவது பாகு காய்ச்சி அதில் வெண்காரத்தைத் தூள் செய்து போட்டு கரப்பு பூச்சிகள் நடமாடும் இடத்தில் வைத்து வருவதாலும் கரப்பு பூச்சிகளின் உபத்திரவம் நீங்கும். தகரத்தால் மூன்று அங்குலம் உயரத்துக்கு மூடியில்லாத ஒரு பெட்டி செய்து அதன் உட்புறத்தில் நாற்றமெடுத்த வெண்ணெயையாவது, நெய்யையாவது தடவி கரப்புகள் உள்ள இடத்தில் இரவில் வைத்து விட்டால் அவைகள் வந்து விழும். பெட்டியின் உட்பாகங்களில் நெய் தடவியிருப்பதால் வழவழப்பாயிருக்கும், இதனால் கரப்புகள் வெளியே தப்பியோட முடியாது மறு நாள் காலையில் பெட்டியை எடுத்து சுடு தண்ணீருள்ள பாத்திரத்தில் உதறினால் கரப்புகள் வெந்நீரில் விழுந்து சாகும். மறுபடியும் அடுத்த ராத்திரி புதிதாக வெண்ணெய் அல்லது நெய் தடவாமலே பெட்டியை உபயோகப்படுத்தலாம்.

மூட்டு பூச்சிகளையும் பேன்களையும் போக்க வழி.

கந்தக சுரங்கங்களுக்கு அருகில் வேலை செய்யும் மனிதர்கள் விஷஜுரத்திற்கு ஆளாவதில்லையென்பதும் அவர்கள் பேன் மூட்டுப்பூச்சி முதலியவைகளால் எப்பொழுதும் பீடிக்கப்படுவதில்லை என்பதும் கவனிக்கக்கூடிய விஷயமாகும். கந்தகத்தின் மிகவும் சூக்ஷமமான அம்சங்களும் ஹைட்ரஜன் ஸல்பைட் என்பதும் சர்மத்தின் நுண்ணிய துவாரங்களினுள்ளே அல்லது சவாஸமார்க்கமாய் உடலிற்குள் பிரவேசிப்பதே அதற்குக் காரணமாகும். கந்தக நாற்றம் பேன்களுக்கும் மூட்டுப் பூச்சிகளுக்கும் கொசுக்களுக்கும் வெறுப்பைத்தரக் கூடியதாகையால் அவ்வித மனிதர்களிடம் இப்பூச்சிகள் அணுகுவதில்லை பேன்கள் மூட்டுப்பூச்சிகள், கொசுக்கள் முதலானவைகளை ஒழிப்பதற்காக மெல்லிய கம்பளித் துணியில் கந்தகப் பொடியைத் தூவி உடம்பிலுள்ள உடுப்புக்கு மேற்போர்வையாக உபயோகிக்கலாம். அல்லது வேறு வித

மான உபாயங்களாலாவது அவ்வித வஸ்திரங்களைப் படுக்கை முதலிய வற்றில் பரப்பிக்கொள்ளலாம். இவ்வாறு செய்து வரும்போது கிரம மாக வியர்வை முதலிய வற்றின் மூலமாகக் கந்தகத்தின் சூக்ஷ்மமான அம்சங்கள் சரீரத்திற்குள் பரவி முற்கூறியவாறு அப்பூச்சிகளாலுண் டான தொந்தரவுகளையும் ஒழித்து விடும்.

சுவருக்கு அடிக்க நல்ல வர்ணம்.

பெரிய பணக்காரர்களின் வீடுகளில் அவைகளுக்கு அடிக்க உயர்ந்த வர்ணங்களை மேனுடுகளிலிருந்து வரவழைக்கின்றார்கள். அவ் வாறு செய்ய மற்றுமுள்ளோர்களுக்கு சௌகர்யப்படாது. கீழ் குறிக்கப்பட்டிருக்கும் வர்ணமானது விலை குறைந்ததாகவும் சௌகரிய மாகவும் இருக்கும்.

14-பவுன் நெல்ல உப்பை எடுத்து வேண்டிய தண்ணீரில் கரைத்து அடுப்பில் வைத்து சூடு காட்டவும். பிறகு ½ பவுண்டு நல்ல வஜ்ரத்தை அதனுடன் கலக்கவும். இந்நீர் காய்ந்து கொண்டு வருகையில் ½ புஷல் அல்லது 400 ராத்தல் சுண்ணும்பை (தாளிக்காத சுண்ணும்பு) எடுத்து இக்கலப்பில் போட்டு பாத்திரத்தை மூடி விடவும். பிறகு மூன்று ராத் தல் அரிசி யெடுத்து நன்றாய் மைய அரைத்து மேற்சொல்லிய பாத்தி ரத்தில் போட்டு நன்றாய் கலக்கி விடவும். இவையெல்லாம் சேர்ந்து கொழ கொழ வென்று கலந்துவரும். இக்கூழை எப்பொழுதும் சூடா கவே இருக்கும்படி வைத்துக்கொள்ளவேண்டும். சூடாக வரும்போதே வேண்டிய இடங்களில் துரிசையைச் (பிரஷ்ஷை) கொண்டு தடவிவர வேண்டும். இதனை அடுப்பிலேயே வைத்திருந்து உலர்ந்து போகும்படி செய்துவிடக்கூடாது. அதிகம் குறைவில்லாமல் நிதானமாய்ச் சாய த்தை நாலா பக்கங்களிலும் படும்படி அடிக்கவேண்டும். இது வெள் ளைச் சாயமாகையால் இதற்கு ஏதாவது வர்ணம் வேண்டுமானுலும் அவ்வர்ணத்தை கலந்து கொள்ளலாம். இத்துடன் தீபக்கரியை (லாம்ப் பிளாக்) ச் சேர்த்துக் கொண்டால் சாம்பல் வர்ணமும், பூங்காவியைச் சேர்த்துக்கொண்டால் நல்ல ரோஜா வர்ணமும் உண்டாகும். இவ்வாறு செய்யப்படும் வெள்ளையில் 2½ சேரானது மூன்று சதுர அடி இடத் திற்குப் பூசிவர உபயோகமானது. இதனை எண்ணெய் சாயத்திற்குப் பதிலாக (ஆயில் பெயிண்ட்) மரம், கல், செங்கல் முதலியவைகளின் பேரிலும் பூசலாம். இவ்வர்ணம் பலவருஷம் வரையில் கெடுவதில்லை.

யானைத் தந்தத்தை வெளுக்கச்செய்தல்.

இத்தந்தத்தைப் படிகாரம் அதிகமாய்ப்போட்ட தண்ணீரில் 16-மணி நேரம் ஊரப்போட வேண்டும். பிறகு எடுத்து அதைக் கம்பளித் துணியில் துடைத்து மற்றொரு துணியில் காயும்வரையில் சுருட்டி வைக்கவேண்டும்.

ரணங்களை ஆற்ற வழிகள், ரணங்களை ஆற்ற கடல்நீர்.

ஒரு பிரஞ்சுவைத்திய நிபுணரான பஞரி என்பவர் அகாடமிக் டி- மெடிஸன்' என்னும் பத்திரிகையில் கீழ்கண்டபடி அறிவிக்கிறார். கடலோரங்களில் சிலருக்கு சாஸ்திர சிகிச்சைக்கு செய்யவேண்டி நேரிடுகையில் நடுத்திர ஜலத்தை எடுத்து இருபது நிமிஷம் வரையிலும் கொதிக்கவைத்து வடிக்கட்டி ரணங்களைக் கழுவி வந்ததில் சீக்கிரத்தில் அந்த ரணங்கள் ஆறிவரத் தொடங்கின இவ்வாறு கட்டுவதை அடிக்கடியும் புதிப்பித்து வந்தால் ரணம் சுத்தமாவதும் ஆறுவதும் இன்னும் வெகு சீக்கிரத்தில் நடைபெறும்.

பாம்புகடிக்கு மருந்து.

வாழை மரத்தின் ரசம் பாம்புகடிக்கு மருந்தென்று சமீபத்தில் கொழும்புவில் பரீக்ஷை பார்த்து தீர்மானம் செய்தார்கள். ஒரு நாயை பாம்புகடிக்கச்செய்து அதற்கு விஷம் ஏறி அவஸ்தைப் படுகையில் வாழைமரத்தின் ரசத்தைக்கொடுத்தார்கள், உடனே அது சௌக்கியமடைந்தது. ரசத்தைக்கொடுக்கலாமென்று கொழும்பு வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் காகிதக் கைத்தொழில்.

காகிதங்கள் நமக்கு எப்படி பயன் படுகின்றன வென்று பண்டிதன் முதல் பாமரன் வரையில் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்றார்கள். அவற்றின் செலவு நாளுக்குநாள் அதிகரித்து கொண்டேயிருக்கின்றது. முற்காலத்தில் காவியங்களும், சரித்திரங்களும் மற்றும் இதர நூல்களும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு வந்தன. தற்காலம் அவ்வண்ணம் எழுதப்படாமல் எல்லாம் காகிதங்களிலேயே எழுதப்பட்டும் அச்சடிக்கப்பட்டும் படிப்பவர்களுக்கு வீண் கஷ்டம் உண்டாகாமல் படிப்பதற்கான உற்சாகம் மேலிடுகின்றது. ஒவ்வொரு வருஷ

மும் நம் தேசத்தில் ஏறக்குறைய 40, 000 டன்கள் காகிதம் செலவாகிறது. இத்தேசத்தில் செய்யப்படுவது சொற்பம் போகமீதி அந்நிய நாடுகளிலிருந்தே வாங்கப்படுவதாக இருக்கின்றது. இதனுல் அவர்கள் எவ்வளவு இலாபம் அடைகிருர்கள் என்பது தெற்றென விளங்கும். இங்கு செய்யப்படும் காகிதங்கள் மேலானதாயிராமல் போயினும் நம்மவர் செய்வதனுல் அதற்கு அதிக விலையும் கொடுக்கலாம். நாம் அந்நிய நாட்டினின்று வருவிக்கும் காகிதங்களின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றது.

வருஷம்	காகிதமும் அட்டைகளும் இறக்குமதியான அளவு.,	
1903-04	ருபா	52, 18, 396
1904-05	,,	64, 47, 288
1905-06	,,	70. 48, 478
2906-07	,,	30, 11, 305
1907-8	,,	99, 24, 000

இதன் பிறகு இறக்குமதியான கணக்குகளை மிஸ்டர் ஜாடுநாத் சர்க்கார் என்னும் மேதாவி தம்முடைய,

எகநாமிக்ஸ் ஆப் பிரிட்டிஷ் இந்தியா.

என்ற நூலில்,

1909-ம் வருஷத்தில்	ரூபாய்	1 கோடியும்.	
1910	.,	.,	1, 2 கோடி.
.1911	,,	,,	1, 17 ,,

என்று எழுதுகிருர். இனி, கல்வி அதிகமாகப் பரவிப் புஸ்தகங்களும், பத்திரிகைகளும் அச்சிடுவதற்குக் காகிதங்கள் எராளமாகக் செலவாகும் மிஸ்டர் சர்க்கார் தமது புஸ்தகத்தில் பின் வருமாறு எழுதுகிருர். ‘ வருஷம் 1க்கு 117 ¾ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள காகிதம் இறக்குமதியாகின்றது. இதோடு நம் தேசத்தில் செய்யப்படும் 71, 37 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காகிதமும் சேர்ந்து ஒவ்வொரு வருஷமும் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள காகிதம் செலவாகின்றது. 1900-ம் வருஷத்தில் 8036 புஸ்தகங்களும், 3 கோடியே 20 லட்சம் வர்த்தமானப் பத்திரிகைகளும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் 1909-ம் வருஷத்தில் இவை 12, 046 புஸ்தகங்களாகவும் 5 கோடியே 10 லக்ஷம் வர்த்தமான பத்திரிகைகளாகவும் ஏறியிருக்கின்றன இவை தவிர கணக்கில் அகப்படாத தொகையும் கொஞ்சம் இருக்கக்கூடும்.

அதற்குப்பின் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் வருஷா வருஷம் அதிகமாக வெளியாகி வருவதால் முன்னைவிடக் குறைந்த பட்சம் பத்தத்தனை மடங்கு அதிகமாக இறக்குமதியாகி வருகின்றது அதனால் அன்னிய நாட்டினர் அதிகமாக லாபம் பெற்று வருகின்றார்கள் இவ்வளவு லாபகரமான கைத்தொழிலை அன்னிய நாட்டார் கையில் விட்டுவிடுவது கொஞ்சமேனும் விரும்பத்தக்கதல்ல, இக்காகிதங்கள் செய்யப்படுவதற்குத் தாய்ச்சரக்கான கூழ் முதலியன நம் நாட்டில் ஏராளமாய்க்கிடக்கின்றன. ஆகவே இக்கைத்தொழிலைப் பலவிடங்களில் ஸ்தாபித்து அன்னிய நாடுகளிலிருந்து வரும் காகிதங்கள் முற்றிலும் நிறுத்திவிட முயற்சி செய்தல் உத்தமம்.

கொஞ்சகாலத்திற்கு முன் இங்கிலாந்தானது தன்னுடைய துணி நெய்யும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யக்கருதிப் போட்டியில்லாமலிருப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து வரும் துணிகளை நிறுத்திவிட்டது. தன் தேசத்திலிருந்து கைத்தொழில் செய்யப்படாத வஸ்துக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாதென்று கட்டளையிட்டது. ஆகவே அவர்கள் தங்களுடைய கைத்தொழிலையே நம்பியிருக்கவேண்டியதாயிற்று. இவ்வாறு அவர்கள் தங்களுடைய கைத்தொழில் அபிவிர்த்தி செய்து கொண்டார்கள். அவ்வண்ணம் நமது தேசத்தில் செய்யமுடியாமலிருப்பதால் அந்நிய நாட்டுச் சாமான்களுக்கு மத்தியில் நம்முடையவைகள் பிரகாசிக்க முடியாமல் தவிக்கின்றன.

பித்தளை அல்லது தாமிரத்தைத் துருப்போக்கும் விதம்.

எலுமிச்சம்பழத்தின்,சாற்றை நன்றாகப்பிழிந்து பிறகுதோலின் உட்புறத்தை வெளிப் புரமாகத்திருப்பி அதன் மேல் நன்றாகப்பொடித்த உப்பைத்தூவி, அதனால் பித்தளை அல்லது தாமிரப்பாத்திரத்தைக் கந்தத்துணியில் தேய்த்தால் அழுக்கும் துருவும் போய் விடும். பாத்திரங்கள் பளபளப்பாகப் பிரகாசிக்கும்.

எண்ணெய்ப்படிந்த சீசாக்களைக் கழுவ.

வாள்தூள் அல்லது கோதுமைத் தவிட்டை சீசாவுக்குள் போட்டுக்குலுக்கினுல் தூள் உட்பக்கம் முழுவதும் ஒட்டிக்கொள்ளும். சிறிது நேரங்கழித்து தண்ணீர் விட்டு உருட்டினல் அழுக்குச் சிக்குபோய் விடும், நாட்பட்ட எண்ணெய்ச்சிக்கு வறண்டிருந்தால் முதலில் ஈதரை விட்டு வைத்திருந்து பின், முன் கூறியப்டி செய்தால் சிக்குவிட்டுப் போம். சோப்பு, முதலியவைகள் போட்டுக் கழுவுவதைவிட இம் முறை சிறந்தது.

புதிய முறையிற் செய்த காகிதம்.

ஜர்மானியர் புதியமுறையில் அச்சடிக்கும் காகிதம் செய்கிறார்கள் அதற்கு மரக்கூழ் வேண்டிய தில்லை. நாணல், கோரை, சணல், கரும் புச்சக்கை, மூங்கில் ஆகிய இவைகளால் அக்காகிதத்தைச் செயகிறார் கள். இப்புதிய முறைகளில் செய்ய இரண்டு மணிநேரம் போது மென்றும் செலவும் மிகக் குறைவென்றும் இப்போது நாம் வாங்கும் காகிதத்தைவிட நூற்று அறுபது பங்கு குறைந்த விலை யென்றும் தக்க இலாபம் கிடைக்குமெ என்றும் அறிகிறோம். காகித அட்டை களும் இம்முறையிற் செய்கிறார்கள். பெர்லின் நகரத்திலிருந்து மட்டுமெ 50, 000 டன்கள் எடையுள்ள காகிதம் மாதந்தோறும் வெளி நாடுகளுக்குச் செல்கிறதென்றும் தெரியவருகிறது.

எஃகுக்குப் பதில்.

ஹாயினஸ் என்பவர் ஓர் உலோகத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது கோபால்டு, கிரோமியம், டங்ச்ஸ்டம் என்னும் இம்மூன்று பொருளகளையும் ஒன்றாய்க்கலக்கவேண்டும். இவ்விதங் கலந்து உண் டான உலோகமானது எஃகைவிடப்பதின் மடங்கு உறுதியுள்ளதாயும் வெகு திருப்திகரமாய் வேலை செய்வதாயும் சொல்லுகிறார்.

தண்ணீரில் சேதமடையாத தீக்குச்சுகள்.

தீக்குச்சுகள் தண்ணீரில் விழுந்தாலும் அவைகள் சேதமடையா மல் இருக்கச்செய்யலாம் பாரபின் வாக்ஸ் (Paraffinwax) என்னும் ஒருவித மெழுகை அதிகச்சூடாக்காமல் காய்ச்சவேண்டும். பிறகு தீக் குச்சிகளை அதில் போட்டால் குச்சுகளின்பேரில் அரக்குபூசியது போ

லாகிவிடும். அரச்கு கொஞ்சம் சூடு ஆறினபிறகு குச்சுகளை எடுத்துக்கொள்ளலாம் இவ்விதம் ஜாக்கிறதையாகச்செய்த குச்சுகளைத்தண்ணீரில்ஊறவைத்தாலும் அரக்குகளின் தன்மைமாறுது. குச்சுகளை உபயோகிக்கவேண்டுமானல் அவற்றில் ஒன்றை'யெடுத்துகையினல்தேய்த்தால் அரக்கெல்லாம் விட்டுப்போய் முன்மாதிரிக் குச்சு தோன்றும் அதை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்

நீல-கறுப்பு இங்கி: எழுதும் இங்கியும்: காபியிங்கு இங்கியும்.

பூச்சிப்புழுத்தலில்லாத நீலக்கடுக்காய் $4\frac{1}{2}$ அவுன்ஸ்; லவுங்கம் தூள் 1 டிராம்; தண்ணீர் 40 அவுன்ஸ் சுத்திகரித்த சல்பேட் ஆப் ஐரன் $1\frac{1}{2}$ அவுன்ஸ்; சுத்தமான சல் பூரிக் ஆசிட் அளவு 35 மிம்ஸ்; ஸல்பேட் ஆப் இண்டிகோ (நீலி) குழம்பானது $\frac{1}{4}$ அவுன்ஸ். கடுக்காயை உடைத்தபிறகு லவுங்கத்துடன் சேர்த்து 50 அவுன்ஸ் பாட்டிலில் ஊற்றிக்கொள் அதன் மேல் ஜலம் ஊற்றி நன்ருகக் குலுக்கு பதிஞன்குநாள் வரையில் தினமும் நன்ருகக்குலுக்க வேண்டும். இன்ஞெரு 50 அவுன்ஸ் புட்டியில் காகிதத்தின் மூலமாய் வடிக்கட்டு, கடுக்காயில் மீதியை வெளியிலெடுத்துவிடு அதிலுள்ள சாரத்தை கம்பிளி அல்லது பஞ்சுதுணி மூலமாக பிழிந்து கொள் இம்மாதிரிசெய்வதனல் கொஞ்சமும் வீணுவதில்லை அதன் பிறகு ஐரன் அதாவது இரும்பைப் போட்டு முழுவதையும் கரையும்படிச்செய்து காகிதத்தின் மூலமாய் வடிகட்டு. அதன் பிறகு ஆசிட்டைப் போட்டு சுறுசுறுப்புடன் குலுக்கவும் கடைசியில் நீலி சாயத்தைக்கலக்கும்படிக் குலுக்கவேண்டும் எல்லாவற்றையும் காகித மூலமாக இன்ஞெருபுட்டியில சேர்க்க இம்மாதிரியே நன்ருக வடிக்கட்டும் வரையில் செய்யவேண்டும்.

காப்பிங் இங்கியாக உபயோகிக்க வேண்டுமானல் கடுக்காயை $5\frac{1}{2}$ அவுன்ஸாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஜலம் மிகவும் மெதுவானதாயிருக்கவேண்டும். அதாவது அதில் கொஞசமும் சுண்ணும்பு இல்லாமலும் இருக்கவேண்டும். இங்கிகள் செய்வதில் மழை ஜலத்தை யாவது, வடிகட்டிய ஜலத்தையாவது உபயோகப் படுத்தவேண்டும்.

காபி யிங்கு மெஷினுக்குப்பதில்

சாதாரண இங்கியைக் கொஞ்சம் சர்க்கரை கட்டியைப்போட்டுக் கரைத்து பின் எழுது 1 அவுன்ஸ் இங்கியின் $1\frac{1}{4}$டிராம் சர்க்கரைவீதம்

சேர்க்கவேண்டும். காப்பிங்பேப்பரை நனைத்துக்கொள். அவ்விதம் நனைக்கப்பட்டத்தாளை எழுதிய தாள்மீதுவை. பிளாட்டிங் பேப்பரை அதன்மேல் மூடு. எல்லாவற்றையும் கம்பளத்தின் மேலாவது அல்லது, கால் மிதியின் பேரிலாவது வை; ஊவைகளின் ஒரு முனை மடியும்படி செய்யவேண்டும். இதன் மீது மிதித்துகொண்டால் ஒரு பதிப்பு விழும் காப்பியிங் பிரஸ்ஸினால் எப்படித் தெளிவாக காபி விழுமோ அவ்வளவு தெளிவாக இவ்விதம் செய்வதனாலும் விழும்.

அழிக்க முடியாத இங்கிகள்

1. பொடி செய்த கோபால் பிசின் 25 கிரெயினை லவண்டர் ஆயில் 200 கிரேயினில் இளஞ்சூட்டினால் கரைத்து லாம்ப்பிளாக்(விளக்கு கரி) 2½ கிரெயினைச்சேர் அத்துடன் ½ கிரெயின் தூள் செய்த அவுரிச் சாயத்தையும் கூட்டிக்கொள்ளவேண்டும்.

2 18 அவுன்ஸ் தண்ணீரில் ஷெல்லாக் அரக்கு 2 அவுன்ஸையும் வெண்காரம் 1 அவுன்ஸையும் போட்டுக்கொதிக்கச்செய் ஆறினபிறகு வடிகட்டிக்கொள் 2 அவுன்ஸ் ஜலத்தில் கரைக்கப்பட்ட 1 அவுன்ஸ் விளாம் பிசினையும் சேர் இன்னும் அதில் தூளாக்கிய நீலச்சாயத்தையும் விளக்குக்கரி (லாம்பிளாக்கையும்) வேண்டுமென்றவரையில் போட்டுக்கொள்ளலாம்.

3. 20 கிரெயின்ஸ் சர்க்கரை 30 கிரெயின்ஸ் ஜலத்தில் கரைத்து அதில் கான்செண்டிரேடெட் ஸல்பூரிக் ஆசிட்டில் சில துளிகள் விடவும். இந்தக்கலப்பு நீரைக்காச்சவும் சர்க்கரை யெல்லாம் ஆசிட்டின் பலத்தால் கரியாகப்பட்டுப்போம்.

இங்கிபவுடர்

1. தூள்செய்த கடுக்காய்	4 அவுன்ஸ்
தூள் செய்த சல்பேட் ஆப் ஐரன்	1 அவுன்ஸ்
,, வெள்ளைச்சர்க்கரை	½ ,,
,, விளாம்பிசின்	1 ,,
,, லவங்கம்	1 டிராம்

இவைகளைக் கலந்துகொள் குவார்ட் ஜலம்விடு ஒருமணி அல்லது இரண்டு மணிநேரம் விடாமல் கிளரிக்கொண்டிரு.

2. அலெப்போ கால்ஸ்	3 பவுண்டு
காப்பராஸ்	1 பவுண்டு
விளாம்பிசின்	½ ,,
வெள்ளைச் சர்க்கரை	¼ ,,

தூள் செய்து கல. இந்தப்பவுடரில் 2 அவுன்ஸை 1 பைண்ட் கொதிக்கும் வெந்நீரில் கரைக்க நல்ல இங்கியாகும்.

கண்ணுக்குத்தெரியாத ரகசிய இங்கிகள்.

1. ஸில்வர் நைட்ரேட்டில் தண்ணீர் கலந்து எழுதி உலர்ந்தபிறகு கண்ணுக்குத்தெரியாமற் மறைந்து போகும் நவச்சாரம் (ஸல்பேட் ஆப் அம்மோனியா) போட்ட பாத்திரத்தின் மீது இந்த காகிதத்தைப் பிடித்தால் எழுத்துக்கள் எல்லாம் நன்ருகத் தெளிவாகத் தெரியும். எழுத்துக்கள் எல்லாம் வெள்ளிபோல் பளபளவென்று பிரகாசிக்கும்.

2. முரியேட் ஆப் கொபால்ட் என்பதைத் தண்ணீரில் கரைத்து எழுது, உலரும்போது கண்ணுக்கு தெரியாது நெருப்பு அணலின் மீது பிடித்தால் மெதுவாக எழுத்துகள் தெரிய ஆரம்பிக்கும். முரியேட் ஆப் கொபால்டு சாதாரண முறையில் செய்யப்படுமானல் எழுத்துக்கள் எல்லாம் நல்ல பச்சை நிறமாகக்காணப்படும்.

3. அஸிடேட்ஆப்கோபாடில்பொதுவாயுள்ளஇரும்பைப் போட்டு சுத்தபடுத்தியபின் எழுது நன்ருக உலர்ந்த பின் எழுத்துக்கள் தெரியாமற் போய்விடும். கொஞ்சநாழி நெருப்புத்தணலின மீது அதைகாட்டிச் சூடேறச்செய் எழுத்துக்கள் எல்லாம் அழகிய ஊதா நிறத்துடன் காணப்படும்.

4. அன்ன பேதியும் (ஸல்பேட் ஆப் காப்பர்) நவாச்சாரமும் (ஸால் அம்மோனியா) சரிசமமான பங்கெடுத்து தண்ணீரில் கரைத்து அதைக்கொண்டு எழுத்து எழுதும் போது எழுத்துகளின் நிறம் தெரியாது. சூடேற்றியபின் எழுத்துக்கள் மஞ்சள் நிறமாய்க் காணும்.

5. வெங்காயம் ரசத்தைக்கொண்டு எழுதி சூடேற்ற மஞ்சள் நிறமாகமாறும்.

6. கோபால்ட், நிக்கல் இவைகளின் கிளோரைட்களை அதிக ஜலத்தில் கரைத்து எழுதி சூடேற்றினால் பச்சை நிறமாக எழுத்துக்கள் மாறும்.

வர்ண இங்கிகள். சிவப்பு இங்கி.

1. 4 அவுன்ஸ் தூள் செய்த பிரஜில்வுட் (Brazilwood) என்னும் மரம் 60அவுன்ஸ்காடி [வினிகர்] எடுத்துக்கொள் இதை நன்றாகக் கொதிக்கச்செய்து 30 அவுன்ஸ் ஆகிறவரையில் சுண்டும்படிச்செய் இதில் 3அவுன்ஸ் கல் உப்பைப்பொடி செய்து போடு.

2, ½ பவுண்டு பிரேஜில்வுட் என்னும் மரத்தின் தூளை எடுத்து காடியில் [வினிகர்] 2 அல்லது மூன்று நாள் வரையில் ஊறப்போடு ஊறப்போட்டப்பிறகு அப்படியே 1 மணி நேரம் வரையில் அடுப்பில் வைத்து இளஞ்சூட்டில் காய்ச்சு. சூடாகஇருக்கும்போதே வடிக்கட்டி மறுபடியும் அதைக்காச்சு அதில் முதலில் ½ அவுன்ஸ் விளாம்பிசினை கம் அராபிக் கரை அதன்பிறகு படிகாரம், வெள்ளை சர்க்கரை இரண்டும் சேர்த்து 2 அவுன்ஸ் அளவு போட்டுக்கரை.

3. 2 அவுன்ஸ் பிரேஜில் வுட்டை 32 அவுன்ஸ் ஜலத்தில் போட்டுக் காய்ச்சி டிக்காக்ஷன் நன்றாக வடிகட்டிய பின் ½ அவுன்ஸ் கிளோரைட் ஆப்டின் னும், 1 டிராம் அராபிக்கம்மையும் சேர் அதன் பிறகு 16 அவுன்ஸாக சுண்டுகிற வரையில் காய்ச்சு.

4, பிரேஜில் வுட் (Brazilwood)	200 பாகங்கள்
ஸால்ட் ஆப் டின் (Salt of tin)	3 பாகங்கள்
பிசின் (Gum)	6 பாகங்கள்
ஜலம் (Water)	3200

பாதியாகும் வரையில் சுண்டக்காய்ச்சி வடிக்கட்டு

5. பிரேஜில் வுட்	2 பாகங்கள்
படிக்காரம்	½ ,,
கிரீம் ஆப் டார் டார்	½ ,,
ஜலம்	16 ,,

பாதி ஆகும் வரையில் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக்கொள்.

கம் ½ பாகம் சேர்த்துக்கொள்.

6. நல்ல அழகான சிவந்த நிறம் தேவையாய் இருந்தால் தூள் செய்த ரோஜி நீல் என்பதில் 1 அவுன்ஸை ½ பயின்ட் அதாவது 10 அவுன்ஸ் வெந்நீரில் கரைத்து நன்றாக குளிர்ச்சியான பிறகு ¼ பயின்ட் அதாவது 5 அவுன்ஸ் ஆர்ட்ஸ் ஹார்ன் என்பதைக்கூட்டிக்கொள். சில நாள்வரையில் விட்டு வைக்கவும். பிறகு தெளிவானதை இறுத்துக்கொள் அல்லது சுத்தமான கார்மைன் 20 கிரெயின்ஸை அம்மோனியா திராவகத்தில் 3 திரவ அவுன்ஸ்யில் கரைத்து 18 கிரெயின்ஸ் தூள்கள் செய்த பிசினைப்போடு.

பச்சை கருப்பு இங்கி.

15 பாகம் உண்டாக்கப்பட்ட கடுக்காயை எடுத்துக்கொண்டு 200 பாகம் தண்ணீரில் போட்டு ஒரு மணிநேரம் வரையில் கொதிக்க வைத்து வடிகட்டிக்கொள்ள அந்த கஷாயத்துடன் 5 பாகம் ஸல்பேட் ஆப் ஐரன் சேர் 4 பாகம் இரும்புத்தூளையும் சேர் 3 அவுன்ஸ் சல்புயூரிக் ஆசிட்டில் கரைக்கப்பட்ட ½ பவுண்டு நீலிச்சாயத்தையும் மேற்கூறியவைகளுடன் சேர். அந்த் இங்கி பச்சை நிறமாக எழுதும் ஆனால் சில நாட்கள் கழிந்ததும் கறுப்பு நிறமாக மாறிவிடும். பேனாவினின்று மிகவும் நன்றாக ஓடுந் தன்மையைப் பெற்றிருக்கிறது.

பச்சை நிற இங்கி.

1. பச்சை சாயபவுடரில் வேண்டுமான ஜலம் விட்டுக் கரைத்து கிரோமின் கால்ஷின் அஸிடோ-னைட்ரேட்டை விடு.

2. நல்ல நீல இங்கியும் மஞ்சள் இங்கியும் வேண்டுமான பச்சை நிறம் படும்வரையில் கலந்து கொள்ளவும்.

3. ஸாப் கிரீன் என்பதை படிகாரத்தை அதிக ஜலத்தில் விட்டு கரைத்து அதில் மேற்கூறியதை கரைத்து விடு.

4. வெர்டிகிரீஸ் 2 அவுன்ஸ் கிரிம் ஆப் டார் டார் 1 அவுன்ஸ் ஜலம் ½ ஸென்ட் 20 அவுன்ஸ் அரைபலம் ஆக சுண்டுகிறவரையில் கொதிக்கவிட்டு வடிகட்டிக்கொள்.

ஊதா நிற இங்கி ப்ளூ இங்கி.

1. இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் ஸல்பேட் ஆப் இண்டிகோவை 1 காலன் ஜலத்தில் கரை.

2, சைனீஸ் ப்ளு 2 அவுன்ஸ் கொதிக்கும் ஜலம் 1 குவார்ட் ஆக்ஸாலிக் ஆசிட் 1 அவுன்ஸ் ப்ளு [ஊதாவை] ஜலத்தில் கரை அதன் பிறகு ஆஸிட்டைக் ஊற்று உடனே உபயோகத்துக்கு தயாராகி விடும்.

ப்ர்ப்பில் இங்கி

1. லாக்வுட் என்னும் மரத்தின் கஷாயத்துடன் கொஞ்சம் படிகாரத்தையாவது அல்லது கிளோரைப் ஆப்டின் என்பதைச் சேர்.

வயலேட் இங்கி

1. மூன்று பயிண்டு ஜலத்தில் 8 அவுன்ஸ் லாக்வுட்டைப்போட்டு கொதிக்கவைத்து பாதியாகச்சுண்டும் வரையில் கொதிக்கவை. வடிகட்டியபின் பிசின் 1½ அவுன்ஸையும் படிகாரம் 2½ அவுன்ஸையும் கூட்டிக்கொள்.

2. கட்பேர். 2 அவுன்ஸ், பெரல் ஆஷ் 1½ அவுஸ்ஸ் வெந்நீர் 1பைண்ட் 12 மணி நேரம் விட்டுவை வடிக்கட்டு 2 அவுன்ஸ் பிசினைக் கூட்டு நீண்டகாலம் இருக்க விரும்பினால் கொஞ்சம் ஸ்பிரிட்டில் 1 அவுன்ஸ் ஆப் வைன் சேர்.

ஊதாமார்க்கிங் இங்கி

22 பாகம் சோடா உப்பு [கார்பொனேட் ஆப் சோடா] 25 பாகம் நீ நீரில் கரை. 24 பாகம் அம்மோனியால் 17பாகம் கிரிஸ்டல் நைட்ரேட் அப்ஸில்பர் என்பதையும் கரை 60 பங்கு தண்ணீரில் 20 பங்கு பிசினைக் கலந்துக்கொள், அதில் சோடா கலந்த நீரை ணற்றிக்கொள். அதன் பிறகு நைட்ரேட் அப்ஸில்வரை விடு [ஸர்பேட் ஆப் கூப்பர்] 33 பாகம் அன்னபேதியைச் சேர்த்துக்கொள். இந்த இங்கி நல்ல ஊதா நிறத்துடன் எழுதும்.

2. கம்பளித்துணியை முதன் முதலில் சோடா உப்பு கலந்த ஜலத்தால் நனை. அந்த இனத்தைக்காய்ந்த பிறகு அதன்பேரில் பிசின் கலந்து கொஞ்சம் ஒம்பாக்கிய ஸில்வர் நைட்ரேட் திராவகத்தில் சாப் கிரீன் என்பதால் நிறம் பெறச்செய்து எழுது.

3. தனித்தனியாகக்கரை. நைட் ரேட் ஆப்சில்வர் 1 அவுன்ஸ் கிரிஸ்டல் கார்ப்பநேட் ஆப்சோடா 1½ அவுன்ஸ் இவைகளை ஒன்றுகக் கல இதன் வண்டல்களை வேருக வடிக்கட்டு அந்த வண்டல்களை

எடுத்து உரலிலிட்டு 8 ஸ்குருபில்ஸ் டார்டரிக் ஆசிட்டை விட்டுஆட்டு பிறகு அம்மோனியா திராவகத்தை வேணுமானமட்டும் விடு. அத்துடன் 4 டிராம் ஆர்சில்; 4திரவ டிராம் தூள் செய்த வெள்ளை சர்க்கரையும் 12 டிராம் தூளாக்கிய பிசினையும் சேர்த்து 6 திரவ அவுன்சாக்கு.

இந்தியன் இங்கி

அப்ரிகாட்டின் கொட்டைகளின்பருப்புகளை அடுப்பில் கறுப்பாகும் வரையில் வறுத்து மைபோல தூளாக்கி விளாம்பிசினில் கரைத்து குழம்பாக்கு பிறகு கட்டிகளாக வார்ப்படம் செய்.

2. லாம்ப் பிளாக் உயர்ந்ததை அரக்கின் 100 கிரெயின் ஸடனும் 50 கிரயின்ஸ் வெங்காரமும் 4 அவுன்ஸ் ஜலமும் ஒன்றாகச்சேர்.

முட்டைகள்: அவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பப் பக்குவம் செய்வதெப்படி.

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் பிசினைக் கரைத்து அதில் முட்டைகளைத் தோய்த்து எடுக்கவும். முட்டைகளின் மேற்புறம் முழுவதும் பிசின் ஜலம் பரவும் படியாகத் தோய்க்கவேண்டும். இவ்விதம் பக்குவம் செய்ய எடுத்துக்கொள்ளப்படும் முட்டைகள் புதியவையும் நன்றாகத் சுத்தமான தண்ணீரில் கழுவப்பட்டதாகவும் இருக்கவேண்டும், நன்றாகப் பிசின் ஜலத்தில் தோய்க்கப்பட்டு வெயிலில் சற்று உலர விட வேண்டும். அப்போது தான் ஏற்றுமதி செய்வதற்குத் தயாரானதாக இருக்கும். இவ்விதம் காலம் வரையில் கெடாமல் உபயோகிக்கும் போது இம்முட்டைகளை வெந்நீரிலாவது அல்லது தண்ணீரிலாவது போட்டு வைக்க பிசின் கரைந்து விடும். அதன் பிறகு உபயோகிக்கலாம்.

முட்டையின் மேல் ஓட்டிலுள்ள கண்ணுக்குத்தெரியாத சிறு சிறு துவாரங்கள் மூலமாகக்காற்று புகுந்து உள்ளேயுள்ளதை அழுகும்படிச் செய்து உள் புக வொட்டாமல் செய்யவே பிசினைக்கரைத்துப் பூசுவது. இம்முறையினால் முட்டைகள் கெடாமலிருக்கச் செய்யப்படுகின்றன. ஆஸ்டிரேலியாவிலிருந்து இங்கிலண்டு முதலிய தூரப்பிரதேசங்களுக்கு இம்முறையை அநுஷ்டித்தே முட்டைகள் ஏற்றுமதி செய்தனுப்பப் படுகின்றன.

சர்வ தேள் விஷ நிவாரணி
Scarpion Sting cure.

தேள் கொட்டினது கொஞ்சம் நவாசாரத்தையும், சுண்ணும்பையும் இடது உள்ளங்கையில் வைத்து, வலதுகை ஆள்காட்டி விரலால் காற்று உட்புகவொட்டாமல் அவைகளை நன்ருகத்தேய்க்க நீரைப்போல் உருகிவருகிறது. அதைக் தேள் கொட்டப்பட்டவர்களை மூசுருசும்படிச் செய்யவேண்டும். மூக்கிஞல் உள்ளே உறிஞ்சும்படிச் செய்ய வேண்டும். அவ்விதம் பல தடவை உறிஞ்சின பிறகு வியர்வை கிளம்பி வரும் கொட்டின விடத்தில் சுண்ணும்பும் நவாச்சாரமும் கலந்த பத்தைப்போட்டு அனலில் காட்ட தேள் கொட்டு குணமடையும். இஃதோர் அனுபவ வைத்திய முறையாகும்.

மற்ருெரு முறை

சர்வதேள் விஷ சஞ்சீவி.

பொட்டாஷியம் பெர்மாங்கனேட்டில் இங்கிலீஷ் மருந்து ஒரு அரிசி எடை எடுத்து தேள் கொட்டின விடத்தில் வைக்க வேண்டும் அதன் பிறகு டார்டாரிக் ஆஸிட் என்ற மற்ருெரு மருந்து தினுசை ஓர் அரிசி எடை எடுத்து முன்வைத்த பர்மாங்கனேட்டின் மேல் வைத்து ஒரு பொட்டு ஜலம் விட்டால் அந்த இடத்தில் பொங்கும். விஷத்தின் சடுப்பெல்லாம் எளிதில் அடன்றுவிடும், இம்மருந்தை நன்ருக பாக்கிங்செய்து எட்டணு முதல் ஒரு ரூபாய் வரையில் விற்கின்ருர்கள். ஆபத்தையும் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்வதால் பணத்தைச் சட்டை செய்யாமல் அந்த நேரத்திற்கு அதிகமாய்பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளுகிருர்கள்.

ஸ்ட்ராங் பெப்பர் மின்ட் செய்யும் முறை.
Strong Peppermint

5 பவுண்ட் அஸ்காசர்க்கரை (Aska)
½ பவுண்ட் விளாம்பிசின் (Arabic Gum)
1 அவுன்ஸ் பெப்பர்மின்ட் தைலம் (Peppermint Oil)
8 அவுன்ஸ் சுத்தமான ஜலம் (Water)

மேற்கூறப்பட்டவைகளில் விளாம்பிசினைத் தண்ணீரில் நன்ருகக் கரைத்து 1 மணி நேரம் தெளியவைத்து ஷெ தெளிவான தண்ணீரில்

அஸ்காசர்க்சரையையும், பெப்பர் மின்ட் கைலக்தையும் சேர்த்து நன்ருய் மெழுகுபதத்தில் அரைத்துக் கொள்ளவேண்டும். வேண்டிய கனத்தில் தட்டையாகத் தட்டி பில்லைகள் செய்து மிருதுவான பச்சரிசிமாவைத்தூவிக் கலந்துக்கொண்டு தட்டுகளில் வைத்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு உபயோகிக்சலாம். ஜலதோஷம் கண்டகாலத்தில் உட்கொள்ள நெஞ்சு கரகரப்பாய் இருப்பதுமாறும்.

பன்னீர் பெப்பர் மின்ட்
Rose Peppermint

பன்னீர் பெப்பர் மின்ட் செய்ய வேண்டுமானல் மேற்சண்ட விதமாகச் செய்யும்போது தண்ணீருக்குப்பதில் பன்னீர் சேர்த்து, ரோஸ் வாஸனைத் தைலத்தையும்கொஞ்சம் சேர்த்து, கொஞ்சம் கிரிமிஞ்சிவர்ணத்தையும் கலந்துச்கொள்.

கிச்சிலி பெப்பர் மின்ட்
Lemon Rose Peppermint

1 அவுன்ஸ் விளாம்பிசின் (**Arabic Gum**)
1 பவுண்ட் சர்க்கரை (**Sugar**)
4 அவுன்ஸ் ஜலம் (**Water**)
1 டிராம் கிச்சிலி எஸ்ஸென்ஸ் (**Essence of Lemon**)
½ டிராம் மஞ்சள் வர்ணம் (**Yellow Colour**)

விளாம்பிசினை தண்ணீரில் சரைந்து தெளியவைத்து எடுத்துச் கொண்டு அதில் சர்க்கரையைச்சேர்த்து நன்ருய் காய்ச்சி கொஞ்சம் ஆறின பிறகு மற்றவைகளைச் சலந்துகொண்டு வேண்டிய அச்சில் வைத்து, அழுத்தி மாவுடன் சலந்து உபயோகிக்கவும் ஜின்ஜர் (**Ginger**) ஆரென்ஞ் (**Orange**) முதலியவைகள் வேண்டுமானல் அதற்கு வேண்டிய நிறம் வாசனை உபயோக்கவும்.

ஓமத்திராவகம்-Omum Water.

1 வீசை ஓமம் 1 படி தண்ணீர்

ஓமத்தை தண்ணீரில் விட்டு 3 நாள் ஊரவைத்துவாலை யென்னும் இயந்திரத்தில் போட்டு அடுப்பேற்றி தீயெரித்து சீசாக்களில் வாலையி

லிருந்து இறக்கி ஓமத்திராவகத்தைப் பிடித்துக்கொண்டு சீசா ஒன்றுக்கு 2 அல்லது 3 துளி சீமை ஓமத்தைலத்தை விட்டு அடைத்துக் கொண்டால் உயர்ந்ததான ஓமத்திராவகம் உண்டாகும்.

சுகந்த மூக்குத்தூள்

Scented Snuff

நெருப்பிலிட்டுப் பொரித்தெடுத்த படிக்காரத்தூள் 1 விராகன் எடை

மென்தால்	¼ ,,
ஸ்மெல்லிங் சால்ட்	½ ,,
பச்சைக்கர்ப்பூரம்	½ ,,
சந்தன அத்தர்	1 ,,

மேற்கண்ட சரக்குகளைக் கலுவத்திலிட்டு அரைத்து சீசாவில் அடைத்துக் கொண்டு சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை கலந்தால் சுகந்தம் வீசும்.

பன்னீர் செய்யும் முறை

ROSE WATER

கீழே குறித்திருக்கிற சரக்குகளைத் தூள்செய்து இடித்து தீ நீர் இறக்கக்கூடிய வாலை என்னும் பாத்திரத்தில் போட்டுப் பன்னீர் சீசாவில் இறக்கிக்கொண்டு Essence of Rose பன்னீர் எஸ்ஸென்ஸ் என்னும் சென்டை இரண்டு துளிகள் விட்டு சீசாவை நன்றாய் கார்க் கடைத்து நாள் சென்று உபயோகிக்க மேன்மையான பன்னீர் உண்டாகும்.

1 வீசை ரோஜா புஷ்ப இதழ்கள்
15 பலம் உயர்ந்த சந்தனக்கட்டைத்தூள்
3 பலம் சம்பங்கி மொக்கு
2 பலம் சாம்பிராணி
2 பலம் ஜாதி கோஷ்டம்
2 பலம் பெருலவங்கப்பட்டை
2 பலம் கிச்சிலிக்கிழங்கு
2 பலம் இலியூரல்பட்டை

சந்தனாதி தைலம்

SANDANATHI THILAM

நன்னாரி, நத்தைச்சூரி, தண்ணீர் விட்டான், சாரடை, இருவேலி, அமுக்கிராங்கிழங்கு, சீந்தில் முத்தக்காசம், அதிமதுரம், செஞ்சந்தனம், அகில், வில்வவேர், தேவதா ம், மதுரம் கோஷ்டம், லவங்கம் கருவாய் பட்டை, தக்கோலம், லவங்கப்பட்டை இவை வகைக்கு பலம் ஒன்று சந்தனத்தூள் பலம் 10; தண்ணீரில் போட்டு நன்றாய்க் காய்ச்சி எடுத்தநீர் படி 1 நல்லெண்ணெய்படி 1 முசுமுசுக்கைச் சாறு. படி 1. போற்றலைக்கையான் சாறு படி 1, வால் மிளகு, குக்கிப்பச்சை பூலாங்கிழங்கு, அரத்தை, சடாமாஞ்சில், ஓமம், வெளாம்பிசின், வேம்பாடம் பட்டை, ஏலம், மல்லி, அபினி. சாதிக்காய், கருஞ்சீரகம், கார்போகரிசி. சாதிபத்திரி, மாசிக்காய், சண்பகப்பூ, சிறுநாகப்பூ கிராம்பு, கிளிபூரல் பட்டை, நாகணம், புனுகு இவ்வகைகளுக்கு இரண்டு விராகனெடை பசுவின்பால் விட்டரைத்து மேற்கூறிய சரசகுகளுடன் சேர்த்து தைலபதத்தில் காய்ச்சி தலைசகு ஸ்னானம் செய்து வர மண்டை நோய் வாயுமந்தம், கபாலவலி, கண்ணோய், செவிநோய் தாகம், பீனிசம் வறக்ஷி குன்மம் க்ஷயம், மேகம் பிரமேகம் முதலிய பிணிகள் தீரும். இஃது ஓர் அனுபவமுறை.

புஷ்பங்களின் எஸென்ஸ் எடுக்க

ESSENCE OF FLOWERS

முக்கால்பாகம் மலர்ந்த இஷ்டமான புஷ்பங்களைக் கொண்டு வந்து அவற்றின் காம்புகளைக் கிள்ளிவிட்டு ஒரு ஜாடியின் அடியில் பரப்பி அதற்குமேல் வெண்மையான மெல்லியதாய் தூளாக்கிய உப்பைப் பரப்பி அதற்குமேல் புஷ்பங்களைப் பரப்பி இவ்விதமாக மடக்கிக்கொண்டு ஜாடியின்மேல் வாய்வரையில் நிரப்பிக்கொண்டு நன்றாய் ஜாடியின்வாய்க்கு சீலை மண்செய்து ஒரு முழ ஆழத்தில் பூமியில் 40 நாள் புதைத்தெடுத்து ரசத்தைப் பிழிந்துகொண்டு ஒரு வெள்ளை புட்டியில் அதைவிட்டு கார்க்கடைத்து 40நாள் வெய்யிலிலும், 40 நாள் பனியிலும் வைத்தெடுத்துப்பின் உபயோகிக்கப் பரிமளம் மிகும்.

தாம்பூல கஸ்தூரி மாத்திரை.

Pansupari Kasturi Pills

2	விராகனெடை	கிராம்பு
2	,,	மாசிக்காய்
2	,,	ஜாதிக்காய்
2	,,	ஜாதி த்திரி
2	,,	வால்மிளகு
1	,,	குங்குமப்பூ
½	,,	கோரோஜனை
¼	,,	கஸ்தூரி
¼	சேர்	காசிக்கட்டி
¼	,,	கத்தக்காம்பு
¼	விராகனிடை	பெப்பர் மின்ட் உப்பு

மேற்கூறிய சரக்குகளை நன்றாய்த் தூள் செய்து சுத்தமான கலுவத்திலிட்டு பன்னீர் தெளித்து அரைததுக்கொண்டு சிறுபயறு பிரமாணத்தில் மாத்திரைகள் செய்துகொண்டு தாம்பூலத்துடன் உபயோகித்தால் ஜீரணசக்தியுண்டாவதுடன் வாய் நாற்றத்தைப்போகும்.

காடி செய்ய

Manifacture of Vinigar.

கொஞ்சம்பணத்தை மூலதனமாக வைத்துக் கொண்டு எவனும் இக்கைத்தொழிலைச் செய்து நல்ல பணம் சம்பாதிக்கலாம் காடிசெய்யும் முறைகீழ்வருமாறு.

25 காலன் (Galions) மழை ஜலம்.
4 காலன் ,, மௌலாசஸ் (Mavulases)
1 காலன் ,, ஈஸ்ட் (Yeast)

இவைகளைக்கலந்து தானாக பொங்கும்படி விடு. இந்த நீரை புட்டிகளில் நிறப்பி அழகாக லேபில் ஒட்டிக் கடைகளில் நியாயமான விலைக்கு விற்றால் நல்ல கிராக்கி ஏற்பட்டு இதைச் செய்யும் தொழிலாளிக்கு நல்ல லாபத்தை உண்டாக்கும்.

டாய்லெட் பௌடர்

TOILET POWDER.

போரிக் ஆஸிட் (Boric Acid) 1 oz. (அவுன்ஸ்) சீமைச் சுண்ணும்புத்தூள் (Precipitated chalk) 2 oz. ,,
டால்கம் தூள்(Powdered Talcum) 7 oz. ,,

இவைகளை ஒன்றாகக்கலந்து கொண்டால் வாசனை கமழும் தூளாகும்.

THE MANUFACTUER OF TOOTH POWDER.

பற்பொடி செய்யும் விதம்,

பற்பொடிகள் எல்லாம் மிருதுவானதாக விருக்க வேண்டும். அது தான் முதல் லக்ஷணம், பற்களின் மீதுள்ள ஒரு விதமான எனுமிலைக்கெடுத்து விடாமலும் இருக்கவேண்டும். இம்மாதிரி மெதுவாகவும் சன்னமாகவும் இருக்கவேண்டியதற்கு மைபோல் தூள் செய்யப்படவேண்டும். தூள் செய்தபிறகு மெல்லிய கண்களையுடைய சல்லடையில் சலித்தெடுக்க வேண்டும். துணியின் மூலமாக வஸ்திரகாயம் செய்யப்படவேண்டும். வர்ணமும் சேர்க்கப்படலாம்.

மேன்தால் பற்பொடி.

MENTHAL TOOTH POWDER.

மென்தால் கிரிஸ்டலிஸ் (Menthol crystals 12 grs.)
சாக்குத்தூள் (Precipitated chalk 2 £)
நாமக்கட்டித் தூள் (Kaotin powderd 1£.)
மைர் (Myrrah powderd 4 oz.)

லவங்க எண்ணெய் (Oil of Cloves) 4 Drops. (துளிகள்)
எலுமிச்சை எண்ணெய் (Oil of Lemon) 2 Dr. (டிராம்)

மென்தலை முதல் முதல் மேற்கூறிய எண்ணெய்களில் கல, பிறகு மெதுவாக சாக்தூளைக்கலந்து பிறகு மற்றவைகளைக் கலந்து கொள், எல்லாம் ஒன்றாக கலந்த பிறகு மெல்லிய சல்லடையில்சலித்துக்கொள் இம்மாதிரியான சிறந்த பற்பொடி இன்னும் ஒருவராலும் செய்யப்படவில்லை. மிக்க நூதனமானது பற்களைச் சுத்தமாக வைக்கும் ரத்தம் விழுவதை உடனே நிறுத்தும், ஒருவித நல்ல பரிமளத்தை வீசும்.

பெல்டன்ஸ் டெண்டிபிரிஸ்.

BELTON'S DENTIPRICE.

கட்டில் பிஷ் (Cuttle fish) தூள் செய்தது 4 பவுண்டு
வசம்புதூள் (Ovis rost) ,, 4 ,,
சீமை சுண்ணும்பு (Prepard chalk) 1 ,,
கஸ்தூரி (Musk) 8 கிரெயின்ஸ்
லவண்டர் தைலம் (Oil or Lavander Mitcham) 48 துளி
பன்னீர் (Otto Rose) 60 துளி
கார்மைன் (Carmine No 4) 2 டிராம்
அம்மோனியா ஜலம் (Aquna Ammonia) 5 டிராம்
ஜலம் (Water) 6 அவுன்ஸ்

இவைகளில் கார்மைன் என்பதை அம்போனியா ஜலத்தில்தேய்த்து சாதாரண ஜலத்தில் கரைத்து விடு. இந்த சலப்பில் சீமைச்சுண்ணும்புத்தூளையும், தூள் செய்த கட்டில் பிஷ்ஷையும் போட்டு கிளறு; ஈரம் எல்லாம் போன பிறகு வசம்புத்தூளை ஜலத்தில் போட்டு வாசனைத் திரவியங்களைச்சேர்க்க உயர்ந்த பற்பொடியாகும்.

தலைநோய் பாம் மருந்து

HEADACHE BALM.

வாசலேன் (செட்டி) (Vasaline heard) 1 £ பவுண்டு.
பாரபின் வாச்ஸ் (Paraffin wax) 3 oz அவுன்ஸ்
பெப்பர்மின்ட் கிரிஸ்டல்ஸ் (Pepparments cestal:) 2 oz.
ஓம உப்பு 2 oz அவுன்ஸ்.
கெஜபுட் ஆயில் (Cajaput oil) 2 oz. ,,

இவற்றில் வாசலேன்யும் பாரபின் வாச்ஸையும், உருக்கிக் கொண்டு கொஞ்சம் சூடுதணிந்த பிறகு மற்ற சாமான்களையும் சேர்த்துநன்றாய்க் கலக்கி சீசாவில் அடைத்துக்கொள்ளவும், தலைவலி சுளுக்கு, பக்கவாதம், தேள் கொட்டு முதலியவைகளை நீக்கும். அமிருதாஞ்சனம் போன்ற தலைவலி மருந்தாகும் இது.

ரோமசங்காரி பஸ்பம்

HAIR DESTIOYER.

பேரியம் ஸல்பைட் (Barium Sulphinde) 1 oz.
சாக்தூள் (Chalk powder) 1 oz.

இவ்விரண்டையும் தூளாக்கி ரஸ்திரசாயம் செய்து ரோமத்தை நீக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் பவுடருடன் தண்ணீர் சேர்த்துத் தடவி 10 நிமிஷநேரம் கழித்து கந்தத்துணியினுலாவது அல்லது மழுங்கிய கத்திமுனையினுலாவது அல்லது பருமனுன கார்ட்டினுலாவது பனை ஓலையினுலாவது துடைத்துவிட ரோமங்கள் அதியாச்சரியமாக நீங்கிவிடும். பிறகு ரோஜாமொக்கு ஊரவைத்த ஜலத்தால் கழுவிவிட துர்கந்தம் வீசாமல் பரிமளங்கமழும்,

ஜீரணசக்தியளிக்கும் பஸ்பம்

MANUEFACTURE OF DIGESTIVE POWDER.

பான்கிரியாட்டின் (Poncreatin) 3 பாகங்கள், ஸோடியம் பை கார்ப்பனேட் (Sodiom bi carbanate 16 பாகங்கள், மில்க் ஆப் சுகர் (Mil of Sugar) 2 பாகங்கள் இவைகளைக் கலந்து உண்ண ஜீரணசக்தியுண்டாகும்.

சலவைத் துணிகளுக்கு அடையாளமிடும் இங்கி

மார்க் இங்கி MARKING INK

அன்னபேதி 1 அவுன்ஸ்.
பவளமனேசிலை 1 "

இவ்விரண்டையும் நன்றாக மெல்லிய தூளாகச்செய்து வேண்டிய அளவு ஆளிவிரை எண்ணெயில் சேர்த்து கலக்கித் துணிகளுக்கு குறியிட அழியாமல் இருக்கும்.

சிவப்பு இங்கி-RED INK.

இயோசின் (Eosine) 2 oz.
விளாம்பிசின் 2 oz.
ஜலம் 200 oz.
ஸ்பிரிட் (Sprit) 4 oz.

ஜலத்தில் முதவிரண்டையும் கொதிக்கவைத்து பிறகு ஸ்பிரிட்டைச்சேர்த்துச்சீசாவில்அடைத்து எழுத நல்ல சிவப்பு இங்கியாகும்.

கேக்குகள்-Cakes.

மெல்லிய கோதுமைமாவு, வெள்ளை சர்க்கரை, வெண்ணெய் வகைக்கு 6 அவுன்ஸ், பிளம் Plum) என்று சொல்லப்படும் திராட்சப்பழவற்றல், கரன்ஸ் (Currant) என்று சொல்லப்படும் சிறு திராட்சப்பழவற்றல், சிற்றிரன் (Citron) என்று சொல்லப்படும் கற்கண்டு ஆமண்ட் (Almond) என்று சொல்லப்படும் வாதுமைப் பருப்பு வகைக்கு 3 அவுன்ஸ், 6 முட்டைகள், ஒரு தேக்கரண்டி பேக்கிங் பௌடர் (Baking Powder) என்று சொல்லப்படும் கேக் சுடுகிற மாவு.

வெண்ணெயை அடித்து மிருதுவாக்கி, சர்க்கரையைக்கூடக் கலந்து அடிக்கது, முட்டைகளின் மஞ்சள் கருவை வெண்ணெயோடுஞ் சர்க்கரையோடுங் கலந்து போகும் வரை கும் அடித்து, வெள்ளைக் கருவை வேறாக வெண்ணுரை கிளம்ப நன்றாய் அடித்து இவைகளுடன் சேர்த்து, நன்றாய் மாப்போல் அரைக்கப்பட்ட வாதுமைப் பருப்பையும், மிகச் சிறியதாய் நறுக்கப்பட்ட கற்கண்டையும், பேக்கிங் பௌடரையும், சுத்தஞ்செயயப்பட்ட திராசப் பழங்களையும் மாவையும் ஒன்றின்பில் ஒன்றாய்க் கூட்டுகையில் அடித்துக்கொண்டே இருந்து, எல்லாம் ஒன்றாய்க் கலந்தபின் வெண்ணைதடவிய அகன்ற பாத்திரததில் அவைகளை ஊற்ற வேண்டும். சுடும்போது கேக்கு பெரிதாக எழும்பும்; ஆகையால் இந்தப் பாத்திரம் சற்று பெரிதாக உயர்ந்திருக்க வேண்டும்.

இப்பலகாரங்கள் செய்வதற்கு ஐரோப்பியர் சாதாரணமாய் உபயோகிக்கும் இரும்பு அடுப்பே ஏற்றது. ஆபினும் அநேகருக்குப் பயன்படும்படியாய் நமது சாதாரண அடுப்பில் சாதாரண கேக்கு சுடும் முறையை இதன் கீழ்க் காட்டுகிறோம்.

பெரிய, அகன்ற, ஆழ்ந்த சட்டியொன்றில் சுத்தமான மணல் அரைவாசி போட்டு, அதிகச் சூடுண்டாக மணலை வறுத்து, கேக்கு இருக்கும் பாத்திரத்தை அதற்குள் எடுத்து வைத்து. ஏற்கனவே கரி நெருப்புப் போட்டிருக்கும் வேறொரு சட்டியை அடுப்பின்மேல் வைக்கப்பட்டிருக்கும் கேக்குடைய பெருஞ் சட்டிமேல் வைத்துவிட வேண்

டியது. அடுப்பில் நெருப்பு இருக்கப்படாது கீழ்ச் சட்டியிலுள்ள மணலின் சூட்டினாலும், மேற்சட்டியில் எரியாமல் பெரிகி கொண்டிருக்கும் கரி நெருப்பினாலும் ஒரு மணி நேரத்துக்குள் கேக்கு சுடப்பட்டு, புசிப்பதற்குத் தயாராகும். கேக்கு பெரியதாயிருந்தால் நேரம் அதிகஞ் செல்லும்.

கலியாணம் (Marrage) பிரந்த நாள் (Birthday) முதலிய சுப தினங்களுக்கென்று அழகுபடுத்த விரும்பினால் கொஞ்சஞ் சர்க்கரை எடுத்து, ஜலம் கிஞ்சித்தேனுஞ் சேர்க்காமல் மாப்போல் அரைத்து, முட்டையின் வெள்ளைக்கருவோடு சேர்த்து அடித்துப் பலசயாக்கி, கேக்கின்மேல் பூசி, கோலமிட்டு அலங்கரித்துவிட்டுவிட்டால் கொஞ்ச நேரத்தில் காய்ந்து அலங்காரமான கேக்காகும்.

கார்னேஷன் கேக்-Carnation Cake.

5 அவுன்ஸ் மெல்லிய கோதுமை மாவும், 8 பவுன் சர்க்கரையும் 8 முட்டைகளும் எடுத்து, மஞ்சள் கருக்களை சர்க்கரையோடுபோட்டு அடித்து, வெள்ளை கருக்களையும் வேறாக நன்றாய் அடித்துச் சேர்த்துக் கலக்கி, எலுமிச்சந் திராவகம் Lemon Essence) அதற்கு ருசி ஏற்றி, வெண்ணெய் தடவிய சிறி கேக்கு அச்சுகளில் வார்த்து சுட வேண்டும்.

பன்கள்-Buns.

மெல்லிய கோதுமாவு நாலுபங்கும், ஒரு பங்கு வெள்ளை சர்க்கரை சேர்த்து, சூடான பால்விட்டு பிசைந்துபிறை உற்றில் புளிக்க வைத்து ஒருபங்குவெண்ணையை உருக்கிச்சேர்த்து, உலந்த திராக்ஷப் பழம் கூடப் போட்டுக் கலக்கி, இவையாவும் தயார் செய்திருக்கும் மாவை வெண்ணெய்தடவிய தகரத்தின்மேல்பன்களாக்இரண்டுமூன்று அங்குலத் தூரத்திற் கொன்றாய் வரிசையாய் வைத்து சுடவும்.

கறிமசாலை-Curry Powder.

விசேஷமாய்ப் பெரிய குடும்பங்களுக்கும், பிரயாணிகளுக்கும் பயன்படும் மசாலைத் தூள் புட்டிகளில் அடைத்து அழகாக லேபில்கள் ஒட்டி லக்ஷம் கணக்கான புட்டிகள் மேல் நாடுகளுக்கு பிரதி கப்பலிலும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

10 பங்கு கொத்தமல்லி, 5 பங்கு மிளகு வற்றல், 2 பங்கு மஞ்சள், மிளகு, கடுகு, சீரகம், வெந்தயம் வகைக்கு 1 பங்கு.

இவற்றில் மஞ்சளை வறுக்காமலும், மற்றவைகளைத் தனித் தனியாய் இடித்துத் தூளாக்கிச் சலித்து மெல்லிய தூளை வைத்துக்கொண்டு, கப்பிகளை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து மெல்லியதூளாகும் வரை இடிக்க வேண்டும்.

ஒரு பங்கு வெள்ளைப்பூண்டு எடுத்து, நல்லெண்ணெய் தொட்டுக் கொண்டு தேய்த்துத் தோலைப் போக்கி, கல்லுரலிலிட்டு ஆட்டிப் பசையாக்கி, கொத்தமல்லித்தூள் கொஞ்சஞ் சேர்த்து வெயிலில் காய வைத்து, கப்பியில்லாமல் போம்வரை இடித்துச் சலித்து மற்றெல்லாத் தூள்களோடும் ஒன்றாகக் கலக்கவேண்டும்.

ஒரு பங்கு வெள்ளை உப்பெடுத்து, இடித்து சலித்து, மற்ற தூள்களோடு நன்றாய்க் கலந்து எல்லாத் தூள்களையும் மறுபடியும் சலிக்க வேண்டும்.

மூட்டுப்பூச்சி சம்மாரி. Bed Bug Destroyer.

ஆயல் ஆப் பென்னி ராயல் Oil of Penni Rayal ஒருஅவுன்ஸ் ஸ்பிரிட் ஆப் டர்பண்டயின்[Sprit of Turpentine] ஒரு பெரிய சீசா, மண்ணெண்ணெய் 3 பெரிய சீசா இவைகளுடன் கலந்து சிறிய சீசாக்களில் நிரப்பி வைத்துக்கொள். எங்கெந்த இடங்களில் மூட்டுப்பூச்சி வாசஞ்செய்து முட்டையிடுமோ அந்தந்தயிடங்களில் விட்டு வர அவைகள் அடியோடு நாசமாகும் ஒவ்வொரு வீட்டுக்கும் முக்கியமாதலால் இதனால் அதிக லாபம் சம்பாதிக்கலாம்.

பரிமள ஸ்நாநத்தூள்-Bathing Powder.

கஸ்தூரி மஞ்சள், சந்தனம், பூலாங்கிழங்கு, சடாமாஞ்சி, பச்சிலை, வாய் விளக்கம், கசகசா, கார்போக அரிசி, கிச்சிலிக்கிழங்கு கோரைக்கிழங்கு, வெட்டிவேர், குறிவிவேர், மருடம்பூ, தவநம், மரிக்கொழுந்து, புனுகு சட்டம் இவைகளை சமமாக எடுத்து சூரணித்து ஸ்நாநம் செய்துவர கற்றாழை நாற்றம் முதலிய துர் வாசனை நீங்கும்.

மெழுகு பிளாஸ்திரி-Wax Ointment

மெழுகு 3 அவுன்ஸ், தேங்காயெண்ணெ 7 அவுன்ஸ் இவ்விரண்டையும் ஒரு அகலவாய் சட்டியிலிட்டு சிறு நெருப்பின்மேல் வைத்து

நன்றாய் கரையுமட்டும் அடிக்கடி விடாமல் கலக்கி பின்பு சட்டியுடன் இறங்கி வைத்துக்கொள்ளவாவது அதை சூடுடனே வேறொரு பாத்திரத்தில் விட்டு வைத்துக்கொள்ளவாவது செய்யலாம். இதை புண்கள், தீபட்ட புண் முதலியவைகளுக்கு சீலையில் தடவி இட்டுக்கொள்ளவும்.

ரணபிளாஸ்திரி

பாங்கி சாம்பிராணி, தேன் மெழுகு, நல்லெண்ணெய் சமனிடை சேர்த்து சிறு தீயிட்டு உறுக்கி வடிகட்டிக்கொண்டு மேக ரணங்களுக்கு உபயோகிக்கலாம்.

சுகந்த பற்பொடி TOOTH POWDR.

உயர்ந்த சோப் (வெள்ளை)	8	அவுன்ஸ்
பிரஞ்சு சாக் (Chalk) தூள்	8	,,
வசம்பு (Orris root)	8	,,
வெள்ளை சர்க்கரை	14	,,
பன்னீர்	4	,,
லவுங்கத்தைலம் (Oil of Cloves)	60	துளி (drops)
பப்ரமின்ட் தைலம் (Oil of Peppermeut Strong)	½	oz

சோப்பைச் சிறு சிறு துண்டாக நறுக்கிப் பன்னீரில் போட்டு உருக்கு, தைலங்களைச் சர்க்கரை, வசம்பு. சாக் இவைகளுடன் சேர்ந்த பிறகு சோப்பு பன்னீருடன் கலந்து எல்லாம் ஒன்றாகநன்றாகக் கலக்கும் வரையில் அடிக்கடி கிளரிக்கொண்டிரு.

தந்த தாவள்ய கிரீம்-Dental Cream.

கீழ்க்காணும் முறையில் தயார் செய்த தந்ததாவள்ய கிரீம் பற்களைச் சுத்தப்படுத்துவதன்றியும் கெட்ட கிருமிகளைத்தொலைக்கும் அரிய சக்திபெற்றிருக்கிறது பரிமளமுமிகுந்தது.

சாக்குத்தூள் (Precipitated Chalk)	160	grains
சோப்பவுடர் (Soap powder)	45	,,
கோதுமைமாவு (Wheat Starch)	43	,,
கார்மைன் (Carmine)	1	,,
பெப்பர்மின்டு தைலம் (Oil of Pepperment)	30	மினிம்ஸ்

ஜெரேனியம்	(Oil of Garaniam)	30	,,
யூகலிப்டஸ் ,,	(Oil of Ecaliptus)	60	,,
லவங்க தைலம்	(Oil Clove)	12	,,
அநிஸீட் தைலம்	(Oi Aniseed)	12	,,

எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள். வேண்டிய அளவு கிளிஜரைனையும், ஆல்கஹாலையும் சரிசமமாக யெடுத்து குழம்பாகச் செய்து கொலாப் கிபில் குழாய்களில் அடைத்து விற்பனைக்குத்தயார் செய்.

சோடா பௌடர் Soda Powder.

ஏ. பாரம்

அஸ்கா சக்கரை ½ பவுண்டு
சூபகார்பனேட் ஆப்சோடா
(Super Carbnate of soda) 1 அவுன்ஸ்

இரண்டையும் எடுத்துக்கலந்து 80-பாகங்களாகப்பிரித்துத்தனித் தனி பொட்டலங்களாக மடித்துக்கொள்.

பி பாரம்.

4 டிராம் சிட்டிரிக் ஆசிட்டை 80 பொட்டலங்களில் போட்டுமடி ஒவ்வொரு பொட்ளத்திலும் ½ டிராம் இருக்கவேண்டும்.

முதலில் குறிப்பிட்டுள்ள பொட்டளத்தையும் பி. குறிப்புள்ள பொட்டலத்தையும் ஒரு பயின்ட் சுத்தமான ஜலத்தில்போட நல்ல முதல் தர சோடா பானமாகும்.

லைம் ஜூஸ்-Lime Juice.

சிட்டிரிக் ஆஸிட்	(Citric Acid)	6 அவுன்ஸ்	oz
பொட்டாஸியம் கார்பனேட்	(Pottasim Carponate)	½	oz
பரிசுத்தமான சர்க்கரை	(Pure Sugar)	8 அவுன்ஸ்	oz.
ஆயில் ஆப் லெமன்	(Oil of Leman)	1 dr	டிராம்
ஜலம்	(Water)	பைய்ன்ட்	(Pint).

லெமனேட் பவுடர்-Lemanade Powder

1. கட்டி சர்க்கரை (Lhaf Sugar) 1 பவுண்டு £
2. சிட்டிரிக் ஆஸிட் (Citrice Acid) ½ அவுன்ஸ் oz

3. கிச்சிலி எஸ்ஸென்ஸ் (Lemon Essece) ½ oz அவுன்ஸ்

முதல் குறிப்பிட்டுள்ள இரண்டு சரக்குகளும் நன்ருக மெல்லிய தூளாக இருக்கவேண்டும். இரண்டும் ஒன்ருகச் கலக்கப்பட்டிருக்க வும் வேண்டும். கடைசியில் மூன்ருவது எஸ்ஸென்ஸ் ஊற்றிக்கலக்க வேண்டும்.

இந்த பஸ்பத்தில் ஒரு டேபில் ஸ்பூன் எடுத்து ஒரு கண்ணுடி டம்பளர் ஜலத்தில் கலக்கப்பட நல்ல முதல்தரமான லெமனேட் பான மாகும். சோடா, லெமனேட் பானமாகும். சோடா, லெமனேட் கிடைக்காத பாகங்களிலும், இராக்காலங்களிலும், பிரயாணகாலங்களி லும் இவைகளின் அவசியமும் முக்கியம்.

இனிமையான பால் பவுடர்-Sweet Milk Powder

சோடா உப்பு (Sodiam Corpended) ½ டிராம் எடுத்து ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்துக்கொள். ஒரு குவார்ட் பாலில் ஒரு பவுண்டு சர்க்கரையைச் சேர்த்து இனிமையாக்கு இந்த விதம் கலந்த பாலுடன் மேற்கரைத்த ஜலத்தைச் சேர்த்துக் கொதிக்கவை. நன் ருகக் கண்டவை. பிறகு ஒரு தாம்பாளத்தில் ஊற்றி சிறு தீயின்மேல் வை. ஜலம்பற்றித் தூளாகும்.

வாசனை பேமெட்-Perfumed Pomade

உயர்ந்த வெள்ளை மெழுகு		8	அவுன்ஸ் oz
கொழுப்பு	(Tallow)	4	,, ,,
லார்ட்டு	(Lard)	13	,, ,,

இவைகளைச்சிறு தீயில் உருக்கு, அதில்,

ஆயில் ஆப்பெர்காமான்ட்	[Oil of Pergamnout]	20 துளி
ஆயில் ஆப் லெமன்	[Oil of Lemar]	10 ,,
லவங்கத்தைலம்	[Oil o Cloves]	6 ,,

வாசனை தைலங்கள் சேர்க்கப்படும்போது அடிக்கடி கிளறிக் கொத்துக்கொண்டிரு.

சிவப்பு முத்திரை அரக்கு-Scaling Wax.

ஆரெஞ்சு ஷெல்லாக் [Ornge Shallace] அரக்கு	3 £	பவுண்டு
வெனில் டர்ப் பெண்வட்ன [Venice Turpentins]	2	,,

வெர்மில்லியன் [Vermillion] 2 £ 4 oz
ஆயில் ஆப் சர்ப்பெஸ்டைன் [Oil of Terpentire] 8 oz
கார்பொனேட் ஆப் மெச்னீஷியா [Corbonate of Megnishia
12 oz.

வெர்மில்லியனேயும், கார்போனேட் ஆப் மெக்னீஷி யாவையும் நன்றாகச் கல டர்ப்பண்டென் கலந்து குழம்பாக்கு, இந்தக் கும்பில் அரக்கு வெனியி டர்ப்பண் டைன் உருகி தைக்கடைசியில் சேர். இது சிவப்பு முத்திரை அரக்கு.

சாயந்தோய்க்கும் சோப்புகள் Dyeing Soaps

4 அவுன்ஸ் தண்ணீரில் 2 டிராம் அனிலேன்வர்ணம் ஏதேனும் ஒன்றைக்கலந்து அத்துடன் 4 அவுன்ஸ் ஜின் [Gin] சேர். சாதாரண சோப்பைத்துண்டு துண்டாக்கி மேல் கூறியவற்றுடன் கலந்து குழம் பாகக்காச்சிய பின் அச்சுகளில் வார்க்கக் கட்டியாகும், மேற் கூறிய அளவு 2 பவுண்டு சோப் செய்வதற்கு போதுமானது.

சிவப்பு சாயத் தோய்கக முறை

2 தோலா சிவப்பு சாயத்தைத் தெளிவான சுடத்தண்ணீரில் கரைத்து கொதிக்கவை, கொதிக்கும்போது 1 டிராம் படிகாரம் 1 டிராம் கிரீம் ஆப் டார்டார் [Cream of Tartar] இவைகளேப்பொடி செய்து சேர் நிறம் பிரகாசமாய் வந்ததும் அடுப்பினின்று இறக்கிவிடு.

இதற்கு முன் தண்ணீரில் அலசிப்பிழிந்து நன்றாக மடித்த துணி ஷீ காய்ச்சியசாயத்தில் 1 பீஸ் தோய்த்து தண்ணீர் வடியவிட்டு நிழ லில் உலர்த்து.சாயம்கெட்டியாய் இருக்கும்.

ஆரோக்கியமான காபி எஸ்ஸென்ஸ்.

(*Health Coffee Essence*)

எத்தனேயோ பேர்கள், மெயில் ஆர்டர் பிஷினெஸ், என்று ஒரு தொழிலே ஆரம்பித்து நடத்திவருகின்றார்கள். அவர்கள் எல்லாம் பொருள்களேக் குறித்துவிளபரம் செய்து வைத்து ஆர்டர் வரும்பேது மற்றவர்களிடத்திலிருந்து வாங்கி அனுப்பி அதனுல் வரும்சமிஷனேக் கொண்டு சிறப்பாக வாழ்ந்து வருகின்றதை நாம்கண்ணூரக் கண்டு,ஒவ் வொரு சமயங்களில் நாமும் அத்தகையதொழிலேமேற்கொள்ள வேண் ண்டும் என்று விரும்புகின்றோம்.

நாம் தயார் செய்யப்புகும் சரக்கு எப்படியிருந்தல் வேண்டும் என்பதைப்பற்றி ஒவ்வொருவரும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். நமது சரக்கு ஒவ்வொருவருடைய வீட்டிலுமிருக்க வேண்டியதாகவும் நமது ஆகாரவகைகளில் சேர்ந்ததாயுமிருக்கவேண்டும் அப்படியிரு தால் தான் வருடமுழுவதும் நமது சரக்குக்குத் தேவை யதிகமாக விருக்கும்- அப்பொழுது தான் நமக்குப் பணம் பெருகிக்கொண்டே வரும்.

காபி எஸ்ஸென்ஸ் என்பதைக் குறித்துக்கீழ்விவரிப்போம். நம் மவர்களில் ஏழைமுதல் பணக்காரன்வரையில் ஜாதி,மதம் வித்தியாசமின்றியும் ஆண் பெண் சிறுவர் விருத்தர் வித்தியாசமின்றியும்குடிக்கப்பட்டுவருகின்றதை நாம் எல்லோரும் அறித்திருக்கின்றோம். அந்தக் காபி எஸ்ஸென்யைத்தயார் செய்து விற்றால் நல்ல விற்பனையும் லாபமும் கிடைக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட காபிஎஸ்ஸென்ஸை எவ்விதம் தயார் செய்து என்பதைப் பற்றிசி சிறிது கவனிக்கவேண்டும்.

ஆரோக்கியமான காபி எஸ்ஸென்ஸை தயார் செய்வது மிகவும் எளிது, கீழ்கண்ட விதம் செய்ய லேண்டும்.

முதல்தரமான வறுத்தகாபிதூள்	6 பவுண்டு எடை.
சிகரி தூள்	3 பவுண்டு எடை.

இவைகளை மூடிபோட்ட பாத்திரத்தில் 3காலன் (**Gallon**) தண்ணீரில் போட்டுக் கொதிக்கச் செய்ய வேண்டும். பிறகு அதை எடு ஆறவைத்து முழுவதையும் வடிடுக்கட்டிவிடவேண்டும். 3 காலன் எஸ்ஸென்ஸை ஆவதற்கு வேண்டியஅளவு காய்ந்து ஆறின நீரை விட்டுக் கொள்ள வேண்டும. இந்த எஸ்ஸென்ஸ்க்குக் கீழ்குறிப்பட்டுள்ளவைகளைச் சேர்த்துக்கொள்வேண்டும்.

சுத்தமான ஆல்கஹால் (**Alcohal**) முக்கால் பைண்டும்($\frac{3}{4}$**Pint**) 24 (**Fluid of**) திராவகஅவுன்ஸ் சுத்தமான கிளிஜரைனும் **Glycerine**) சேர்த்து 6 காலன் ஆவதற்கு வேண்டிய சிரப்பை (**Syrup**) சேர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றினைச் செய்த பிறகு, இஷ்டமான சீசாக்களில் வார்த்து லேபில் ஒட்டி ஒழுங்காக வைத்துவிற்பனை செய்ய வேண்டும். பார்ப்பவர்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வது வெளித் தோற்றம் தான் என்பதை ஒவ்வொருவரும் மனத்திற் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். மனிதரிலும் கூட ஆடையில் லாதவன் வைரமனிதன் என்று பழமொழி யிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ரோட்டி செய்யுந்தொழில் (Home Bakery).

ரொட்டி BREAD.

நல்லமாவு	(Good Flour)	17 பவுண்ட்
உப்பு	(Salt)	4 அவுன்ஸ்
ஈஸ்ட்	(Yeast)	5 ,,
வெந்நீர்	(Hot Water)	1 சேர்

முதன் முதலில் வெந்நீரில் உப்பைக் கறைத்துக்கொள். அதில் கொஞ்சம் மாவைப்போட்டு அதன்பிறகு ஈஸ்ட்முழுவதையும்போட்டு நன்றாகக் கலந்துக்கொள். சூடான பிரதேசத்தில் அவ்விதம் கலந்த மாவை தானாகப்பொங்கும்படி விட்டுவை. அதன்பிறகு மீதியிருக்கும் மாவிலியம் கொஞ்சம்போட்டு வெந்நீர் விட்டுக்கலந்து மூன்று அல்லது நான்கு மணிநேரம் வரையில் விட்டுவை. பிறகு மீதியுள்ள மாவைப் போட்டு நன்றாகப்பிசைந்து துடுப்பினால் அடித்து இழுத்து தட்டவேண்டும். பக்குவமாகவந்ததும் இந்தமாவை முன்னமேயே எண்ணெய் தடவி வைத்துள்ள தகரடப்பிகளில் வார்த்து ரொட்டி செய்வதற்கு என்று ஏற்பட்டுள்ளதனை அடுப்பின்மீது ஏற்றிவேகவைக்கவேண்டும்.

இரண்டாவது முறை.

நல்ல மாவு	(Good Flour)	2 பவுண்ட்
ஈஸ்ட் அல்லது கள்ளு	(Yeast Toddy)	6 அவுன்ஸ்
உப்பு .	(Salt)	3 ,,
படிக்காரம்	(Alum)	1 ,,

முதலில் வெந்நீரில் உப்பைக்கறை. அதில் மாவைச்சேர். ஈஸ்ட்டை முழுதிலும் சேர்த்து நன்றாகக் கலந்துக்கொள். பிறகு பொங்கும்படி 3 அல்லது 4 மணி நேரம்விட்டுவை. பிறகு வெந்நீரில் படிக்காரத்தைக் கரைத்து மேற்படி கலப்பில் ஊற்று. தகுந்தபதம் வரும் வரையில் மாவைப்பிசை பிறகு வார்ப்படத்தில் ஊற்றி வேகவைக்க வேண்டும்.

15

மூன்றாவது முறை.

நல்லமாவு	(Good Flour)	1 பவுண்டு
ஈஸ்ட்	(Yeast)	½ அவுன்ஸ்
உப்பு	(Salt)	1 டிராம்
பேகிங் பவுடர்	(Baking Powder)	2 தேக்கரண்டி

வெந்நீரில் உப்பைச்சறை இந்த ஜலத்தை மாவின்மேல் சொட்டு. இத்துடன் ஈஸ்ட்டையும் சேர் பிறகு 3 அல்லது 4 மணிநேரம் வரையில் புளித்துப் பொங்கவிடு. அதன் பிறகு பேகிங் பௌடரை நன்ருக கலக்கும்படிசெய்யவேண்டும். பிறகு அடித்துப் பிசைந்து வார்ப்படத்தில் ஊற்றி வேகவைத்து எடுத்துக்கொள்.

நான்காவது முறை.

நல்லமாவு	(Good Flour)	1 பவுண்டு
உப்பு	(Salt)	1 அவுன்ஸ்
ஈஸ்ட்	(Yeast)	1 டிராம்
கள்ளு	(Toddy)	1 அவுன்ஸ்

வெந்நீரில் உப்பைக்கரைத்து அந்தஜலத்தை மாவின்மேல் ஊற்று. பிறகு கள்ளைக்கலந்து நான்குமணிநேரம் புளிக்கவை. அதன் பிறகு ஈஸ்ட்டைக்கலந்து பிசை பிறகு எண்ணெய்தடவப்பட்டரொட்டி சுடும் தட்டுகளில் மாவைவார்த்து அடுப்பில் வேகவைத்து எடுத்துக்கொள். எண்ணெய் தடவுவதால் என்ன பிரயோஜனமென்றல் மாவு டப்பிகளில் ஒட்டிக்கொள்ளாமலிருக்கும். மிகவும் எளிதில் வெளியிலெடுக்கக்கூடும்.

ரோட்டி சுடுவதில் முக்கிய கவனிப்பு.

INSTRUCTION.

ரொட்டி சுடுவதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் சில உண்டு. முதன் முதலில் தாயிச்சரக்கான கோதுமை மாவு கூடிய வரையில் புதிதாக யிருக்கவேண்டும். பூச்சிகள் அடிக்கப்பட்டதையும் மக்கவாசனை யுடையதாகவும் இருக்கக்கூடாது. ஈஸ்ட் அல்லது

கள்ளு இவற்றால் கலக்கப்பட்டிருத்தல்வேண்டும். இராக்காலங்களில் தான் இந்த மாவு கலக்கப்பட்டு புளிக்கவைக்கவேண்டும், இவ்விதம் புளிக்கவைத்தால் தான் ரொட்டி மிகவும் லேசானதாகவும், உப்பிப் பெரியதாகவும் கடற்பஞ்சுபோல மெத்தென்று இருக்கும். அப்படிப் பட்ட மெத்தென்ற ரொட்டிகளுக்குத்தான் நல்லகிராக்கி மற்றவைகளை விட சற்று விலையுயர்த்தியபோதிலும் வாங்குவோர் மகிழ்ச்சியுடன் பெற மார்க்கமுண்டு.

டில்லி பிஸ்கட் (Delhi Biscuit).

நேர்த்தியான கோதுமை மாவு (Fine Flour) 2 பவுண்டு
கார்பொனேட் ஆப் அம்மோனியா (Cabonate of Ammonia) 3 டிராம்
வெள்ளை சர்க்கரை (White Sugar) 4 அவுன்ஸ்
ஆர்ரோ ரூட் (Arrow Root) 1 அவுன்ஸ்
வெண்ணை (Butter) 4 அவுன்ஸ்
முட்டை (Egg) 1 அவுன்ஸ்
பால் வேண்டியவரையில் (Milk)

ஒரு கோப்பையில் முட்டையின் உள்ளிருப்பதை ஊற்றிக்கொள். அதில் வெண்ணையைப்போட்டு அதை நன்றாகக் கையினால் கலந்து கிரீம்போலச் செய். அவ்விதம் அடித்து நுரைபோல் வந்ததை கோதுமை மாவில் ஊற்று. அதன் பிறகு மற்ற சரக்குகளைச் சேர்த்து கொஞ்சம் கொஞ்சமாக வேண்டுமான பாலை ஊற்றிக்கலந்து பிசைந்து உருளையாக நீட்டி கால் அங்குல கனத்துக்கு தட்டையாகத்தட்டி குச் செடுத்து மேற்புறத்தில் குத்தி டை ஸ்டாம்பினால் அழுத்திக்கொள். இவ்விதம் தயார்செய்யப்பட்ட துண்டுகளை சாதாரணமான தீயில் எரியும் அடுப்பில் 15 நிமிஷநேரம் வரையில் வேகவிடு. சூடாக இருக்கும்போதே தகர டப்பிகளில் அடக்கம் செய்தால் அவைகள் நீண்ட காலம் வரையில் கெடாது

லில்லி பிஸ்கட்டு (Lilly Biscuit)

மாவு (Flour) ½ பவுண்டு
கார்பொனேட் ஆப் ஸோடா (Carbonate of Soda) 15 கிரெய்ன்ஸ்
சர்க்கரை (Sugar) 2 அவுன்ஸ்
பால் (Milk) 4 ,,

வெண்ணெயை நுரைகிளம்ப அடித்து மாவை அதில் கல. பிறகு சோடாவைச்சோத்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்கும்படி பால் விட்டுப் பிசைந்துக்கொள். இந்த மாவை உருளையாக உருட்டு. கால் அங்குல கனத்திற் துண்டுகளாகச் செய்து மேற்புறத்தில் குச்சுகொண்டு பல குத்துகள் குத்தி அடுப்பிய் வேகவைத்து டப்பிகளில் அடக்கம் செய்.

ராயல் பிஸ்கட்டு (Royal Biscuit)

கோதுமை மாவு	(Flour)	1 பவுண்ட்
சர்க்கரை	(Sugar)	4 அவுன்ஸ்
வெண்ணெய்	(Buttur)	6 ,,
கார்பொனேட் ஆப் அம்மோனியா (Carbonate of Ammonia)		1 டிராம்
முட்டைகள்	(Eggs)	2 டிராம்
காடி	(Vingar)	தேவையானமட்டும்

வெண்ணெயையும் சர்க்கரையையும் கோதுமை மாவுடன் கல. பிறகு கார்பொனேட்டைச்சேர். முட்டைக் கருவை அடித்து காடியில்சேர்த்து மாவைப் பிசைந்துக்கொள். மேற்கூறியபடி செய்து அடுப்பில் சுடு.

ஹோம் பிஸ்கட்டு (Home Biscuit)

மாவு	(Flour)	2 அவுன்ஸ்
சர்க்கரை	(Sugar)	,,
லைம் மர்மால்டி	(Lime Marmalete)	½ ,,
முட்டை	(Eggs)	3 ,,

முட்டைகளிலுள்ள வெள்ளைக் கருவையும் மஞ்சட் கருவையும் தனித்தனியாக வேறுபடுத்திக்கொள். வெள்ளைக்கருவை ஒரு கிண்ணியில்போட்டு மரக்கரண்டியால் நுரை கிளம்பும் வரையில் அடி. பிறகு மர்மால்டியைத் தூளாக்கிக்கல. இப்போது மாவையும் சர்க்கரையையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர். அத்துடன் நுரைகிளம்ப அடி

க்கப்பட்ட முட்டைக்கருவையும் சேர். கரண்டிக்கொண்டு எல்லாவற்றையும் நன்ருகக்கிளறிக்கலந்து உருளையாக உருட்டி கால் அங்குல கனத்தில் துண்டுகள் துண்டித்து முன்போல குச்சைக்கொண்டு குத்தி அதன் மேற்புறத்தின்பேரில் அஸ்காசர்க்கரையைத் தூவு அப்புறம் பேருள்ள டையை அழுத்தி எண்ணெய் காகிதத்தின்மேல் அத்துண்டுகளை எடுத்துவைத்து பிறகு அடுப்பினமேல் வேகவைக்கவும். அதிகமாகத்தீயிடின் காய்ந்துவிடும் என்பதை அறியவும்.

கார்நேஷன் பிஸ்கட்டு (Cornation Biscuit)

ஆர்ரோ ரூட்	(Arrow Root)	1 பவுண்ட்
வெண்ணெய்	(Butter)	4 அவுன்ஸ்
சர்க்கரை	(Sugar)	,,
காடி	(Vingar)	வேண்டியவைமட்டும்

எல்லாச்சரக்குகளையும் ஒன்ருய்ச்சேர்த்துக் கலந்து உருளையாக உருட்டி கால் அங்குல கனத்தில் துண்டுகளாக்கி முன்போல செய்து அடுப்பில் சுடு.

பட்டர் பிஸ்கட்டு—Butter Biscuit

மாவு	(Flour)	2 பவுண்ட்
வெண்ணெய்	(Butter)	4 ,,
சர்க்கரை	(Sugar)	6 அவுன்ஸ்
சுக்குத்தூள்	(Ginger Powder)	2 ,,
பால்	(Milk)	தேவையானமட்டும்

எல்லாச் சரக்குகளையும் ஒன்ருகக் கலந்து பிசைந்துக்கொள். உருளையாக உருட்டி கால் அங்குல கனத்திற் இரண்டங்குலம் வீத்துள்ள துண்டுகளாகச்செய்து மேற்புறத்தில் குச்சைக்கொண்டுப் பல குத்துகள் குத்தி டையினுல் அழுத்தி பிறகு வேகவைத்து சூடாக இருக்கும்போதே டப்பிகளில் பாக் செய்யவும்.

ராயல் கேக்கு—Royal Cake

மாவு	(Flour)	1 பவுண்டு
சர்க்கரை	(Sugar)	,,
ஆமண்ட்ஸ்	(Almonds)	½ ,,
முட்டைகள்	(Eggs)	7 ,,
லைம் ஜூஸ்	(Lime Juice)	1 ,,
பன்னீர்	(Rose Water)	தேவையானமட்டும்

சர்க்கரையை நன்றாகத் தூள் செய்யப்பட்டும் சலிக்கப்பட்டிருக்கவும் வேண்டும். ஆமண்டுகளின் தோலுரிக்கப்பட்டு பன்னீரால் ஊறப்படவேண்டும். முட்டைகளின் வெள்ளைக் கருவையும், மஞ்சட் கருவையும் தனித்தனியே எடுக்கப்பட்டு அரைமணிநேரமட்டும் நுரை கிளம்ப அடிக்கப்படவேண்டும். மாவு தவிர மற்ற எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து அரைமணிநேரமட்டும் அறைக்கப்பட வேண்டும். பிறகு மாவைக்கலந்து நன்றாகப் பிசைந்துக்கொள். இந்த தயார்செய்த மாவை தேவையான வடிவமாகவும் அளவாகவும் செய்துக்கொண்டு காகிதத்தால் சுருட்டி மிக்க ஜாக்கிரதையாக அடுப்பிலேற்றிச்சுடவேண்டும்.

எம்பரர் கேக்—Emperor Cake

மாவு	(Flour)	2 பவுண்ட்
சர்க்கரை	(Sugar)	1 ,,
வெண்ணெய்	(Butter)	1 ,,
நட்மெக்	(Nutmeg)	1 அவுன்ஸ்
ஜாதிக்காய்	(Mace)	½ ,,
கர்ரென்ட்ஸ்	(Currants)	2½ பவுண்ட்
ஆமெண்ட்ஸ்	(Almonds)	½ ,,
ஆரென்ஞ் மர்மால்டி	(Oranje Marmalde)	½ ,,
பிராந்தி	(Brandy)	10 அவுன்ஸ்
ஆரென்ஞ் பிளவர்வாடர்	Oranje Flour water	3 காண்டி
முட்டைகள்	(Eggs)	16

வெண்ணெயை கிரீம்போல அடித்து அதில் சர்க்கரையைச் சேர் நுரைகிளம்ப அடிக்கப்பட்ட முட்டையின் வெள்ளைக் கருவை இத்துடன் இதைப்போலவே மஞ்சட்கருவையும் அடித்து சேர். வாசனைத் திரவியங்களைத் தூள்செய்தும், ஆமென்ட்ஸ்களைத் தூளாக்கியும் சேர். இப்போது எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகச்சேர்த்துப் பிசைந்துக் கொள். விருப்பப்படி அளவாகவும், வடிவமாகவும் செய்துக்கொள் வெண்ணெயை உட்பக்கம் தடவப்பட்டும் எண்ணெய்க்காகிதம்போடப் பட்டுள்ள தகரடப்பிகளில் வைத்து சாதாரண தீயுள்ள அடுப்பில் இரண்டுமணிநேரம் வரையில் வேகவைக்கவேண்டும். இல்லாவிடில் அதில் சேர்க்கப்பட்டுள்ள சரக்குகள் எல்லாம் நன்றாக வேகாமற்போய்விடும். மிகஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இல்லாவிடில் காய்ந்து கருகிப்போய்விடும்.

ராயல்கேக்—Royal Cake

மாவு	(Flour)	$2\frac{1}{2}$ பவுண்ட்
கர்ரென்ட்ஸ்	(Currents)	$\frac{1}{2}$,,
வெண்ணெய்	(Butter)	$\frac{1}{2}$,,
நட்பெக்	(Nutmeg)	$\frac{1}{2}$ டிராம்
முட்டைகள்	(Eggs)	14 ,,
ரெய்சின்ஸ்	(Raisins)	12 அவுன்ஸ்
சர்க்கரை	(Sugar)	18 ,,
கான்டிட் ஆரென்ஞ்	Candid oranje)	3 ,,
,, லைம்	(Lime)	3 ,,
ஜதிக்காய்	(Male)	$\frac{1}{4}$ டிராம்
பிராந்தி	(Brandy)	1 கப் நிறைய
ஆரென்ஞ் வாடர்	(Oranje water)	4 கரண்டி நிறைய

முதலில் வெண்ணெயை எடுத்து கிரீமாக அடி. பிறகு சர்க்கரைக் கல. அதன் பிறகு முட்டைகளை அதிகமாக நுரைவரும் வரையில் அடி. இப்போது பிராந்தி தவிர எல்லாச்சரக்குகளையும் ஒன்றாகக் கல அரைமணிநேரம் வரையில் விடாமல் பிசை. கொஞ்சங்கொஞ்சமாக பிராந்தியைக்கலந்து முன்போல செய்து அடுப்பில் சுடு.

பர்த்டே கேக்—Birthday Cake

மாவு	(Flour)	1 பவுண்ட்
சர்க்கரை	(Sugar)	1 ,,
ரெய்சின்ஸ்	(Raisins)	1 ,,
வெண்ணெய்	(Butter)	1 ,,
முட்டைகள்	(Eggs)	10 ,,
எலுமிச்சை எண்ணெ	(Lemon Oil)	1 அவுன்ஸ்

வெண்ணெயைக் குழைத்து சர்க்கரையைச் சேர். அதிகமாக நுரைகிளம்பும்படி முட்டைகளை அடித்துச் சேர். ரெய்சின்ஸையும் எலுமிச்சை எண்ணெயில் சில துளிகளையும் சேர்த்துக்கல. கடைசியில் மாவைச்சேர்த்துப் பிசைந்த பிறகு மேலே கூறப்பட்டுள்ளபடிச் செய்து அடுப்பில் சுடு.

வெட்டிங் கேக்—Wedding Cake

மாவு	(Flour)	4 பவுண்டு
சர்க்கரை	(Sugar)	3 ,,
வெண்ணெய்	(Butter)	4 ,,
முட்டைகள்	(Eggs)	3 டஜன்
பன்னீர் .	Rose water)	5 கரண்டி நிறைய
கார்ரவே ஸீட்	(Carraway Seed)	6 அவுன்ஸ்
டிஞ்சர் சின்னமன்	(Tincture Cinnamon)	சில துளிகள்

சுத்திசெய்த சர்க்கரையை எடுத்து தூள்செய்து ஜலித்துக்கொள் அதை அடுப்பின் பக்கத்தில் சூடாயிருக்கவை. வெண்ணெயை ஆழமான பாத்திரத்தில் வைத்து கிரீம்போலாக அடி. முட்டையின் கருவையும், வெண்ணைக்கருவையும் தனித்தனி அடித்துக்கொண்டு அவைகளை வெண்ணெயில் நன்றாகக்கலக்கும்படி செய். பன்னீரையும், பிறகு கார்வே விதைகளையும், சர்க்கரையையும், மாவையும் கலந்துக்கொள். இரண்டுமணிநேரம் வரையில் பிசைந்த பிறகு டிஞ்சர் சின்னமன் வாசனைத் திரவியத்தையும் சேர்த்து தேவையான வடிவமாகச்செய்து 3 மணி நேரம் வரையில் சாந்தமான தீயில் வேகவை.

LOVE CAKE.

லவ் கேக்

நல்லமாவு	Fine Flour	1 பவுண்டு
சுத்திகரித்த சர்கரை	Refined Sugar	1 ,,
வெண்ணை	Butter	8 ,,
முட்டைகள்	Eggs	4 ,,
உயர்ந்தபேரிச்சம்பழம்	Drydates	½ ,,
பாதாம் பருப்பு	Almond	½ ,,
குங்குமம்	saffron	½ தோலா
பிராந்தி	Brandy	5 அவுன்ஸ்
பன்னீர்	Rose water	2 காண்டி

முதன் முதலில் வெண்ணையைக் குழைத்துச் சர்க்கரையைக் கலந்து முட்டையில் வெள்ளைக்கரு, மஞ்சட்கருக்களைத் தனித்தனி அடித்துச் சேர்த்துக்கொள் பிறகு ஒவ்வொன்றுகச் சேர். மாவு, குங்குமம், பிராந்தி, பன்னீர் இவைகளைச் சேர்த்து நன்றுகப் பிசை. பிறகு பேரீச்சம்பழத்தை உடைத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கும். பாதம்பருப்பை தூவி பெட்டி தயார் செய்யப்பட்டதில் போடு. பிறகு கேக்காகச் செய்து ஜாக்கிரதையாகச் சுடவேண்டும்.

PICKNICK CAKE.

பிக்னிக் கேக்.

நல்லமா வு	Fine flour	1 பவுண்ட்
சர்கரை	Sugar	1 ,,
வெண்ணை	Butter	1 ,,
ஈஸ்ட்	Yeast	1 கப்
கார் ரவே	Carraway	1 அவுன்ஸ்
முட்டைகள்	Eggs	5 ,,

மாவை வெண்ணையுடன் கல. முட்டைகளை ஈஸ்டுடன் அடித்துக்கொள். பிறகு சர்க்கரையைக்கல. நுரையை மாவின்மீது ஊற்று. கார்ரவேயைத் தெளித்துப் பிசைந்து சிறு சிறு கேக்குகளாகச் செய்துச் சுடு.

GOODMARNING CAKE.

குட்மார்னிங் கேக்.

கோதுமை மாவு	Flour	3	பவுண்டு
வெண்ணை	Butter	2	,,
சர்க்கரை	Sugar	2	,,
முட்டைகள்	Eggs	2	டஜன்
நட்மெக்	Nutmeg	2	டிராம்
ஜாதிக்காய்	Male	2	,,
பிராந்தி	Brandy	2	கரண்டி
ரெய் சின்ஸ்	Raisins	4	அவுன்ஸ்

வெண்ணையைக் குழைத்து அத்துடன் கோதுமை மாவையும் சர்க்கரையையும் கலந்துக்கொள். 24 முட்டைகளின் மஞ்சள் கருவையும், அவைகளில் 12 முட்டைகளின் வெள்ளைக்கருவையும் சேர். வொயின்விட்டு நன்ருகப் பிசைந்துக்கொள். இப்போது நட்மெக், ஜாதிக்காய், ரெய்சின்ஸ் இவைகளையும் சேர். கேக்குகளாகச் செய்து சுடு.

EVENING CAKE.

ஈவினிங் கேக்.

நல்லமாவு	Flour	1	பவுண்ட்
சர்கரை	Sugar	1	,,
வெண்ணை	Butter	1	,,
பன்னீர்	Rosewater	2	கரண்டு
வெள்ளை வொயின்	White wine	2	,,
முட்டைகள்	Eggs	10	,,

மாவு, சர்க்கரை, வெண்ணை இவைகளை நன்ருகக் கலந்துப் பிசைந்து பதமான பிறகு பன்னீர், வொயின் முட்டையின் கரு இவைகளைச் சேர். நன்ருகக்கலக்கும்படிச் செய். கேக்குகளாகச் செய்து வெண்ணை தடவிய வார்ப்பட அச்சுகளில் வைத்து சுடு.

ROYAL BALL CAKE.

ராயல் பால் கேக்.

மாவு	Flour	9 பவுண்டு
உப்பு	Salt	1 கரண்டி
ஏலக்காய்	Cinnamon	½ அவுன்ஸ்
ஜாதிக்காய்	Mace	2 டிராம்
இலவங்கம்	Cloves	1 ,,
நட்மெக்	Nutmeg	1 ,,
சர்கரை	Sugar	12 அவுன்ஸ்
வெண்ணெ	Butter	1½ பவுண்டு
கிரீம்	Cream	1 குவார்ட்
ஏல் ஈஸ்ட்	Ale yeast	1 பைண்ட்
வொயின்	Wine	5 அவுன்ஸ்
அம்பெர்ஜிரீஸ்	Ambergreis	3 கிரெயின்
முட்டைகள்	Eggs	8 ,,
பன்னீர்	Rosewater	5 அவுன்ஸ்
கர்ரண்ட்ஸ்	Currents	1 பவுண்ட்
ரெய்சின்ஸ்	Raisins	3 ,,

வாசனைத்திரவியங்களைப் பொடி செய்து ஜலித்துக்கொள். முட்டைகளின் வெள்ளைக்கரு, மஞ்சட்கருவையும் தனித்தனியாக அடித்துக்கொள். நான்கு முட்டைகளின் வெள்ளைக் கருவை மட்டும் பன்னீரில் கல. பிறகு வாசனைத் திரவியங்களையிம் உப்பையும் சேர்த்துக் கொள். பிறகு சர்க்கரையைச்சேர். வெண்ணெயோடு மாவை மூன்று மணிநேரம் விடாமல் பிசைந்து ஈஸ்ட், வொயின் அம்பர்ஜிரீஸ், பன்னீர் இவைகளையும் சேர். அடுப்பின் அருகில் பக்குவம் செய்த மாவை மூன்று மணிநேரம் வரையில் வைக்கவேண்டும். கடையியாக அவைகளை கேக்குகளாகச் செய்து சுடு.

LEMONADE POWDER.

லெமனேட் பவுடர்.

லெமன் எஸ்ஸென்ஸ்	Lemon Essence	10	அவுன்ஸ்
அஸ்கா சர்க்கரை	Aska Sugar	16	,,
பைகார்பனேட் ஆப் சோடா	Bicarbonate of Soda	15	,,
டார்டாரிக் ஆஸிட்	Tartaric Acid	20	,,

இவற்றில் சர்க்கரையை மற்றவைகளுடன் சேர்த்துச் சீசாவில் அடைத்துக்கொண்டு வேண்டும்போது ஒரு டம்ளர் ஜலத்தில் ஒருதேக் கரண்டி பவுடரைப் போட்டுக் கலந்து சாப்பிட நல்ல லெம்னேட் பானமாகும்.

இரண்டாம் முறை.

சர்க்கரை	Sugar	1	பவுண்ட்
சோடா உப்பு	Soda-bicarb	4	அவுன்ஸ்
டார்டாரிக் ஆஸிட்	Tartaric Acid	3	,,
எலுமிச்சை எஸ்ஸென்ஸ்	Lemen Essence	1½	,,

இவைகளைப் பொடிசெய்து ஒன்றுகச்சேர்த்து புட்டியிலிட்டு கார்க்கிடவும். இந்தப் பவுடரில் ஒரு தேக்கரண்டி ஒரு கண்ணுடி டம்ளர் நிறைய லெமனேட் செய்யப்போதுமானது. இந்த லெமனேட் பிரயாணம் செய்வோர்களுக்கு மிகவும் அவசியமானது. இந்தப் பவுடர் செய்யுங் கைத்தொழிலை மேற்கொண்டால் எப்பொழுதும் கிராக்கி ஏற்பட்டுக்கொண்டிருக்கும். அத்துடன் நல்ல லாபமும், விற்பனையும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தொழிலை ஒருவர்மேற்கொண்டு நல்ல ஊதியம் பெற்றிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஐந்து ரூபாய் மூலதனம் இருந்தால் இந்தத் தொழில் செய்யப் போதுமானது நாள் ஒன்றுக்கு ஒருரூபாய்க்குக் குறையாமல் லாபம் கிடைப்பது உறுதி. இந்த லெமனேட் செய்யும் முறையை சிறுதுண்டு காகிதங்களில் வெகு அழகாக அச்சிட்டுபுட்டிகளின்மீது நன்றாக ஒட்ட வேண்டும்.

OINTMENT FOR SHARPENING CUTTERY.

கத்தியை கூரரத்தீட்ட களிம்பு

வாய் குறுகிய பாத்திரத்தில் சமபாகமான உப்பு, ஐரன் சல்பேட் Iron sulphate இவைகளை அடுப்பின்மேலேற்றிய பிறகு தூள்செய்து ஜலித்துக்கொள். இந்தத் தூளை கொழுப்புடன் கலந்து உபயோகப் படுத்தவும். இந்தக் களிம்பை தகர டப்பிகளில் போட்டு அதன்மேல் அழகாக லேபில் ஒட்டவும். 5 ரூபாய் மூலதனத்தை வைத்துக்கொண்டு பத்துரூபாயும் அதற்கு அதிகமும் லாபமாகப் பெறலாம்.

SOAP MAKING HOT PROSES.

சோப் செய்யும் சூடான முறை.

சோப் செய்வதில் முக்கியமான தாய்ச்சரக்கு காஸ்டிக்லே நீர் என்பது. அது செய்யப்படும் விதம்:—சோப் செய்வதற்கு ஆற்று நீராவது ஊற்றுநீராவது உபயோகப்படுத்தவேண்டும். அந்த நீர் மிகவும் சுத்தமாகவும் தெளிவாகவு மிருக்கவேண்டும் இல்லாவிட்டால், வேலைசெய்ய முடியாது. லே என்பது காஸ்டிக் பொட்டாஷினாலும், உண்டாகின்ற நீருக்கு 'லே' என்று பெயர். இது கொழுப்புள்ள வஸ்துவைப் பிரித்து சோப்பாக மாற்றுகிறது.

10	பவுண்டு சோடா	Washing Soda
5	,,	சுண்ணும்புநீர்
50	,,	தண்ணீர்

இவைகளில் சோடாவையும் சுண்ணும்பு நீரையும் தண்ணீருடன் சேர்த்து ஒரு மணிநேரம் சுடவைக்கவும் அப்படிச் சுடவைத்த நீரைத் தொட்டியில் ஊற்றித் தெளிவு நீராகவரும் தண்ணீருக்குத்தான் காஸ்டிக் லே என்று பெயர்.

சோடாவிற்குப் பதிலாக பொட்டாஷ் சேர்த்து உண்டாகின்ற தண்ணீருக்குப் பொட்டாஷ் லே என்று பெயர்.

34 பவுண்டு தேங்கா யெண்ணை
2¾ „ மாட்டுக்கொழுப்பு
5½ காலன் சோடா லே
1 காலன் பொட்டாஷ் லே

இவைகளில் கொழுப்பையும் தேங்கா யெண்ணையும் பெரிய இரும்பு கடாரத்தில் அரை அவுன்ஸ் ஸல்பூரிக் ஆஸிட் Sulphuric acid 1 அவுன்ஸ் ஐடிரோக்ளோரிக் ஆஸிட் Hydrochloric acid ஊற்றி அடுப்பில் வைத்துச் சுட கடாரத்தில் வைக்கவும்.

சோப் பொங்கவைத்திருக்கும் கடாரத்தில் பக்கங்களில் தீ கொடுத்தால் அந்தச் சோப் தீய்ந்துபோய்விடுமாகையால் கீழ்த்தட்டுக்கு மாத்திரம் தீயிருக்கவேண்டியது: கடாரத்திலுள்ள வஸ்துக்களை நீராவியினால் சூடாக்கினால் மிகவும் நலம். எண்ணையையும் கொழுப்பையும் நன்றாய் சூடாக்கிக்கொண்டு லே என்னும் காஸ்டிக் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு நன்றாய்க் கலக்கிக்கொண்டு வரவேண்டியது. சிலர் லே காரத்தை முழுமையும் முதலிலேயே சேர்க்கின்றார்கள். சிலர் கொஞ்சமாகச் சேர்க்கின்றார்கள். சரியான பக்குவம் வந்து விட்டதா வென்று பார்க்கக் கொஞ்சநேரத்திற்கொருதரம் கொதித்திருக்கும் சோப்பைத்தொட்டு நாக்கின் நுனியில் வைத்துப்பார்க்கவேண்டும். நாக்கு எரிப்புக் கொடுத்தால் காரம் இன்னும் இருக்கிறதென்றும் நன்றாகக் காய்ச்சி சோப்பு தித்திப்பான சுவையைக் கொடுக்கின்றவரையில் கலக்கு. கலக்கும் குச்சியை எடுத்தால் நூல் போல ஓடினாலும் மாதிரிக்காக ஒரு சிறு கரண்டியினால் சூடாயிருக்கும்போது எடுத்துக் கையால் தொட்டால் கைக்கு ஒட்டக்கூடாது. இது பக்குவம் எனத்தெரிந்து ஒரு பவுண்டு உப்பைக் கொதிக்கும் சோப்புடன் சேர்க்கவும். சோப் பக்குவமான பிறகு 15 நிமிடம் குளிரவைத்து இஷ்டமான நிறத்தையும் மணத்தையும் சேர்த்து சதுரம்மேட்டிற்கு முன் குளிர்ந்த துணியால் துடைத்துப் பொங்கின சோப்பை ஊற்றி மூடி மூன்று நான்கு நாள் சென்று அறுத்துக்கொள்ளவும். இம்முறைக்குத்தான் சூடான முறை என்று பெயர்.

சோப்பின் பற்பல தினுசுகளும் அவைகளின் செய்முறைகளும்

Different kinds of Soaps and their Manufacture.

BAR SOAP.

பார் சோப்

கொழுப்பு	15	பவுண்டு
ரோசனம்	56	,,
சுண்ணும்பு நீர்	28	,,
எண்ணெ	10	,,
சோடா	15	,,
தண்ணீர்	56	,,

இதில் சோடா, சுண்ணும்பு தண்ணீர் இவைகளைச் சேர்த்துக் கொதிக்கவைக்கவும். கொழுப்பு எண்ணெ, ரோஜனம் வேறு பாத்திரத்தில் ஊற்றிச் சுடவைக்கவும் பிறகு சுடவைத்திருக்கும் யெண்ணெ வஸ்துக்களுடன் காரமான தண்ணீர்கொடுத்து 15 நிமிஷநேரம் கலங்கி கொதிக்க சோப் பதம் வந்ததும் பெட்டியில் ஊற்றி வேண்டியபடி அறுத்துக்கொள்ளவும்.

வாசனை சோப்பு செய்யும் முறைள்.

ரோஜா வாசனை சோப்—*Rose Toilet Soap.*

5 பவுண்டு தேங்கா யெண்ணை சோப்

¼ பைன்ட் ஜலம்

2	டிராம்	ஆட்டோ ஆப் ரோஜ்	Otto of Rose
1½	,,	பெர்கமான்ட் தைலம்	Bergamont Oil
1½	,,	ஆயில் ஆப் சின்னமன்	Oil of Chinnamon
1½	,,	லவங்க தைலம்	Oil of Cloves
½	,,	ரோஜ் ஜரேனியம்	Oil of Rose geranium

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அந்தப் பாத்திரத்தின் நடுவில் மவொரு பாத்திரத்தை வைத்து தண்ணீரின் ஆவியினுல் பாத்திரத்திலுள்ள சோப் உருகியவுடன் கொஞ்சம் குளிரவைத்து மற்றச் சரக்குகளை அதில் கலந்துக்கொண்டு அச்சில் ஊற்றிக்கொள்ளவும்.

VANILLA SOAP.

வனில்லா சோப்

தேங்காயெண்ணை		25	கிலோஸ்
கொழுப்பு	Tallow	25	,,
அடெப்ஸ் லேனே	Adeps lanae	2	,,
சோடா லே		25	,,
பிரகாசமான நீலநிறம்	Brilliant Brown	14	கிராம்ஸ்
சுல்டானு மஞ்சள்	Sultana yellow	3	,,
பாம்ரோசா ஆயில்	Palma-rosa oil	30	,,
லவங்கத்தைலம்	Oil of cloves	40	,,
லவண்டர் ஆயில்	Lavender oil	40	,,
பெருவியின் பால்சம்	Peruvian balsam	80	,,
டிஞ்சர் ஆப்பன்ஜாயின்	Tinctur of Benzoin	150	,,
,, வெனில்லா	Tinctur of vanilla	250	,,

VIOLET SOAP.

வயலெட் சோப்

தேங்காயெண்ணெய்		48	கிலோஸ்.
கெழுப்பு	Tallow	2	”
அடெப்ஸ் லேனே	Adeps lanae	1	”
சோடாலே 38·B.		25	”
பிரிலியன்ட் பிரௌன்	Brillant browon	16	கிராம்
சின்னபார்	Cinnabar	50	”
லவண்டர் ஆயில்	Lavunder oil	308	”
பெருவியன் பால்சம்	Peruvian balsam	220	”
காச்சியா ஆயில்	Cassia oil	56	”
டிஞ்சர் ஆப் மஸ்க்	Tincture of musk	20	”

VICTORIA SOAP.

விக்டோரிய சோப்

தேங்காயெண்ணெய்		25	கிளோஸ்
கொழுப்பு	Tallow	25	,,
அடெப்ஸ் லேனே	Adeps lanae	1	,,
சேடா லே	Soda lye of 376	25	,,
ஓரியன்டல் ரோஸ் ரெட்	Oriental rose red	16	கிராம்ஸ்
பாமா ரோஜா ஆயில்	Palma rose oil	240	,,
பெர்கமான்ட் ஆயில்	Bergamont oil	160	,,
லவங்க தைலம்	Oil of cloves	30	,,
காஷியா ஆயில்	Cassia oil	30	,,
டிஞ்சர் ஆப் மஸ்க்	Tincture of musk	26	,,

அடெப்ஸ் லேனே Adeps lance என்பது தண்ணீர் இல்லாமல் செய்யப்பட்ட ரோமக் கொழுப்பாகும்.

17

HOUSEOLD SCENTED SOAP

வீட்டுவாசனை சோப்.

வீட்டு உடயோகத்துக்கு வேண்டிய குரைந்த அளவில் கீழ்க் கண்ட முறைபடி செய்துகொள்ளலாம்.

இரும்பு வாணுவில் 4 அவுன்ஸ் தேங்கா யெண்ணெய் எடுத்துக் கொள். தேங்கா யெண்ணெய் அசுத்தமாக இருப்பதாகத் தெரிந்தால் மெல்லிய பிளாட்டிங்பேபரில் வடிக்கட்டிக்கொள். எண்ணெயை வாணுவில் ஊற்றி அடுப்பின்மேல் வைக்கவும். எண்ணெய்கொஞ்சம் சூடேறியதும் ஜாக்கிரதையாக அதன்பேரில் 4 அவுன்ஸ் காஸ்டிக் போட்டாஷ் (கறைத்ததை) ஊற்றி நன்ருககிளறு. இந்தக்கலப்பு கொஞ்சம்கெட்டியாக ஆனதும் வர்ணமிடு.

GLYCERINE SOAP.

க்ளிஜரைன் சோப்.

கொழுப்பு (ஆட்டுமாமிசம்)	44	பவுண்டு
தேங்கா யெண்ணெய்	44	,,
ஆமணக் கெண்ணெய்	22	,,
க்ளிஜரைன் சுத்தமானது	22	,,
காஸ்டிக் லே (40·B.)	27	,,
ஆல்கஹால் 96·	48.4	,,
தண்ணீர்	9.9	,,

கொழுப்பை 104· F சூட்டில் உருகவை பிறகு காரச்சத்துகளை மெதுவாகச்சேர். ஆவியாகப் போவதைத் தடுத்துக் கொள்ளும்படியான தீயிடவேண்டும், அடிக்கடி கிளறிக் கொண்டிரு. லே எல்லாம் நன்ருய் கரைந்த பிறகு மூன்று மணிநேரம் கிளறி ஆல்கஹால் கொஞ்சம் சூடாக்கப்பட்டிருக்க வேண்டும். தெளிவாகும் வரையில் கிளறு. பிறகு க்ளிஜரைனைச்சேர். அது நன்ருகக் கலக்கப்பட்டபின் ஜலத்தையும் வாசனைத் திரவியங்களையும் சேர். பிறகு அச்சில் மெதுவாக ஊற்று இந்த சோப் மிக்க கவலையுடன் செய்யப்படுமாகில் உயர்ந்ததாகும்.

WINDSOR SOAP

விண்ட்ஸர் சோப்

மிகவும் வெல்லியதாக வெள்ளை சோப்பை நறுக்கி மெல்லிய தீயில் இரும்பு வாணலியிலிட்டு எரி. அதை oil of caraway காரவேதையிலங் கொண்டு வாசனையிடு. அல்லது வேறு எந்த வாசனையை யாகிலும் சேர்க்கலாம். அதன் பிறகு எந்த அச்சிலும் வார்க்கலாம். அந்த அச்சி லேயே மூன்று நான்கு நாட்கள் விட்டு வைக்க வேண்டும். அதன் பிறகு சதுரயில்லை களாக வெட்டி உபயோகிக்கவும். இதில் கூறப்பட்டச் சரக்கு களெல்லாம் சாதரண இங்கிலிஷ் மருந்து கடைகளில் கிடைக்க கூடியவை.

இரண்டாம் முறை.

கொழுப்பு	Tallow	40	பவுண்டு
ஆலிவ் ஆயில்	Olive oil	15 முதல் 20	,, வரை

இவ்விரண்டும் சோடா லே 19· B உடன் கலக்கப்பட வேண்டும். இதன் பிறகு 15· B லேயுடன் சேர்க்கப்பட வேண்டும்.கடைசியில் 20 B லேயுடனும் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும். காரம் அதிகமாக உபயோகப் படக்கூடாது. கொதித்த பிறகு சோப் ஒரு தட்டில் 9 அல்லது 8 மணி நேரம் வரையில் விட்டு வைக்க வேண்டும். லேயினின் றும் முழுதிலும் பிரிக்கப்பட வேண்டும். அதன் பிறகு தட்டையான அச்சில் வைக்கப் படவேண்டும். கொஞ்சம்நஞ்சமுள்ள ஈரத்தையும் அழுத்திப் போக்கவேண்டும். மேற் கூறியுவற்றிற்கு கீழ்கண்ட வாசனை யைச் சேர்க்க வேண்டும்.

ஆயில் ஆப் கம்மின்	Oil of Cummin	10	அவுன்ஸ்
ஆயில் ஆப் பெர்காமான்	Oil of Bergamont	6	,,
லவுண்டர் ஆயில்	Oil of Lavender	3	,,
ஆயில் ஆப் ஓரிகானம்	Oil of Origanum	1	,,
ஆயில் ஆப் தைம்	Oil of Thyme	3	,,

PERFUMED SOAP.

வாசனை சோப்

சோப்புகளுக்கு வாசனை இடவேண்டியதாகும் முறைகளை கையாடுவது மிகவும் நல்லது.

ஆயில் ஆப் ரோஸ் ஜ்ரேனியம்	Oil of Rose Geranium	2	அவுன்ஸ்
ஆயில் ஆப் பாட்சொலி	Oil of Patchouli	2	,,
ஆயில் ஆப் க்ளவுஸ்	Oil of Cloves	1	,,
ஆயில் ஆப் லவண்டர்பிலவர்ஸ்	Oil of Lavenderflower	½	,,
ஆயில் ஆப் பர்காமான்ட்	Oil of Bergamont	1	,,
ஆயில் ஆப் சாண்டல்வுட்	Oil of Sandalwood	1	,,
ஆயில் ஆப் சிட்ரனெல்லா	Oil of Citronella	1	,,
ஆயில் ஆப் கிளவ்ஸ்	Ofl of Cloves	1	,,
கசப்புபாதம் எண்ணெய்	Oil of Vitter almouds	2	,,

மேற்கூறிய கலப்புகளில் 1 முதல் 2 அவுன்ஸ் வரையில் 10 பவுண்டு சோப்பு செய்யப்போதுமானது.

TRANSPARENT SOAP.

டிரான்ஸ்பெரன்ட் சோப்

நல்ல கொழுப்பு சோப் (சீவலும்நன்றாக உலர்ந்ததும்) காரமான ஆல்கஹால் Strong Alcohol சமபாக மானவை. இவைகளைச்செப்புப் பாத்திரத்தில் இட்டு அடுப்பு மேலேற்றி நன்றாகக்கரைகிற வரையில் விட்டுவை. பிறகு அக்கலப்பைத் தெளியவிட்டு தெளிந்ததை அச்சில் வார். அந்த அச்சுகள் எப்படி தயார் செய்யப்பட வேண்டுமெனில், சோப் கெட்டியாகும் போது கொஞ்சங்கூட ஆல்கஹால் ஆவியாகப் போய் விடாதபடிச் செய்யப் பட்டிருக்க வேண்டும். இந்த சோப் டிஞ்சர் ஆப் ஆர்ச்சில் என்பதால் சிவந்த நிறமாக்கப்படும். இன்னும் இது டிஞ்சர் ஆப் டர்மரிக்என்பதால் மஞ்சள் நிறமாக்கவும்படும்.

மருந்து சோப்பு

கார்பாலிக் சோப் CARBOLIC SOAP

(1) 40 பவுண்டு பாம் சோப்பை (Palm soap) உருக்வைத்துஅத்துடன் 2 பவுண்டு மாவைச் சேர்த்து நன்ருகக் கல. அதன் பிறகு 2 அவுன்ஸ் கார்பாலிக் ஆஸிட் கிரிஸ்டலிகளாகச் சேர். இன்னும் லவண்டர் ஆயில் 4 அவுன்ஸும், லவங்கத் தைலம் 2 அவுன்ஸும் சேர்.

(2) மிகவும் நயமான சோப் 20 பவுண்ட்எடுத்து உருகவை. அத்துடன் 1 பவுண்டு மாவைச் சேர்த்து நன்ருகக்கல அதன் பிறகு.

கார்பாலிக் ஆஸிட் கிரிஸ்டல்	Carbolic acid crystal	1	அவுன்ஸ்
ஆயில் ஆப் லெவண்டர்	Oil of Lavender	2	,,
ஆயில் ஆப் கிளவுஸ்	Oil of Cloves	1	,,

நன்ருகக் கலந்து அச்சில் வார்க்கவும்.

DOG SOAP.

நாய் சோப்

பெட்ரோலியம்	Petroleum	5	கிராம்ஸ்
மெழுகு	Wax	4	,,
ஆல்கஹால்	Alcohol	5	சி. ,,
நல்ல வண்ணர சோப்	Good Laundry Soap	15	கிராம்ஸ்

பெட்ரோலியத்தையும் மெழுகையும் ஆல்கஹாலையும் தண்ணீரில் கொதிக்கும் பாத்திரத்தின்நடு வில்வேறோர் பாத்திரத்திலிட்டு சூடாக்கு அந்தக்கலப்பில் மெல்லியதாகச் சீவிய சோப் சீவல்களை சேர்த்துக் கரையவை பிறகு அச்சில் ஊற்று. தெள்ளு பூச்சி முதலியவைகளை மனிதன் மீதிருந்தோ மிருகங்களின் மீதிருந்தோ போக்கப்பயன்படும்

வேண்டாத ரோமம் போக்கும் சோப்.

பேரியம் ஸல்பைட் Brium Sulqhide ஒரு அவுன்ஸும் மாவு 1½ அவுன்ஸும்,சோப் ½ அவுன்ஸ் எடுத்துக் கொண்டு சோப்பைத் தண்ணீரில் கரைத்து அடுப்பின்மேல் ஏற்று. கரைத்துக் கட்டியாக வர ஆரம்பிக்கும் போது மேற் கூறியவைகளைச் சேர்த்து வேண்டிய அளவு பில்லைகளாகக் கொய்து அச்சிலிடவும்.

BORAX SOAP.

போரெக்ஸ் சோப்.

நல்ல சோப்பு	Good Soap	90 பவுண்டுகள்
போரக்ஸ்	Borax	10 ,,

இவ்விரண்டும் சேர்த்து சோப் செய்யும் மாதிரி செய்யலாம்.

வெண்கார உலர்ந்த சோப்.

நல்ல உயர்தரமான வெண்கார சோப்பு கீழ்கண்டமுறையில் தயார் செய்தால் உயர்ந்ததான சோப்பு செய்யலாகும்.

சோப்		25 பவுண்டு
சுத்திகரித்த அல்காலி	Alkoli	10 ,,
சோடா கிரிஸ்டல்ஸ்	Soda Crystals	150 ,,
வெண்காரம்		15 ,,

IODINE SOAP.

ஐயோடின் சோப்.

ஐயோடின்	Iodine	1 (எடை) அவுன்ஸ்
ஆல்கஹால்	Alcohol	5¼ ,, ,,
ஓலியக் அஸிட்	Oleic acid	1 ,, ,,
அம்மோனிய மிக்ககரமானநீர்	Stronger Water of Ammonia	3 ,, டிராம்ஸ்

வெண்கார மிருதுவான சோப்.

டால்லோ அல்லது கொழுப்பு		20 பவுண்டு
சோடா லே	Soda Lye	20 ,,
பொடஷ் லே	Potash Lye	12 ,,
வெண்காரம்கறைத்த நீர்		3 ,,

உருகிய கொழுப்புடன் சோடா லேசெர்க்கப்படுகிறது.பிறகு அது தெளிவாக திரவமாகிற வரையுல் நன்ருக அடித்துக் கலக்கப்படுகிறது.

சோப் டென்டிபிரவ்ஸ்.

தைமால்	Thymol	·05 கிராம்ஸ்
எக்ஸ்டிராக்ட் ஆப் க்ராமினியா	Extract of Kramenia	1 ,,
கிளிஜரைன்	Glycerine	10 ,,
லைட் மெக்னிஷியா	Light Magnesia	·5 ,,
போரக்ஸ்	Borax	4 ,,
பெப்பர்மின்ட்தைலம்	Peppermint Oil	20 ,,
கெட்டி சோப்	Hard Soap	32 ,,

எல்லாவற்றையும் ஒன்ருக நன்ருகக் கலந்து கொலாப் சிபிலி டியூப் என்ற குழாயில் அடைத்து அட்டை டப்பியில் வைத்து அழகாக பல நிறங்களில் அச்சடித்து விற்க அன்னிய நாட்டு டென்டிபிரியிகளை ஒழித்து இதையே வாங்குவார்கள் என்பதில் சற்றும் தடையிரது.

HAIR DESTRYOING SOAP.

ரோம சங்கார சோப்.

பேரியம் ஸல்பைட்	Barium Sulphide	2 பவுண்டுஸ்
சாக்	Chalk	2 ,,
தேங்காயெண்ணெய்	Cocanut Oil	3 ,,
காஸ்டிக் சோடா	Caustic Soda	½ ,,
ஜலம்	Water	1¼ ,,

இவைகளைக் குளிர்ந்த வகையில் சோப் செய்து கொண்டு முதலில் சொல்லிய பேரியம் ஸல்பைட், சாக் என்றும் இரண்டையும்தூளாக்கிக்

கொட்டிக் கலக்கி வாசனையும், நிறமும் கொடுத்துக் கொள்ளவும். ரோமம் நிக்குமிடத்தில் கொஞ்சம் சோப் தண்ணீருடன் கலந்து தடவி 10 நிமிஷம் சென்று துடைத்து விட்டால் ஆச்சரியமாக ரோமம் நீக்கப்படும்.

சோப் செய்யும் வகை குளிர்ந்த முறை.

காஸ்டிக் சோடா	Caustic Soda	1	பவுண்டு
தண்ணீர்	Water	2½	,,
கடலை யெண்ணெய்	Groundnut Oil	7	,,

காஸ்டிக்சோடாவைத் தண்ணியில் கலந்து இரண்டு மூன்றுதடவை மரத்துடுப்பினால் அல்லது குச்சினால் கரைக்க அது தானாக சூடாகும் பிறகு சூட்டைத் தணியும் வரையில் தெளியவைக்கவும். (இதற்கு இரும்பு அல்லது பீங்கான் பாற்திரம் வேண்டும்) வேறு பாத்திரத்தில் எண்ணெய் விட்டுக் கொஞ்சம் சூடாக்கிக் கொண்டு முதலில் சித்தப்டுத்தி வைத்திருக்கிற காஸ்டிக் சோடா தண்ணீரை சூடான எண்ணெயில் விட்டு துடுப்பைக் கொண்டு பாத்திரத்திலுள்ள வஸ்து கயிறு போல் வரும் வரையில் நன்றாய்க் கலக்கவேண்டும். அந்தசமயத்தில் தான் நிறமும், வாசனையும் சேர்க்க வேண்டும். கூடனே அநதக் குழம்பு 15 நிமிஷநேரம் வரையில் கலக்கப்பட வேண்டும். பிறகு முதலில் சித்தப் படுத்தியுள்ள சதுரமான பெட்டியின் உட்புறத்தைத் துணியைத் தண் ணீரில் நனைத்து நாலாபக்கங்களையும் துடைத்து பாத்திரத்தில் கரைத்து வைத்திருக்கின்ற சோப்பை ஊற்றி நன்றாய் கம்பளித் துணியினால் மூடி 24 மணி நேரம்வரையில் ஓர் அறையில் வைத்திருந்தால்பதமாகும். அதாவது தேன் பதத்தில் இருக்கப் பட்ட சாமான்கள் எல்லாம் சேர்ந்து கொதிக்க வைத்த சோப் மாதிரி ஆகும். 24 மணி நேரம் ஆனபிறகு அளவிற்குந் தகுந்த துண்டுகள் செய்து காயவைத்து அச்சுகளில் அழுத்திக் கொளளவும்.

BLACK BOOT POLISH.

கறுப்பு பூட் பாலிஷ்

சென்னப்பட்டணம் போன்ற பெரிய நகரங்களில் பற்பல விதமான தொத்து நோய்கள் வருஷ முழுவதிலும் வியாபித்து வருகின்றன. தொத்து நோய்கள் பிடிக்காதிருக்க வேண்டி முன் எச்சரிக்கையும், முன் ஜாக்கிரதையும் ஒவ்வொரும் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். தெருக்களில் காலில் பாதரட்சையும் பூட்ஸும் இல்லாமல் நடந்து செல்வதனாலேயே பல தொத்து வியாதிகள் ஒரு வனைப்பற்றிக் கொள்ளுகின்றன. பூட்ஸ்கள் மிக்கவிலை பெற்றவை. அவைகளை நீண்டகாலம் உழைக்கச் செய்ய சில பூச்சுகள் மேல் பூச வேண்டும். தண்ணீரினால் சிக்கிரத்தில் சேதமடையாமலும் பார்வைக்கு எப்பொழுதும் புதிதாக வே காணப்படவும் வேண்டியே பாலிஷ் மேனாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகி வருகின்றது.

இந்தப் பூட்பாலிஷ் கைத்தொழிலை மேற் கொண்டு சில கம்பெனிகள் இங்கிலாந்தில் பல கோடி ரூபாய் வருஷவாரியில் லாபம் பெற்று வருகின்றது. பூட்பாலிஷ ஒவ்வொரு வராலும் கையாடிவரும் பொருளாக இருப்பதனால் அதற்கு வருஷம் முழுமையும் கிராக்கி இருந்து கொண்டேயிருக்கிறது அதனால் கிடைக்கும் லாபத்தைப் பின்னும் அதிகரிக்கச் செய்கின்றது. அப்படிப்பட்ட லாபகரமான பூட் பாலிஷ் கைத் தொழிலில் தேர்ச்சி பெற்று அவைகளை விற்பனைக்குத் தயார் செய்து எப்பொழுதும் கிடைக்கும் படிச் செய்தால் நல்ல லாபத்தை அடைவது மல்லாமல் மேனாட்டு விலையை விடமிகவும் குறைந்தவிலையில் பொது ஜனங்களுக்கு கிடைக்கவும் செய்யலாம். நம்மவர்கள் இது விஷயத்தில் சற்று கவனத்தையும் கொள்ள முன் வரு வார்களாக.

பூட்ஸ்களுக்கு கறுப்பு நிறமானதும் தண்ணீரில் நனையாததுமான பாலிஷ் (Polish) செய்வதற்கு முறைகளைக் கீழே குறிப்பிடுவோம்.

கடுக்காய்	Nutgalls	3 அவுன்ஸ்
வெண்காரம்	Borax	2 ,,
அரக்கு	Lac	1½ பவுண்டு
அனிலைன் கறுப்பு	Aniline Black	1 டிராம்
ஐவரி பிளாக் அல்லது லாம்ப் பிளாக்	Ivory Black or Lamp Black	3 அவுன்ஸ்

இவற்றில் முதலில் சொல்லப்பட்ட கடுக்காயை 1 காலன் தண்ணீரில் போட்டு அடுப்பின் மேலேற்றி கொதிக்கவை சத்தெல்லாம் வெளியேவரும் வரையில் கொதிக்கவைக்கவேண்டும். அதன் பிறகு அக்கஷாயத்தை வடிக்கட்டிக்கொள். மறுபடியும் அடுப்பின்மீது நன்றாகச் கொதிக்கும்படிசெய்யவேண்டும். வெண்கரமும், அரக்கும் அத்தக் கஷாயத்தில் போட்டுக் காயிச்சு அரக்குநன்றாகச் கரையும்படிக்கொதிக்கவிடவும், அதன் பிறகு அனிலைன் கறுப்பு லர்நதைதச் சேர். அதன் பின் ஜவரிபிளாக் அல்லது லாம் பிளாக்கைச்சேர் அடுப்பின் பேரிலே அந்தக் கஷாயம் கொஞ்சநேரம் இருக்கவிட்டு வைக்கவேண்டும். இடையில் கின்றிக்கொண்டே யிருக்கவேண்டும். பிறகு மெல்லிய கனகளுடைய சல்லடையில் வடிக்கட்டுஅதன் பிறகுஉபயோகத்திற்குத்தயாராயிருக்கும். இந்தக்களம்பை பூட்ஸின் பேரில் புருசைச்கொண்டாவது அல்லது கடற்பஞ்சினுவாவது Sponje பூசவேண்டும். அது பளபள வென்றபிரகாசத்தைக் கொடுத்து உலர்ந்து விடுகிறது.

அத்துடன் இந்தபாலிஷ் தண்ணீரைத் தோலின் பேரில் நிற்கவொட்டாமல் தள்ளி விடுகிறது. உபயோகபதற்கு முன் இந்தப்பாலிஷ் நன்றாகக் கிளறிவிடப்படவாவது வேண்டும் அல்லது புட்டியை நன்றாகக் குலுக்கலாவது வேண்டும்.

இந்தப்பாலிஷ் மற்றப்பாலிஷ்கள் லெல்லாவற்றையும் விட மிகவும் சிறந்தது ஒரே தடவையில் இரண்டு விதமான பலன்களைக் கொடுக்கும். அழுக்கைப் போக்கிப்பிரகாசத்தை கொடுப்பதாலும் நீரினுல் சேதமடையாதபடியும் செய்கின்றது.

BROWN BOOT POLISH.

பிரௌன் பூட் பாலிஷ்.

டர்ப்பன்டைன்	Turpentine	½ பவுண்டு
வெள்ளை மெழுகு	White wax	5 அவுன்ஸ்
தண்ணீர்	Water	½ பவுண்டு

வெள்ளை மெழுகைத் தண்ணீரில் தொதிக்கவை. பொட்டாகியம் கார்பொனெட்டில் ஒரு சிட்டிகையைச் சேர். நன்றாகக்கிளறு. கொஞ்சம் ஆறின பிறகு டர்ப்பன்டைன் (அடுப்பிற்குத் தூரத்தில்) சேர் பிரஷ்ஷினாலும், ஸ்பன்ஜினாலும் தடவவேண்டும். வில்வேட்டு பாட் Pad டினால் பாலிஷ் செய்யவும்.

SLATE PENCIL.

ஸ்லேட் பென்சல் செய்யும் விதம்.

மாக்கல்லின் மெல்லிய தூள் 4 பாகமும், சாக் என்னும் சீமை சுண்ணாம்பு தூள் 2 பாகமும், ஸோடியம் ஸிலிகேட் ஒரு பாகமும் இம் மூன்றையும் நன்றாக கூட்டி பசைபோல் பக்குவமாக அரைத்து எடுத்து வைத்துக்கொள்ளவும். வழவழப்பான சமமான பலகையில் ஸ்லேட்பென்சல் நீளமகளத்துருத்தக்கபடி குழிகள் அநேகம் தோண்டி வைத்துக்கொண்டு, அந்தக் குழிகலில் ஷ சொல்லிய பசையை அப்பி, கல் சூலையில் கல், ஓடு முதலியன அறுப்பது போல் சமமான பலகை யால் வழித்து எடுத்து நிழலில் காத்தார விட வேண்டும். பிறகு இவைகளின் முனைகளை சிறுவாளைக்கொண்டு அறுத்துவிடவேண்டும்.

MAHARAJA SCENTED NUT.

மாகராஜா வாசனை பாக்குதூள்.

உயர்ந்த பீட்டின் பாக்கு அரை வீசை, எலக்கா ஒரு பலம், லவங்கம் இரண்டுபலம், வால் மிளகு முக்கால்பலம் ஜாதிபத்திரி கால் பலம், ஜாதிக்காய் ஒன்று, கசகச ஒருபலம், ரோஜமொக்கு அரைபலம், பச்சைகர்பூரம் கால் விராகநிடை, பாக்கை மாவாக்காமல் இடித்துக் கொண்டு, மற்றவைகளை தனித்தனியாக இடித்து தூளாக்கி ஜல்லடை யால் ஜல்லித்து கொண்டு எல்லாம் ஒன்றாய் பாக்கில் கலந்து, குங்கும பூ அரைவிராக நிடை கஸ்தூரி இரண்டு குண்டுமணி எடை இவையும் சேர்ந்த்து பசும் நெய் ஒரு பலம் காய்சி சேர்த்து பிசறி உயர்ந்தஅம்பர் அத்தர் 5 துளிவிட்டு பிசரி வைத்துக்கொள்ளவும்.

SCENTED TOBACCO.

வாசனை புகையிலை

சுக்கு, மிளகு, திப்பிலி கிராம்பு, கத்தகாம்பு வகைக்கு ஒருபலம், ஏலம் ஜாதிக்காய் வகைக்கு கால்பலமும், வெய்யலில் காயவத்து தூள் செய்து ஜலித்துக் வைத்துக்கொள்ளவும், உயர்ந்த பாலகட்டு புகையிலை அரை விசைஎடுத்து பொடியாய் நறுக்கி கொண்டு,கால்விசை சீனிசக்கரையில் அரைவீசம் படி தண்ணீர் விட்டு பாகாய்க் காய்ச்சி இரக்கிக்கொண்டு அதில் புகையிலைப் பொடியை போட்டு பிசைந்து சூடு ஆரியபின் மேற்கண்ட சரக்கு கலின்தூள் போட்டு பிசறி பெப்பர் மெட் ஆயில் 10 துளி விட்டு களந்து வைத்துக்கொள்ளவும்.

RINGWORM OINTMENT.

படை மருந்து

கார்பொனேட் ஆப் சோடா	Carbonate of soda	1 டிராம்
ஸல்பரேட் ஆப் பொடாசியம்	Sulphurate ofpotassuim	1 டிராம்
கிரியோஸோட்	Creosote	½ டிராம்
லார்டு	Lard	1¼ டிராம்

இவைகளைக் கலந்து படையிருக்குமிடத்தை சோப்பினுல் கழுவியபின் இம்மருந்தைத் தடவவும்.

டார்	Tar	3 டிராம்
லார்டு	Lard	1½ அவுன்ஸ்

இவைகளை உருக்கி அஸடிக் ஆஸிட் Acetic acid சேர்த்துக் கொள். இதுவும் நல்ல படை மருந்தாகும்.

COCOANUT OIL SHAMPO.

தேங்கா யெண்ணெய் ஷாம்பூ

தேங்காயெண்ணெய்	Cocoanut oil	4	டிராம்
அம்மோனியா நீர்	Ammonia water	6	,,
ஸ்பிரிட்ஆப்ரோஸமெரி	Spirit of rosemary	1½	அவுன்ஸ்
யுடி கொலோன்	Eau -de- cologne	1½	,,
டிஞ்சர் ஆப் ஸாப்ரன்	Tincture of saffron	2	டிராம்

எண்ணெயையும் அம்மோனியா நீரையும் கலந்துநன்றாகக் குலுக்கு அதன் பிறகு மற்றச்சரக்குகளைச் சேர், உபயோகிப்பதற்கு முன் நன்ருகச் குலுக்க வேண்டும்.

இங்கி அடையாளங்களை அகற்ற பிளாட்டிங் பேபர்

BLOTTER TO REMOVE DRY INK—MARKS.

பிளட்டிங் பேபரைக் கீழ்கண்ட விதம் தயார் செய்.

ஆக்ஸாலிக் ஆஸிட்	Oxalic acid	1	பாகத்தை
ஆல்கஹால்	alchol	4	பாகத்தில்

கலந்த திராவகத்தில் பிளாட்டிங் பேபரை அமிழ்த்தியபிறகு உலருவதற்குத் தொங்கவிடு. உலர்ந்த இங்கி அடையாளமுள்ள துணியின் மீது முதலில் கொஞ்சம் தண்ணீரை விடு. பிறகு பிளாட்டிங் பேபரை சாதாரணமாக உபயோகிக்கின்றவிதம் ஒட்டவும். உடனே அந்தக் கரை மறைந்து விடும். இஃது ஒரு நூதனப் பொருள்.

ARTIFICIAL IVORY.

செயற்கை தந்தம்.

செயற்கைதந்தம் செய்யும் முறை சாதராண சோப் செய்யும் முறைகளைப் பேன்றதன்று. இது எல்லோராலும்செய்து லாபமடைய சிறந்தது இதுவரைக்கும் தந்தம் செய்யும் முறைகள்இருந்திருப்பாதாக எண்ணவும் இடமில்லாமலிருந்தது. இது செய்ய வேண்டிய சரக்குகள் எல்லாம் சாதாரனமான இங்கிலீஸ் மருந்து ஷாப்புகளில் தடையின்றிக் கிடைக்ககூடியன. இம்முறையில் தந்தம் செய்யபட்டதும் அதை தந்த சாமன்கள் செய்யும் வேலையில் சிறந்தவர்களிடம் விற்று விடாலாம் அதை அவர்கள் எளிதாக வாங்கி பற்பல விதமான சாமான்கள்செய்து விற்று ஜீவிக்கலாம். இத்தொழிலில் பற்பல மனிதர்கள் உழைத்து ஜீவினம் செய்யலாம்.

செயற்கை தந்தம் செய்யும் முறை

இஸ்லீங்கிளாஸ் Isling glass என்பதையும் பிரந்தியையும் விட்டுக் குழைத்துக் கொள்.பிறகு மெல்லியதாகத்தூள் செய்த கோழிமுட்டை ஓடுகளைச் சேர். உனக்கு வேண்டுமான நிறத்தைச் சேர்த்துக்கொள் வார்படத்தில் மேற் கூறிய கலப்பை வார்த்து உலர விடு. அப்பொழுது அதன்தோற்றம் தந்தம் போன்றிருக்கும். இம்மாதிரியான தந்தம் நகைகள் செய்யும் சிறந்தொழிலாளிகளுக்கே விற்கத்தகுந்ததாலிருக்கும். இத்துறையில் பெரிதும் உறைப்பவர்கு நாளொன்றுக்கு 3 ரூபாய் முதல் 4 ரூபாவரையில் சம்பதிக்காலம். இம்மாதிரியான தந்தத்திற்கு இக்காலத்தில் அதிக கிராக்கி ஏற்பட்டு வருகின்றது. இச்சமயத்தைச் கைவிடாமல் நம்மவர் உழைத்து பெரிய லாபம் பெற்று பெரு வாழ்வு வாழ்வாராக.

TOILET POWDER.

வாசனைப் பவுடர்,

நல்ல வாசனைப் பவுடரை ஒருவன் செய்யந்தெரிந்து கொள்ளுவானால் லக்ஷககனக்கில் பணம் சம்பர்தித்துக்கொள்ளலாம் அதற்குக் கீழ் வருவதே சிறந்த முறை.

தூள்செய்த டால்கம்	Powdered Talum	7	”
ஜைமைச் சுண்ணும்புத்தூள்	Chalk	2	”
போரிக் ஆஸிட்	Boric acid	அவுன்ஸ்	

மேற்கூறிய சரக்குயெல்லாம் நல்லதும் நயமான போதுமான வாசனைப் பவுடரைச் செய்யப் போதுமானது. இதைச்செய்யும் வாலிபன் நல்ல லாபத்தை அடைவான்.

VARIOUS KINDS OF SEALING WAX AND THEIR MANUFACTURE.

முத்திரை அரக்கின் வகைகளும் அவைகளைச் செய்யும் மார்க்கமும்.

நம்மவர்களுக்கு சுபாவத்திலேயே உத்தார குணமும், உயர்ந்த பொருளையே நாட வேண்டும் என்ற சிறந்த எண்ணமும் குடிகொண்டிருக்கிறாது. அப்படி யிருப்பது சிலாக்கியமேயாயினும் வியாபார முறையில் எப்போழுதும் அப்படியே யிருப்பது உசித மானதல்ல.

பொதுவாய் நம்பவர்கள் முத்திரை வப்பதற்கு அவல் அரக்கையே (Shellac) உபயோகப்படுத்துகிறார்கள். அவல் அரக்கானது சாதாரண முத்திரை அரக்கைவிட விலை அதிகமானது. மேலும் மெல்லியதாக அவலரக்கைத் தடவி முத்திரை போட்டால் நெறுங்கிப் போகிறது. ஆகவே முத்திரை வைப்பதற்குப் பிரத்தியேகமாக நுதனமான ஒருவித அரக்கை உபயோகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. புற்றுமண் குங்குலியம் செங்கல் பொடி முதலியவற்றைச்சேர்த்து அர

க்கு வளையல்களைச் செய்வதற்கு வேண்டி அரக்கைப்பெற்று வருகிறார்கள். மற்றப்படி முத்திரை அரக்கானது இந்தியவிலேயேசிறிதுபாகம் செய்யபடுகிறது பெரும் பாகம் அன்னிய நாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்படுகிறது.

நமது நாட்டில் அவல் அரச்கு சாதாரணமாய் கிடைக்கக்கூடியது நல்ல முத்திரை அரக்கானது பளபளவென்றிருப்பதுடன் வழவழப்பாயும் சீக்கிரத்தில் நொறுங்கிவிடாததாயும் மெழுகுமாதிரி பசையுற்றதாயும் அதிகமாய் வெயிலில் அடிக்கும் பொழுது இளகாமலும் இருக்க வேண்டும். நொறுங்கிப்போய்விட்டால் தபால்களுக்குச் சீல்போடுவது பிரயோஜனப்படாது. மெழுகு போலிருந்தால் அதனை மெதுவாய்ப் பெயர்த்தெடுத்து மறுபடியும் இருந்த விடத்தில் ஒட்டிவிடக்கூடும். ஆகவே முத்திரை அரக்கு செய்யும் தொழிலைப்பற்றி இங்கு விவரமாக குறிப்பிடுவோம். செய்யும் விதத்தையும் மார்க்கத்தையும் தெளிவாகக்கூறுவோம். அவலரக்கும் டர்ப்பண்டைன் என்னும் எண்ணெயுந் தான் முத்திரை அரக்குசெய்ய உபயோகப்படுத்துவது வழக்கம். கனம் கொடுப்பதற்காக சீமைச் சுண்ணும்பு (Chalk) பிளாஸ்டர் ஆப் பாரிஸ் (Plaster of paris) என்னும் சாமான்களை உபயோகப் படுத்துவார்கள். விலை குறைக்க வேண்டியத்தை உத்தேசித்து ரோசனம் (Rosin) பென்ஜாயின் (Benzoin) தார்க்கட்டி முதலிய வற்றையும் உபயோகப்படுத்துகின்றார்கள். அவலரக்கிலும் இரண்டுவிதம்உண்டு ஒன்று வெண்மை நிறம்; அது தான் உயர்ந்த சரக்கு மற்றது பழுப்பு நிறம். அதை கருப்பு, பிரௌன் முதலிய வர்ணமுள்ள அரக்குகளைச் செய்வதற்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

அரக்கு செய்வதில் 4 விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை. முதலில் வேண்டிய சாமன்களைக் கலக்கவேண்டும்,பிறகு சேர்த்த சாமான்களை உருக்க வேண்டும். உருக்கியத்தை வார்க்கவேண்டும் பிறகு மெருகிடவேண்டும்.

செய்யும் விதம்.

முதலில் ரோசனத்தையும் டர்ப்பண்டைனேயும் அரக்குடன் சேர்த்துக் காய்ச்சவேண்டும். பிறகு சீமைச்சுண்ணும்பைச் சேர்க்க வேண்டும். காய்ச்சும்பொழுது எப்பொழுதும் கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். வேண்டிய வர்ணத்தையும் கலந்து நன்ருகக் கலக்கிக் கொண்டு வரவேண்டும். காய்ச்சும் பொழுது நன்ருகக் கிளறிக்கொண்டு வரவேண்டியிருக்கிறபடியால் அதிகமாகப்போட்டுக் காய்ச்சக்கூடாது' அடுப்பில் தீ அதிகமாக இருக்கக்கூடாது. சரக்குகள் உருகிய நிலை மையிலிருப்பதற்கு எவ்வளவு உஷ்ணம் போதுமோ அவ்வளவு உஷ்ண ந்தான் இருக்கவேண்டும். பாத்திரத்தில் நாலாபக்கங்களிலும் தீ சமமாக உறைக்கவேண்டும். ஒரு பாத்திரத்தில் அரைக்கைக் காய்ச்சிய பிறகு மறுபடியும் அந்தப் பாத்திரத்தை அரக்கு காய்ச்ச உபயோகப் படுத்த வேண்டுமானல் பாத்திரம் நன்ருய் ஆறியபின் அதன் உள்ளே யாதொரு விதமான அரக்கும் ஒட்டியிராத படி துடைத்து விட்டுப்புதிய அரக்கைப் போட்டுக் காய்ச்ச வேண்டும். முதன் முதல் அவல் அரக்கைப் பாத்திரத்தில் போடவேண்டும். அரக்கெல்லாம் உருகிக் கலந்துவரும்பொழுது மரத்துடுப்புகொண்டு கிளறிக்கொண்டே வர வேண்டும். புகை கிளம்பும்படிக் காய்ச்சக்கூடாது. இவ்வாறு காய்ந்து வரும்பொழுது டர்ப்பண்டைன் எண்ணெயைப்போட்டுக் கலக்க வேண்டும். இவை இரண்டும் நன்ருய்க்கலந்து சீமைச்சுண்ணும்பு (Chalk) தூளையாவது அல்லது பிளாஸ்டர் ஆப் பாரிஸ் (Plaster of-Paris) யாவது போட்டுக் கிளறிக்கொண்டே வரவேண்டும். ஏதாவது வர்ணம் கலக்கவேண்டியிருந்தாலும் இச்சமயத்தில்தான் கலக்கவேண்டும். வர்ணத்தைப் போட்டுக்கலந்து கொண்டே வருகை யில் நமக்குப் வேண்டிய வர்ணம் வந்து விட்டதாவென்று பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும். இவ்வாறு கலக்கப்பட்ட அரக்கானது வார்க்கப்படும் வரையில் கிளறய பதத்திலேயே இருக்கும்படி செய்ய வேண்டும். அதிகமாக தீயைப் போட்டு விட்டால் புகைகிளம்பி அரக்கின் கூழைக்கெடுத்துவிடு வதோடு நில்லாமல் சிலசமயங்களில் தீயும் பிடித்துக் கொள்ளும். மிக ஜாக்கிரதையாக செய்யவேண்டும்.

இவ்வாறு உருகிவந்த அரக்கை இனிவேண்டிய அளவிற்கு வார்த்துக்கொள்ள வேண்டும். வார்ப்பதற்காகச் செய்யபடும் அச்சு பித்தளையில் செய்யப்படுவது அவசியம். இரும்பில் செய்வது அவ்வளவு சிலாக்கியமில்லை. வார்க்கப்படும் அரக்குத் துண்டுகளின்பேரில் விலாசம் போடவேண்டியதாகையால் அச்சில் எழுத்து முதலியன வெட்டி வைக்கக்கூடாது. அச்சின் அடிப்பாகம் மேல்பாகத்தைவிட சிறிது சிறுத்திருப்பது அவசியம். வார்க்கும் பொழுது மேற்சொல்லிய அச்சை நன்றாய் துடைத்து வைத்துக்கொள்ளவேண்டும். வார்த்த பிறகு அந்த அச்சுடன் அரக்கு சூடாறும்படியாக எடுத்து வைக்கவேண்டுவது அவசியம். தண்ணீர் தாம்பாளத்தில் வைத்துச் சீக்கிரத்தில் ஆறும்படி செய்தால் அரக்கானது அடிக்கடி நொறுங்கக் கூடியதாய் இருக்கும். ஆகவே சிறிது மெதுவாக இருந்தபோதிலும் தானுகவே ஆறும்படி செய்வது நலம். பிறகு அச்சைவிட்டு வார்த்த அரக்கை எடுத்துக்கொண்டு அதன்பேரில் முத்திரைபோடவேண்டிய வேலையைச்செய்யவேண்டும். வார்த்த அரக்குத்துண்டுகளை எடுத்து ஒரு இரும்புத் தாம்பாளத்தில் வைத்து சிறிது சூடுபடும்படியாக அடுப்பின் பேரில் தாம் பாளத்தை வைத்தால் மேற் சொல்லிய அரக்குத் துண்டுகள் சிறிது இளகி முத்திரைபோட்டால் பதியும்படியான நிலைமைக்கு வரும். அத்தருணத்தில் முத்திரையிடவேண்டும். முத்திரையிட்டதும் மேற்சொல்லிய சலாகுகளின் உருவம் மாறுதபடி தட்டி உட்டி வைக்கவேண்டும். மேற் சொல்லிய எழுத்துக்களில் தங்க அரக்கு ஒட்டவேண்டுமானுல் சிறிது ஆல்கஹால் (Alcohol) எடுத்து எழுத்துக்களின் மேல் தடவி அதன் பேரில் தங்கப்பவுடரையாவது அல்லது வெள்ளிப் பவுடரையாவது தூவவேண்டும். வார்க்கும் பொழுது அரக்கு அச்சுக்குள் ஒரே சீராய் விழும்படி முயலவேண்டும் இவ்வாறு செய்து முடித்த பிறகு அரக்கு சலாக்குகளை எடுத்து மெல்லிய காகிதத்தில் சுற்றி அட்டைப் பெட்டிக்குள் வைக்கவேண்டும். இனி அரக்கு செய்வதற்கு வேண்டிய சாமான்களைப்பற்றிச் சொல்வோம்.

கறுப்பு அரக்கு.

அவல் அரக்கு	Shellac	30	பாகம்
டர்ப்பண்டைன்	Turpentine	54	,,
ரோசனம்	Rosin	40	,,
சாக்கட்டி	Chalk	24	பாகம்
விளக்குக் கரி	Lamp black	32	,,

நீல அரக்கு.

அவல் அரக்கு	Shellec	14	,,
டர்ப்பண் டைன்	Turpentine	12	,,
ரோசனம்	Rosin	7	,,
மக்னிஷயம் கார்பனேக்	Magnasium Carbonate	2	,,
சாக்கட்டி	Chalk	4	,,
நீலம்	Blue	4	,,

பிரௌன் அரக்கு.

அவல் அரக்கு	Shellec	15	,,
டர்ப்பன் டைன்	Turpentine	8	,,
பூங்காவி	Poongavi	2	,,
ஈய வெள்ளை	White lead	1	,,

பார்சல்களுக்கான அரக்கு

அவல் அரக்கு	Shellec	14	,,
ரோசனம்	Rosin	26	,,
டர்ப்பண்டைன்	Turpentine	20	,,
சாக் கட்டி	Chalk	6	,,
பிளாஸ்டர் ஆப் பாரிஸ்	Plaster of paris	4	,,
ஈய வெள்ளை	White lead	10	,,

இப்பொழுது ஓர் புது மாதிரியான அரக்கு விளக்கு வந்துருக்கின்றது. அதை நமது நண்பர்கள் அறிவார்கள். அரக்குக் குச்சியின் மத்தியில் மெழுகு வர்த்திக்குத் திரி இருப்பதுபோல் திரியை வைத்து செய்து வந்திருக்கிறது. இது எவ்விதம் செய்யபடுவது? 10 அல்லது 12 இழைகொண்ட திரியைத் தயார்செய்து அதனை நன்றாய் உருகிய மெழுகில் ஊறப்போட வேண்டும். பிறகு இத்திரியைப் பிசுவாய் அச்சியின் மத்தியில் பிடித்துக்கொண்டு அரக்கை அச்சுகளில் விட்டு ஆறும்படி செய்ய வேண்டும். இத்தகைய வார்த்தி ஒன்று சுமார் 4 அணுவிற்கு மேலாகவே விற்று வருகின்றது. ஆகவே சொல்ப முதலுடையவர்கள் இவ்விதமான கைத்தொழிலைச் செய்து லாபம் பெறலாம்.

PERFUMED POMADE

வாசனை போமேட்

கொழுப்பு	Tallow	4	அவுன்ஸ்
லார்டு	Lard	13	„
உயர்ந்த வெள்ளை	மெழுகு Best white wax	8	„

இவைகளைச் சிறுதீயில் உருக்கி நன்றாக ஆறின பிறகு 20 துளி பெர்கமான்ட் தைலத்தையும்.

லெமன் தைலம்	(கிச்சிலி)	10 துளியையும்
பெரு பால்ஸம்	Peru balsam	6 துளியையும்
லவங்கத் தைலம்	Oil of cloves	6 துளியையும்

வாசனைத் திரவியங்களைச் சேர்க்கும் போது கிளறிக் கொண்டேயிருக்க வேண்டும்.

STIRIKE ANYWHERE MATCHES.

எங்கும் பற்றும் தீக் குச்சுக்கள்

எங்கும் பற்றும் தீக்குச்சுகளைச் செய்ய தாய்ச் சரக்கு பால்பரஸ் என்னும் விஷமருந்து. அத்துடன் இன்னும் சில சரக்குகளும் சேர்ந்திருக்கின்றன. அவ்வற்றை விவரமாகக் கீழே கூறுவோம்.

தீக்குச்சுகளைச் செய்யக் குச்சுகளுக் கீழ்காணும் சரக்குகளைக் கலந்து அதில் தோய்த்து எடுக்க வேண்டும்.

முதல் முறை

பால்பரஸ்	Phophorous	1 பாகங்கள்
க்ளோரேட் ஆப் பொடாஷ்	Chlorate of potash	8 பாகங்கள்
வஜ்ஜிரம்	Glue:	4 "
ஜலம்	Water	22 பாகங்கள்

இரண்டாம் முறை

பால்பரஸ்	Phophorous	2 பாகங்கள்
க்ளோரேட் ஆப் பொடாஷ்	Chlorate of potish	5 பாகங்கள்
வஜ்ஜிரம்	Glue	3 பாகங்கள்
ரெட்லெட்	Read lad	1½ ,,
ஜலம்	Water	12 "

சாம்பிராணித் தைலம்.

அகண்ட பாத்திரத்தில். 5 பலம் உயர்ந்த பளிங்கு சாம்பிராணியைத் தூள் செய்து போட்டு ஒரு படி ஜலம் விட்டு அதின் மீதில் தாம்பாளத்தட்டு மேலே மூடி அந்த பாத்திரத்தை அடுப்பிலேற்றி சிறு தீயாக 4 மணி நேரம் யெரித்தால் தைலம் உண்டாகி தட்டுக்கு அடி பாகத்தில் படிந்திருக்கும். அதை வழித்துக் கோப்பையில் வைத்துக் கொள்ளவும்.

HAIR OILS.

கூந்தல் தைலங்கள் செய்யும் முறை

தேங்காய் எண்ணெயை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி சிறிது சூடானவுடன் ஆல்கனட் ரூட் என்னும் சரக்கை எவ்வளவு சிவந்த நிறம் வேணுமோ அவ்வளவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக போட்டு கீழே எடுத்து வைத்து மற்றிரு தைலங்களையும் கலந்து வடி கட்டி புட்டிகளில் அடைத்து விற்பனை செய்யவும்.

வேறு முறை

சுத்தமான எள் யெண்ணெய்		பவுண்டு	1
ஓட்டோ ஆப் ரோஸ்	Otto of Rose	டிராம்	¼
ஆயில் ஆப் ரோஸ்மெரி	Oil of rose mary	டிராப்ஸ்	20 துளி

எண்ணெயில் (ஆல்கனரூட்) என்னும் கிழங்கை தூள் செய்து வேண்டிய சிவப்பு நிறத்துக்கு போட்டு சற்று வெய்யிலில் வைத்தெடுத்தவுடன் வடிக்கடி மற்ற இரண்டு சரக்குகளையும் சேர்த்து புட்டியில் அடைத்துக் கொள்ளவும்.

வேறு முறை

மினரலாயில்	Mineral oil	வீசை	2
எஸென்ஸ் ஆப் மோடியா	Essence of motia	அவுன்ஸ்	1
ரோஜா தைலம்	Oil of rose	துளி	40
ஆல் கனட் கிழங்கு	Alkanet root	பலம்	4

மேற்படி எண்ணெயில் ஆல்கனட் கிழங்கைத் தூள் செய்து போட்டு வெயிலில் வைத்தவுடன் எண்ணெய் சிவப்பு நிறமாகிவிடும். அதை (பிளாடிங்)பேப்பரினால் வடி கட்டி மேற்காட்டிய வாசனைத்தைலங்களை யாவது வேறு இஷ்டமான வாசனையையாவது சேர்த்து சீசாவில் அடைத்து வைத்துக் கொள்ளவும். மினரல் எண்ணெய் கிடைக்காவிட்டால் எள் எண்ணெய்யாவது தேங்காய் எண்ணெய்யாவதுஉபயோகித்துக்கொள்ளலாம்.

வேறு முறை

எள் எண்ணெய்	வீசை	½
பார்க்க மெண்டு ஆயில்	அவுன்ஸ்	½
சிட்ர நல்லா (பில்லு)	தைலம் ,,	½
கர்ப்பி லியம்	அவுன்ஸ்	½
சம்மர் கப்	,,	1
மல்லிகைப்பு எஸ்ஸன்ஸ்	,,	⅛

மேற் கண்ட எண்ணெயை அடுப்பேற்றி கொஞ்சம் சூடான வுடன் ஆல்கனரூட் கிழங்கின் தூளை வேண்டிய சிவப்புநிறத்துக்குள்ள மட்டில் போட்டு யிறக்கி கீழே வைத்து மற்ற தினுசுகளையும் விட்டு வாய் புறம்மூடி சூடு ஆறினருடன் புட்டியில் அடைத்துக்கொள்ளவும்.

கூந்தலுக்கு உபயோகிக்கும் போமேத்த

வெள்ளை மெழுகு	7	அவுன்ஸ்
பாதம் எண்ணெய்	4	,,
நிரோலி தைலம்	6	துளி
கிராம்பு தைலம்	2	துளி
ஒட்டோ டி ரோஸ்	5	துளி

வெள்ளை மெழுகைக் காய்ச்சி சுத்தமாக வடிகட்டிக்கொண்டு தைல வகைகளையும் சேர்த்து காய்ச்சி டப்பிகளில் அடக்கம் செய்து உபயோகிக்கவும்.

வேறு முறை

ஸபெர் மாசிட்டி	Spermacetti	½ அவுன்ஸ்
ஆமணக் கெண்ணெய்	Caster oil	1½ ,,
பாதம் எண்ணெய்	Oil of sweet Almonds	2 ,,
டின்சர் கான்திரைடஸ்	Ticture cantharites	1 டிராம்
நிரோலி தைலம்	Oil of neroli	18 துளி

ஸ்பர்மாசிஸ்டியை காய்ச்சி உருகினபின்பு மற்ற யெல்லா சரக்குகளையும் அத்துடன் சேர்த்து டப்பியில் அடக்கம் செய்து உபயோகிக்கவும்.

மகாராணி பரிமள தைலம்.

கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஆலம் விழுது, செம்மரக்கட்டை, தேவதாரிக் கட்டை, அகில் கட்டை, சந்தனக் கட்டை கிளியூரல் பட்டை, பெரியலவங்கப்பட்டை இவைகளை வகைக்கு பலம் 5 ஆக இடித்து 4 படி ஜலம் விட்டு அரை படி ஜலத்திற்கு சுண்டும் வரையில் காய்ச்சி யிறக்கி பிழிந்து கனத்த துணியினால் வடி கட்டி யெடுத்து கொண்டு கஸ்தூரி மஞ்சள், சடா மாஞ்சி, பச்சிலை, மதுரம், கோஷ்டம், பூஞ்சாந்து, ஏலரிசி, இவைகளை வகைக்குப் பலம் ஒன்றாக நைய நறுக்கி பசும் பால் விட்டரைத்து இரண்டு வீசை உயர்ந்த நல்லெண்ணெயிற் போட்டு, முதல்சொல்லிய கியாழமும் விட்டு அடுப்பிலேற்றிக் காய்ச்சி தைலபதத்தில் இறக்கி விடவும். பிரதிதினம் கூந்தலுக்குத்தடவினால் அடர்த்தியாகவும்நீண்டும் வளரும்.

மல்லிகைப்பூத் தைலம்.

ஜலத்தில் ஊறவைத்து கழுவி மேற்றோல் நீக்கிய சுத்தமான எள்ளு 2 படியை காற்று போகாத ஒரு அரையில் பூமியில் பரப்பி அதின் மேல் அப்போதறுத்த மல்லிகைப்பூ 5 படி பறப்பி ஒரு மெல்லிய துணியினால் மூடி காற்றுப் போகமல் 1 நாள் கதவை சாத்திருக்கவேண்டியது. மருபடியும் அந்த மல்லிகைப்பூவை எடுத்து விட்டு அப்போதறுத்த மல்லிகைப்பூ 3 படியை மேல்படி எள்ளின் மீதில்முன் போல் பரப்பி இரண்டு நாள் பரியந்தம் வைத்திருக்கவேண்டும். பிறகு எண்ணெய் எடுத்து செக்கிலிட்டு எண்ணெயாக்கி மல்லிகைப்பூ எசன்ஸ் ¼ அவுன்ஸ் சேர்த்து சிசாவில் அடைத்து விடவும்.

சம்பங்கி எண்ணெய்.

நல்லெண்ணெய்வீசை இரண்டு ஒரு பாத்திரத்தில் விட்டு சம்பங்கி பூ இரண்டு படி போட்டு அத்துடன் கஸ்தூரிமஞ்சள், கோரைக்கிழங்கு கிச்சிலிக்கிழங்கு, பூலாகிழங்கி, வெட்டி வேர், கதிர்பச்சை குருவிவேர் வகைக்கு பலம் மூன்று விதம் போட்டு, உளுந்து மாவினால் வாயை கவசம் செய்து, ஜலம் நிரப்பிய பாண்டத்தை அடுப்பிலேற்றி அதின் மத்தியில் மூன்று சிறு கல்லுகளிட்டு அதின் மேல் எண்ணெய் பாத்திரத்தை வைத்து சிறிய தீயாக ஒரு நாள் பரியந்திரம் எரியவிட்டு எடுத்து வடித்து கொண்டு புட்டியில் அடைத்து கொள்ளவும்.

தாழப்பூ எண்ணெய்.

கழுவியாடிய எள்ளெண்ணெய்அரை வீசை ஜாடியில் விட்டு செந் தாழப்பூ இதர்கள் 25க்குரையாமல் போட்டு கஸ்தூரிமஞ்சள், கோரை க்கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு பூலா கிழங்கு அகில் கட்டை சமனுக ளுள் ஒருபலம்விதம் சேர்த்து மாவுனுல் வாயை க்வசம் செய்து பெரிய பத்திரத்தில். அரை திட்டம் ஜலம் விட்டு அதின் மீதல் பத்திரத்தை வத்து சம்பங்கி எண்ணெய்யாவது போல் காய்ச்சி கொள்ளவும்.

மகிழம்பூ எண்ணெய்.

கழுவியாடிய எள்ளெண்ணெய் 1 வீசை ஜாடியில் விட்டு அப்போ தறுத்த மொகடம்பூ ஒரு படி போட்டு அத்துடன் கஸ்தூரி மஞ்சள் கோரைக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு, பூலா கிழங்கு, வெட்டி வேர், கதிர் பச்சை, குருவேர், சந்தன தூள் அகில் கட்டை தூள், வகைக்கு இரண்டு பலம் சேர்த்து மாவுனுல் வாயைக்கவசம் செய்து சம்பங்கி எண்ணெய்காய்சுவது போல் காய்ச்சி கொள்ளவும்.

சூரிய புடம் மயிர் வளரும் எண்ணே.

அரைக் கீரை விதை, பச்சிலை, செம்பரத்திபூ, மகிழம்பூ, செண்பகப்பூ, மதனய்பூ, வெட்டிவேர், குருவேர், விலா மிச்சம் வேர், கஸ்தூரிமஞ்சல், கிச்சிலிக் கிழங்கு, பூலா கிழங்கு, ஆலம் விழுது தவனம், மருவு, கதிர் பச்சை இவைகளை வகைக்கு பலம் இரண்டு விதம் வெய்யிலில் உலர்ந்தி நருக்கி துணியில் முடிந்து ஒரு வீசை நல் எண்ணெயிற் போட்டு 48நாள்சூரியபுடம் வைத்தெடுத்து முடிச்சை கச க்கிப் பிழிந்துகொண்டு எண்ணெயை தலைக்கி தடவி வந்தால் கூந்தல் அடர்த்தியும் நீண்டு வளரும்.

POWDER TO KEEP MOTHS AWAY

கொசுக்களைப் போக்க பவுடர்

இலவங்கம்	Cloves	2 அவுன்ஸ்
சின்னமன்	Cinnamon	2 ,,
ஜாதிக்காய்	Mace	2 ,,
மிளகு	Pepper	2 ,,
வசம்பு	Oins root	2 ,,

இவைகளைத் தூள் செய்து ஒன்ருகக்கலந்து கொள்.

CURE FOR BALDNESS.

வழுக்கை விரோதி.

சாதாரணமாக வழுக்கைத் தலையைக் காலையிலும் மாலையிலும் ஜலத்தில் அமிழ்த்தி வைப்பது நல்ல வழக்கம். தலை மயிரை உலர்த்து அதன் பிறகு பிரஷ் கொண்டு நன்ருகத் தேய்க்கவேண்டும். சூடுண்டாகிற வரையிலும் தேய்க்கவேண்டும். அதன் பிறகு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மருந்தை தயார் செய்து மயிரின் வேர்களில் தடவினுல் மிகவும் பயன் உண்டு.

வினிகர் ஆப் கான்தரைட்ஸ்	Vinegar of canthanrides	1 அவுன்ஸ்
யுடிகொலோன்	Eau de cologue	½ அவுன்ஸ்
பன்னீர்	Rose water	1 ,,

இவைகளை கலந்து உபயோகிக்கவும்.

இரண்டாவது முறை

ஜலம்	Water	1 பைன்ட்
பெரல் ஆஷ்	Pearlash	½ அவுன்ஸ்
வெங்காய ரசம்	Onion juice	¼ பைன்ட்

இவைகளைக் கலந்து புட்டியிலிட்டு கார்க்கிடவும். மொறப்பான கம்பிளித் துணியைஇதில் நனைந்து தலையைத் தேய்க்கவேண்டும்.

FLY DESTROYER.

ஈ கொசு நிவாரணி

இகொலிப்டால்	Encalyptol	10 பாகங்கள்
பெர்கமாண்ட் ஆயில்	Bergamont oil	3 ,,
அஸெடிக் ஈதர்	Acetic ether	10 ,,
கொலோன் நீர்	Cologne water	50 ,,
ஆர் கஹால்	Alcohol	100 ,,

இவைகளைக் கலந்துகொள். இந்தத் திராவகத்தில் ஒரு பாகத்துடன் பத்து பாகம் தண்ணீர் சேர்த்து அறைகளின் பக்கங்களில் தெளிக்கவேண்டும்.

GRIPE WATER.

க்ரைப் வாடர்

சாதாரணமாக குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலிகளுக்கும் கோளாறுகளுக்கும் கிரைப்வாடர் மிகவும் பிரயோஜனமானது. இங்கு இரண்டு முறைகளைக் குறித்து எழுதுவோம்.

சோடியம் பைகார்பனேட்	Sodium bicarbonote	2 கிரெய்ஸ்
அம்மோனியம் கார்பனேட்	Ammonium carbanate	¼ கிரெய்ஸ்
டிஞ்சர் ஆப் கார்டமெம்ஸ்	Tincture of Cardamoms	5 மினிம்
ஸிரப் ஆப் ரூபாப்	Syrup of Rubarb	10 மினிம்
தீநீர்	Distilled water	1 திவ்டிராம்.

லைட் கார்பொனேட் ஆப்மெக்னீஷியா	Light carbanate of magnesai	2 கிரயின்ஸ்
சோடியம் பை கார்பெனட்	Sodiumbi carbonate	1 கிரெயின்ஸ்
ஸ்பிரிட் ஆப் க்ளோரோபாரம்	Sprit of Chloroform	1 மினியம்
பெப்பர் மின்ட் ஜலம்	Peppermint water	1 திரவடிரா

DYEING

துணிகளுக்கு சாயம்போடும் முறை

TURKKY RED.

துருக்கி சிவப்பு

முதலில் ஒரு அவுன்ஸ் Pearlash என்பதை 1 காலன் தண்ணீரில் கரைத்து கொள். சாயம் போட வேண்டிய துணியை மேற் கூறிய ஜலத்தில் போட்டு நனைத்து அடுப்பின் மேலேற்றி கொதிக்கவை. பிறகு பிழிந்து உலர்த்து அதன் பிறகு ஒரு அவுன்ஸ் அனுட்டோ Aunoteo விதைகளில் வெந்நீரில் போட்டு கரைத்து கொள். உலர்ந்த வைத்த துணியை இதில் நனைத்துப் பிழிந்து உலரவை. மறுபடியும் அந்தத் துணியை படிக் காரத் தண்ணீரில் நனைந்து உலர்த்து இந்தச் செய்கையை இரண்டு தடவை யாகச் செய். அதன் பிறகு கொஞ்சம் மதார் எடுத்து தண்ணீரில் கரைத்து அதில் துணிகளை நனைத்து உலர்த்து கடைசியாக சோபிபோட்டுத்து வைத்து உலரவைக்க. சாயம் ஏற்படும்.

DARK RED.

கெட்டி சிவப்பு

அரக்கு	Lac	1 சேர்
ஜலம்	water	5 சேர்
படிக்காரம்	Alum	1 அவுன்ஸ்

இவைகளில் அரக்கைச் சுத்தபடுத்து கொண்டு சன்னமாகப் பொடி செய்து கொள். இந்தப பவுடரைக் கொதிக்கும் வெந்நீரில் போட்டு கரைத்துக் கொண்டு சாயத்தை வடிகட்டிக் கொள். இந்தச் சாய நீரைக் காய்ச்சி படிக்காரத்தைப் போட்டு கொஞ்ச நேரம் கொதிக்கவை. அடுப்பின்றும் அகற்றிய பிறகு 5 பீஸ் மல்துணியை நனைத்து நன்றாகப் பிழிந்து உலர்த்து.

RED

சிவப்புச் சாயம்

பிரெஜீல் வுட் Bragil wood மெல்லிய தூளாக்கியது ½ பவுண்டு		
படிக்காரம்	Alum	2 அவுன்ஸ்
கிரீம் ஆப் டார்டார்	Cream of tarter	2 அவுன்ஸ்
ஜலம்	water	4 சேர்

ஜலத்தில் முதலில் கூறிய பிரெஜில் மரத்தூளை மண் சட்டியில் கரைத்து கொள். ஜலம் சாயமானது படிக்காரத்தை சேர்த்துக் கொள். அப்போது சாயம் மிகவும் நன்ருகவும் பிராகசமாகவும் ஆகும் இப்பொழுது கிரீம் ஆப்டார்டாரைச் சேர். கொஞ்சநேரம் கொதிக்க வைத்த பிறகு துணியோடு வடிக்கட்டு. இந்தக் கஷாயத்திற்கு 1 டிராம் அனிலீஉப்பு (Aniline) சேர்த்தபிறகு 4 பீஸ்மல் துணியை. நனைத்து 24 மணி நேரம் கழிந்த பிறகு பிழிந்து பிறகு நிழலில் உலர வைக்கவேண்டும்.

YELLOW

மஞ்சள்

பலாமரப் பட்டையைமிகச் சிறிய துண்டுகளாக வெட்டியதைத் தூள் செய்தது ½ பவுண்டு 20 தோல மஞ்சளை மைபோலறைத்துக் கொள். படிக்காரத்தூள் 2½ துலாம். இவைகளை 30 சேர் ஜலத்தில் கரைத்துக் கொள். மண் பாண்டத்தில் கொட்டி அடுப்பேற்றி கொதிக்கவை. 10 சேர் ஜலம் இருக்கும் வரையில் நன்ருகச் சுண்டவைத்த பிறகு ஆறினதும் வடிக்கட்டிக் கொள். இப்போது துணியை நனைத்து ஒரு மணி நேரங் கழித்துப் பிழிந்து உலர்த்து. இம்மாதிரி மூன்று முறைகள் செய்யத் துணி மிகவும் அழகாகச் சாயம் போடப் பட்டிருக்கும்.

வேறு முறை

2½ சேர் பலாமரப்பட்டையை எடுத்துக் கொண்டுசிறு சிறு துண்டுகளாக அறைத்து கொள். பிறகு 1 மணங்கு தண்ணீரை மண்சட்டியில் விட்டுக் கொதிக்க வைத்து அதில் இந்தப் பட்டையையும் 5 தோலா படிக்காரத்தையும் போட்டு, மெதுவான தீயிட்டு எரித்து 10 சேர் தண்ணீர் மட்டும் தங்கும்படிச் செய் அறின பிறகு வடிக்கட்டிக் கொள் இந்தச் சாயத் தண்ணீரில் துணியை நனைத்து 4 மணி நேரம் வரையில் விட்டு வைத்துப்பிழிந்து உலர்த்து.

வேறு முறை

(3) அனுட்டோ விதைகள் (Annatto seed) l சேர்; க்ரூட் சோடா க்ரூட்சோடா (Cerud soda) 5 தோலா; ஜலம் 5 சேர் கட்டியாயிருப்பவைகளை திரவமாயிருப்பதில் சேர்த்து 4 மணிநேரம் ஊறவை பிறகு ஒருமணிநேரம் வரையில் மண்பாண்டத்தில் கொதிக்கவை ஜலம் சாயமாக மாறியதும் வெளியிலெடுத்து துணியால் வடிக்கட்டு. இந்தச்சாயத்தில் துணிகளை நனைத்துப்பிழிந்துவிடு. அதன் பிறகு l சேர் ஜலத்தில் 5 தோலா படிகாரத்தைக் கரைத்து சாயம் போட்ட துணிகளை இதில் நனை. பிறகு பிழிந்து நிழலில் உலரவை. இம்முறையினல் சாயம் துணியில் அழுத்தமாகவும் கெட்டியாகவும் பிடித்துக்கொள்ளச்செய்யலாம்.

BLUE.

நீல நிறச்சாயம்.

நல்ல நீலிச்சாயம் 1 பாகத்தை எடுத்து 4 பாகம் சல்பூரிக் ஆஸிட்டில் கலந்து 1 பாகம் கார்ப்பொனேட் ஆப் பொட்டாஷ் அந்தகலப்பில் சேர்த்து அத்துடன் 8 மடங்கு தண்ணீரைச்சேர். எல்லாம் ஒன்றுகக்கலக்கும்படி கிளறு.

இப்போது 5 பாகம் டார்டாரும், 3 பாகம் படிக்காரமும் தண்ணீரில் கரை. இதேக்கலப்பில் துணியை நனைத்து பிழிந்து உலரவை. பிறகு இந்தச் சாயநீலித்துணியை நனைத்து கொஞ்சநேரம் கொதிக்கவை. வேண்டுமான நிறம் வந்தபோது எடுத்து விடு.

BLUE.

நீலவர்ணம்.

நல்ல நீலிமருந்து (Indigo) 20 தோலா எடுத்துக்கொண்டு ஜலம் விட்டு திக்காகக் கரைத்துக்கொள். அதன்பின் 5 சேர் ஜலம்விட்டு ஒருபாத்திரத்தில் ஒரு மாதம்வரையில் வைத்துவை. அதன் பிறகு 1 அவுன்ஸ் டார்டார் (Tartar) பொடிசெய்த படிகாரம் (Alum) 2 அவுன்ஸ் இவைகளைச் சேர். இந்தச் சாயத்தில் 25 கஜம் நீளமுள்ள துணியை மூன்றுநாள்வரையில் நனைத்து வைத்தபிறகு பிழிந்து உலர்த்து.

VIOLET.

வயலெட்.

ஸ்கார்லெட் சாயம்	Scarlet Dye	4 டிராம்
ப்ளு மாஜென்டா	Blue majanta	4 ,,

இவைகளை 5 சேர் தண்ணீரில் ஊற்றிக்கிளறு இந்தக் கலப்பில் 2 டிராம் பொடிசெய்த படிகாரத்தைப்போட்டு 8 அல்லது 10 பீஸ் துணிகளை நனைத்துப்பிழிந்து உலர்த்து.

BLACK.

கறுப்பு வர்ணம்.

பிரேஜில்வுட் சக்கை	Brazil wood chips	20 தோலா
மைல்துத்தம்	Copper sulphate	½ ,,
நல்ல ஜலம்	Clear water	2½ சேர்

இவைகளைத் தண்ணீரில் கொதிக்கவை ஜலம் சாயமாகமாறினதும் துணிகளை நனைத்து 4 மணிநேரம் வரையில் சாதாரணதீயில் கொதிக்க விடு. அதன் பிறகு பிழிந்து உலரவை.

GOLDEN.

ஸவரன்கலர்

ஸ்கார்லெட் சாயம்	Searlet Dye	1 தோலா
மஞ்சள் மாஜென்டா	Yellow majenta	1 ,,
ஜலம்	Water	5 சேர்
படிங்காரத்தூள்	Alum powder	1 டிராம்

சாயவகைகளை ஜலத்தில் கரைத்து பிறகுபடிக்காரத்தைச் சேர்க்க வேண்டும். இந்த ஜலத்தில் துணிகளை நனைத்து உலர்த்து. உயர்ந்த ஸ்வர்ணவர்ணம் துணிகளுக்கு ஏற்றப்பட்டு பொன்தகடுகள் போல் விளங்கும்.

ORANGE.

ஆரெஞ்சுகலர்

அனுட்டோ விதைகள்	Annato seeds	1 சேர்
கமலா சாயம்	Kamala dye	1 „
படிக்காரம்	Alum	2 ½ தோலா
க்ரூட் சோடா	Crude soda	5 தோலா
ஜலம்	Water	10 சேர்

முதலில் அனுட்டோ விதைகளையும் சோடாவையும் ஒன்றாக 1 சேர் ஜலத்தில் 4 மணிநேரம் வரையில் ஊறப்போடு நன்றாகப் பிசைந்தபிறகு கமெலா சாயத்தைக்கல. எல்லாவற்றையும் அடுப்பின் மேலேற்றி கொதிக்கவை. கால்பாகம் ஆவியாகப்போனபிறகு எடுத்து விட்டு படிக்காரத்தைச் சேர், பிறகு வடிக்கட்டு, துணிகளை நனைத்து ஒருமணிநேரங்கழித்துப் பிழிந்து உலர்த்து.

GREEN.

பச்சை வர்ணம்

நல்ல தேர்ந்த மஞ்சள் 5 தோலா எடுத்துக்கொள். மைபோல அறைத்துக்கொள். அதை 4 சேர் ஜலத்தில கரைத்துக்கொள். அத்துடன் கொஞ்சம் புளியையும்படிக்காரததையும் சேர்த்துக்கொள்-

இம்மாதிரித்தயார் செய்துகொண்ட ஜலத்தில் துணியை நனைத்து உலர்த்து மறுபடியும் அத்துணியை நீல சாய ஜலத்தில் கொஞ்சநேரம் நனைத்துவைத்தபிறகு உடனே பிழிந்து விடு நல்ல பச்சை நிறம்பெற்றதாகும்.

OTTO OF ROSE.

ரோஜா அத்தர்

ரோஜாமலரை ஸ்தல கமலம் என்று சொல்லலாம். அம்மலரினின்றும் திவ்விய வாசனையுள்ள தைலம் ஒன்று எடுக்கப்படுகின்றது. ரோஜாப்பூவை எங்கும் விளைவிக்கலாம், எனினும், நமது தேசத்திற்கு வடமேற்கிலுள்ள பாரசீக முதலிய இரண்டொரு தேசங்களில் மட்டுமே தைலம் எடுப்பதற்கேற்ற விதமாய்ச் செழித்து வளருகின்றது. இம்மலரிலிருந்து தைலம் எடுக்கவேண்டுமானால், அரும்பாடு பெரும்பாடுபடவேண்டும். ஒரு ரூபாய் எடையுள்ள சுத்தமான அத்தர்சேகரிப்பதற்கு அதமபட்சம் இருபதினாயிரம் புஷ்பங்கள் வேண்டும். அவ்வளவு.தைலம் ரூபா 00 விலை பெறும் ஆயிரம் சத்தியஞ் செய்து அலட்டும் நாடோடி அத்தர் வியரபாரிகளிடம் குப்பிகுப்பியாய்நயமாக வாங்கி வைத்துக்கொண்டு ஸ்வய அத்தர் என்று சொல்வதெல்லாம் வீணேயாம்: அவ்வாறான அத்தரில் ஏதேனும் சிறிதளவு ஸ்வயமான அத்தர் ஒருகால் வாசனைக்குமட்டும் கலந்திருக்குமேயல்லாதுவேறில்லை ஏனெனில் ஒரு ரூபாய் எடை அவ்வளவு ரூபாய் வீதம் விலைக்கு வாங்கி, மீண்டும் அதைச் சொற்பவிலைக்கு ஒருவன் விற்பானாயின் அவன் குபேரசம்பத்துள்ளவனாயிருந்தாலும் அவன் குடிவிரைவிற் கெடுமன்றோ ? சந்தனகட்டையிலிருந்து இறக்கப்படுகிற எண்ணெயோடு ஒரு சிறுது விலை ஸ்வயம் அத்தரை விட்டுக் கலந்து கொண்டு அதை முதற்றரமான ரோஜா அத்தரென்று ஜனங்களை வர்த்தகர் வஞ்சிக்கின்றார்களேயன்றி அது ஒரு போதும் சுத்தமான அத்தரே அன்று ஒவ்வோர் சமயங்களில் வேறுவிதமான எண்ணெயோடு இப்படிக் கலப்பதுண்டு. ஸ்வயமான அத்தருக்குப்பேர்போன இடமாகியகாஜிப்பூர் முதலான இடங்களிலும் இவ்விதமான பித்தலாட்டம் நடக்கிறதென்றால் மற்ற விடங்களில் கேட்பானேன் ? ரோஜாபுஷ்பம் புஷ்பிப்பதற்கேற்ற காலம் சரியாயிராவிட்டால் எத்தனை ஆயிரம் ரோஜா மலர் இருந்தாலும் இரண்டு கிரெயின்ஸ் எடை கொண்ட அத்தர் கூட கிடைப்பதரிது. மத்தியானத்திற்குமேல் ரோஜாச் செடிகளிலுள்ள சிவந்த மொட்டுகளைக்கையிற் கொய்து அதற்கு இருமடங்கான எடை

ஜலத்தை ஒரு காலி மண்பாண்டத்திலே பெய்து அத்துடன் அம் மொட்டுகளைக்கலந்து நன்ருய்க்குலுக்கிக் கலக்கிவிட்டால் அத்தண்ணீர் இரவில் தண்ணென்ருகி விடிந்து பார்க்கையில் பாலில் ஆடைபுடைப் பதுபோல் மேலாக வெகு நுட்பமாய் ஏடுபடிந்தாற்போலிருக்கும். அந்த ஏட்டைவெகு லாகவமாய்க்கையிலோர் இறகைப்பிடித்துக் கொண்டு அதனுல் எடுத்துக்குப்பியில் விடவேண்டும். இதுதான் ரோஜா அத்தர் எடுக்கும் முறை. இவ்வாறு ஒரு நாளல்ல; பலநாள் பாடுபடவேண்டும். இப்படிப் பலநாளளவுஞ்செய்துகொண்டு வந்தாலும் அத்தண்ணீரில் அத்தரின் கதி நுட்பமான திவிலைகள் எடுக்கமுடியாமல் தங்கிப்போகும். ஒரு பெருங்கிணற்றிலே இரண்டொருதிவிலை நல்லெண்ணெய்யைவிட்டால் அது அக்கிணறெங்கும் பரந்து நிற்பதிலும் பதின்மடங்கு ரோஜா அத்தர் தண்ணீரில் கலந்தமைந்திருக்கும் அந்த தண்ணீருக்குத்தான் பன்னீர் என்று பெயர். லாவந்தர், மல்லிகை முதலிய வாசனை ஜலமும் இப்படிப்பட்டவைதாம். ரோஜா அத்தர் ஸ்மர்னு, கான்ஸ்டாண்டிநோபில், காஜிப்பூர் இவ்விடங்களிலிருந்தும், எலுமிச்சம் எண்ணெய், ஸியிலி, போர்த்துகல் இவ்விடங்களிலிருந்தும், லவங்க எண்ணெய் மலாயத்தீவுகளிலிருந்துப் மற்றத்தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. நன்ருய் ஆராய்ந்து பார்க்குமளவில் ரோஜா அத்தர் போலச்சிறந்த அத்தர் வேறு ஒன்றுமில்லை.

சுகந்த கூந்தல் தூபம்

பளிங்கு சாம்பிராணி	பலம்	5
சந்தன தூள்	,,	5
மட்டிப்பால்	,,	2
சிலாரஸ்	,,	5
அகிற்கட்டை	,,	2
ஏலரிசி	,,	2

இவைகளை ஒன்றுபடப் பொடியாகச் செய்துக்கொண்டு வேண்டியபோது நெருப்பிலிட்டு கூந்தலுக்குப்பிடிக்கவும்.

பூஜா ஊது வத்தி

கதிர் பச்சை	பலம்	3	கோரைக் கிழங்கு	2
குரு வேர்		2	கிச்சிலிக் கிழங்கு	2
வெட்டி வேர்		2	அகிற் கட்டை	4
மருவு		1	சந்தன தூள்	5
தவனம்		1	தேவதாரி பட்டை	3
திரு நீற்றுப் பச்சை		1	மகிழம்பூ	1
பூலாங் கிழங்கு		2	தாளிச பத்திரி	1
மட்டிப் பால்		5	சடாமஞ்சி	2
பச்சை யிலை		3	கவுளா	2
பாரி சாதப்பூ		1	குலாப்பூ	1

இவைகளை யிடித்து தூளாக்கி வஸ்திர காயஞ் செய்து பன்னீரினால் மைபோல் அரைத்து வத்தி செய்து கொள்ளவுன்.

தஞ்சாவூர் அத்தர் பில்லை

சிறு நாகப்பூ	துலாம்	$\frac{1}{4}$	பூலாங்கிழங்கு	துலாம்	2
குலாப்பூ		1	கல்பச்சி		1
மகிழம்பூ		2	வெட்டிவேர்		1
சம்பங்கிபூ		$\frac{1}{2}$	திருநீற்றுப்பச்சை		$\frac{1}{2}$
செண்பகப்பூ		1	மருவு		1
அன்னுசிபூ		$\frac{1}{2}$	மட்டிப்பால்		3
கவுளா		$\frac{1}{2}$	சாம்பிராணி		2
பச்சிலை		2	அகிர்கட்டை		4
ஏலரிசி		1	குருவேர்		2
தாளிசபத்திரி		2	கிளியூரல்பட்டை		1
சடாமாஞ்சி		1	விலாமிச்சம் வேர்		1
சிறுநாகம்பூ		$\frac{1}{2}$	சிறுநாகப்பட்டை		2

இந்த 12 தினிசும் நெய்யில் வறுத்து யிடித்து தூள் செய்ய வேண்டியது.

இந்த 12 தினுசும் உலர்த்தி இடித்து மெல்லியதுணியில் வஸ்திரகாயஞ் செய்யவும்.

இவையாம் பன்னீரில்பிசைந்து அறைத்து அதன் பிறகு

கஸ்தூரி	வராக	½	புனுகு	வராக	½
கோரோஜனம்		½	ஜவ்வாது		½
பச்சைகற்பூரம்		2	சந்தன அத்தர்	துலா	1
குங்குமப்பூ		1½	சுவாகு அத்தர்		½

இவைகளை சேர்த்தரைத்து இவைகளை கூட்டி பில்லைகள் செய்து வைத்துக்கொள்ளவும்.

மைசூர் ஊது வத்தி

வெட்டிவேர்	துலாம்	1	குலாப்பூ	துலாம்	1
குருவேர்		1	அன்னாசிப்பூ		1
மருவு		2	கிளியூரல் பட்டை		3
தவனம்		2	அகிற் கட்டை		6
கவுளா		1	சந்தன தூள்		10
பச்சையிலை		3	தாளி சபத்திரி		3
கோரைக் கிழங்கு		4	தேவ தாரி பட்டை		5
கிச்சிலிக் கிழங்கு		2	லவங்க ப்பட்டை		2
பனிங்கு சாம்பிரனி		5	ஏலம்		3
சடாமஞ்சி		2	மைலாலச்டி		5
மட்டிப்பால்		6	மஞ்தகி		4
கதிர் பச்சை		5	அடுப்புகரி		13
மகிழம்பூ		3	கார்போக அரிசி		5

இவைகளை யிடித்து தூளாக்கி சீலையில் வஸ்திர காயஞ் செய்து அம்மியிலிட்டு பன்னீரினால் மைபோல் அரைத்து புனுகு சட்டம் 1 சேர்த்து அரைத்து வத்தி செய்து, நிழலில் உலர்ந்த பிறகு சந்தன அத்தர் துலம் புனுகு துலாம் ½ ஷை வத்திக்கு மேல் தடவி வைத்து கொள்ளவும்.

வாசனை பீடி செய்யும் விதம்.

சந்தனத் தூள்	½ பலம்
கருவா பட்டை தைலம்	½ பலம்
லவண்டர் பூ	2 பலம்

சந்தணத் தூளில் கருவபட்டை தைலத்தை சேர்த்து கொண்டு அத்துடன் லவண்டர் பூவையும் சேர்த்து மெல்லிய துணியில் கட்டி பீடி பொாகையிலை டப்பியில் இந்த வாசனை மூட்டையை சொருகி காற்று புகவிடாமல் மூடி விட்டு இரண்டு நாள் பொருத்து வாசனை மூட்டையை எடுத்து விட்டு பீடி செய்து பிடிக்கவும்.

வாசனை சிகிரேட் செய்யும் விதம்.

வாசனை பீடி செய்யும் விதம் போல் செய்து கொள்ளவும்.

ரோஸ் டி செய்யும் விதம்

தேயிலை தூள்	Tea dust	5 பவுன்
ரோஜா அத்தர்	Essence of rose	1 அவுன்ஸ்

5 பவுண்டு தேயிலை தூளில் 1 அவுன்ஸ் ரோஜா அத்தரை விட்டு கிளரிக் ஒரு ஜலடியில் அடைத்து காற்றுப் புகவிடாமல் மூடி செய்து 10 தினங்கலாவுடன் உபயோகப்படுத்த உயர்ந்த ரோஸ் தேயிலையாகும்.

மெழுகு வத்தி செய்யும் விதம்

வெள்ளை மெழுகு 5 பவுன், கொழுப்ப் 10 பவுன் இவை இறண்டையும் சேர்த்து உருக்கி, மெல்லிய துணிச்சல்லடையில் வடிக்கட்டி கொள்ள வேண்டும். ஒரு பலகையில் மெழுகு வத்தியின் தகரா குழாய்கள் வரிசையாக அமைந்து இருக்கும் படி செதுக்கிக் கொண்டு தகர குழாய்கள் செய்து பலகையில் வரிசையாய் வைத்து மூடிக்கொண்டு தகர குழாய்களின் மத்தியில் நேரே வரக்கூடியா விதமாய் வத்தியை சொருகி யிழுத்து படித்துக் கொண்டு ஒவ்வொரு தகர அச்சிலும் காச்சி வடிகட்டின மெழுகை நிரைய ஊற்றி விடவும். ஆரின பிறகு அளவு பிறகாரம் கத்தரித்து கொள்ளவும்.

ஓடிகலான் செய்யும் விதம்

ஆயில் ஆப் ரோஸ் மரி		Oil rose mary	1	அவுன்ஸ்
,,	கிராம்பு ,,	Cloes	½	,
,,	நிரோலி ,,	Neroli	2	,,
,,	சின்னமண் ,,	Cinamon	½	,,
,,	பெர்கமட் ,,	Bergamot	4	,,
,,	லிமின் ,,	Lemon	5	,,
,,	ஹால்கஹால் ,,	Alcohal	50	,,
,,	ஜாமின் ,,	Jasamine	1	,,
டின்ச்சர் ஆப் மஸ்க்		Tinct of musk	½	,,
வடிகட்டின சுத்த ஜலம்		Distelled water	100	,,

மேற்சென்ன வாசனை வஸ்துக்களை ஹால்கஹாலில் கலத்து 10 நாள் வரையில் ஊரவத்து காத்து போகமல் பத்திர படுத்தி பிறகு வடிகட்டி சிறிய கல்கார்க்குள்ள சீசாக்களில் அடைக்கம் செய்யவும்.

Manifacture of Varnish.

வார்னிஷ் செய்முறைகள்.

வார்னீஷ் பலவகைப்படும், அவைகளில் சிலவற்றைக் குறித்துக் கீழ்விவரிப்போம்.

BLACK JAPAN

கறுப்பு ஜப்பான்

செம்பினால் செய்யப்பட்ட வாயகன்ற பாத்திரத்தில் நேபில்ஸ் (Naples) 48 பவுண்டைப்போட்டு உருக்கு, அது உருக்கியதும் பச்சை ஆளிவிதை எண்ணெய் (Line seed Oil) 10 காலன் ஊற்று சிறு தீயில் விட்டுவை. பிசின் சட்டியில் 8 பவுண்டு கறுப்பு அனிமம் பிசினை (Dark gum anime) உருக்கு அத்துடன் 2 காலன் சூடாக்கிய எண்ணெயைச் சேர்த்து முன்முதலில் சொல்லிய செப்புப்பாத்திரத்தில் ஊற்று அதன்பிறகு 10 பவுண்ட் கறுப்பு அல்லது நீல அம்பரை (Ambar) 10 காலன் இருப்பு சட்டியில் காய்ச்சு, அது காயும் போது கிளரிக்கொண்டேயிரு, அதிகமாகக் காய்ந்து போகும் போதும், கொதித்து சட்டியின் மேலெழும்போதும் அடிக்கடி அடுப்பினின்றும் சில நிமிஷங்கள் வரையில் எடு அது முழுமையும் காய்ந்த போது அதில் 10 காலன் சூடாக்கிய எண்ணெயைக்கலந்து. இக்கலப்பை செப்புப்பாத்திரத்தில் ஊற்று. கொதிக்கவைப்பதைப் பின்னும் 3 மணி சவகாசம் வரையில் தொடர்ந்து செய், அதன்பிறகு தீயை அணைத்துவிடு காலைவரையில் தணியும்படி விட்டுவிடு. பிறகு அது இருகும்வரையில் கொதிக்கவை, பிறகு ஆறும்படி விடு அதன் பிறகு டர்ப்பெண்டைனைக்கல்.

PALE AMBAR VARNISH

வெள்ளை அம்பர் வார்னீஷ்.

மிக்க வெண்மையும் பளிங்கு போன்றிருக்கும் அம்பரில் 6 பவுண்டு எடுத்து பிசின் கட்டியில் காய்ச்சு. சூடாக்கிய எண்ணெயில் 2 காலன் ஊற்று. அது நூல்போல் வரும் வரையில் கொதிக்கவை. 4 காலன் டர்ப்பண்டைன் எண்ணெய்யைக்கல. இது கோபால் வார் னிஷ் போல் அவ்வளவு நேர்த்தியாயிருக்கும். வேலைக்கு மிகவும் தகுந்ததாயிருக்கும். அது எதற்கு உபயோசப்படுத்தினலும் மிகவும் லகுவாகவும் சௌசரியமாசவும் ஓடும். வார்னிஷகள் எல்லாவற்றிலும் இது மிகச்சிறந்தது இது மிகவும் கெட்டியாயிறுகும். கோபால் வார் னிஷ்களுடன் இது மிகவும் எளிதில் கலக்கும் தன்மையையுடையது. அம்பர் வார்னிஷ் பாலிஷ் செய்யப்பயன் படுவதற்கு முன் அதிக காலம் கழிய வேண்டுமென்பதை முக்கியமாய்ச் சவனிக்க வேண்டும்.

BEST BURNSWICK BLACK

சிறந்த பர்ன்ஸ்விச் கறுப்பு வார்னீஷ்

ஒரு இரும்பு வாணலில் சிறு தீயிட்டு 45 பவுண்டு சீளம் அஸ் பால்டம் (Foreign Asphaltum) என்பதை குறைந்த பட்சம் 6மணி நேரம்வரையில் கொதிக்கவை. அதே சமயத்தில் இன்னொரு இரும்பு வாணலில் முன்னமேயே கொதிக்கவைத்த 6 காலன் எண்ணெயைக் கொதிக்கவை 6காலன் கொதித்துக்கொண்டிருக்கும்போது (Litharge) லிதார்ஜ் என்பதில் 6 பவுண்டைக்கொஞ்சம் கொஞ்சமாகச் சேர். அதை விரல்களுக்கிடையில் நூல் இழைம்போல் வருகிதவரையில் கொதிக்கவைக்கவும் பிறகு கிளறு அல்லது அஸ்பால்டம் காயும் வாண லில் கொட்டு. இப்படிக் கொட்டிய பிறகு அக்கலப்பு உருட்ட கெட்டி யான மாத்திரைகள்போல ஆகும்வரையில் கொதிக்க விடு பிறகு ஆற விடு, அத்துடன் 25 காலன்டர்ப்பன்டைன் எண்ணெயை விட்டு கலந்துகொள் அல்லது எவ்வளவு டர்ப்பன்டைன் தேவையாக இருக் குமோ அவ்வளவு டர்ப்பன்டைனை கலந்துகொள்ளவேண்டும்.

IRON-WORK BLACK VARNISH

இரும்புசாமான்களுக்கு கருப்பு வார்னிஷ்

அஸ்பால்டம் (Asphaltum) 48 பவுண்டை ஒரு இரும்புவாணலில் போட்டு 4 மணிநேரம் கொதிக்கவை. முதல் இரண்டு மணிநேரத்தில்,

7 பவுண்ட் ரெட்லெட்டை (Red lead) யும்

7 பவுண்ட் லிதார்ஜ் (Lithargc) யும்

3 பவுண்டு உலர்ந்த காப்பார்ஸ் (Dried Copperas) யையும் 10 காலன் கொதித்த எண்ணெயும், $\frac{1}{8}$ பவுண்ட் பிசினை 2 காலன் சூடான எண்ணெயில் கரைத்ததையும் சேர்க்க வேண்டும்.

எண்ணெயையும் பிசினையும் கொட்டியபிறகு இரண்டு மணிநேரம் வரையில் கொதிக்கவை. அல்லது ஜப்பானைப்போல் மாத்திரையாக உருளுகிறவரையில் கொதிக்கவிடு. ஆறினபிறகு 30 காலன் டர்பன்டைனின் இதைக்கொட்டி நீருகத் தளரச்செய்துக்கொள்ளவும். கோச் வண்டிகள், மற்றவண்டிகளின் இரும்புபாகங்களுக்கு இந்த வார்னிஷ் பெரிதும் பயன்படும்.

PRESERVATION OF WOOD POST

மரக்கால்களை நாசமடையாமல் செய்யப்புதிய வழி

இம்முறையைக் கையாளுவதால் பணச்செலவும் கிடையாது' தேகச்சிறமமும்கிடையாது. இம்முறையினுல் பூமியில் நடம்படும் மரக்கரல்கள் சேதமடையாமல் நீண்டகாலம் மிக்க உறுதியுடன் இருக்கத்தடையேயில்லை. இதை எப்படிச் செய்வதெனில் மரக்கால்களை நடும் காலத்தில் திருப்பி நடவேண்டும். அதாவது இயற்கையில் பரங்கள் எல்லாம் ஆகாயத்தைநோக்கியல்லவா வளர்கின்றன. பூமியில் நடுங்காலத்தில் இயற்கையாக ஆகாயத்தை நோக்கி வளரும் பாகத்தை பூமியில் பதித்துவிட்டால் அந்தப்பாகம் சீக்கிரத்தில் நாசமடைவதில்லை என்று பலவருஷங்களுக்கு முன்னமேயே பெரியோர்கள் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள். இயற்கையாக வளர்கின்ற மாதிரியே கால்கள் நடப்படடதால் 12 வருஷங்களிற்குள்ளாகவே அவை செத்துப் போய்விட்டனவாம் அநேக வருஷங்களாகியும் தலை கீழாக நளப்பட்ட மரக்கால்கள் சேதமடையாமல் இருந்ததாகவும் தெரியவருகின்றது.

வைத்திய முறைகள்.

மருந்து செய்யும் வகைகள்.

வைத்திய நூல்களில் காணப்படும் மூலிகைத் தொகுதிகளின் பரிபாஷைகள்

வைத்திய சிகாமணிகள் மூலிகைத்தொகுதிகளை விரைவிற் கியாபகத்திற்குவரும்பொருட்டு சுருக்கமாகப் பெயர்கொடுத்துவைத்திருக்கின்றார்கள். மருந்து செய்முறையில் அச்சுருக்கப்பெயர்கள் அடிக்கடி வருகின்றபடியால் விவரமாக விவரிக்காவிட்டால் ஒன்றுமே விளங்காதாகையால் கீழே விவரமாக வெளியிடுகின்றோம்.

அஷ்டமூலம்: 1 முத்தக்காசு, 2 விஷ்ணுகிராந்தி, 3 பேய்ப்புடல் வேர், 4 சிந்தல் கிழங்கு, 5 கஞ்சாங்கோரை, 6 ஆடாதோடை, 7 கருந்துளசி, 8 பர்பாடகம்.

அஷ்டவர்க்கம்: 1 சீரகம், 2 கருஞ்சீரகம், 3 சுக்கு, 4 மிளகு 5 திப்பிலி, 6 இந்துப்பு, 7 பெருங்காயம், 8 ஓமம்.

மஹாபஞ்சமூலம்: 1 வில்வவேர், 2 புன்னைவேர், 3 ஈச்சுரமூலி, 4 பாதிரிவேர், 5 பெருமரவேர்.

லகுபஞ்சமூலம்: 1 கண்டங்கத்திரி, 2 இரண்டுவிதம், 3 ஈரிலைத் தாமரை, 4 மூன்றிலைத்தாமரை, 5 நெறிஞ்சி.

திருணபஞ்சமூலம்: நாணவேர், தருப்பைவேர், கரும்புவேர், நெற்பயிர் வேர், வெள்ளை அருகம்வேர்.

பஞ்சகோலம்: சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம்.

பஞ்சவாசம்: லவங்கம், ஏலம், கற்பூரம், ஜாதிக்காய், தக்கோலம்

திருகடுகு: சுக்கு, மிளகு, திப்பிலி.

திரிகந்தம்: சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம்.

திரிமதுரகம்: பால், நெய், தேன்.

திரிமஞ்சள்: மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள்.

திரிமூலம்; திப்பிலிமூலம், சித்திரமூலம், கண்டமூலம்.

திரிபத்திரி: சாதிபத்திரி, லவங்கபத்திரி, தாளிசபத்திரி.

திரிநிம்பம்: வேம்பு, நிலவேம்பு, கறிவேம்பு.

திரிஜாதம்: லவங்கபத்திரி, லவங்கப்பட்டை, நாகேசுரம்.

சாதுர்ஜாதம்: லவங்கபத்திரி, லவங்கப்பட்டை, நாககேசுரம்,ஏலம்

முப்பழம்: வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்.

பஞ்சாமிர்தம்: பால், சர்க்கரை, நெய், தேன், வாழைப்பழம்.

முக்கூட்டு எண்ணெய்: பசுவின் நெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய்.

பரிமளவர்க்கம்: சாதிக்காய், ஏலம், லவங்கம், லவங்கப்பட்டை சாதிபத்திரி

லேகியம்: நாக்கினால்நக்கி சாப்பிடும்படியான மருந்து

சோஷியம்; உறிஞ்சி விழுங்கும்படியான மருந்து.

காத்தியம்: மென்றுதின்னும்படியான மருந்து.

சுத்திமுறை

நம் நாட்டு மருந்துச் சரக்குகளைச் சுத்தி செய்தபிறகே மருந்து செய்ய ஆரம்பிக்கவேண்டும். சுத்திசெய்யாவிட்டால் எந்தகுணம் நமக்குத்தேவையோ அது கிடைக்காமல் விரோதமாகிவிடும். எனவே சுத்திசெய்யும் முறைகளை நன்றாகத் தெரிந்துகொண்டதன் பின்னரே மருந்துகள் செய்யப்பட வேண்டும்.

சொர்ணசுத்தி: தங்கத்தகட்டிற்குச் செம்மண்ணினால்லேப்பங் கொடுத்து கரிநெருப்பில் சிவக்கக்காய்ச்சி ஆறவைத்துக்கொள்வதே சுத்திசெய்ததாகும்,

வீரம்சுத்தி: இளநீரில் களஞ்சி கர்ப்பூரமிட்டுக்கலக்கி அதில் தொலாந்திரம்கட்டி நீரில் படாமல் எரித்து எடுத்துச்கொள்ளவும்.

லிங்கம்சுத்தி: தேனிலாவது, முலைப்பாலிலாவது ஊறவைத்து மறுநாள் பழரசம், மேனிரசம், முலைப்பாலும் கலந்து ஒரு ஜாமம் சுருக்கிடவும்.

பூரம்சுத்தி: வெற்றிலை மிளகு கஷாயத்தில் கிளிகட்டி மூன்று நாள்வரையில் ஊறவைத்து எரித்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

காரீயம் வெள்ளீயம்சுத்தி: காரீயமாவது வெள்ளீயமாவது சுத்தி செய்யவேண்டுமானால் அக்கினி முகத்தில் உருக்கு. நல்லெண்ணெயில் 7 தரமும் சாய்க்கவும் இப்படியே கோமூத்திரத்திலும், புளித்த மோரிலும், கொள்ளுவேகித்த ஜலத்திலும், எருக்கம்பாலிலும், வெள்ளாட்டுப்பாலிலும் 7 தரமும் உருக்கி ஊற்றி எடுத்துக்கொண்டு அவுஷதங்கள் செய்து முடித்தால் வியாதியின்பேரில்வெகுவேகமாகப்பாயும்.

இரும்புசுத்தி: இரும்புத்தூளை ஒரு நாள் எலுமிச்சம்பழரசத்தில் ஊறவைத்து எடுத்து மறுநாள் நல்லெண்ணெயில் ஊறவைத்துஇரும்பு சட்டியிலிட்டு வறுத்து காடியில் கழுவிவேலம்பட்டைக் கஷாயத்தில் கொதிக்கச்செய்து காடியில் கழுவி எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

கவுரிசுத்தி: கவுரிக்குப்பாதியெடை மிளகும் பாதிஎடை உளுந்தும் கூட்டி எருக்கம்பால்விட்டரைத்து கவசம் கட்டி ரவியில் காயவைத்து மேலே துணிசுற்றி வெள்ளாவிவேகும்போது நடுவில் வைத்தெடுத்து கவசம் நீக்கி அமுரியினால் கழுவி எடுக்க நல்லசுத்தியாகும்.

பொன்னிமிளை: மூன்றுநாள் வரையில் காடியில் ஊறவைத்தெடுக்கவும்.

நிமிளை: வாழைக்கட்டை அடிஜலத்தில் கொதிப்பித்து எடுக்கவும்.

கிருஷ்ணஅப்ரகம்: காடிஜலம் விட்டறைத்து படி கோசலத்தில் கலக்கி வேகவைத்தெடுத்து உணர்த்தி நெல்லு சேர்த்து கிளிகட்டி காடியில் தேய்த்து இறங்கும் தெளிவை உணர்த்திக்கொள்ளவும்.

லவங்கம். வெள்ளாட்டு நீரில் பிரண்டைவேரை அரைத்துப் போட்டு நல்லெண்ணெய் விட்டுக்கலக்கி அதில் 10 தாம் உருக்கிச் சாய்த்தெடுக்கச் சுத்தியாகும்.

மிருதார்சிங்கி: இதை வெள்ளாட்டுக்கோசலத்தில் ஒரு நாழிகை கொதிக்கவைத்து எடுத்துக்கழுவவும்.

மனோசிலை: காடியிலாவது வெள்ளாட்டுமூத்திரத்திலாவது கிளி கட்டி எரிக்கவும்.

கல்நார்: கல்நாரை கழுதைமூத்திரத்தில் மூன்றுநாள் ஊற வைத்துக்கழுவி எடுத்துக்கொள்ளவும்.

சிலாசித்து: சிலாசித்தை எலுமிச்சம்பழரசம், சுண்ணாம்பு ஜலம் அல்லிப்பூரசம், பசும்பால் இவைகளில் எதிலாவது தொளாந்திரங் கட்டி எரிக்கவும்.

வெங்காரம்: எலுமிச்சைரசத்தில் அறைத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

நேர்வாளம்: கொட்டையை உடைத்து மேலோடுநீக்கி பருப்புகளை எருமைச்சாணியைக்கரைத்து அதில் கிளிக்கட்டிப் போட்டு எரித்து எடுத்து அவைகளைப்பிளந்து உள் முளையும் மேல்தோலும் போக்கிப் பச்சரிசியும், புகையிலையும் போட்டு அதில் கொட்டைகளைக் கிளிக்கட்டிப்போட்டு அரிசிச்சாதமாக வேகுமளவும் விட்டுப் பிறகு எடுத்து ஜலம்விட்டுக்கழுவி நன்றாய் உலர்த்திப் புட்டியிலடைத்துக் கொள்ளவும் உபயோகிக்கும்போது கொஞ்சம் நெய்விட்டு வறுத்துக் கொள்ளவும் இதுதான் நேர்வாளத்திற்கு நேரான சுத்திமுறை.

தாளகம்: தாளகத்தைச் சுண்ணாம்புக்கல்லுக்குள் வைத்து மூடி கழுதைமூத்திரம்விட்டு 7 விசை மாற்றி மாற்றி தாளிக்கவும் பனங்கள்ளும், சிறுவர் சிறுநீரும்விட்டுத் தாளிப்பதுமுண்டு, கழுதைமூத்திரம் சிறந்தது.

பாஷாணசுத்தி: பாஷாணத்திற்கு மேல் கந்தைத் துணிகளைச் சுற்றி வெள்ளாவியில் வைத்து எரிக்கவேண்டும். இப்படி 7 தடவை செய்தால் சுத்தியாகும். வேறு எப்படிச்செய்தபோதிலும் அதிலுள்ள எண்ணெய் நீங்காது.

சிவதைவேர்; பசும்பாலில் அவித்து உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும்.

சுக்கு: மேல்தோல் சீவி சுண்ணும்பு பூசி உலர்த்தச் சுத்தியாகும்.

மிளகு: புளித்தமோரில் மூன்றுநாள் ஊறவைத்து வறுத்தெடுக்கவும்.

திப்பிலி: எலுமிச்சம்பழரசத்தில் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாகும்.

ஓமம்: சுண்ணும்பு தெளிவில் ஒரு ஜாமம் ஊறவைத்து உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும்.

இருவிதசீரகம்: சுண்ணும்பு நீரில் 7 ஜாமம் ஊறவைத்து உலர்த்திக்கொள்ளச்சுத்தியாகும்.

எட்டிக்கொட்டை: நெல்லோடு சேர்த்து அவித்து சிறுகீரை ரசத்தில் ஒரு ஜாமம்போட்டு தேற்ருங்கொட்டைரசத்தில் அவித்து எடுத்துக்கொள்ளவும்.

மாசிக்காய்; பசும்நெய்யில் வறுத்து வெடித்தபிறகு எடுத்துக்கொள்ளச்சுத்தியாகும்.

கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி	வராகனெடை 2	வால்மிளகு	வராகனெடை	1
குங்குமப்பூ	1	ஏலக்காய்		1
கோரோசனம்	1	ஜாதிக்காய்		1
சுக்கு	1	ஜாதிபத்திரி		1
பச்சைக்கற்பூரம்	1	மிளகு		1
லவங்கம்	1	திப்பிலி		1

இவைகளைச் சுத்தமான ஜலம் விட்டு அறைத்து சிறுபயறு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்திக் கொள்.

தோஷம், நாவரக்ஷி, சளி, தலைபாரம், இவைகளுக்கு முலைப்பாலிலும், வெற்றிலையிலும் மடித்து 1 கொடுக்கத்தீரும். கடுகு நல்லெண்ணெய் ஆகாது.

கோரோஜனை மாத்திரை

கோரஜனம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், ஜாதிக்காய், அரத்தை, வசம்பு, உள்ளி, குங்குமப்பூ, இவைகள் சமனெடை எடுத்து மணத்தக் காளிச் சாறு விட்டு ஜாமம் அறைத்து அப்படியே கலுவத்துடன் ஆறவைத்து மறுநாள் கம்மாறு வெற்றிலைச் சாறுவிட்டு ஒரு ஜாமம் அரைத்து முன்போலவே அப்படியே கலுவத்துடன் ஆறவைத்து மறு நாள் சுத்தி செய்த ரசகற்பூரம் காலிடை கூட்டிமுலைப்பால் விட்டு ஒரு ஜாமம் அறைத்து பச்சைபபயறளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும். குழந்தைகளின் நோய்களுக்குத் தேனில் இழைத்து உபயோகிக்கவும். இது கைகண்ட அருமையான மருந்து.

தாது புஷ்டி

தாது புஷடியைத் தரவல்ல ஔஷதங்கள் பலவுண்டு. அவைகளின் சிலவற்றைக் கூறுவோம்.

(1) சாலாமிசிறி வராகனெடை 2; றாமஸ்திகி வராகனெடை 1; கற்கண்டு வராகனெடை 3 இவைகளைக் சூரணம் செய்து கொண்டு வேளைக்கு வராகனெடை சூரணத்தைப் பசும் பாலில் விட்டுக்குடித்து வர தாது புஷ்டியுண்டாகும்.

(2) குங்குமப்பூ, ஜாதிக்காய், ஜாதிபாத்திரி லவங்கம் இவைகளைச் சூரணித்து சமமாகச் சேர்த்து வேளைக்கு இரண்டு வராகனெடை சூரணத்தைப் பசு நெய்யிற் குழைத்து தின்றுவரத் தாதுபுஷ்டி வுண்டாகும்.

சீராத ஜுரத்திற்கும் ஜனிக்கும்
கண்ட கோடாலி மாத்திரை

லிங்கம்	வ	1	லவங்கம்	வ 1
கவுரி		1	அக்கல்காரம்	1
வெள்ளைப் பாஷாணம்		1	அதி மதுரம்	1
தாளகம்		1	மைசாக்ஷி	1
மிருதார் சிங்கு		1		

இவைகளைச் சுத்தி செய்து நிறுத்தெடுத்து கலுவத்திலிட்டு இஞ்சிர சத்தில்ஒரு ஜாமம் முருங்கைப்பூ ரசத்தில் ஒரு ஜாமம்,தும்பைப்பூரச த்தில் ஒரு ஜாமம் பூண்டு தைலத்தில் ஒரு ஜாமம் அறைத்து கடுகுகது கொஞ்சம் பெரிதாய் மாத்திரை உருட்ட வேண்டும் ஜன்னிக்கு ஒரு மாத்திரை இஞ்சிரசத்தில் கொடுக்க வேண்டும் அதிக ஜீரமாயிருந்தால் முலைப்பாலில் கொடுக்க வேண்டும். இந்தச்சபத்தியம் இம்மாத்திரை மிக்க அனுபவமானது சிலாக்கியபான மருந்து.

மதுமேகம் என்னும் நீரிழிவிற்கு

கற்பூராதி குளிகை

பச்சைக் கற்பூரம் ஆவாரம் வித்து வகைக்கு பலம் 1 வேப்பம் பிசின், விளாம் பிசின், முள்ளிலவம் பிசின், கருவேலன் பிசின், ஒதியம் பிசின், முருங்கைப் பிசின், வெள்ளைக் குங்கிலியம், தேத்தான் வித்து, கடலழிஞ்சில்வித்து, கஸ்தூரிகோரோஜனை, குங்குமப் பூ,அபினிவகை க்கு வராகனெடை 2 செவ்வகத்திச்சாறு, அத்தி நீர் திரிபலைக் கஷாயம் இவைகளின் ஒவ்வொன்றாக ஒரு ஜாமம் விட்டறைத்து தாது விளாங் காய் பிரமாணம் குளிகை செய்து கொள்ளவும்

கற்பூராதி குளிகை உபயோகிக்கும் முறை

எருமைத் தயிரிலாவது, தேனிலாவது, நல்லெண்ணெயிலாவது இக்குளிகையை வைத்து ஏழு நாள் உண்ண நீரிழிவு மேகம், நீர் சுருக்கு, நீருருக்கு முதலியவைகள் தீரும் இச் சாபத்தியம்.

வீர்ய விருத்தி குளிகை

ஜாதிலிங்கம்	வராகனெடை	1
அபினி	”	1
முருங்கை விதை	”	4

இவைகளில் முதலில் கூறப்பட்டுள்ள ஜாதிலிங்கத்தை முதலில் சுத்தி செய்து கொள்ள வேண்டும். ஜாதிலிங்கம் சுத்தி ஆவதற்கு முலைப்பால் விட்டுச் சுருக்கேற்றவேண்டும். அதன் பிறகு மற்றவைக ளையும் ஆவின் பால் விட்டறைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து கொள்ளவும்.

இதை உபயோக்கரும் விதம்.

இம்மாத்திரை ஒன்றை பசுவின் பாலிற் வீர்யகொள்ள விருத்தியாகும். இளமையை இழந்தவர்கள் புத்துயிர் பெற்று சுகாதி போகங்களை மீளவும் குறைவின்றி பெறுவார்கள். உண்ணும் உணவு பதார்த்தங்களுக்குமிளகு எலுமிச்சம் பழம் சேர்த்துக் கொள்ளவும், மிளகாய்' புளிஉதவாது.

தங்கபஸ்பம்

சுத்திசெய்த தங்கத்தை மெல்லிதாகத் தகடுகள் தட்டி 1 பலம் எடுத்து அதற்குக்கால்பலம் பொன்னிமிளையை ஒலுமிச்சம் பழம் சாற்றால் அறைத்து தகட்டிற்கு லேப்பங்கொடுத்து காய்ந்தபின் அந்தத்தகட்டை ஓட்டில் வைத்து சீலைமண் செய்து கெஜபுடம் போட பஸ்பமாகும்.

சொர்ணபஸ்பம் வேறு முறை

சுத்திசெய்த தங்கத்தை மெல்லியதாகத்தகடடித்து அந்ததகட்டிற்குச் சமபாகம் கெந்தகத்தை எடுத்து கரும்புரசம்விட்டு அறைத்து அதைத்தகட்டிற்குப் பூசி காயவைத்து இவ்விதம் 7 தரம் செய்து காய்ந்த பின் ஓட்டில் வைத்து சீலைமண்செய்து கெஜபுடம் போட்டு ஆறியபின் எடுத்துப்பார்க்க பஸ்பமாகும். இதில் ஒரு பணவெடை அனுபானத்தோடு உட்கொண்டால் இராஜக்ஷயம் முதல் சகல க்ஷய ரோகங்களும் இருமலும் சொஸ்தமாகும்.

தங்கபஸ்பம்

குந்தன மிழைக்கும் தங்கரேக்கு ½ வராகனெடை யெடுத்து உப்பிலாங்கொடியை இடித்துப்பிழிந்த சாற்றை வடிக்கட்டி அதனால் ஷி தங்கத்தை இரண்டு ஜாமம் அறைத்துபில்லைதட்டிக்காய்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடுமூடியும் 3 சீலைமண் செய்து காய்ந்த பின் 30 வறட்டியில் புடமிடவும். ஒருசமயம் சுத்தக்கறுப்பாயிருந்தால் ஷி மூலிகைச் சாற்றினால் பிசைந்து பில்லைதட்டி மறுபுடம் போட்டால் சாம்பல் வர்ணமாயிருக்கும். அனுபானங்களில் கொடுத்தால் அண்டவாயு மேகவாயு, பித்தவாயு கர்ப்பஜன்னிகள் கர்ப்ப தோஷங்களும் தீரும். வலிப்பு, இசிப்பு, கிராணி, பெரும்பாடு, பிரமியம், பித்தவெட்டை எந்தவியாதியும் தீரும். அரை அரிசி எடைக்குமேல் ஒரு அரிசி எடைக்குள்ளாகக் கொடுக்கவேண்டும். புளி, புகை, பெண் நல்லெண்ணெய், கடுகு, மீன், கருவாடு, லாகிரிவஸ்து இவைகள் கூடாது. பால், தயிர், நெய் சேர்த்துக்கொள்ளவும். (பைராகி முறை)

அப்ரேக் பஸ்பம்.

வெள்ளை அப்ரகம் வேண்டிய அளவு எடுத்து நன்ருக இடித்து கெட்டியான துணியிற்போட்டு அத்துடன் சிலசிறிய கற்களைப்போட்டு முடிந்து ஒரு பாத்திரத்தில் தண்ணீரைவைத்து அதில் இந்த முடிப் பைப்போட்டுப்பிசைய வேண்டும். அந்தமுடிப்பிலிருந்து எல்லா சத்து களும் தண்ணீரில் வெளியான பிறகு அந்தமுடிப்பை எடுத்து விட வேண்டும். அந்தத் தண்ணீரை சத்தெல்லாம் கீழிறங் கும் வரையில் வைத்துப் பிறகு தண்ணீரை இறுத்துக் கீழே தங்கியிருக்கும் அப்ரேகத்தை எடுத்து உலர்த்தி வைத்துக் கொள்ள வும். இதற்கு அப்ரகநவநீதம் என்று பெயர். பிறகு இதனைக் கலு வத்திலிட்டு கள்ளிப்பாலைச் சிறுகச்சிறுகவிட்டு ஒரு ஜாமம் நேரம் அரைத்துப்பில்லையாகச்செய்து நிழலிலுலர்த்தி ஒருமண் கலயத்தில் வைத்து மேல்மூடித்திரமாகச்செய்துசீலைமண்செய்து வெயிலிலுலர்த்தி 80 துலாம் கொண்ட வறட்டியிற் புடமிட்டுக்குளிர ஆறவிட்டு எடுத் துக்கொள்ளவும். பிறகு முன்போலவே கள்ளிப்பாலில் அறைத்து இதேமாதிரி இன்னும் 4 தடவைகள் புடமிட்டு எடுத்துக்கொண்டு பிறகு இதனை வாழைக்கிழங்கு சாற்றிலும் பத்துப்புடங்களும் மரு தோன்றி இலைச்சாற்றில் மூன்றுபுடங்களும் எருக்கம்பாலில் மூன்று புடங்களும் இட்டு எடுத்து மருந்தைபத்திரப் படுத்திக்கொள்ளவும்.

பிரமாணம் ஒரு அரிசி எடை.

உபயோகம்: இந்த மருந்தை மேற்கண்ட பிரமாணப்படி ஆட்டுப் பாலில் சாப்பிட்டுவர சுவாசகாசம் தீரும்.

இன்னும் இதனைத்தக்க அனுபானத்துடன் சாப்பிட எல்லாமூல ரோகம், இரத்தத்தைச் சுண்டச்செய்யும் எல்லா வியாதிகளும் தீரும். சுரரோகம், இருமல் ரோகம், இன்னும் விஷ ரோகங்களும் தீரும்.

பவழபஸ்மம்.

பவழத்தையாவது அல்லது பவழக்கொடிகளையாவது வேண்டிய மட்டும் எடுத்துப்பீங்கான் கோப்பையில்போட்டு அது மிதக்கும் அளவு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மூன்று நாள்வரையில் ஊறியபின்

எடுத்து வெந்நீரில் அலம்பிவிட்டு இலந்தை இலையாவது சிறு கீரையை யாவது அறைத்து அந்த மொத்தைக்குள் பவழத்தைவைத்து சுமார் விளாங்காய் அளவு இருந்தால் 20 வறட்டியில் புடமிட்டு ஆறிய பின் எடுத்து எருக்கம்பால்விட்டு அறைத்துப் பில்லைதட்டி காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடுமூடி சீலை செய்து 15 வறட்டியால் புடமிட்டு ஆறியபின் எடுத்துக்கொள்ளவும். வெண்ணெயில் அல்லது நெய்யில் அல்லது தகுமான லேகியங்களில் உபயோகப்படுத்தினால் க்ஷயம், காசம், உடம்பு உளைவு மேகக்குடைச்சல் இவைகள் எல்லாம் தீரும்.

பவழபற்பம்,

ஒருபலம் பவழத்தை உடைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் இராப் பகல் ஊறவைத்து அலம்பி எடுத்துக்கொண்டு கீழாநெல்லியையறைத்து விளாங்காய்பிரமாணம் கலசம்செய்து அதற்குமேல் செம்மண் சீலை 7 செய்து அரைதிட்டம் காய்ந்தபின்பு முன்போல் புடமிட்டு ஆறிய பின் எடுத்துக்கொள்ளவும் சுரம், குளிர், ஜன்னி, கபம் இவைகளுக்குத் தக்க அனுபானங்களில் இடகுணமாகும். ஈளை இருமல் முதலியவை தீரும்.

முத்துபஸ்மம்

கெட்டிமுத்து 1 பலம் எகித்துப் பீங்கான் கோப்பையிலிட்டுத் தேன்விட்டு 3 நாள் ஊறவைத்து அலம்பியபின் சங்கம்பழச்சாற்றில் ஒரு நாளை ஊறவைத்து யெடுத்து பாப்பாரமுள்ளி பழத்தின் ரசத்தில் மெழுகுபோல் ஆகுமளவும் அறைத்து பில்லையாகத்தட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி நாலைந்து சீலைசெய்து காய்ந்தபின் சுமார் முப்பது வறட்டியில் புடம்போட்டு ஆறியபின் எடுத்துக்கொள்ளவும். இதை தங்கபஸ்பத்துடன் சரி எடை கூட்டி நெய்யில் அல்லது வெண்ணெயில் தகுந்த லேக்கியத்தில் சாப்பிட தாதுபுஷ்டியுண்டாகும்.

சுவர்ணபரீட்சை

பொன்னை நெருப்பில் காய்ச்சினால் அது சீதளமாயும் சிவப்புவர்ணத்துடன் கலந்திருந்தால் மேலானது. வெண்மை நிறமாகவிருந்தால் ஔஷதயோக்கியமானதல்ல வென்று தெரிந்து கொள்ளவேண்டும்

சுவர்ணமாரணம்—பொன்பஸ்பம்

சுத்திசெய்தபொன்னை இராவிப்பொடித்துக்கலுவத்திலிட்டுஅதற்குச் சமமாகச் சுத்திசெய்த பாதரசத்தைப்போட்டு அறைத்து உருண்டையாக்கி இந்த உருண்டைக்குச் சமமாய் சுத்தி செய்த கந்தியை அந்த உருண்டையின் மேலுக்குக் கவசஞ் செய்து அகலில் வைத்து மேலுக்கு ஒரு அகலைமூடி சீலைமண் செய்து முப்பது காட்டு வறட்டியில் புடம் வைக்க வேண்டியது. இந்தப் பிரகாரம் பதினாறு தடவை புடம் வைத்தால் சுத்தமானபொன்பஸ்மம் ஆகும்.

அசுவகந்தி சூரணம்.

கிராம்பு	வராக	1	தாளிச பத்திரி	வராக	5
நாகப்பூ		2	பெருஞ் சீரகம்		6
ஏலம்		3	கொத்த மல்லி		7
லவங்கப் பட்டை		4	மிளகு		8
திப்பிலி		16			
சுக்கு		32	அமுக்கிராவேர்		64

சேலத்துச் சர்க்கரையை சமனாகச் சேர்த்து வெய்யிலில் உலர்த்தி சூரணஞ் செய்து சர்க்கரை யோடு கலந்து கொண்டு நெய்யில்லாவது சாப்பிடலாம் இதனால் தீரும் வியாதிகள் இருமல், சுரம் உஷ்ணம் முதலிய சகல வியாதிக்கும் கொடுக்கலாம். இதில் கூறியுள்ள அமுக்கிரா வேர் சுத்தி செய்து கொள்ள வேண்டும். மற்றவைகளை இளவருவலாய் செய்து கொள். பத்தியம் இச்சாபத்தியம்.

அசுவகந்தி ரசாயனம்

காவதேனுமுறை.

அமுக்கிராக்கிழங்கு 20 பலத்தை மிருதுவாகச் சூர்ணித்துபசும் பால் 4 படி பசுநெய் 16 பலம் இவைகளை ஒரு பாத்திரத்தில் வைத்து அதில சூரணத்தைப்போட்டு மிருது அக்கினியால் சுண்டக்காய்ச்சி அதில் 10 பலம் சர்க்கரையைப்போட்டு லவங்கப்பட்டை லவங்கப் பத்திரி நாகேசுரங்கள், ஏலக்காய் கொத்தமல்லி, திராக்ஷை,கர்ச்சூரக் கய், சந்தனம், ஜாதிக்காய், கிச்சிலிக்கிழங்கு, தலக்ஷீரி, திருகடுகு

குறுவேர், லவங்கம், மோடி, செவ்வியம், சித்திர மூலம் இவைகளைத் தினுசுக்கு கால்பலம் வீதம் சூரணமாக எடுத்துக்கொண்டு மேல்சொல்லிய ரசாயனத்தில் கலக்கி லேகிய பக்குவமாக கிளறி ½ பலம் தேன் சேர்த்துத் துளாவி ஆறியபிறகு எடுத்து 15 நாள் வரையில் தானிய புடத்திலிட்டு வைத்து காலைமாலை இருவேளைகளில் நெல்லிக்காயளவு சாப்பிட்டு வந்தால் சகலவிதமான க்ஷயங்கள்; ரத்தபித்தங்கள், ஆமல பித்தம், காமாலை, பாண்டு, அஸ்திசுரங்கள், புராணசுரங்கள், இவைகளை குணப்படுத்தும், அக்கினிதீபனம், தேஜஸ் பலம் வீர்ய விருத்தி முதலிய சிறந்த நன்மைகளைத்தரும்.

மதன சஞ்சீவி

தாது புஷ்டி சூரணம்

அரசம்பட்டை, அத்திப்பட்டை, ஒதியம்பட்டை, இலந்தம் பட்டை, கருவேலன் பிசின், பூவரசன்பிசின், இவைகளை நிழலினுலர்த்தியிடித்த தூள் வகைக்குப்பலம் 2 கற்பூரசிலாசித்தை இளநீரில் மூன்றுநாள் ஊறவைத்துக் கழுவி பசுவின்பாலிற் போட்டுக் கரைத்துக் காய்ச்சி எடுத்து சிறு நெருஞ்சிச் சாறிட்டு அறைத்துச் சிறு புடமிட்ட பஸ்மம்பலம் ஒன்று, கற்கண்டு பலம் 7, இவைகளைச் சேர்த்து 1 பலம் வீதம் இரண்டுவேளையும் சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சிய பசுவின் பாலிற் கற்கண்டு பொடியிட்டுச் சாப்பிட்டுவர பிரமேகம், இந்திரிய இழிவு, துரிதஸ்கலிதம், முதலியவைகள் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும்.

சர்வமூல சூரணம்

தூதுவளை, கருணை, காட்டுக்கருணை, பிரண்டை, மிளகருணை, ஆரை, மருட்கிழங்கு, அருகு, நீர்ப்பூண்டு இலற்றின் வேர்களையுட் கிழங்குகளையும் நிழலிலுலர்த்தி சூரணஞ்செய்து விரற்கடைபிரமாணம் தேனிற் குழைத்து காலை மாலை வேளைகளில் சுமார் 40 நாள்கள் உட்கொள்ள ஒன்பதுவிதமான மூலங்களும் தீர்ந்து குணமுண்டாகும், கடுகு நல்லெண்ணை உதவாது. இச்சாபத்தியம்.

காதில் சீழ்வடிதல்

குப்புமன்னிவேர், வேளைவேர், நெஞ்சறுத்தான்வேர், உத்தாமணிவேர், ஆதண்டன்வேர் இவைகளைச் சமபாகமாக எடுத்து இடித்துக்கொண்டு நல்லெண்ணெயிலிட்டுக்காய்ச்சவும். சாம்பிராணி கஸ்தூரிமஞ்சளையும் பொடிபண்ணிபோடவும், அதிகாலையில் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் பண்ணவும் ஸ்நானம் பண்ணினவுடனே சுடச்சுட ரசம்சாதம் சாப்பிட்டுவிட்டு கம்பிளியைபோர்த்துக்கொண்டு படுத்து பிறகு எழுந்திருக்க வேண்டும். இந்தபடி ஸ்தானஞ் செய்வதை ஒன்றுவிட்டொருநாள் இரண்டுமுறைகள் செய்தால் போதுமானது. படுக்கப்போகும்போது 2 துளி சீழ்வடியும் காதிலும் விட்டுககொள்ளவும். சீழ்வடிவது மிக ஆச்சரியகரமாக நின்றுவிடும். பல வைத்தியர்களால் நீண்டகாலம் சிகிச்சை செய்து பார்த்தும் சீழ் வடிவது நிற்காமலிருந்தகேசுகளெல்லாம் இவ்வருமையான சிகிச்சையினுல்குணமடைந்திருக்கின்றன. ஸ்நானஞ் செய்த அன்று இச்சாபத்தியம்

காதுகும்மென்று அடைத்தல்

செங்கல்லை பழுக்கக்காய்ச்சி எருக்க இலைமீது வைத்து காதண்டை வேது பிடிக்கவும். காதினின்றும் துர்நீரெல்லாம் வியர்வைபோல் வெளிவரும். காதண்டையந்திரம் அறைப்பதுபோல கும்மென்ற சத்தம் எப்பொழுதும் இருப்பதுபோன்றிருப்பது குணமாகும்.

கூஷ்மாண்ட லேகியம்

பழுத்தபெரிய கலியாணபூசணிக்காயைக்கொண்டு வந்து அதன் மேல் தோல் விதை இவைகளை எடுத்துவிட்டு கண்டதசையைச் சிறிய துண்டுகளாக்கிக்கொள்ளவும். இந்தத்துண்டுகளை 200 பலம் ஜலத்தில் போட்டு பேர்பாதிஜலம் மீறும்படியாக வேகவைத்து அது ஆறிய பிறகு அந்தத்துண்டுகளை எடுத்து வஸ்திரத்தில் மூட்டைக்கட்டி செவ்வையாய்ப்பிழிந்து அந்தக்கஷாயத்தை அப்படியே வைத்துக்கொண்டு அந்தத்துண்டுகளை தாமிர பாத்திரத்தில் வைத்து உலர்த்தி 16 பலம் நெய் கலந்து தேன் வர்ணம் வருகிறவறையில் சிவக்க வறுத்துக் கொண்டு அந்தக் கஷாயத்தை அதில் வார்த்து 100 பலம் சர்க்கரை

சேர்த்து பாகு பிடித்து அதில் திப்பிலி, சுக்கு, சீரகம் .இவைகளின் சூரணம் தனித்தனி 2 பலம், கொத்தமல்லி, தமாலபத்திரி, மிளகு, தாள்சின்னி, இவைகள் வகைக்கு பலம் ½ சூரணம்செய்து 8 பலம் தேனும், தேன் எடைக்கு அதிகமாகவாவது குறைவாகவாவது சர்க்கரையைச் சேர்த்துக்கொள்ளலாம். திராட்சை 4 பலம் இவைகள்யாவையும் சேர்த்து லேகியமாகக் கிளறிக்கொள்ள வேண்டும். இரத்தபித்தம், க்ஷயம், காசரோகங்கள், முதலியவைகளைக் குணப்படுத்திக் பலத்தைக் கொடுக்கும்.

நீர்வியாதிக்கு இராஜ ஒளஷதம்

கடலழிஞ்சிப்பட்டை, பாதிரிவேர், பூவரசன்பட்டை, கருவேலன்பட்டை, கட்டுக்கொடி, சீந்தில்கொடி, பாலக்கொடி, சதகுப்பி, ஏலரிசி, சுக்கு இவைகளை சம எடையாக எடுத்து பொடிசெய்து வஸ்திரகாயம் பண்ணி ஒவ்வொருநாள் காலை மாலை இரண்டு வேளைகளில் காபிபோலபோட்டுச் சாப்பிடவும். இந்தகாப்பிக்குச் சர்க்கரை போட்டுக் கொள்ளக்கூடாது. அதற்குப் பதிலாக சாக்கரைன் (Saecharine) என்பதை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தபானம் சாப்பிடுவதால் அதிமூத்திரமாவது நாட் செல்லச் செல்ல குறையும், மூத்திரத்திலுள்ள சர்க்கரைகுறைந்து கொண்டே வந்து கடைசியில் இல்லாமல் பறந்துபோகும். இது கைகண்ட அனுபவமான மருந்து. இங்கிலீஷ் மருந்துகளினால் கைகூடாத பல கேசுகள் இம்முறையினால் விரைவில் குணமடைந்திருக்கின்றார்கள்.

இந்திரியக்கட்டுச் சூரணம்

கருவேலம்பூ, கருவேலம்பட்டை, கருவேலன் கொழுந்து, கருவேலன் இலை இவைகளை நிழலிலுலர்த்திச் சூரணஞ் செய்துகொண்டு ஒவ்வொன்றும் சமயெடையாக எடுத்து ஒன்று சேர்த்துசமபாகம்சர்க்கரை கூட்டி காலை மாலை இரண்டுவேளையும் திரிகடி பிரமாணம் சாப்பிட்டு வர 5 நாளில் இந்திரியங்கட்டும். மருந்து சாப்பிடும்காலத்தில் ஸ்திரீ விஷயம் கூடாது. பால் நெய் விஷயமாகச் சேர்த்துக்கொள்ளவும். சிறந்த அனுபோக மருந்து.

நீர்ரோக நிவாரணி

சீமைதண்ணீர்விட்டான்கிழங்கு, செங்கழுநீர் கிழங்கு, செவ்வல்லிக்கிழங்கு, பூமிசர்க்கரைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, கோஷ்டம், ஜாதிக்காய். ஜாதிபத்திரி, அதுமதுரம், கோரைக்கிழங்கு, பூனைக்காலி வித்து, இலுப்பைப்பூ, கூகைநீர், நிலாவரை, சீரகம் வகைச்கு வராகனெடை 1. உணர்த்திய துத்திவேர் பட்டை பலம் 2 இவைகளைத் தனித்தனி சூர்ணஞ்செய்து பசும்பாலில் வெள்ளைச்சர்க்கரை பலம் $1\frac{1}{2}$ யிட்டுப்பாகுசெய்து சூரணங்களைக்கொட்டி லேகியமாகக்கிளறி வேளைக்கு கொட்டைப்பாக்கு அளவு காலையில் தேனிலும் பசுவின் வெண்ணெயிலும் மாலையில் பசும்பாலிலுமாக ஒரு நாளைக்கு மூன்றுமுறை 20 நாள் புசிக்க மூத்திரகிரீச்சினம், கைகால் எரிவு, நெஞ்செரிவு,நீரடைப்பு மலபந்தம் தீர்ந்து இந்திரியம் சுரந்து தாது புஷ்டி யுண்டாகும். இச் சாபத்தியம்.

அமிர்தசஞ்சீவி லேக்கியம்

தாழைவிழுது, சிற்றாமுட்டி, சிறுபுள்ளடி, பொன்னாங்கணி, வல்லாரை வகைக்குபலம் 2 நிறுத்தெடுத்து இடித்து 6 படி ஜலத்திற் போட்டு $1\frac{1}{2}$படியாகச் சுண்டக்காய்ச்சி அத்துடன் பசும்பால் படி 1 இளநீர் படி 1 கூடயிட்டு அதில் மேல் தோல் நீக்கிய இஞ்சி பலம் $3\frac{1}{2}$ அறைத்துப்போட்டு அடுப்பேற்றி கற்கண்டு பலம் 4 பொடி செய்து போட்டு பாகுசெய்து ஏலம், கருஞ்சீரகம், சீரகம், கோஷ்டம், வால் மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, அக்கிராகாரம், திப்பிலி, சிலதைவேர், ஓமம், நறுக்கு மூலம், திருகடுகு, அரத்தை, ஜாதிபத்திரி, தாளிச்சப் பத்திரி, அதிவிடையம், இவைகள் வகைக்கு $\frac{1}{8}$ பலம் வீதம் வேதுப்பிப்பொடிசெய்துச் சூரணமாக்கிக்கொள்ளவும். பாலில் வேசவைத்த வில்வப்பழம் பலம் $\frac{3}{4}$ பரங்கிச்செக்கைபலம் $\frac{3}{4}$ அன்னபேதி, காயம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கூகைநீர், வகைச்குப் பலம் $\frac{1}{4}$ குங்குமப்பூ, கோரோஜனை, கஸ்தூரி, பச்சை சற்பூரம், அபினி, வகைச்கு கழஞ்சு 2 பசும்பாலில் ஊறவைத்த தேற்றான்வித்து பலம் $\frac{1}{4}$ சீந்தில் சர்க்கரை பலம் $\frac{3}{4}$ எல்லாவற்லையும் சூரணித்துக்கொண்டு ஷைபாகில் சிறுகசிறுகப்போட்டு மருந்துச்குத் தகுத்த நெய்யைச் சிறுகச் சிறுக விட்டுக்கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி காலே அறிக்காபடி தேன்விட்டுப் பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாச்கு அளவு சாப்பிட்டுவர மேகத்தாலெடுத்த சகல ரோகமும், அஸ்திசுரம், காங்கை, சீதம், இரத்தம் விழுதல், வாய்வு தீரும். 20அல்லது 40 நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

பஞ்சதீபாக்கினி லேகியம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி, வகைக்குப்பலம் ஒன்று வீதம் நைய இடித்துச் சூரணித்துத் தக்க நெய் தேன் வெல்லம் சேர்த்து லேகியமாகக் கிண்டி கொட்டைப்பாக்கு அளவு இரண்டு வேளை பத்துநாளுண்ண அக்கினி மந்தம், பித்தவாயு, அஜீரணம், பித்தம் முதலியவைகள் நீங்கும்.

காசரோகந்திற்கு கைகண்ட மருந்து

ரசசெந்தூரம், சுவர்ணபஸ்பம், உலோக பஸ்மம் (இரும்பு) லவங்கம், பச்சை கற்பூரம், ஜாதிக்காய், கஸ்தூரி இவைகளை சமனெடையாக எடுத்துக்கொண்டு வெற்றிலைச்சாறுவிட்டு நன்றாக அறைத்துக் கொண்டபின் துவரைப்பிரமாணமாக மாத்திரைகள் செய்து கொள்ளவும். ஆறுமணிநேரத்திற்கு ஒரு மாத்திரையை மூன்று அல்லது நாலுக்கு அவுன்ஸ் வெள்ளாட்டுப்பாலுடன் உட்கொள்ளவும். இந்த அளவு பெரியவர்களுக்கு இம்மருந்து காச ரோகங்களைக் கண்டிக்கின்ற தல்லாமலும் எவ்வித சுவாசப்பை ரோகங்களையும் மார்நோய்களையும் தீர்க்கின்றது.

வில்வாதிலேகியம்

வில்வவேர் பலம் 1 வில்வப்பழம் பலம் 5 இடித்து 2 படி ஜலத்திற்போட்டு ½ படியாய்வற்றக்காய்ச்சிய கஷாயத்தில் வெல்லம்பலம்2 கரைத்துக்காய்ச்சிப் பாகுசெய்து அதில்,

திப்பிலிமூலம்	வாலுளவை
சித்திரமூலம்	சடாமாஞ்சில்
செவ்வியம்	அதிவிடயம்
கூகைநீர்	இந்துப்பு

வகைக்குப்பலம் ½ குங்குமப்பூ, கிராம்பு, ஜாபத்திரி, ஜாதிக்காய், கோரோஜனை வகைக்கு வராகனெடை ½ வெதுப்பி பொடித்துத் தூவி போதுமான நெய்விட்டு மெழுகு பதமாகக்கிண்டி இறக்கி ஒரு பலம் தேன்விட்டுப்பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு கொட்டைபாக்குப் பிரமாணம் இரண்டு வேளையுஞ் சாப்பிட்டு வர குன்மம், நெஞ்சுவலி, அரோசிகம் சல், காமாலை, வயிற்றுவலி, மூலம் முதலியவைகள் தீரும். இச்சாபத்தியம்,

மதனலீலாமிர்த லேகியம்

பாதம்பருப்பு, பிஸ்தா பருப்பு, அக்ரோட் பருப்பு, பருத்தி விறைப் பருப்பு, சாரப்பருப்பு, கசகசா, கழுவின எள் இலற்றின்மேல் தோல் நீக்கவேண்டியவைகளின் தோலை நீக்கி வகை 1-க்குப் பலம் 1, மஞ்சள் முள்ளங்கி விதை, முருங்கைவிதைப் பருப்பு, காஞ்சொறி விதை, நாயுருவி விதை, ஆவாரை விதை, வெட்பாலையரிசி, கோதுமை நோய். வெங்காயவிதை, சந்தன விதை, வகை 1-க்கு பலம் ஒன்றரை சன்ராஷ்டம், பூமிச்சக்கரை கிழங்கு, பஹேமனேசுபேத், பஹமடேல் சுடுஃ, தாதரிசுபேத் சாலாமிசிரி இவைகளின் தூள்வகை 1-க்குத் துலா 1, சீனி சர்க்கரை பலம் 20, தேன் பலம் 5.

செய்முறை—பருப்பினங்களையும், வித்தினங்களையும் தனித்தனி சிறுக ஜலம்விட்டு வெண்ணைப்போல்அரைத்து தண்ணீரில் கலக்கி,சீலையில் வடிகட்டினால் திப்பி நிற்காதிருக்கவேண்டும். இவ்விதம் அரைத்ததை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கொஞ்சம் ஜலம் விட்டு அதில் சர்க்கரையையும் தேனையும் விட்டு அடுப்பேற்றிபாகுகாச்ச, நீர்சுண்டி பாகுபதமானவுடன் சன்ராஷ்டம் முதலிய சூர்ணங்களையிட்டுக் கிளறிக் கொள்ள வேண்டியது.

உபயோகம்:—காலை மாலை 1 தோலா விதம் சாப்பிடவேண்டும். ஆண்மைவையும் தாதுவினைவையும் புதுப்பிக்கும். இருதயம் மூளை ஆகியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். தேகபுஷ்டி, தேகபலம், மனதிற்கானந்தம் முதலியவை யுண்டாக்கும். பத்தியமில்லை.

மதன காமேஸ்வர லேகியம்

மலராத முருங்கைப்பூ படி 2, கருங்குருவை அவல்படி 2, ஆலம் விழுதுங் சூரணம்படி அரை, முருங்கைவேரின் சாறு படி 1, பசுவின் பால் படி 2, சீனிசர்க்கரை வீசை 2, திறமான நெய் வீசை 1,காய்ச்சி நுரை நீக்கிச் சுத்திசெய்த தேன் வீசை 1, அபின் துலாம் 1 சாதிக் காய் துலாம் 2, குங்குமப்பூ துலாம் 1.

செய்முறை:—முருங்கைப்பூவை நிழலில் உலர்த்தி நெய்யில் பொரித்துக்கொள்ளவும், அவலையும் நெய்யில் பொரித்துக்கொள்ளவும்,

முருங்கைவேர் பட்டைச்சாற்றில் சீனியைக் கரைத்து, அபினி முதலிய எல்லாவற்றையும் மைபோல் அரைத்து மேற்படி சாற்றில் கரைத்து அடுப்பேற்றிக் கிண்டிக்கொண்டிருந்து மெழுகு பதத்தில் பாக்கி நெய்யையும் விட்டுக் கீழிறக்கி ஆறினபின் தேனைவிட்டு மிஸ்ரமித்துக்கொள்ளவும். பிரதினம் துலாம் 1 சாப்பிடலாம்

உபயோகம்:—தாதுவிர்த்தி, தாதுக்கள் இறுக்கும், ஆண்மை அதிகப்படும், பத்தியமில்லை.

நரைமயிர் கறுக்குந் தைலம்

புன்னைக்கொட்டையின் முற்றின பருப்பை எடுத்து நறுக்கி அடுப்பில் கறுப்பாகுமட்டும் வறுத்து அம்மியில் அறைக்க எண்ணெய் கறுப்பாய்வரும் அதை யெடுத்துக் கொள், கரசனாங் கண்ணியை அறைத்து அடையாகத் தட்டிப் புதியவாணுவில் வைத்துக்காய்ந்ததும் அதை எண்ணெயில்விட்டு நன்றாக ஊறியபிறகு தேங்கா எண்ணை யுடன் கலந்து உபயோகிக்க நரைமயிர் கறுத்துவேரும் கறுத்து வரும், கண்களுக்கும் குளிர்ச்சி மூளைக்குபலமும் கொடுக்கும்.

வியாபார விதிகள்.

1. எந்த வியாபாரஞ்செய்தாலும் அதை நல்ல நிலைமையில் நடத்த எவ்வளவு மூலதனம் வேண்டியிருக்குமோ அவ்வளவு பணத்தை மூலதனமாகக் கையில் வைத்துக் கொண்டுதான் பின் வியாபரத்திற்கு ஆரம்பம் செய்ய வேண்டும். மூலதனந்தான் வியாபாரத்திறகு உயிர்.

2. "சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என்ற பழமொழி படி ஆரம்பத்தில் தொடங்கும் சிறு வியாபார தான் கடைசியில் பல கிளைஸ்தாபனங்களாய் நாடெங்கனும் வேரோடியுள்ள பெரும் வியாபாரமாக முடிகின்றது. யுக்தியாவும், சமர்தமாயும், உறுதியுடன் தக்க மூலதனத்துடன் நடத்தும் வர்த்தகன் அதிர்ஷ்டத்தையெதிர்பார்க்கவேண்டுவதில்லை. தன லக்ஷ்மீ தானாக வந்தடைகிறாள்.

3. அமைதியாயும் உறுதியாயும், உண்மையாயும், கௌரவமாயும், கண்யமாய் வர்தகம் செய். உன்னைவிட சமார்த்தன் உலகத்தில் அதிகம் இருக்கலாம். ஆகையால் நீ ஒரு காலம் காலத்திலும் செருக்கடையாதே கர்வங் கொள்ளாதே. இவை ஞாபகத்தில் எப்பொழுதும் இருக்கட்டும்.

4. நமது சௌகர்யப்படி வியாபார ஸ்தலத்தை எற்படுத்துக்கொள்ளமால், பொது ஜனங்கள் வாங்கவரும் பொது இடத்தில் வியாபார ஸ்தலத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

5. தொழில் ஸ்தாபிப்பதற்கு இடம் தெரிந்தெடுப்பதில் வாடகை குறைவா யிருப்பது தான் லாபகரமான தென்று எண்ணக்கூடாது. அவ்விடத்திற்கு வாடிக்கைக் காரர்கள் சுலபமாய் வரக்கூடுமோ என்பதைக் கவனிக்கவேண்டும். வாடிக்கைக்காரர்கள் வரக்கூடாத இடத்தில் தொழில் நடத்துவதும், வாடிக்கரர்களுடைய வீடு வீடாய்ப் போய் வியாபாரம் நடத்தலாம் என்று எண்ணுவது பிசகு அதிகமான வாடிக்கைக்காரர்கள் சௌகிரியமாகக் கடைக்கு வரக்கூடிய இடத்தில் அதிக வாடிகைகொடுத்தாவது எடுத்துக்கொள்வது தான் மிகவும் சிறந்தது. அடிக்கடி வாடிக்காரர்களைத் தேடிப்போவதில் காலம் வீணுய்ப் போக்குவதை விட சௌகர்யமான இடத்தில்அதிக வாடகைகொடுப்பாது நல்லது. ஆனுல் தொழிலின் அளவுக்குத்தகுந்தபடி வாடகை மிதமாயிருக்கவேண்டும்.

6. வாங்கவருவர்களிடம் மரியாதையாய் நடந்து கொள்ள வேண்டும். ஒரு சாமானுக்கு இன்னொரு சாமான் கொடுத்தும் ஒன்றைப் போலவே இன்னொரு சாமான் இருக்கிறதென்று சொலியும்அவர்களை ஏமாற்றக் கூடாது. மோசம் எப்போதும் நாசாத்துக்குகாரணம் வாங்கு வோரைத் திருப்தி செய்வது சம்பாதிப்பதே நியாயமாகும்.

7. ஒரு முறை உன்னிடம் வியாபாரம் செய்தவன் மருமுறையும் உன்னிடத்திலேயே வாங்க விருப்பம் உண்டாகும் படி நடந்து கொள்.

8. எப்பொழுதும் ரொக்கத்திற்கே விற்கவேண்டும். எல்லோருக்கும் கூடிய மட்டும் குறை வாகவே ரொக்கத்திற்கே கொடுக்கவேண்டும். வியாபாரிகள் கடன் கொடுப்தில் அதிஜாக்கிறதை யாயிருந்தல் வேண்டும். வழக்கமாய் சரக்கு வாங்குகிறவரும், பொருமான ஆசாமி யென்று தெரிந்தாலொாலிய ஒரு பொதும் கடன் கொடுக்கபடாது. வியாபாரத்தில் பந்துகள், சினேகிதர்கள், கடன் கேட்டால் தாக்ஷசண்ணயப்படாமல் இல்லை யென்று செல்வதற்கு கொஞ்சமேனும் அஞ்சக்கூடாது. தக்க ஆசாமிக்கு கடன் கொடுத்தாலும் அதிக காலத்திற்கு கடனை வசூலிக்காமலிருந்தால் பத்துக்கு ஒருவர் கொடுக்

கவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் போவர். பாக்கி ஒன்பது பேரினால் வரும் லாபத்தை விட அதிகமாகவே அந்த பத்தாவதுபேர் வழியால் நஷ்டமேற்படும்.

9. சாமர்திய முள்ளவர்களை நல்ல சம்பளம் கொடுத்துவேலைக்கு வைத்துக் கொள்வதால் அவர்கள் வியாபாரத்தின் விருத்தியை நாடி ஊக்கத்துடன் உழைப்பார்கள். வேலைக்காரர்களிடத்தில் அன்பாயிரு.

10. வியாபாரத்திற்கு வேண்டிய சாமான்களை கூடுமானவரையில் ரொக்கத்திற்கே வாங்கவேண்டும். அப்படி வாங்குவதற்காககமிஷன் கொடுக்கும்படி கேட்கவேண்டும்

11. என்னலாபம் கிடைக்கிறதென்பதை பிறரிடம் சொல்லாக் கூடாது. சொன்னால் வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்படும்.

12. குறுகிய நோக்கம், பிறர் நலம் கவனியாதிருத்தல், பொருமை, அவநம்பிக்கைஇன்னும் பல காரணங்களால் வியாபாரம் செய்யாதே. போறுமை. துணிவு, நிதானம், தைர்யம் விடாமுயற்ச்சி இவைகலால் கார்யம் செய். செல்வம் முயற்சியுள்ள விடத்தில் உற்பத்தியாகி பெருகிச் செல்கிறது.

13. வியாபாரம் செய்வதிலும், தொழில் நடத்து வதிலும் ஜாதி வித்தியாசம் பாராட்டதே.

14. ஒரு தொழிலை ஆரம்பத்தவுடன் விர்த்தி செய்வதற்கான மார்க்கத்தைத் தேடவேண்டும். கணக்கு ஒழுங்காய் எழுதிவர வேண்டும். நடத்தும் முறை ஒழுங்காய் இருக்கவேண்டும். அது தான் தொழிலுக்கு அஸ்திவாரம்.

15. கணக்குகளை அன்றடம் திட்டம் கட்டி தன் கையிலிருக்கு மிருப்புக்கும்கணக்கினிருப்புக்கும்Balance சரி பார்த்துவரவேண்டும். சிட்டா, குறிப்பு, பேரேடு இவைகளில் அன்றடம் பதிய வேண்டும். கணக்கு பார்த்தால் லாப நஷ்டம் தெரிந்துக் கொள்ள வேண்டிய விதமாய், கண்ணடியைப் போல் கணக்கை வைத்திருக்கவேண்டும். விர்த்தியாகிர வியாபாரத்துக்கு கனக்கு ஒரு திரவு கோல் போலாகும்

16. நமக்கு தெரிந்த வியாபார ரகசியங்களைச் பிறருக்கு சொல்லாதே. எந்த விஷயமும் தனக்குள் இருப்பது தான் பரம இரகசியம்.

17. தொழில் அபி விருத்தி யெல்லாம் முதலாவது பணத்தாலும் இரண்டாவது அனுபவத்தாலும், மூன்றாவது தந்திர சாமர்த்திய தாலேயாக வேண்டும்.

18. வருமானம், லாபம் முதலியவைகளில் கொஞ்சம் மிச்சம் வைத்து ஓரளவுடன் இதர செலவுகளைச் செய்ய வேண்டும். எபொழுதும் செட்டாய் செலவிட பழக வேண்டும். இப்பழக்கம் முடிவில் என்ன நன்மை செய்யு மென்பது பிற்காலத்தில் தெரியும்.

19 தொழில் ஆரம்பம் செய்வதர்க்கு முன் தொழில் செய்வோரிட மருந்து ஒவ்வொரு வேலையும் அநுவபத்தோடும் நன்றாயறிந்து வரவேண்டும். தொழிலில் பயிலுவது கண்ணியக் குறை வென்று கருதக் கூடாது.

20. நியடையும் லாப நஷ்டத்தை யாரிடமும் சொல்லாதே. லாபமடைந்தால் பொராமையும், நஷ்டமானால் இப்பேர்ப்பட்டவனு வென்று அவமதிப்பார்கள்.

விளம்பரம் என்றால் என்ன.

ஒருவர் தாம் விற்பனைக்காக வைத்திருக்கும் பொருள்களைப்பற்றி யாவது, ஒரு தொழிலைப்பற்றியாவது பஹிரங்கமாய் மற்றோர் தெரிந்து கொள்ளும்படிக்கான பிரயத்தனங்களுக்கு முயற்சிகளுக்கு) விளம்பரம் என்பதாகும் விளம்பரம் காலவரைக்குட்பட்டிருந்தாலும் ஓர் எல்லைக்குட்படவில்லை.

விளம்பரம் பலவிதம்

விளம்பரம் செய்வது ஒருவிதமாயில்லை வியாபாரத்துக்குத் தக்கபடி பல்வேறுவிதமாய்ச் செய்யலாம். தொழிலுக்குத் தக்கவாறு நோட்டீஸ்களாகவும், சிறுபுத்தகங்களாகவும், பத்திரிகையில் பிரசுரித்தும், கியாலண்டர்களாகவும், டயரிகளாகவும். அழகான படங்களாகவும் இன்னும் பொது ஜனங்களுக்கு அடிக்கடி உபயோகப்படக் கூடிய

பொருள்களிலும் இவ்விதமான பலவழிகளுண்டு. எவ்விதத்தும் பொது ஜனங்களின் கண்ணுங்கருத்தும் கவரும் வண்ணம் இனிமையாகவும் மனோகரமாயும் பொருளுக்குத்தக்கவாறு செய்வதாகும்.

தினசரி, வாரம் மும்முறை, வாரப்பதிப்பு முதலிய பலவிதமான பத்திரங்களில் விளம்பரங்களை போடுவது போலவே மாதஸஞ்சிகைகளிலும் விளம்பரங்களைபோடுவது குணமாயிருக்கும்.

இவ்வாராகபலவழிகளிலும் விளம்பரங்களை பிரசுரிக்க துடங்கி ஆற்டர்கள் ஜாஸ்தியாக வந்து காணவில்லையே என்று மனம் சோர்வடையலாகாது. நம் வியாபாரத்தில் ஜனங்களுக்கு விசுவாசமும், பிரசித்தியும் அடையவேண்டும். இது ஆரம்பத்திலேயே உண்டாவதல்லவாயினும் அவரவர் திறமைக்கும் அனுபவத்திற்கும் இணங்க சீக்கிரமாகவாவது காலதாமதத்திலாவதடையக் கூடுவதேயாகும், இவ்வாறு பிரசித்தியடைந்த வியாபாரத்தின் விளம்பரங்களை . கண்டமாத்திரத்தில் திரளான ஆற்டர்கள் வந்து குவியாமலும் இராது.

வியாபார வெற்றி தரும் அரிய மொழிகள்.

1 விளம்பரத்தை எழுதும்போது நீ விற்பனை செய்ய எடுத்துகொண்ட சரக்கின் லக்ஷணத்தை ஆலோசிக்க வேண்டும். நீ விரமாகப்பல முறைகள் சிந்திக்க வேண்டும். நீ உன் சாமான்களை வாங்கும் வாடிக்கைகாரர்களின் குணாதிசயங்களையும் குறித்து யோசனை செய்ய வேண்டும்.

2. விளம்பரம் எழுதுகையில் மிக்க கவலையுடனிருக்க வேண்டும் அதை அழகு பெறச் செய்வதில் கம்பீரமாக இரு.

3. விளம்பரக்காரர்களுக்கு மூலதனம் போன்றது அவர்கள் விளம்பரஞ் செய்யும் சரக்குகளில் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதுவே.

4. விளம்பரங்களினால் ஜனங்களை ஏமாற்றி விடலாம் என்னெண்ணி அதன். பிரகாரம் நடக்கின்றவனே முதன் முதலில் ஏமாந்து போகின்றான்.

5. எந்த விதமாக விளம்பரம் செய்ய வேண்டும் என்று சொல்வது மிகவும் சுலமானது. ஆனால் ஜனங்களின் கவனத்தை இழுத்து

வசீகரம் செய்யும் படி விளம்பரங்களை எழுதுவது மிகவும் கடினமானது.

6 விளம்பரம் செய்து அதனால் வியாபாரத்தை விருத்தி செய்ய நினைக்கின்றவனிடம் முன்னிமே வியாபார குணம் இருக்கவேண்டும்.

7. விளபரம் செய்வது என்பதும் கல்வியே. விளம்பரம் செய்வது பெருத்த பணச் செலவு என்று எண்ணக்கூடாது ஆனால் முக்கியமாக வேண்டிய முதல் என்றே கருதப்பட வேண்டும்.

8. விளம்பரம் என்பது வியாபராம் என்னும் புகைவண்டித் தொடருக்கு அவசியமான என்ஜின் போன்றது. விளம்பரத்தை நிறுத்த எண்ணுவது புகை வண்டித்தொடரின் என்ஜினை அப்புறம் எடுத்துச் செல்லுவதை ஒக்கும். வியாபாரம் என்பது ஒரு பெரிய ரதம் போன்றது. அந்தரதத்தைவேகமாக இழுத்துச் செல்ல குதிரைகள் அவச்சியம் இருக்கவேண்டும், குதிரைகளே விளம்பரம். வியாபாரத்திற்கு விளம்பரமே குதிரைகள். குதிரைகளில்லையேல் ரதம் ஒரு அடியும் செல்லமாட்டாது. அதுபோலவே தான் விளம்பரமில்லாத வியாபாரம் நடை பெறாது.

9. ஒரு பண்டத்திற்கு எப்பொழுது கிராக்கியையும் தேவையையும் உண்டாக்குவது விளம்பரந்தான். கிராக்கியும் தேவையும் உண்டானால் பொருள் வருவாய் அதிகரிக்கின்றது. தேவை அதிகரித்தால் பண்டங்கள் உற்பத்தி விசேஷமாகின்றது. உற்பத்தி விசேஷமானால் பண்டத்தின் விலை குறைகின்றது அத்தகைய பண்டத்திற்கு சதா கிராக்கி ஏற்படுகிற படியால் வியாபாரிக்குப்பொருள் வருவாய் எப்பொழுதும் ஒரே சீராக இருக்கின்றபடியால் பெருத்த லாபம் கிடைக்கும். எல்லாம் வ்ல்லஈசன் ஆசீர்வதிப்பாரக.

சுபம்! சுபம்!! மங்கலம்!!!

முற்றிற்று.

ஜீவாமிர்த சஞ்சீவிலேகியம்

தற்காலத்திய பால்ய இச்சையாலுண்டான 20 வகை மேகரோசுங்கள், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது ஸ்கலிதம், நபுன்சகம், மலடு, கைகால் இடுப்பு ஓச்சல், தேகசோர்வு, மேகச்சூடு, நீரிழிவு, சோம்பல், நித்திரை யில்லாமை, தலைசுழற்றல் முதலிய வியாதிகளைப் போக்கி நீத்திருக்கும் தாதுவை கெட்டிப்படுத்தி, போக சக்தியை அதிகரித்து தளர்ந்து போன நரம்புகளைப் பலப்படுத்தி அபரிமிதமான ரத்தவிருத்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்குமிஞ்சின லேகியம் வேறொன்றுமில்லை இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி மணவாழ்க்கையில் அதிக நேரம் சந்தோஷமுண்டாக்கி தம்பதிகளுக்கு ஆனந்தத்தருவதில் இந்த லேகியம் முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிகிறோம், லேகியமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாள் வாங்கியுண்ண இதன் அபாரகுணம் தெரியவரும். தவிர இம்மகத்துவம்பொருந்திய லேகியத்தை சாப்பிடும் ஆயிரக் கணக்கானவர்கள் மறுபடியும் மறுபடியும் தருவித்துக் கொள்கிறார்கள், தவிர இதை நோயுள்ளவரேதான் சகப்பிட வேண்டுமென்கிற அவசியமில்லை. யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் பத்தியமின்றி சாப்பிட எட்பொழுதும் துற்பலமே ஏற்படாது. இது உண்மை. தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணத்தை வாபீஸ் செய்யப்படும். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூபா 1—8—0. போஸ்டேஜ் அணா-6 ஒரே தடவை 48நாள் மருந்துவாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 3-0-0.



சிங்கப்பூர், பினாங்கு, F. M. S. முதலிய வெளி நாடுகளுக்கு லேகிய கிரயம் ரூ. 3-ம், தபால் செலவு ரூ. 1-4-0 ம் சேர்த்து பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அல்லது மணிபார்டர் அனுப்பினால் பணம் கிடைத்தவுடன் லேகியம் அனுப்பப்படும். C, O. D. or V. P. யில் அனுப்பமுடியாது.

மானேஜர், மாணிக்க விலாசம் பிரஸ்,

நெ. 12. அருணாசலமுதலி தெருவு,

சௌகார்பபட்டை போஸ்டு, சென்னை,

[illegible] 81, 86,

[illegible] 86 [illegible]
[illegible]

[illegible] 83.
[illegible] 96

[illegible] 105 [illegible], 118
[illegible] 113 [illegible]
HAIROIL 150 [illegible]

[illegible] 97 [illegible]

[illegible] 174, 175
180, 182, 183
185, 185, [illegible]
[illegible] 186

[illegible] 59

[illegible]
[illegible] 64

உங்களுக்கோர் புதிய அதிர்ஷ்டம் !

உங்களுக்கு வேண்டியதும், நீங்கள் பார்க்கவேண்டுமென்று அநேக நாள் தேடிய அருமையான மர்ம நூல்

சரீர மர்ம சாஸ்திரம்.

சிருங்கார ரசம் ததும்பிக் கொட்டும் இந்த நூலில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் உபயோகங்களும், மாறுதல்களும். ரதி மன்மத சிங்கார ரஹஸ்யங்களும், சம்சாரசுகம், டாம்பத்ய ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள், காதல் காதலி சரச சல்லாப இன்பங்கள், சிறுபிராயத்தில் துஷ்ட சாவசத்தினாலும், அறியாமையினாலுண்டாகும் தாதுநஷ்டம் பலஹீனம் முதலியவற்றிற்குக் காரணங்களும். அவற்றுக்கு பரிகாரங்களும், சிசு உற்பத்தி விபரம், மருத்துவ சாஸ்திரம், சிசுசம்ரக்ஷண சாஸ்திரம் ஆரோக்கிய சாஸ்திரம், முதலியவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அவைகளைப் போக்கத்தக்க சிகிச்சைகளும் மகரிஷிகள் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும், இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் ஆண், பெண், இருவர் இனங்களுக்கும் இன்றியமையாத நூல்.



ஆயிரக்கணக்கான வித்வான்களாலும், பத்திரிகைகளாலும் பெற்றது, 20,000 புஸ்தகங்கள் இதுவரையில் செலவழிந்திருப்பதே இப்புஸ்தகத்தின் அருமை பெருமைகளையும், உபயோகத்தையும் விளக்கிக்காட்டும்.

64 அழகிய படங்களுடன் இரண்டுபாகங்கள் ஒருங்கே அமைத்த 200 பக்கங்களுடைய பெரிய புத்தகம்

விலை ரூபா 1 தான்

மாணிக்கவிலாசம் பிரஸ், சென்னை.

PRINTED AT THE MANICKA VILASAM PRESS MADRAS.